# போகமுனிவர்
# திருவாய் மலர்ந்தருளிய
# சரக்கு வைப்பு எண்ணூறு

LB
N24
181946

உ

கடவுள் துணை

பதினெண்சித்தர்களில்

மகா மகத்துவம்பொருந்திய

# போகமுநிவர்

திருவாய்மலர்ந்தருளிய

## சரக்குவைப்பு எண்ணூறு

19 JUL 192

இஃது,

மதுரை புக்ஷாப்

இ. ரா. ம. குருசாமிக்கோன்

அவர்கள் விருப்பத்தின்படி,

திருவெண்காடு

ஆறுமுக சுவாமிகளால்

பார்வையிடப்பட்டு

சென்னை,

A. தீனதயாள முதலியார்

அவர்களால்,

—(*)—

சென்னை,

ஸ்ரீ ஆதிமூலம் பிரஸில்

பதிப்பிக்கப்பட்டது.

தாரண,

சமர்,

வேகாதரு

விளங்கிய

1924.

# புத்தக விளம்பரம்.

## சோதிட புத்தகங்கள்.

| | | | |
|---|---|---|---|
| சாதகசிந்தாமணி திக்குகடிதம் ஆப்பயிண்டு | 1 | 8 | 0 |
| ஷடி திக்குகடிதம் கலிகாபயிண்டு | 2 | 0 | 0 |
| ஷடி கிளேசுகடிதம் கலிகாபயிண்டு | 2 | 8 | 0 |
| சோதிட கிரகசிந்தாமணி என்னும் பெரிய வருஷாதிநூல் | | | |
| திக்குகடிதம்-ஆப்பயிண்டு | 0 | 12 | 0 |
| ஷடி திக்குகடிதம்-கலிகாபயிண்டு | 1 | 0 | 0 |
| விருடி பஞ்சபக்ஷிசாஸ்திரம் மூலமும்-உரையும் | 1 | 4 | 0 |
| கமலமாமுனி ரேகைசாஸ்திரம் மூலமும்-உரையும் | 1 | 0 | 0 |
| போகர் பஞ்சபக்ஷிசாஸ்திரம் மூலமும்-உரையும் | 0 | 14 | 0 |
| அகஸ்தியர் பஞ்சபக்ஷிசாஸ்திரம் மூலமும்-உரையும் | 0 | 12 | 0 |
| சாதகாலங்காரம் மூலம் | 0 | 12 | 0 |
| சில்பிசாஸ்திர களஞ்சியம் திக்குகடிதம் கலிகாபயிண்டு | 2 | 0 | 0 |

## வைத்திய புத்தகங்கள் சுத்தப்பதிப்பு.

| | | | |
|---|---|---|---|
| உரோமரிஷி நாயனர் வைத்தியம்-500 | 0 | 10 | 0 |
| போகமுனிவர் வைத்தியம்-700 | 0 | 10 | 0 |
| போகமுனிவர் ஜெனனசாகரம் | 0 | 12 | 0 |
| அகஸ்தியர் வைத்தியகாவியம்-1500 | 1 | 0 | 0 |
| அகஸ்தியர் அமுத கலைக்கியானம்-௧௨௱ | 1 | 4 | 0 |
| அகஸ்தியர் செந்தூரம்-௩௱ | 0 | 10 | 0 |
| அகஸ்தியர் பூரணசூத்திரம்-௨௱௰௬ | 0 | 8 | 0 |
| அகஸ்தியர் வைத்தியரத்தினசுருக்கம் உரை-௩௱௰ | 0 | 12 | 0 |
| சுப்பிரமணியர் ஞானம்-௨௱ | 0 | 8 | 0 |
| புலஸ்தியர் வாதசூஸ்திரம்-௩௱ | 0 | 12 | 0 |
| இராமதேவர் சிவயோகம்-௨௱ | 0 | 8 | 0 |
| சட்டைமுனி ஞானம்-௨௱ | 0 | 8 | 0 |
| பிரமமுனி கருக்கடை-௩௮௰ | 0 | 12 | 0 |
| தன்வந்திரி குருநூல்-௨௱ | 0 | 12 | 0 |
| புலிப்பாணி வைத்தியம் உரை-௫௱ | 1 | 0 | 0 |
| சுப்பிரமணியர் ஞானம்-௫௱ | 1 | 0 | 0 |

எமது விலாசம்:—

A. இரத்தினநாயாள முதலி...

நெ. 4, இரண்டாவது சந்து, பெருமா...

சௌகார்பேட்...

சென்னை-600 008
18/4/86

உ

கடவுள் துணை.

பதினெண் சித்தர்களில் மகாமகத்துவம்பொருந்திய

# போகமுநிவர்

# சரக்குவைப்புஎண்ணூறு.

## காப்பு.

ஆனந்தமாய்நிறைந்தவாயிபாதம்
அகண்டபரிபூரணமாமையர்பாதம்
வானந்தமாகிநின்றகணேசன்பாதம்
மருவியதோர்மூலத்தில்நந்திபாதம்
தானந்தமாகியதோர்காலாங்கிபாதம்
சனகருடன்வியாக்கிரபஞ்சலியன்பாதம்
போனந்தமாகியதோரிஷிகள்பாதம்
போற்றியெண்ணூற்றிரட்டுநூல்புகலுவேனே.

புகலுவேன்வாதியென்றபேர்களுக்குப்
போற்றரியமெஞ்ஞானம்வரவேவேண்டும்
திகலுகின்றவர்தாரமறியவேண்டும்
தீக்கரியகாயத்தைநிறுத்தவேண்டும்
பகலுகின்றபராபரியைப்பூசிக்கவேண்டும்
பரமபதமோட்சத்தைநினைக்கவேண்டும்
தகலுகின்றரகசியத்தையடக்கவேண்டும்
தப்பினாலிதெல்லாம்பொய்யாய்போச்சே.

போகாமல்வாதத்தைநிறுத்தவென்றால்
போக்கோட்டேசவுக்காரர்குருவைப்பண்ணு
வாகாகவுப்பைநன்றாய்க்கட்டியாடு
மருவியதிற்பூரணத்தையுப்புபண்ணு
தாகாகதாளகத்தைநீறுபண்ணு
சமர்த்துடனேவங்கத்தைநீறுபண்ணு
வேகாதகருசியைத்தான்குருவாய்ப்பண்ணு
விளங்கியதோர்வாதமெல்லாங்கைக்குள்ளாச்சே. 1

### சவுக்காரசுத்தி.

ஆச்சப்பாசவுக்காரசுருவைப்பண்ண
அறைகிறேநானுந்தானறிந்தமட்டும்
போச்சப்பாசவுக்காரமென்னவென்பார்
பொல்லாதசண்ணையைத்தான்கழட்டமாட்டார்
வாச்சப்பாபூநீற்றிலெல்லாமாச்சு
மருவியதைப்பழச்சாற்றில்விட்டுஆட்டி
பாச்சப்பாபுடம்போட்டுவெடுத்துப்பாரு
பாரமில்லாலேசானசுண்ணம்பாரே.

பாரப்பாசவுக்காரஞ்செய்யுமார்க்கம்
பங்குனியிலெடுத்துவந்தபூநீர்தானும்
நேரப்பாபடிநாலுபாண்டத்திலிட்டு
நீற்கரியகற்சுண்ணம்படிதானிட்டு
வாரப்பாவமுரிபடியெட்டுதானும்
மருவியதோர்கல்லுப்புபடிதான்போட்டு
தாரப்பாவதற்குள்நன்றாய்க்கலக்கிவைத்து
சமர்த்துடனேநாலாநாள்தெளிவைவாங்கே.

### கடுங்காரசெயநீர்.

வாங்கியேயடுப்பேற்றியெ[illegible]ரப்பாக
வத்தியெல்லாங்குழம்புபோல்வருதல்கண்டு
தேங்கியேயடியரைதானெள்ளிலெண்ணை
சிறப்பாககூடவிட்டுத்திரளக்காச்சி
பாங்கியேபக்குவத்திலானபின்பு
பருவமுடன்விபூதியின்மேற்சீலைபோட்டு
நீங்கியேயகப்பையினாலெடுத்துவிட்டு
நெகிழாமல்விளாங்காய்ப்போலுண்டைசெய்யே.

செய்தவுண்டைரவிதனிலேயுலரவைத்து
சிறப்பாகவெடுத்துவைத்துப்புதுப்பாண்டத்தில்
வைத்தபின்புலோகத்தோர்சவுக்காரந்தான்
வாதத்துக்காணுதுவண்ணார்க்காகும்
பைதபின்புவிதற்கடுத்தசித்திகேளு
பாங்காகப்பாங்குபெறசீவிக்கொண்டு
கொய்தமல்லிச்சாற்றினாற்பாவகமேசெய்து
கூரியரவிதனிலேகாயப்போடே.



காயவேவெழுநாள்துவைத்துப்போடு
காய்ந்தபின்புசெய்யுகிறமுறைமைகேளு
வாயவேநெல்லதனைப்பாண்டத்திட்டு
வகையாகத்தண்ணீருங்கூடவிட்டு
நேயவேமல்லிகையினிலைபரப்பி
நினைவாகவதன்பேரில்சவுக்காரம்வைத்து
கோயவேமேலுமந்தவிலைபரப்பிக்
குடுவையின்மேல்வைத்துவடுப்பிலேற்றே. அ

அடுப்பேற்றிகடுகரெண்டுதீயைமூட்டி
ஆவின்மேல்வருதல்கண்டுயெடுநேர்ப்பாகத்
துடுப்பேற்றாவிதனிலேகாயப்போடு
துலங்கமுன்போலிலைபரப்பிநெல்லில்வைத்து
வடுப்போடுரவிதனிலேயுலரப்போடு
மறுகாலுமுன்போலவிலைபரப்பி
அடுப்பேற்றிமுன்போலபதத்தைப்பார்த்து
அழகானவெய்யிலுக்குள்காயப்போடே. கூ

### உப்புசுண்ணக் குகை.

போட்டவுடன்தந்தம்போ[illegible]க்கியாகும்
புகழாகக்கிளிபோலத்தளரக்கட்டி
ஆட்டுடனேகற்சுண்ணங்கிளிஞ்சிற்சுண்ணம்
அப்பனேயண்டோடும்நத்தைச்சுண்ணம்
நீட்டுடனேசங்குசுண்ணம்புதிதாய்ப்பண்ணி
நிறையுடனேயொன்றாகக்கலந்துகொண்டு
மாட்டுடனேகிளியெடுத்துநடுவேவைத்து
வளமானசட்டியிலேவைத்திடாயே. க0

வைத்தபின்புவடுப்பேற்றியெண்ணிப்பார்த்து
வளமாகப்பதினறுதமரும்போட்டு
உத்தவேயமுரிதனில்மல்லிசூலி
யுறவாகப்போட்டுநன்றாய்க்காச்சிக்கொண்டு
நைந்தபின்புவின்னீரைவிட்டுமேதான்
நலமாகமேற்சட்டிமூடிப்போடு
வைத்தபின்புகிளிவாங்கியுலரப்போடு
ஐந்துதரமிப்படித்தாநீற்றுப்போடே. கக

நீற்றினபின்கிளிவாங்கியுலரப்போடு
நிசமாகவண்டோட்டிலிதனைவைத்து
மாற்றினபின்னண்டோடுமேலேமூடி
மறவாமற்சுண்ணாம்புசீலைசெய்து
தோற்றியதோர்பத்தெருவிற்புடத்தைப்போடு
சுகமாகக்குளிர்ந்தபின்யெடுத்துப்பாரு
ஆற்றியதோர்தவளமாம்படிகம்போல
வம்மம்மாசவுக்காரக்குருவுமாமே.

குருவுக்குகடுங்காரசெயநீர்கேளு
கூறரியபூநீறுகல்லுச்சுண்ணம்
சருவுக்குள்முரிவிட்டுக்கலக்கிக்கொண்டு
சாதகமாய்மூன்றுதினங்கடந்தபின்பு
திருவுக்குள்தெளிவிறுத்துசேரைரெண்டு
திறமானபீங்கானில்வைத்துக்கொண்டு
குருவுக்குப்போடுகிறமருந்தைக்கேளு
குணமானவஞ்சுசுண்ணங்காசிப்போடே.

போடப்பாகாசிடைதான்வங்கச்சுண்ணம்
பொலிவானவெடியுப்புச்சுண்ணம்போடு
நீடப்பாசீனமொருக்காசுபோடு
நிகரானசூடனுமோர்காசுபோடு
தேடப்பாசாரமொருகாசுபோடு
தெளிவானவீரமொருகாசுபோடு
ஆடப்பாநாபியொருகாசுபோடு
ஆதியென்றகாரமொருகாசுதானே.

காசிடைதான்குருவண்டுவுரமுஞ்சூதம்
கனமாகப்புழுகோடுபுராவினெச்சம்
நேசிடையாய்க்குக்கிடத்தின்மலமுங்கட்டு
நெகிழாமல்முரிவிட்டு அரைநால்சாமம்
வாகிடையாய்முந்நீரைக்கரைத்துக்கொண்டு
மறலாமலண்டமதுமுப்பத்தொன்று,
தேசியதாம்வெண்கருவைக்கூடவிட்டுச்
சிறப்பானவெருக்கம்பால்சேரைவாரே.

வார்த்தநன்றுய்மத்திப்பாய்க்குச்சியாலே
வளமாகமூன்றுநாள்மத்திச்சப்பா



போர்த்தியதோபீங்கானுக்குள்தெளிவிறுத்து
பொற்கொடிமுன்வைத்துமதைப்பூசைபண்ணு
மாத்தியதோர்வஸ்துசுத்திப்பாண்டஞ்செய்து
மறவாமலஞ்செழுத்தெட்டெழுத்துமோது
தூர்த்தியதோசவுக்காரச்சுண்ணந்தோய்த்து
சுகமாகவேழுநாள்ரவியிற்போடே. கசு

போட்டபின்புசுண்ணாம்புமுப்புநேரே
பொடித்துஅரைச்சுண்ணாம்புத்தண்ணீர்விட்டு
நாட்டபின்புபுடம்போடுஎடுத்தரைத்து
நலமாசக்குகைபோலப்பண்ணிக்கொண்டு
நீட்டியபின்மேல்மூடியொன்றுசெய்து
நினைவாகவதற்குள்சவுக்காரம்வைத்து
ஆட்டியேமேல்மூடிசீலைசெய்து
அதட்டியொருபுடம்போடச்சுண்ணமாமே. கஎ

சுண்ணமென்றதுரைக்கெல்லாங்கடுங்காரமேற்ற
தொடுகுறிபோல்கடுங்காரமேறுமேறும்
கண்ணுமென்றுதிறவுகோல்வழலச்சுண்ணம்
கடுங்காரமேறிநந்தாரங்கட்டும்
பண்ணமென்றபல்லுப்புவிந்துள்சாகும்
படுமுன்னேநவாச்சாரங்கட்டிப்போகும்
வண்ணமென்றவீரமதுமணியுமாகு
மகத்தானபூரமதுசுண்ணமாமே. கஅ

ஆகுமப்பாதாதுவகையறுபத்துநாலும்
அப்பனேமெழுகாகுங்குருவுமாகும்
வாகுமப்பாவுபசரங்களீயமாகும்
மார்க்கத்தில்குளிகைசெந்தூரமாகும்
போகுமப்பாவெகுதூரமெட்டியோடும்
போக்கதிலேமெத்தவுண்டுபுகட்டியாடும்
ஓகுமப்பாகாலாங்கிபோற்றிபாதம்
உலகத்தோர்பிழைக்கவென்றுரைசெய்தேனே. ககூ

உரைசெய்தேன்சனுடவடமொழியைப்பார்த்து
உத்தமனேயேழாயிரமாகச்சொன்னேன்
நிரைசெய்தேனேழரையுந்தான்சுருக்கி
நிகண்டாகமறையாமல்திறந்துசொன்னேன்

புறைசெய்தவெண்ணூறிலொன்றும்பொய்யாம்
புத்தியில்லாப்புல்லருக்குமறிவுதோன்றும்
கறைசெய்தேன்வாதமதைத்திறந்துசொன்னேன்
கைகண்டமுறையாயுஞ்சரியாய்ப்போமே. ௨௰

போகாமலாயிபாதம்பூசைபண்ணு
போக்கோடேயாயிபாதமேறிபாரு
வேகாமல்வாசியைத்தானங்கென்றாணு
எழும்பாமல்பாய்கையைத்தானறுத்துத்தள்ளு
நோகாமல்சடலமெல்லாங்கற்பமுண்ணு
நோக்கிநின்றவறுவுக்குள்மனதைப்பூணு
சாகாமல்தேகத்தைசுத்திபண்ணு
சதாகாலங்குருவுடையபத்திபண்ணே. ௨௧

## உப்புக்கட்டு.

உண்ணவேயுப்புடையகட்டைக்கேளு
ஒடுகிறதூரமிதுவுசத்திமெத்த
பண்ணவேபலநூலில்பயனுமில்லைப்
பாடினத்தால்சித்தரென்மேல்ப[illegible]ாச்சு
கண்ணவேசவுக்காரச்சுண்[illegible]மொன்று
கடியசமன்சாரத்தைக்கல்வத்திட்டு
பண்ணவேநாற்சாமமுன்னீர்விட்டுப்
பக்குவமாயரைத்துருட்டிக்குகையில்வையே. ௨௨

வைத்ததின்மேல்சில்லிட்டுச்சீலைசெய்து
வளமாகப்பத்தெருவிற்புடத்தைப்போடு
நைத்ததுமேலாறவிட்டெடுத்துவாங்கி
நலமாகக்கடுங்காரச்செயநீர்குத்தி
தைத்ததுமேல்மூன்றுநாள்ரவியிற்போட்டு
சாதகமாய்த்தினந்தினமுஞ்செயநீர்குத்தி
பைத்ததுவேவெண்ணெய்பதம்பீங்கானிலிட்டுப்
பருவமாயதின்காலம்பனியில்வையே. ௨௩

வைத்துடனேபோலெண்ணெய்த்தண்ணீராகும்
வாகாதவென்னீரில்வீரம்போடு
கைத்துடனேயிந்துப்புக்கல்வத்திட்டு
கானீர்தநீரைவிட்டுயரைநாற்சாமம்



மொத்துடனேயெடுத்துருட்டிச்சுண்ணமூசை
மேல்மூடிசீலைசெய்துப்புடத்தைப்போடு
நைத்துடனேயிந்துப்புச்சுண்ணமாகும்
நனைத்துமேற்கடுங்காரம்ரவியிற்போடே. ௨௪

போடப்பாதினமூறுங்காயக்காயப்
பொதிவாகும்பின்பெடுத்துப்பனியில்வைப்பாய்
நீடப்பாசிவமாகுமிதனைவாங்கி
நிலைத்துநிற்கும்வீரத்தைநிலைக்கப்பண்ணு
ஆடப்பாசெயநீரும்பலமும்வாங்கி
அதற்குள்ளேவீரமொருபலத்தைப்போடு
நாளப்பாகாற்றில்லாக்குளிர்ச்சிதன்னில்
நவிலாமல்மூன்றுநாள்ரவியில்வையே. ௨௫

## வீரசெயநீர்

வையப்பாரவிதனிலேயஞ்சுநாள்தான்
மகத்தானபூரமதுவுப்புத்தானும்
செய்யப்பாசுண்ணாம்புகுகையில்வைத்துச்
சிறப்பாகமேல்மூடிசீலைசெய்து
மெ[illegible]ந்தெருவிற்புடத்தைப்போடு
வெறித்தபுலிபோ[illegible]ன்று வெண்மையாகும்
கையப்பாபட்டுடனேவெந்துநீறுங்
கடுங்காரசெயநீரிற்நனைத்துவைப்பே. ௨௬

அப்பியேபீங்கானில்ரவியிற்போடு
ஐந்தாநாள்தினந்தினமுஞ்செயநீர்குத்து
செப்பியேயொருவருடன்பேசவேண்டாம்
செகஜாலமிதற்குள்ளேயடங்கிப்போச்சு
கப்பியாஞ்சுண்ணமெல்லாமிதின்கீழாக்கி
கரையிலையிதற்குள்ளேசொல்லவென்றால்
வெப்பியேவிம்மிவிம்மியலையவேண்டாம்
வெருளாதேபீங்கானில்பதனம்பண்ணே. ௨௭

## வெடியுப்புசெயநீர்

பண்ணப்பாவீரமொருபலந்தான்றாக்கிப்
பரிவானசவுக்காரசெயநீர்விட்டு
தண்ணப்பாகல்வத்திலரைநாற்சாமம்
தனிப்பிறகுவழித்தெடுத்துவில்லைசெய்து

கண்ணப்பூபாரவிதனிலேயுலர்ந்தபின்பு
காசிடைதான்சவுக்காரசுண்ணம்போட்டு
விண்ணப்பாபூரமாஞ் சுண்ணப்போட்டு
வெண்காரசுண்ணமிருகாசுதூக்கே. ௨௮

தூக்கியபின்கல்வத்திற்காரநீரால்
துடியாகவரைத்துமேல்கவசங்கட்டி
பாக்கியமாய்வெண்கருவுஞ்சுக்கான்கல்லும்
பக்குவமாயரைத்துமேகவசங்கட்டி
தாக்கியபின்ரவிதனிலேயுலரவைத்துச்
சாதகமாய்ச்சுண்ணும்புக்குகையில்வைத்து
நீக்கியபின்சீலைசெய்துபுடத்தைப்போடு
நிர்மலம்போல்வென்னீராய்நிறைந்துபோமே. ௨௯

போகாமல்வெடியுப்புசெயநீர்கேளு
போக்கோடேவெடியுப்புநாலாங்காச்சல்
வாகாகப்பலம்பத்துநிறுத்துக்கொண்டு
மைந்தனேபூநீறுநிறுத்துப்போட்டு
வேகாமல்கூடவொருகாசுபோடு
விரவியதோர்பூரமதுகழஞ்சிபோடு
நோகாமலிதுகளெல்லாமொன்றாய்ச்சேர்த்து
நொறுக்கியேகல்வத்தில்போடுபோடே. ௩௰

போட்டெல்லாங்கல்வத்திற்பழச்சார்விட்டு
பொலிவாகமூன்றுநாள் ஆட்டுஆட்டு
நீட்டெல்லாம்வழித்துஅயச்சட்டியிட்டு
நேர்பாகதீயெரிப்பாய்காலுசாமம்
வாட்டெல்லாம்வழித்தொருபீங்கானுக்குள்ளே
மைந்தனேகடுங்காரச்செயநீர்குத்தி
தீட்டெல்லாமஞ்சதரம்ரவியிற்போடு
சிறப்பாகச்சுண்ணமோர்குகையிலூதே. ௩௧

## சரக்குகட்டு.

ஊதையிலேசுண்ணும்பாம்வெந்தநீறும்
உத்தமனேபீங்கானிலெடுத்துக்கொண்டு
மாதையிலேகடுங்காரசெயநீர்குத்தி
மைந்தனேநித்தியந்தான்ரவியில்வைப்பாய்



பாதையிலேசலமானமிருந்தநீரில்
பருவமென்றவழலையுடன்சுண்ணங்காசே
போதையிலேசுண்ணமென்றபூரங்காசு
போற்றியதோர்வீரமதுசுண்ணங்காசே. ௩௨

காசிடைதான்செயநீரிற்கலக்கிக்கொண்டு
கடியதொருசரக்குகளிற்சுருக்காய்போடு
ஆசிடைதானறுபத்துநாலுங்கட்டும்
ஆச்சரியமுபசாரங்கள்சத்தேயாகும்
தாசிடைதான்கெவுரிவெள்ளைவீரம்பூரம்
தயங்காததாளகமுஞ்சிலையுங்கெந்தி
தேசிடைதாநாகமதுகட்டும்பாரு
க்ஷணத்திலேகருவங்கஞ்சாகுஞ்சாமே. ௩௩

## உப்புக்கட்டு.

சாமப்பாவுப்பிதுக்குள்சாற்றக்கேளு
தனித்ததொருவெடியுப்புநீரைவார்த்து
நாமப்பாயேழுநாள்ரவியிற்போடு
நலமாகசெயநீர்களெல்லாஞ்சுண்டி
வேமப்பாசரக்கெல்லாம்வெந்தநீறும்
வெருளாதேபீங்கானிலெடுத்துவைத்து
காமப்பாற்கானற்பால்ரெண்டுங்கூட்டிக்
கடுகவேரவிதனிலேயெடுத்துவையே. ௩௪

வையப்பாவுப்பேதுவென்றாயானால்
மகத்தானவாருதியிற்சத்திநாதம்
தையப்பாமலைபோலேநிற்கும்பாரு
தனையெடுத்துபாக்குபோலுடைத்துக்கொண்டு
செய்யப்பாபழச்சாறுதினமூன்றுவிட்டுத்
திறமானவுப்பங்கேசித்தியாகும்
மெய்யப்பாரவிதனிலேயுலரப்போட்டு
விரவியங்கேயுட்பூசமருந்துகேளே. ௩௫

கேளப்பாசவுக்காரச்சுண்ணமொன்று
கொடியானவீரமொன்றுபூரமொன்று
வாளப்பாசவுக்காரச்செயநீர்விட்டு
மைந்தனேகுழம்புபோல்கல்வத்தாடி

கேளப்பாகல்லுப்புத்துவைத்துவாட்டு
 கொள்கிலிர்ந்ததண்ணிர்க்குள்கடந்துவாட்டு
நாளப்பாகுழம்பையெல்லாம்பூசிவாட்டு
 நலத்தபின்புமுன்னிட்டுமருந்தைபூசே. ௩௬

பூசியதைவாட்டுதற்குவிபரங்கேளு
 பொலிவானவெடியுப்புநீரைவார்த்துத்
தாசியதைக்கல்வத்திற்குழப்பிக்கொண்டு
 தனையெல்லாம்பிரட்டிநன்றாய்வாட்டிப்போடு
மாசியதுகல்லுப்புப்பதத்தைக்கேளு
 வகையாகமுப்பதுந்தான்பூசிப்போடு
தேசியதையடுக்கடுக்காய்முதிரவிட்டு
 சிறப்பாகத்தணலுக்குள்முதிரவாட்டே. ௩௭

வாட்டிடவேகல்லுப்புதெறிப்பாய்நிற்கும்
 மருவியதோர்நீண்டகம்பியுப்புநேரே
நாட்டலேநாயுருவிப்பிரண்டைச்சாறும்
 நலமானக்கிளிஞ்சினீர்சரியாயூட்டி
ஆட்டிடவேயமூரிவிட்டுமெழுசாய்ச்செய்து
 அடைபோலேரெண்டாக்கிச்சட்டிவிட்டு
நீட்டவேயடைமேலேயுப்பையிட்டு
 நேர்ப்பாகதன்மேலேயடையால்மூடே. ௩௮

மூடியேமேமூடிசீலைசெய்து
 முழிபாமலடுப்பேற்றியெரிநாற்சாமம்
ஆடியேதீபம்போலெரித்துவாங்கி
 ஆறவிட்டெடுத்தந்தப்படியேவிட்டு
நாடியேகெசப்புடந்தான்போட்டாயானால்
 நலமானவயிரம்போலுருக்கிக்கட்டும்
தேடியேயாறவிட்டெடுத்துப்பாரு
 சிவசிவாமுத்துபோல்மணியுமாமே. ௩௯

ஆமப்பாமணியெடுத்துருக்கிப்பாரு
 ஆகாகாபொன்போலேயுருகியாடும்
தேமப்பாசரிதனிலேயிறங்கிற்றானால்
 சிறப்பானமருந்துதன்னைப்பூசிப்பாரு.
வாமப்பாபுடம்போடவுருகிநிற்கும்
 மணிபோலேநின்றுடுங்கரியிலுள்ளே



தாமப்பாவுப்புமலுத்தாவடமாய்க்கோர்த்துத்
 தாயோடுதந்தையைநீபூசைபண்ணே. ௪௰

பண்ணப்பாநயதோடுசுத்திவைத்துப்
 பரிவாகப்பூசைபண்ணிமதுவையுண்டு
விண்ணப்பாதாவடத்தைக்கரத்தில்வைத்து
 வேதாந்தவனுபவத்தில்மனதையூன்றிக்
கண்ணப்பாவஞ்செழுத்துமூன்றெழுத்துமோது
 கயிலையுறைசிவன்வந்துகாட்சிசெய்வார்
நண்ணப்பாசிவகாமித்தாயார்வந்து
 நாட்டிலுள்ளவதிசயங்களெல்லாஞ்சொல்வாள். ௪௧

சொல்லுவாளஷ்டகர்மமெட்டுஞ்சொல்வாள்
 தோற்றுதகருமத்தின்வழியுஞ்சொல்வாள்
கொல்லுவாள்வர்மத்தைப்பழித்தபேரைக்
 கூப்பிடுவாள்வர்மத்தின்கொள்கினோரை
வெல்லுவாள்சிவகாமிசொல்லையாலும்
 விடுவித்துப்பார்த்துமக்களுக்குச்சொன்னேன்
மல்லுவாள்சமாதியிலேயுரைத்துப்பாரு
 மாயமாம்பிரபஞ்சமெல்லாம்போமே. ௪௨

போகாமலுப்புகுருதன்னைச்சொல்லப்
 புகழாகச்சவுக்காரச்சுண்ணமொன்று
நோகாமல்கற்பூரச்சுண்ணமொன்று
 நோக்கரியவீரத்தின்சுண்ணமொன்று
வேகாமல்புழுகொன்றுசீனமொன்று
 விரவியரைச்சவுக்காரக்குருவினாலே
வாகாவுப்பினுடமணிக்குப்பூசி
 மாசற்றரவிதனிலேயுலரப்போடே. ௪௩

உலர்ந்தபின்சுண்ணம்புக்குகையில்வைத்து
 வுத்தமனேமேல்மூடிசீலைசெய்து
அலர்ந்தபின்புபத்தெருவிற்புடத்தைப்போடு
 ஆதியாங்கல்லுப்புச்சுண்ணமாகும்
கொலர்ந்தனக்குக்கோடாலிக்காப்புபோலக்
 கொள்கையதோர்சரக்குக்காலன்காலன்
நலர்ந்தனக்குச்சவுக்காரசெயநீர்குத்தி
 நாளேழுரவிதனிலேயுலராப்போடே ௪௪

போடவேதினமேழில்பூப்போலாகும்
பொலிவாணசுண்ணமிடைசாரங்கூட்டி
நாடவேதினமூன்றயரைத்தாயானால்
நலமானவருணசிவம்போலேதிற்கும்
நீடவேரவிதனிலேயுலர்ந்தபின்பு
நோாகச்சுண்ணம்புக்குகையில்வைத்து
ஆடவேமேல்மூடிசீலைசெய்து
அதட்டிபொருபுடம்போடச்சுண்ணமாமே. ௪௫

சுண்ணத்தைப்பனியில்வைக்கச்செயநீராகும்
தோற்றியபின்பிங்கிரில்வீரச்சுண்ணம்
வண்ணத்தையகத்தில்வைக்கும்சவுக்காரச்சுண்ணம்
மாதற்றவொளிவாகும்பூரச்சுண்ணம்
சுண்ணத்தைவெளியாக்கும்நீரிற்போட்டு
கலக்கியொன்றாய்மத்திச்சாக்கிற்பூசி
அண்ணத்தையடுத்துப்பால்சலம்வேரும்போல்
அணிகிடிலோகட்டியங்கேமணிபோலாமே. ௪௬

ஆமப்பாவறுபத்துநாலுநாது
அப்பனேயுபசாரங்கள் நூற்றிரண்டு
போமப்பாவனமூலியிருபத்தைந்து
பொன்காய்க்குமரமாகப்பண்ணிவிக்கும்
நாமப்பாகாலாங்கிப்பதத்தைப்போற்றி
நாட்டிலுள்ளபேர்களுக்குப்பிழைக்கச்சொன்னேம்
வாமப்பாளன்னூலிலொன்றுதப்பில்
மதிகெட்டபோகர்முனியென்றுசொல்லே. ௪௭

சொல்லவேயுப்பினிடமணிபைச்சேரு
துடியானகரியில்வைத்துருகும்போது
மல்லவேதங்கமோரிடையைமிட்டி
வாய்திறந்துஆவென்றுசுழித்துவாங்கும்
வெல்லவேகாகமோரிடையைப்போடு
மேதிச்சுவாங்கையிலேசூதம்போடு
தெல்லவேவீரமோரிடையைப்போடு
திரண்டுருண்டுவாங்கையிலேகெந்திபோடே. ௪௮

போட்டவுடன்கலங்காகுமுப்புமக்காள்
பொலிவானநவலோகம்அன்பத்துக்கு



காட்டினதும்பத்தரையாமாற்றுகாணும்
களக்கத்தைக்கண்டவுடன்கொச்சியாதே
ஆட்டடனேயன்னமதைத்தண்ணீர்கால்கொள்
ஆசையென்றபுளிப்பையிகழ்ந்துதள்ளு
நாலுடனேசிவசொத்தையிடிபோலுண்ணு
நலம்போதசமாதியிலேயிருந்திடாயே. ௪௯

## உப்புசெந்தூரம்.

இருந்திட்டவுபபினுட்செந்தூரத்தை
யிதமாகச்சேளுங்கள்சிஷியர்தாமே
வருந்திட்டசூதமொன்றுநாகமொன்று
மருவியதையுருக்கியல்லோபொடியாய்ச்செய்து
திருந்திட்டவீரமென்றசுண்ணமொன்று
சிறப்பாகமத்தித்துப்பனியில்வைக்க
அருந்திட்டசெயநீருமிதனைவாங்கி
ஆதியென்றவுப்புமணிதன்னிற்றேயே. ௫௦

தோய்த்துமேபரிதகட்டைமேலேசுத்தி
சுகமாகவிலுப்பைநெய்விளக்கில்வைத்து
பாய்த்துநூலினையாதேதிரியைப்போட்டு
பக்குவமாய்வாகுமட்டும்வாட்டி நீரு
ஏய்த்துமேயுட்புகுந்துபரிதானப்பா
இதமாகவருணனைப்போலாகும்பாரு
காய்த்துமேநவலோகமைம்பதுக்குக்
காட்டினதும்பத்தரையாகண்டுகொள்ளே. ௫௧

கொள்ளப்பாசெந்தூரங்குன்றிடைமட்டும்
கோடானகோடிவரையிறுத்துந்திரேகம்
விள்ளப்பாசுக்கிலத்தைக்கட்டிநீத்த
மேலோடுமல்லாதுக்கிழோடாது
துள்ளப்பாநரைதிரைகள்எல்லாமாறும்
சுகமாகக்காயமதுசிவந்துமின்னும்
விள்ளப்பாசட்டையென்றுகக்கிப்போடும்
வேதாந்தசாரமெல்லாம்வெளியாய்ப்போமே. ௫௨

போமப்பாபச்சையுப்பைத்தின்றானகில்
புகழானவேருவைக்கக்கிப்போகும்

வேமப்பாவமிரியிலேயிறங்கிப்போகும்
வெறிப்பாகசடலமெல்லாந்தளர்ந்துபோகும்
போமப்பாசடங்குலைந்துநரையுமாகி
புகழானரத்தமெல்லாங்கழன்றுபோகும்
நாமப்பாகட்டியதேவர்உப்பைத்தின்று
நலமானசமாதியிலேயிருந்திட்டேனே. ௫௩

வாத அங்கமறிய.

இருந்திட்டேன்சமாதியிலேகற்பமுண்டு
ஏழுயுகம்கடந்தபின்புஎழுந்திருந்தேன்
அருந்திட்டார்பக்கல்சென்றுயானும்
அருகிருந்துதொழுதிறங்கிதீட்சைகேட்டான்
திருந்திட்டகாலாங்கியையர்பாதஞ்
செப்பமுடனேழுயுகம்வாதம்பார்த்தேன்
பருந்திட்டமாகவல்லோகுளிகைகட்டி
பக்குவமாயண்டமெல்லாம்பார்திட்டேனே. ௫௪

பார்த்திட்டேனண்டரண்டம்பத்துமட்டும்
பரிவானமலைதோறும்நாதாக்கள்கோடி
ஆர்த்திட்டமலைதோருஞ்சித்தர்கோடி
அந்தமலைதோறுமூலிகையேமெத்த
ஏர்த்திட்டசாத்திரங்கள்மெத்தவுண்டு
எங்கெந்தநூல்தோறுமெழுதிக்காணூர்
மாத்திட்டமாகவல்லோவுப்புச்சொன்னேன்
மறைத்தார்கள்சாத்திரத்தில்சித்தர்தாமே. ௫௫

மறைத்ததென்னவென்றுக்கால்சொல்லக்கேளு
மலைகளெல்லாஞ்சித்தர்மயமாச்சுதென்று
நிறைத்ததென்னவாதியுப்பையிழுக்காய்ச்சொன்னேன்
நேரானவழலையைத்தான்மூடிப்போட்டார்
உரைத்ததென்னவழலையினல்வாதப்போச்சு
ஓகோகோகாயசுத்திக்கவனம்போச்சு
குறைத்ததென்னசித்தரென்றுசொல்லியானுங்
கூறினேன்வெளியாகக்கூறினேனே. ௫௬

கூறியதோர்சவுக்காரவுண்டைசெய்து
குறிப்பாகச்சுத்திசெய்து சுண்ணம்பண்ணு



மாறியதோர்கடுங்காரச் சுண்ணம்பண்ணு
மைந்தனேகற்பூர வுப்புபண்ணு
தேறியதோர்வீரத்தைச் சுண்ணம்பண்ணு
சிறப்பானவெடியுப்பு செயநீர்பண்ணு
ஆறியதோர்கல்லுப்புக் கட்டியாகும்
அரகராவாதமதி லடங்கிப்போச்சே. ௫௭

போச்சென்றவுப்பினுடை மெழுகைக்கேளு
போரானவுப்பதுவும் பலமுமொன்று
ஆச்சென்ற குகையில்நின்றுருகும்போது
அப்பனேசாரமது பலமுங்கால்தான்
நீச்சென்றவெண்காரம் பலமுங்கால்தான்
நிசமானகெந்தகமும் பலமுஞ்சேர்த்து
காச்சென்றசவுக்கார செயநீர்வார்த்து
கலந்தரைத்துக் குன்றியளவுண்டைசெய்யே. ௫௮

செய்தவுண்டை வுப்புநின்றுருகும்போது
சிதறுமல்லொவ்வொன்றாய் கொடுத்துவாநீ
மைதவுண்டை புகையாமலுள்ளேவாங்கும்
மையினமால்முப்பதுவு மிப்பால்வாங்கி
வேய்தகவலோகத்தில் நூற்றுக்கொன்று
போட்டிடவேதிகைமாற்றாய் நிற்கும்பாரு
அந்தவுப்புகாவிக்கு மோடாதப்பா
வாச்சரியங்காயசித்தி சுருக்கம்பாரே. ௫௯

பாரிந்தமெழுகதனைக் குன்றியுண்ணு
பத்தியமாம்புளியுப்புப் பெண்ணுந்தள்ளு
காரியந்தாகாற்பதுதா ளரையில்வாருக்
கனமானயோகத்தை நின்றுதேறு
சாரிந்தசட்டையொன்று தள்ளிப்போடுஞ்
சந்திரனோசூரியனோ வென்பார்பாரு
ஆரிந்தப்படிசெய்வார் நாதாக்கள்செய்வார்
ஆச்சரியமுலகத்தோர் பாஷாண்டிதானே. ௬௦

சார நீறு.

தானென்றவுலகோர்க்கு வாதமெய்யில்தனித்
தன்பனுத்திரிந்து பெண்ணைச்சேர்ந்து
வானென்றவமுதமுண்டு மதிதேயாகி
வாகானகற்பழித்துப் பாசமாகி

கோனென்றகுருவேது காயசித்திக்
குறிப்பானவாதார வழிதானேது
வானென்றவாடுகிற குளிகையென்ன
வாய்பேச்சாய்த் திரிந்தலைந்துவாடுவானே. சுக

மருளாமல்போகவல்லோ வாதஞ்சொன்னேன்
மாண்டிறந்துபோகாமற் காயசித்தி
இருளானவிருளசல யோகஞ்சொன்னேன்
எழுவரைகாணவல்லோ குளிகைசொன்னேன்
அருளானமனமயங்க யோகஞ்சொன்னேன்
ஆனந்தமாவதற்கு வஸ்துசொன்னேன்
பொருளானகும்பகத்திற் றொண்டுபண்ணி
போக்கேடேயுப்பைமுந்திக் கட்டியாடே. சுஉ

ஆடவேயுப்பென்ற சுண்ணமொன்று
அணைத்திடுவாய்சாரத்தை ரண்டுயேம்
நீடவேகல்வத்தி லரைநாற்சாமம்
சேர்ந்தபின்பு சுண்ணமென்றகுகையில்வைத்து
நாடவேகடுங்கார செயநீர்குத்தி
நாள்மூன்றுமத்திச் சுரவியில்வைப்பாய்
ஊடவேபனியில்வைக்க செயநீராகு
மூத்தமனையின்னீரில் றொட்டங்கேளே. சுந

கேளப்பாவின்னீரில் வீரச்சுண்ணங்
கொடியாகமத்தித்துப் பலந்தான்பூரம்
நாளப்பாபீங்கானில் பூரப்போட்டு
நலமாகசெயநீரை யதிலேவாரு
நீளப்பாமூன்றுநாள் நிழலில்வைத்து
சேர்ப்பாகரவிதனிலே யஞ்சுநாள்போடு
வாளப்பாவரைத்துநன்றாய் வில்லைதட்டி
வளமானசவுக்காரஞ் சுண்ணஞ்சுண்ணே. சுச

சுண்ணத்தால் சரக்கெல்லாமடிக்துபோகும்
சொல்லாதவுபசரங்கள் மாண்டுபோகும்
திண்ணுதபாஷாண முப்பத்திரெண்டும்
சுருக்குடனேமாண்டுபோ மெல்லாந்திண்ணும்
கண்ணவேபாசத்தை சத்தேயுண்ணு
கலங்காதேவாசிகொண்டு வுள்ளேபூரி
பண்ணவேநடக்கையிலு மிருக்கையிலும்நீதான்
பழக்கமுற்ற நற்குலத்தைப்பாருபாரே. சுரு



பார்க்கவேவுப்பென்ற களங்கந்தன்னை
பலபலவாய்லோகத்தி லன்பதுகொன்றீய்ந்து
ஏற்கவேயிதைக்கொண்டு நவலோகத்திலீய
யிட்டதுவும்தெரட்டிதுவும் வேதையாகும்
கார்க்கவேயிந்தவித்தை யுண்டுகண்டாய்
கனமானகாரத்தை யுண்டுதேறு
தோற்கவேயுட்புகுந்து மூலம்பாரு
தொடுகுறிபோலாறுதலம் வெளியாய்ப்போமே. சுசு

## அப்பிரேகசத்து.

வெளியானயப்பி ரேகசத்துசேரு
விளங்கும்வெள்ளையப்ரே கமுதற்றரந்தான்
ஒளியானரத்னவன்னம் ரெண்டாம்பச்சை
யுசந்தமுதற்றரமானக் கிருஷ்ணவர்ணம்
மளியாகவப்பிரேக நவநீதம்பண்ணி
யப்பநேகிளிபோலக் கட்டிக்கொண்டு
களியானகொள்ளியிலைச் சாறுதன்னால்
கலங்காதேநாள்மூன்று தோளாயாக்கே. சுஎ

ஆற்கவேதொளையைப்போல் சட்டியிலிட்டு
அசையாதேகொள்ளிலையின் சாற்தன்னாலே
பார்க்கவேயடுப்பேற்றி யெறித்துப்பின்பு
பருவாவழக்கிழங்குசார் மூன்றுநாள்தான்
தோற்கவேமுள்ளாங்கிக்கிழங்குச்சாற்றில்
தொளைகட்டியெறித்திடு மூன்றுநாள்தான்
காற்கவேசார்மூன்று நாள்தானப்பா
கலங்காதேயெரித்துமே கிளியைவாங்கே. சுஅ

வாங்கியேபலம்பத்துக் கல்வத்திட்டு
வகையானவெண்காரம் பலந்தான்பத்து
தேங்கியேகாரமைந்து கடுப்புவொன்று
சிறப்பானசர்க்கரைத்தேன் பழமும்போடு
ஓங்கியேமாதளையின் பாலைவார்த்து
உறுதியாங்கொடியது பலமும்போட்டு
நீங்கியேமூன்றுநாள் வேகவாட்டி
கோரகவடைதட்டி யுலரப்போடே. சுகூ

உலர்ந்தபின்புவங்கமென்ற சரக்கையப்பா
உத்தமனேசரவுலையில் வைத்துவைத்து
அலர்ந்தபின்புஅப்பிரேகஞ் சத்தாய்வீழும்
ஆராய்ந்துசத்தெல்லாம் பொறுக்கிக்கொண்டு
கலந்தபின்புபில்லைதட்டி சரவுலையிலூது
கரகரவேசத்துதா னிறங்கும்பாரு
நலர்ந்தபின்பாறவிட் டெடுத்துப்பாரு
நலமாமாகயப்பிரேக சத்துமாமே. ௭0

ஆமப்பாகரடெடுத்து கல்வத்தாட்டி
அரைத்துநன்றாய் வில்லைதட்டியைந்துதரமூது
ஓமப்பாசத்துவெல்லா மொன்றாய்ச்சேர்த்து
உத்தமனேவெண்காரஞ் சரியாய்க்கூட்டி
தாமப்பாகுகையிலிட்டு உருக்கிநன்றாய்
சாய்க்கவேநல்லெண்ணைத் தேங்காய்க்கூட்டி
காமப்பாஇலுப்பைப்பூ நெய்யுந்தானும்
கணக்காகமத்தித்துச் சாய்த்திடாயே. ௭௧

சாய்த்திடவேமூன்றுதரங் கல்மசங்கள்போகும்
தங்கமதுரெண்டுக்கு மப்பிரேகம்நாலு
பார்த்திடவேரெண்டுமொன்று யுருக்கிக்கொண்டு
பரிவாகமெழுகுகட்டி கிண்ணிவார்த்து
மாய்த்திடவே கிண்ணிக்குச்சீலைசெய்து
வாலுகைமேல்வைத்ததற்குச் சூதம்வாரு
ஏத்திடவேகருமஞ்சல் சாறுவிட்டு
இதமாகவெறித்திடவே வெண்ணெயாமே. ௭௨

வெண்ணெயெல்லாம்வழித்துமோர் மொத்தையாக்கி
மேலானக்குளுந்தண்ணீர் தன்னிற்போட்டு
திண்ணியாயிருக்குமது கல்லுப்புபோலாம்
தேர்ந்தெடுத்து யாரயிலைகவசங்கட்டி
தண்ணையாய்விப்புடமாய் பத்துபோடு
தயங்காதே மத்தங்காய்க்குள்ளேவைத்து
உண்மையாய்கவசத்தைக் கனமாய்ச்செய்து
உத்தமனேகாயவைத்துப் எடுத்துப்போடே. ௭௩

போட்டெடுத்தகூடனுட தீயில்வாட்டிப்
புகழாகக்கரண்டிலே வெண்ணெய்குத்தி



ஆட்டெடுத்துவொன்றுக்கு நாலுதங்கம்
அழகாகசூதத்திற் பாதிநாகம்
நீட்டெடுத்துஉருக்கிநன்றாய் மணியாய்வாங்கி
நேர்ப்பாககல்வத்திற் பொடியாய்ப்பண்ணி
போட்டெடுத்துசுத்தித்த கெந்திதானும்
தூநுசாகசூதபிடை கூட்க்கூட்டே. ௭௪

கூட்டியெல்லாம்பெற்றலைபின் சாற்றாலாட்டிக்
குறிப்பாகப்பொடிபண்ணிக் குப்பிக்கேற்றி
ஆட்டியேவாலுகையின் மேலேவைத்து
ஆறுசாமமானபின்பு கடுந்தீபோடு
நீட்டியேபன்னிரண்டு சாமமானால்
நிலைத்துநிற்குமாதளம்பூ நிறைத்தைப்போலே
வாட்டியேநவலோகம் நூற்றுக்கொன்று
மாற்றென்னப்பனிரெண்டாம் பணவிடைதானுண்ணே. ()

உண்ணவேமண்டலந்தா னந்திசந்தி
உத்தமனேயுகந்தவரை யிருத்துந்திரேகம்
தண்ணவேயிருட்டரையி லிருந்தானால்
சந்திரனேசூரியனே யென்பார்பாரு
மெண்ணவேகஸ்தூரி வாசம்வீசும்
மேலானகைரண்டு மிருதுவாகும்
எண்ணவேகற்பமெல்லா மப்படியேயாகும்
இருந்துபார்சமாதிக்குள் கற்பமென்றே. ௭௬

## கெந்தகச்சத்து.

ஒன்றானகந்தகன்தான் பலமோபத்து
உத்தமனேசுத்திபண்ணி யச்சட்டியிலிட்டு
கன்றானக்குமரிச்சார் கீழ்மேலிட்டுக்
கலரவேகொதிக்கவைப்பாய் நாலுசாமம்
பன்றானபழச்சார்தான் சுருக்குப்போட்டு
பருவமாய்புங்கம்பால் நாலுசாமம்
கன்றானநிழலுலர்த்திக் கல்வத்திட்டு
கடுகவேபொடிபண்ணி மான்துளிரின்சாறே. ௭௭

சாரதனலெண்சாமம் ஆட்டுஆட்டு
தயங்குமனத்தக்காளி சாற்றாலாட்டி

போதனார்மந்தாரை வெள்ளைப்பூவை
　பிசைந்தர்தசாற்றினா லெண்சாமமாட்டு
தோதனார்தாமரைப்பூச் சாற்றாலாட்டி
　சிறப்பாகக்கரந்தையஞ்சு பலந்தான்போடே
வாரதனாலிந்தகை பாகமாக
　வண்மையாய்ச்சரக்குகளை கிறுத்துப்போடே. ௭௮

போடவேவெண்காரம் பலந்தானஞ்சு
　பெரிதானதெர்டரிபொரு பலமும்போடு
நீடவேகுன்றுமணிக் கடுகுவுப்பு
　கிலைக்கஒருபலம்போட்டு யாதளையின்பாலால்
மாடவேயெண்சாம மாட்டிப்பின்பு
　வகையாகவில்லைதட்டி புலரப்போடு
நாடவேநல்லெண்ணெய் படிதானென்று
　நயமாகபச்சட்டிக் குள்ளேவாரே. ௭௯

வார்த்துமேளடுப்பேற்றிப் பில்லையிட்டு
　வாகானகமலம்போ லெரிநேரப்பா
ஏர்த்துமேபொருத்ததொரு பதத்தில்வாங்கி
　இருபுறமுந்துருத்தியிட்டு சரவலையிலூது
போர்த்துமேகணிமணியாய்ச் சத்துவீழும்
　பொற்கரண்டையெல்லாஞ் சோதித்துலாங்கி
கார்த்துமேமுன்போலக் காறங்கூட்டி
　கலங்காதேயஞ்சுதிர மூதிடாயே. ௮௦

## நடராஜ விக்கிரகம்.

ஊதியேசத்தெல்லா மொன்றாய்ச்சேர்த்து
　வுத்தமனேவெண்காரங் கூடக்கூட்டி
காதியேயங்குகையி லுருக்கியாட்டிக்
　கனமானவப்ரேகம் சாய்த்தாற்போல
சாதியேசாய்த்தாக்கா லருணன்போல
　தயங்காதேசத்தாகுங் கெந்திசேர்த்து
வாதியேயிதைக்காண்போ ரார்தானப்பா
　மாசற்றநாதாக்க ளாடும்ஆட்டே. ௮௧

ஆட்டானகெந்தகத்து வேகமப்பா
　ஆரறிவார்சிவயோகி யல்லால்காண்பார்



நீட்டானவம்பலத்தில் சொர்னந்தானும்
　கிலைத்துநடராசரைத்தா னறுவாக்கச்சொன்னார்
பூட்டானசிற்பர்கள்தான் கருக்கட்டிவார்த்தார்
　புண்டுபுண்டுபோகவுமே சிற்பிரங்கி
கூட்டானமதிநேர்ந்து திகைக்கும்போது
　கொடுமூலராயனுமே வந்திட்டாரே. ௮௨

வந்திட்டுசிற்பரைதான் வரவழைத்து
　வாக்குரைதானென்றுசொல்லு மைந்தாவென்றான்
பின்திட்டுவிக்ரகம் வார்க்கவார்க்க
　பின்னமாய்ப்போகுதையா வென்செய்வோமென்ன
நொந்திட்டமனதுகண்டு திருமூலர்தாமும்
　கொடியிற்குள்வார்த்திடுநீ யென்றுசொல்லி
கந்திட்டுக்காசிடைதான் செம்புமீய்ந்தார்
　கடுகவேசிற்பருந்தான் வார்த்திட்டாரே. ௮௩

வார்த்திடவேதங்கமெல்லாஞ் செம்பாய்ப்போச்சு
　மனம்புண்ணாய்சிற்கும் பேராளன்வந்தான்
ஏர்த்திடவேவிக்கிரகம் வார்த்ததெங்கே
　எடுத்துவாவென்றிடவே யென்றுசொல்ல
பார்த்திடவேதங்கமெல்லா மெடுத்துக்கொண்டு
　பரிவாகச்செம்பாலே வார்த்தாயென்று
வார்த்திடவேயாக்கினைதான் பண்ணச்சொன்னான்
　வாகாகச்சொல்லுமுன்னே பட்டர்தாமே. ௮௪

தாமப்பாசிற்பரைத்தான் சொல்லவேண்டாம்
　தங்கமுனக்கதிகமாய்த் தாரோமென்று
வேமப்பாவெள்ளியைத்தா னுருக்கச்சொல்லி
　விரைந்துமூவாயிரத்தி லொன்றுபோட்டார்
தாமப்பாமாத்தது விருபத்தைஞ்சு
　சாதகமாய்க்குகையிலிட்டு மறைந்துபோனார்
சேமப்பாதவசியெங்கே யென்றுகேட்க்க
　தேடியெங்கும்பார்த்திட்டுத் திகைத்திட்டாரே. ௮௫

திகைத்திட்டுவந்துசொன்னார் சொன்னமுன்னே
　சிவசிவாவென்றுசொல்லி வாயைப்பொத்தி
நகைத்திட்டுசிற்பருக்கு வெகுமானஞ்செய்து
　நாதாக்கள்மகிமைசொல்ல தூறல்கூட்டும்

மிகைத்திட்டுவிடுதிக்குப் போனுனென்க
வேண்டியதோர்கந்தகத்தின் சத்திவேகம்
பகைத்திட்டுச்சித்தருட னுங்களுக்காய்ச்சொன்ன
பாரிதுக்குள்செந்தூரஞ் செய்யுக்கேளே அசு

கேளப்பாகட்டிய தோர்சூதமொன்று
கொடியாகவுருக்கையிலே சத்துவொன்று.
நீளப்பாதங்கமொன்று நாமமொன்று
நேராகவுருக்கியொரு மணியாய்வாங்கி
வேளப்பாகல்வத்தில் பொடியாய்ப்பண்ணி
விளங்கிநின்றதாளகமுஞ் சிலைபுமொன்று
நாளப்பாபொற்றலையின் சாற்றாலாட்டி
நலமாகநெல்லுபோல் வில்லைபண்ணே. அஎ

பண்ணியோவியில்வைத் தகலிலிட்டு
பாசியேமூடியொரு சீலைசெய்து
கண்ணியேபத்தெருவிற் புடத்தைப்போடு
கண்கொள்ளாயருணனைப்போல் செந்தூரமாமே
நண்ணியேசெந்தூர மாயிரத்துக்கொன்று
நாட்டவேபதினொரு வயதுமாகும்
புண்ணியமேசெய்தவற்கு செந்தூரமாகும்
பொல்லாததுரோகிக்கு வெய்யாவாறே. அஅ

வாறுகேள்செந்தூரங் குன்றியுண்ணு
மண்டலந்தான்யந்திசந்தி மறவாமல்நீயும்
தேறுகேள்திரேகமது செப்புந்தானும்
சிதரவடிமலைகளெல்லாந் தவுடாய்ப்போகும்
காறுகேள்கத்தியினுல் வீசினுக்கால்
கலகலென்றுவெண்கலத்தின் வோசைகாணும்
நாறுகேள்நாமமெல்லாஞ் சிவந்துகாணும்
நாதாக்கள்சித்தியெல்லா மிதுக்குள்ளாச்சே. அகூ

ஆச்சப்பாமாயுரத்தின் செப்பெடுக்க
அறையுறேன்யானுந்தா னரிந்தமட்டும்
போச்சப்பாமயிலிறகு கொண்டுவந்து
புகழாகதிரிந்துநல்லெண்ணை தோய்த்து
நீச்சப்பாசுட்டெடுத்து கரியாய்ப்பண்ணி
நிலைக்கவொருசேருமட்டும் நிறுத்துக்கொண்டு



தோச்சப்பாகல்வத்தி லிதனைப்போட்டு
துடிராசவர்க்கமொரு பலந்தானஞ்சே. கூ0

அஞ்சானவெண்காரம் பலந்தானஞ்சு
ஆரியாங்குடோரியது பலமுங்கொண்டு
நஞ்சானவீரமது பலமோரண்டு
நாயகமாங்கல்லுப்பு பலமுமொன்று
பிஞ்சானகுன்றிமணி யெள்ளுமொச்சை
பேசாதேயோவ்வொன்று பலமும்போட்டு
கஞ்சானவாதனையின் பாலைவார்த்து
கடிகியரைமூன்றுநாள் பில்லைகட்டே. கூக

கட்டியேபில்லைதன்னை நன்றாயூதி
கரட்டோடேமணிமணியாய் நன்றாய்நிற்கும்
ஒட்டியதோர்செம்பெல்லா மெடுத்துக்கொண்டு
ஓகோகோகாடெல்லா மூதவூது
தொட்டியதோரைந்துதிற மருந்திட்டாடி
தெல்லுபோல்வில்லைகட்டி யூதவூது
அட்டயதோர்செம்பெல்லாங் காரமிட்டு
அரகராமுன்போல சாய்த்திடாயே. கூஉ

சாய்த்திட்டசெம்பாலே சூதங்கட்டும்
சமுசயங்களெண்ணாதே பாஷாணஞ்சாகும்
மாய்த்திட்டவரவமது தீண்டாதையா
மாத்தானவிஷங்களெல்லாங் கிட்டாதப்பா
பாய்த்திட்டசெம்போடே தங்கஞ்சேர்த்துப்
பண்பாணமோதிரங்கள் பண்ணுபண்ணு
கார்த்திட்டகுண்டலங்கள் விக்கிரகம்பண்ணு
காட்டிலுள்ளசித்தரெல்லாந் திரிப்பார்பாரே. கூ௩

பாரப்பாவாயிரத்தின் செப்புவொன்று
பாங்கானநாகமொன்று தங்கமொன்று
சேரப்பாமூன்றுமொன்றா யுருக்கிக்கொண்டு
செயமானசூதத்தை யொக்கக்கட்டி
காரப்பாகல்வத்திற் பொடியாய்ப்பண்ணி
கசடகற்றிக்கந்தத்தைப் பாதிகூட்டி
வாரப்பாசெருப்படையின் சாற்றாலாட்டி
வளமாகத்தெள்ளுபோல் வில்லைகட்டே. கூச

கட்டியேயஞ்செருவில் புடத்தைப்போடு
கைமுறையாய்யாறவிட் டெடுத்துப்பாரு
தட்டியேமாதளபூப் போலேயாகுந்
தனையெடுத்துக்காய்ந்துந் தொன்றுபோடு
மட்டியேமாத்தென்னப்பதினைறுகு
ன்மந்தனைபணவிடைதான் பாலிலுண்ணு
ஏட்டியேகாயமது விருப்புத்தாளும்
என்னென்னகடிதாலுஞ்செத்துப்போமே. கூரு

போமென்றவயத்தினுடை செப்புகேளு
புசழாகரோமமது வெள்ளெண்ணெதோய்த்து
ஆமென்றவயச்சட்டிக் குள்ளேவைத்து
அப்பனேமூன்றுபடி யுப்பைப்போடு
காமென்றஅரப்பொடிதான் பலமோபத்து
கைமுறைபாயரைப்பொடியைப் பிசிறிவைக்க
தேமென்றவடுப்பேற்றி ரோமத்தின்தயிலம்
சிறப்பாகவுண்ணவுண்ண பிரட்டித்திரே. கூசு

திரென்றரோமமெல்லாங் கரியாய்ப்போடு
செய்முறைபாயரப்பொடியைப் பிரட்டிவாங்கி
காரென்றக்கரியோட்டில் வைத்துக்கொண்டு
கார்த்திகையின்கிழங்கதுவும் பலமும்பத்து
தேறென்றவயச்சட்டிக்குள்ளேவைத்துத்
திறமாகமேல்மூடிசீலைசெய்து
வாறென்றவள்ளெண்ணெய் பிடிதானப்பா
வகையாகச்சரிகூறாய் நிறுத்துவாரே. கூஎ

வார்த்தல்லோகுழம்புபோல் வருதல்கண்டு
வகையானவெண்காரம் பலந்தானஞ்சு
சேர்த்தல்லோதாரிசியொரு பலந்தானஞ்சு
தேசில்லாகந்தகமும் பலந்தான்மூன்று
சேர்த்தெல்லாம்பொடியாக்கி யெண்ணெயிலேபோட்டு
கொதிப்பிச்சக்குழம்பான பதத்தில்வாங்கி
கார்த்தெல்லாம்வழுத்தொரு கல்வத்திட்டு
கைமுறைபாயரப்பொடியைப் பிசரிவையே. கூஅ

வைப்பாரோகமென்ற கரியினோடே
மயங்காதேகுகையிலிட்டு மாட்டிபூது



கையப்பாமணிமணியா யிறங்கும்பாரு
தனையெடுத்துமுன்போலத் தயிலத்திலிசரி
கையப்பாஅஞ்சுதர முருக்கித்திரு
கசடற்றவெள்ளிபொன்போல் கணவிட்டாடும்
மெய்யப்பாகசடற்ற செம்பேயாகு
வேதையதில்முடிவுசொல்ல விண்கொள்ளாதே கூகூ

கொள்ளாதஅயச்செம்பு பலந்தானாலு
குறிப்பானதங்கமொன்று நாகமொன்று
விள்ளாதேயியமொன்றுருக்கியாட்டி
விரவியேகல்வத்திற் பொடியாய்ப்பண்ணி
அள்ளாதேருதமது பலந்தானென்று
அசடில்லாகந்தகமும் பலமும்நாலு
தள்ளாதேமல்லிகையின் சாற்றாலாடித்
துடியாகவெண்சாமத் தீயிற்போடே க00

போட்டெடுத்துப்பொடிபண்ணி மேருக்கேற்றிப்
புகழான அத்தியை ஆறவிட்டு
மாட்டெடுத்துகுப்பிதனை யுடைத்துப்பார்த்தால்
மகத்தானசெந்தூர மாகும்பாரு
பூட்டெடித்தாயிரத்துக் கொன்றுபோடு
புகழாகப்பதினைறு மாற்றுகாணும்
நீட்டெடுத்துமண்டலந்தான் குன்றியுண்ண
நேரானசட்டைகக்கி வாலையாமே. க0க

## காந்தம்.

ஆமென்றகாந்தமது பலந்தான்பத்து
அப்பனேகிண்ணிபோ லுடைத்துக்கொண்டு
காமென்றசெம்பிலிப்பால் படிதானுறு
கலரவிட்டிசுருக்கி நீசாலுசாமம்
தாமென்றகல்வத்தில் செம்பிலிப்பால்விட்டு
தாக்கியதைநாற்சாமம் புடத்தைப்போடு
ஆமென்றபாலாலே யரைத்தரைத்து
அப்பனேஅஞ்சுதரந் திருநீரே, க0௨

நீர்ந்தபின்புபொடியாக்கிச் சட்டிலிட்டு
செம்பிலிபின்ரோமமது பலந்தான்பத்து

ஆய்ந்தபின்புசுருக்கிட்டு ரோமந்தன்னை
அப்பனேதயிலத்தில் பிரட்டிப்போடு
காய்ந்தபின்புரோமத்தின் தைலமெல்லாம்
கரியோடேவாரிவைத்து கருதக்கேளு
தேய்ந்தபின்பு கருங்குன்றிப்படிதான்சாறு
சிறப்பானகொள்ளிலைபின் சார்படிதானொன்றே. ௧௦௩

ஒன்றானபொன்னாலரை படிதான்சாறு
உயர்ந்தவாதளையின்சார் படிதானொன்று
கன்றானசெவ்வல்லிக் கிழங்குசாரொன்று
கார்த்திகைபின்கிழங்குசார் படிதானொன்று
சின்றானமிளகரணைக் கிழங்குச்சாறு
சிறப்பானநல்லெண்ணெய்ச் சமனாய்க்கூட்டி
நன்றானவடுப்பேற்றி கமலம்போல
நலமாகவெறுத்துநல்ல பதத்திற்பாரே. ௧௦௪

பார்க்கவேகந்தகந்தான் பலமூன்று
பரிவானவெண்காரம் பலமுமஞ்சு
ஏர்க்கவேதுரிசியொரு பலமுமைந்து
எளிதானவீரமது பலமுமொன்று
கார்க்கவேகுடோரியது பலமுமொன்று
கல்வத்திலிட்டெல்லாம் பொடியாய்ப் பண்ணி
சேர்க்கவேமுன்மருந்தி லொக்கப்போட்டு
சிறப்பாககுழம்பான பதத்தில்வாங்கே. ௧௦௫

வாங்கியதோர்காந்தத்திற் பிசரிக்கொண்டு
வளமான சரவுலையிலூதவூது
தாங்கியேகாட்டோடே; சத்தாய்வீழும்
தப்பாமற்சத்தெல்லாம் பொருக்கிக்கொண்டு
தேங்கியேகறடெடுத்து தயிலத்திற்பிசரி
செப்பரியவாலுகையி லூதித்தீரு
பாங்கியேயஞ்சுத ரமூதித்தீரு
பரிதிபோல்செம்பாக நிறமும்பாரே. ௧௦௬

செம்பாககாந்தமது பலந்தானாலு
திறமானதங்கமது பலந்தானொன்று
கம்பானநாகமது பலந்தானொன்று
கருதியதோர்கட்டான சூதமொன்று



நம்பானவிதநாலு முருக்கிக்கொண்டு
நலமாககல்வத்திற் பொடியாய்ப்பண்ணி
கொம்பானகுலாமல்லிச் சாற்றாலாட்டிக்
குமுரவேமூன்றுநாள் ரவியிற்போடே. ௧௦௭

போட்டுவாமுன்சொன்ன சாற்றாலாட்டிப்
பெரிதானகந்தகத்தைச்சுத்திபண்ணி
கேட்டுவாபொடிபண்ணி மேருக்கேற்றி
கெடியானவாலுகையின் மேலேவைத்து
நாட்டுவாய்பன்னிரண்டு சாமந்தீயை
நலமாக வாறவிட்டெடுத்துப்பாரு
சாட்டுவாய்மாதளம்பூப் போலேயாகும்
சகஸ்திரத்துக்கொன்றாடும் வேதைதானே. ௧௦௮

தானாகுஞ்செந்தூரங் குன்றியுண்ணு
சாதகமாய்மண்டலத்திற் சட்டைகக்கும்
கோணாகாயமெல்லாஞ் சிவந்துமின்னும்
கொடிதானநரம்பெல்லாம் பவளம்போலாம்
பானணவடித்துண்டா லகிரிவீழும்
பாஷாணவர்க்கங்கள் கறிசோராகும்
ஊனானசடந்தானுங் கோடிக்காலம்
உத்தமனே சமாதியிலிருக்கலாமே. ௧௦௯

இருக்கவேலோகமென்ற திராவகத்தை
இயம்பிடவேயானந்த வுத்தமர்க்கு
பருக்கவேவெடியுப்புப் பலந்தானாறு
பரவியதோர்சீனமது வெண்பத்தஞ்சு
தருக்கவேதுரிசமது நாற்பத்தஞ்சு
சமர்த்தானசாரமது விருபதாகும்
உருக்கவேகல்லுப்பு பலந்தான்பத்து
உயர்த்தியதாம் பூநீறுபலந்தானஞ்சே. ௧௧௦

திகைத்திட்டுகுகையில் வந்துசீஷருக்கு
செப்பிநாகேசரத் திலாடும்போது
பகைத்திட்டசித்தர்கள் தானநேககோடி
பாசிங்குங்குளிகைதான் கெற்பமக்காள்
நகைத்திட்டவர்கையி லீயவேண்டாம்
நலம்போலேயெளிதமாய் போகவேண்டாம்

பிணைத்திட்டபாட்டாகச் சொல்லக்கேட்டேன்
பேய்மக்காள்புத்திகொண்டு பிழைத்திடீரே. ௧௧௧

பிழைத்திட்டகுளிகைகட்டி யோகம்பார்த்து
பேரானகாயத்தை சுத்திபண்ணிக்
குழைத்திட்டயாத்தாளை பூசைபண்ணிக்
கூறியவஸ்துசத்தி பானம்பண்ணி
அகத்திட்டுவாசிவைத்தா னங்கென்றாணி
யடுத்தாறுத்தலத்தில்நிற்கு மடமுங்கண்டு
வளைத்திட்டசந்திரனி லமுர்த்தமுண்டு
வகையோடேமணிதுளிப் பாருபாரே. ௧௧௨

களிங்குமார்க்கம்.

பார்த்திடவேவேதங்கமொன்று வுருகும்போது
பரிவானசூதமொன்று கரத்தோடீய்ந்து
கார்த்திடவேநாகமொன்று கொடுத்துவாங்கி
காணிதுக்குள்சமமாக கெந்திகூட்டி
ஆர்த்திடவேவீரமது முக்கால்கூட்டி
அழகாகநாலிலொன்று கூடக்கூட்டி
மார்த்திடவேகல்வத்தி லிதனைப்போட்டு
மல்லிகையிலச்சாற்றி லரைத்திடாயே. ௧௧௩

அரைத்திடுவாய் தினமூன்றுசாறுவிட்டு
அழகாகப்பொடியாக்கிக் குப்பிக்கேற்றி
நிரைத்திடுவாய்மாலுகையி லடுப்பிலேற்றி
நேர்பாகதீயெரிப்பாய் பன்னிரண்டுசாமம்
விரைத்திடுவாயாயிபதம் பூசைப்பண்ணி
வெருளாதேயெடுத்துப்பா ருள்ளேபோலாங்
கரைந்திடுவாயாயிரத்துக் கொன்றேயீய
கைகண்டமாற்றே யிருபத்தஞ்சே. ௧௧௪

அஞ்சுமேசெந்தூரம் பணந்தானென்று
அநுபானந்தேனோடே மண்டலமேகொண்டு
கொஞ்சுமேநோய்களெல்லாந் தவுடுபொடியாகும்
கெடியான சித்தியருணன்போலாம்
துஞ்சுபோநரைதிரைக ளெல்லாமாடுஞ்
சுகட்டைபோலேயொன்று சுக்கிப்போடும்



அஞ்சுமேகர்ப்பாந்திரகோடிகாலம்
வாசியைநீமூலத்தி லிருத்திப்பாரே. ௧௧௫

சவ்வீர வைப்பு.

இருத்திடவேசவ்வீர வைப்பைக்கேளு
எளிதானவெடியுப்பு நாற்பதுபலந்தான்
பொருந்திடவேசீனமது ஐம்பதுபலந்தான்
புசழாகவிருதுண்டுங் கல்வத்திட்டு
வருந்திடவேமேனிச்சார் விட்டுவாட்டி
வகையாகப்பில்லைதட்டி யுலரப்போடு
தரித்திட்டுகலசத்தி லதனைப்போட்டு
சக்கரமாம்பானைவைத்தான் மேலேமூடே ௧௧௬

மூடியேசீலைசெய்து வடுப்பிலேற்றி
முசியாதேபீங்கானுங் கிண்ணிவைத்து
சாடியே அனலெரிப்பால் முச்சாமந்தான்
தன்னுக்குள்வேர்வைப்போ லிறங்கும்பாரு
வாடியேவெளுப்பாக விறங்குநீரை
வகையாகயாற்றிவிடு மறுகால்நீரைத்
தேடியேயிதற்குள்ளே யரைத்துவைத்துச்
சிதராமல்நீரெல்லாம் வாங்குவாங்கே. ௧௧௭

வாங்கியேசூதமொரு பலந்தானெட்டு
வகையாகப்பெரும்பீங்கான் தன்னில்வைத்து
ஓங்கியேதிராவகத்தை யதிலேவிட்டு
உர்ப்பணமாந்தனலில்வைத்து கலியாக்கிண்டி
தேங்கியேமணல்போலே யாகும்பாரு
சிறக்கவேகல்லுப்பு பலந்தானொன்று
பாங்கியேதுருசுஒரு பலந்தானும்
பக்குவமாம்பூநீறு பலந்தான்ரண்டே. ௧௧௮

வெடியுப்புத் திராவகம்.

ரெண்டோடேவெடியுப்பு வொன்றைதானப்பா
நேரானசீனமது வொன்றரையேயாகும்
கன்றேடுமன்னமென்ற பேதிதானங்
கடுகவேயொருபலந்தான் கூடப்போடு

தண்டோடேசாரமது வரைதான்போடு
சார்வானகல்லுப்பு துரிசுதன்னை
பண்டோடேபொடியாக வறுத்துப்போடு
பக்குவமாய்வெவ்வேறே பொடித்துவையே. ௧௧௯

வைத்ததெல்லாஞ் சூதத்திலொன்றாய்ப்போட்டு
வகையாகப்பொடிசெய்து குப்பிக்கேற்றி
மற்றதெல்லாமறைவாசி தானேபோட்டு
பக்குவமாய்வாலுகையின் மேலேவைத்து
நைத்தல்லோதீபோட்டுக் கமலம்போல
நாலுநாள்முற்சாம மாறவிட்டுப்போடு
கைத்தல்லோ பன்னிரண்டுசாமமானால்
கண்டேதேங்காய்போலிருக்கும் கடிதுதானே. ௧௨0

## கொச்சிவீரவைப்பு.

தானென்றசவ்வீரம் பொடிதான்சேரே
சமர்த்தானகல்லுப்பு ஒன்றுமுக்கால்
வானென்றசவ்வீரப் பொடிக்குப்பாதி
மகத்தானதுருசியென்ற பலந்தானப்பா
கானென்றதுரிசுக்குப் பாதிபூநீறு
கனமானநீறுக்குச் சினமுக்கால்
வேனென்றவடியுப்பு படியேயாகும்
வெடியுப்பில்மூன்றிலொன்று சாரஞ்சேரே. ௧௨௧

சேர்க்கவேபன்னமென்ற பேதிதானும்
சிறந்தபூநீறுக்குப் பாதியப்பா
ஆர்க்கவேபொடிசெய்து குப்பிக்கேற்றி
அரைவாசிவாலுகையின் மேலேவைத்து
ஏர்க்கவேதீயிடுவாய் கமலம்போலே
விதமாகநாலுநாள் சாமமப்பா
பார்க்கவேயாறவிட் டெடுத்தாயனால்
பக்குவமாய்ப்பன்னிரண்டு சாமந்தானே. ௧௨௨

தானென்றமும்முறை யிப்படியேசெய்தால்
சமர்த்தானகொச்சியென்ற பேருமாச்சு
கானென்றபரங்கிவைப்பை ரிஷிகள்சொல்ல
கனமானவீரனால் வாதமாச்சு



வேனென்றவீரத்தை சுன்னஞ்செய்தால்
வெருளாமல்தங்கமது பூப்போலாச்சு
தேனென்றசரக்கெல்லாஞ் சுன்னமாகும்
சிறுபிள்ளையாகுமிந்த வாதந்தானே. ௧௨௩

வாதத்துக்காதியென்ற வீரப்போக்கை
மறைத்தாரேநாதாக்கள் ரிஷிகள்சித்தர்
வேதத்தின்முடிவைப்போ லொளிப்புமெத்த
வெட்டவெளியாச்சுதென்று லோகமெல்லாம்
போதத்தில்பஞ்சகாத்தாள் திருடிப்போகும்
பொன்மயமாயுலகமெல்லாம் போகுமென்று
நீதத்தில்திறஞ்சொன்ன ரில்லையென்று
நேர்பாகவென்னாலிற் சொன்னேன்காணே ௧௨௪

சொன்னதினால்சித்தரென்மேல் பகையுமாச்சு
தோற்றுதகருவெல்லாம் வெட்டவெளியாகப்
பன்னதினாற்பலனென்று விரித்துச்சொன்னேன்
பாத்துக்கேயொப்பென்று மனதிலெண்ணி
தன்னதிலேமடபதிகள் சாத்திரத்திலில்லை
சண்டாளர்கைக்கொடுக்கி லிந்தநூலை
மனதிலேநூல்கொடுத்தார் நகரமெய்தி
மாண்டிறந்துகடைநரகில் வீழ்வார்தானே. ௧௨௫

காணவேநிர்மூடவாதிகட்குகைகொடுக்
கிலிந்தநூல் கருவைபண்ணி
பூணவேபார்த்தலைந்து யேமகர்ப்பங்கண்டு
புளகித்துமெய்மறந்து பேய்கொண்டேகி
ஆணவேதன்பிந்து கற்பழித்து
அழும்பாக்கிக்குகுகெடுத் தாசைபூண்டு
பூணவேகரம்நோய் கொண்டுயேங்கி
யுலகத்தில்நடைக்கைதப்பி யயர்வான்றானே. ௧௨௬

தானானஞானிக்கு விந்நூலெய்தில்
சண்டாளபாசத்தை யறுத்துத்தள்ளி
ஆனனகாயத்தை சிதறப்பண்ணி
யுற்றுறுதங்களெல்லாஞ் சோதித்தேறிப்
பானனீர்தாரத் துள்ளேசொக்கிப்
பார்த்துமேயடுக்கநின்று பானம்பண்ணி

ஆனைவன்னமறை தண்ணீர்கால்தான்
அருந்தாயேயொருபோது விருப்பாய்தானே. ௧௨௭

இருந்திட்டுக்கருவெல்லா மெண்ணிப்பார்த்து
எளிதாகத்தொழில்செய்து வேமங்கண்டு
திருந்திட்டசிவனுடைய சொத்துயென்று
செலவுசெய்யகனமான கற்பத்துக்கு
பொருந்திட்டமாத்திர மெடுத்துவித்து
பூசைதிரவிரத்துக்குங் கற்பத்துக்கும்
அருந்திட்டு மொன்றுமறியாதாபோல
ஆசைவைத்திருப்பார்கள் ஞானிதானே. ௧௨௮

ஞானியின்பெருமைதன்னை மாந்தற்கெல்லாம்
நலம்பெறவேசொல்லுகிறே னுண்மைபாரு
ஞானிக்குவருமைவந்தால் சகலசித்தும்பொய்யாம்
நாட்டிலுள்ளமனிதர்கள்தா னகைப்பாரென்று
ஞானிக்குப்பசிவந்தால் மணமலையுமென்று
நாதாக்கள்சொல்லாத கருவைச்சொன்னேன்
ஞானிக்குச்சொர்ணத்தை மங்குருவுக்காச்சு
நலமானசவ்வீர வைப்பைக்கேளே. ௧௨௯

## சிவப்பு வீரசெயநீர்.

கேளப்பாவெடியுப்பு பலமோநூறு
கெடியானசீனமது நூற்றுப்பத்து
வாளப்பாசவுட்டுப்பு விருபத்தஞ்சு
மருவியதோர்துரிசியது முப்பதாகும்
நாளப்பாநவாச்சாரம் பலமும்பத்து
நடப்பானசத்தியென்ற சாரமஞ்சு
காலப்பாகல்லுப்பு பலமுமஞ்சு
கடிசாகக்கல்வத்தில் பொடியாய்ப்பண்ணே. ௧௩௦

பொடிபண்ணிபிரண்டைசார் தன்னிலே
பேணியரைத்தேழுநாள் வில்லைசெய்து
கெடிபண்ணிரவிதனிலே யுலரப்போட்டு
கெட்டியாய்பாண்டத்தி லரைவாசிபிட்டு
தடைபண்ணிசக்கரமாம் பானைதன்னைச்
சாங்கமாய்மூடியெல்லாம் ரசமண்செய்து



துடிபண்ணியடுப்பேற்றித் தீயைமூட்டி
துப்பரவாய்த் தீநீரைவாங்குவாங்கே. ௧௩௧

நீரிலேவெள்ளைநீர் தனையகற்றி
நேர்ப்பாகக்கலந்தநீர் தன்னைவாங்கி
சீரிலேதனைக்கண்டு மயானந்தன்னிற்
சிறப்பாகவடைத்துவைத்துச் செய்திருக்கும்
தூரிலேசூதமது பலன்தான்பத்து
சூட்சாதிகல்லுப்பு அஞ்சுபலமாகும்
மூரியேதுரியதுரண் டரைப்பலந்தான்
உர்ப்பனமாய்வெடியுப்பு ரண்டுபலமாமே. ௧௩௨

ஆமப்பாசீனமது ரண்டுபலமாகும்
அண்ணமென்றபேதியது பலமும்ரண்டு
ஓமப்பாசரமது பலமும்ரண்டு
உறுதியாய்பூநீறு பலமும்ரண்டு
காமப்பாலிங்கமது பலமும்ரண்டு
கம்பரக்கிற்பூரம் பலமுமெட்டு
நாமப்பாவெள்ளையது பலமுமொன்று
நற்செவுரிமனோசிலையு மொன்றுபோடே. ௧௩௩

போடவேபலமொன்று கெந்திதானும்
புகழானசூடனது பலமுமொன்று
வாடவேதொட்டியொடு வப்பிரகமிளை
வாதமொடுவக்கிராந்தின் காந்தலோகம்
தேடவேசரிசாலை சாத்திரபேதி
சிறப்பானசிங்கியொடு குதிரைப்பல்லும்
நீடவேயஞ்சனக்கால் துத்தத்தோடு
நெடிதானசலாசத்து கல்நார்தானே. ௧௩௪

தானென்றகடல்நுரையு மொவ்வொருபலந்தான்
தாக்கியரையெட்டுநாள் திராவகத்தைவிட்டு
பானென்றரவிதனிலே யுலரப்போட்டு
பெரும்பீங்கான் தன்னிலிட்டு தனலிலிட்டு
ஊனென்றபொடிபோலே வறுத்துக்கொண்டு
உர்ப்பனமாய்காச்சியென்ற மேருக்கேற்றி
வானென்றயரைவாசி மட்டுப்போட்டு
மயக்காதேவாலுகையில் வைத்திடாயே. ௧௩௫

வைத்திட்டுதீயெரிப்பாய் ரெண்டுசாமம்
வளமானதீபப்போ லாறவிட்டு
கைத்திட்டுதீயெரிப்பாய் கமலம்போலே
கலங்காதேபன்னிரண்டு சாமந்தானும்
மொய்திட்டபகல்முழுதுந் தீயேபோட்டு
முயர்ச்சியாய்ராக்கால மாறப்போடு
நத்திட்ட வாறுநாளானபின்பு
நலமானபதம்பார்த்து விறக்கிடாயே. ௧௩௬

இறக்கியேகுப்பியைத்தான் முன்மருந்துங்கூட்டி
இதமாகதிராவகத்தி லரைத்துலர்த்தி
நருக்கியேமுன்போலமேடாய்ப்பண்ணி
நலமானகாசியென்ற மேருக்கேற்றி
உருக்கியேவாலுகையின் மேலேவைத்து
உர்ப்பனமாய்தீயிட்டு வாறுசாமம்
மறுக்கியேயாறவிட்டு டைத்துவாங்கி
மறுகாலுமுன்போலே கூட்டுகூட்டே. ௧௩௭

கூட்டியேமும்முறையாற் செய்வீரானால்
சொச்சிவைப்பாய்ச் சவ்வீரமிருக்கும்பாரு
நீட்டியேநீறுவிஷமும் மஞ்சனெடியான
யரலிவேர் பட்டைபலம்பத்து
மூட்டியேகெந்தகந்தான் பலமும்ரெண்டு
முட்டையாமஞ்சளென்ற கருவாலாட்டி
வாட்டியேபில்லைபண்ணி புடத்தயிலம்வாங்கி
வகையானவீரத்திற் சுருக்குபோடே. ௧௩௮

## வீரக்களங்கு.

போட்டுள்ளேமெழுகான பதத்தில்வாங்கி
பொன்ரேக்குசுற்றிவைக்க தின்னும்பாரே
நீட்டுடனேயொன்றுக்கு நாலுதங்கம்
நிகளாகசுற்றிவைக்க தின்னும்போடு
மூட்டுடனேயாயிரத்துக் கொன்றேயிய
முசியாதேபதினாலு மாற்றுமாகு
மாட்டுடனேயுபாயங்க ளீயமாகு
மாசற்றவீரத்தை யொழித்தார்பாரே. ௧௩௯



ஒழித்தாரேநாதர்க்க ளென்றுசொல்லி
உத்தமியாள்பாதத்துக் குண்மையாக
வழித்தாரேலோகத்தோர் பிழைக்கவென்று
வாச்சரியம் வீரவிட்டால்வாதம்போச்சு
சுழித்தாரேமுன்சொன்னவீரமெல்லாங்
காரமிட்டு வயத்தங்கமாகுமாமே
சுழித்தாரேயேமமென்றுங் காணாதேதங்கி
சுணங்கனாய்கெட்டலைந்து மாள்வான்றானே. ௧௪௦

## பரங்கிபாஷாண வைப்பு.

பாளாமற்பரங்கியென்ற பாஷாணத்தை
வைக்கிறதோர்முறைகேளு மக்கள்தானே
தாளாமற்சூதமொடு பலந்தான்பத்து
சாதகமாய்கல்லுப்பு பலந்தானெட்டு
ஈளாமல்வெள்ளையென்ற பாஷாணமஞ்சு
விரவியேகல்வத்திற் பொடித்துக்கொண்டு
கேளாமற்றிராவகத்தா லெட்டுநாளாட்டு
கெடயாகப்பொடிபண்ணி மேருக்கேற்றே. ௧௪௧

மேருக்கேயேற்றியபின் வாலுகையில்வைத்து
விதமாகதீயிடங்கே பன்னிரண்டுசாமம்
பேருக்கேதங்கமது யிறுகியேறும்
பெருந்தேங்காய்போலிருக்கு பாஷாணந்தான்
போருக்கேமுறைபோலே மருந்துகூட்டு
புகலாதேதிராவகத்தை விட்டுஆட்டி
பாருக்கேபொடிபண்ணி மேருக்கேற்றி
பக்குவமாய்வாலுகையிற் பதித்திடாயே ௧௪௨

பதித்திடவேபன்னிரண்டு சாமந்தீயை
பகல்முழுதுமெரியிட்டு வாரப்போடு
விதித்திட்டபக்குவத்தி லிறக்கிப்பாரு
மேலோடுதள்ளியே பொடியாய்ப்பண்ணி
மதித்திட்டமுன்போலே மருந்துகூட்டி
மறவாமல்மூன்றுதரந் தீய்ந்தயானால்
கதித்திட்டபரங்கியென்ற பாஷாணமாங்
கண்ணிமைக்குள்ரசிதவித்தை யாகும்பாரே ௧௪௩

## பரங்கிப்பாஷாணமெழுகு.

பாரப்பாபரங்கியென்ற பாஷாணந்தான்
பலமெடுத்துயயச்சட்டிக் குள்ளேவைத்து
நேரப்பாதுண்டிப்பாய் நாலுசாமம்
நீந்தாதேசுருக்கிடவே மெழுகாய்ப்போகும்
தூரப்பாயிரும்புசெம்பில் நூற்றுக்கொன்றீயத்
துடியானரசிதமது பதினைஞ்சாகும்
சீரப்பாசரக்கெல்லாங்காட்டிப்போகும்
சிறுபிள்ளையாடுமிந்த வாதந்தானே. ௧௪௪

வாதமென்றால்கொஞ்சத்திற் கிடைக்குமோதான்
மகத்தானயோகிமுதல் ரிஷிகள்சித்தர்
நீதமென்றபஞ்சகர்த்தா ளிவர்களெல்லாம்
நேர்ப்பாகப்பார்க்கையிலுந் தப்பிப்போகும்
வேதமென்றவந்தரத்தின் முடிவுக்கொக்கும்
விரைந்துமனோன்மணித்தாயார் சொல்லபானும்
பாதமென்றேன்சிரசில்வைத்து கேட்டுகேட்டு
பரிவாகப்பிள்ளைகட்கா யுரைசெய்தேனே. ௧௪௫

## சித்தர்கள்சாத்திரமுறைமை

உரைசெய்தார்சித்தர்கள்தா னனேகங்கோடி
உத்தமனேயகத்தியர்தா னெடுத்துபாவாய்
நிறைசெய்தநவகாண்டஞ் சொன்னாரையா
நேர்ப்பானவெண்பாவாய் கோரக்கர்தாமும்
திரைசெய்தயேழா யிரமுஞ்சொன்னார்
திரட்டியல்லோமச்சமுனி ஏழுகாண்டஞ்சொன்னார்
புரைசெய்தசிவாவாக்கிய ரஞ்சுகாண்டஞ்சொன்னார்
போக்கேடேசித்தர்சொன்னார் கரைகாணேனே. ௧௪௬

காணாதகாசிபர்தான் வண்ணஞ்சொன்னார்
கறையற்றரோமமுனி வடுகில்சொன்னார்
பூணாதார்மாதேவர் சந்தப்பர்சொன்னார்
புகழரியநந்திகள்தான் சந்தஞ்சொன்னார்
ஊணாதபுலிப்பாணி சாலஞ்சொன்னார்
உத்தமனேநந்தீசர் வாதஞ்சொன்னார்
தோணாததிருமூல நாயனார்தாமுஞ்
சொன்னன்திருமந்திரந்தான் காடகோடே. ௧௪௭



காடாகப்போகாமற் பதஞ்சலிமாமூர்த்தி
கணக்கோடேஎழுகாண்டஞ் சொன்னாரையா
தோடாகச்சட்டமுனி நிகண்டோடொக்க
தூயமாவிருபத்து எழுநூறுபாடல்
பாடாகக்காலங்கி நாயன்தாமும்
பக்குவமாய்நடுகாண்டஞ் சொன்னாரையா
நாடாகவிருந்தபேர்க் குதவியென்று
நலம்பெறவேஎழுகாண்டஞ் சொன்னேன்பாரே. ௧௪௮

பார்க்கவேயேழையுந்தா னெழுநூறுக
பரிவாகசொல்லிவிட்டேன் சூத்திரமாக
ஏற்கவேயென்பிள்ளை கொங்கணர்தானப்பா
நிரைமூன்று மாயிரத்தைந்நூருஞ்சொன்னார்
சேர்க்கவேசட்டைமுநி முந்நூலுநன்று
செகமறியக்கொங்கணர்தா னூலும்நன்று
கார்க்கவேசங்குமாமுனி நூலுநன்று
கருதியேமனமுன்னி பாருபாரே. ௧௪௯

பாரப்பாமற்றமற்ற நூல்களெல்லாம்
பரிபாசைக்கருவாகச் சொன்னாரையா
நேரப்பாகண்ணாடி முகமும்போல
நேர்ப்பாகச்சொல்லிவைத்தா ரனேகதேவர்
சேரப்பாசாத்திரங்கள் பார்க்கப்பார்க்கத்
திருட்டெல்லாம்வெளியாமே மறைவுமில்லை
ஆரப்பாஎன்னுடைய நூலைக்கண்டால்
ஆதியென்றகொங்கணர்தான் கரைகண்டாரே. ௧௫௦

## சோரைவீரவைப்பு.

கரையென்றசோரையென்ற வீரவைப்பை
காட்டுகிறேன்சேனுங்கள் களிப்பாய்மக்காள்
பரைகண்டசவ்வீரம் பலந்தானெட்டு
பாச்சிநன்றாய்க்கல்வத்திற் பொடித்துக்கொண்டு
திரைகண்டகல்லுப்பு சுன்னம்ரண்டு
திறமானசீனமது கால்தான்கூட்டி
வரைகண்டதுரியென்னற் சுன்னம்ரண்டு
மாசற்றவெடியுப்பு சுண்ணம்ரண்டே. ௧௫௧

ரெண்டானசாரமென்ற சுன்னம்ரண்டு
 நேர்ப்பானசீனமென் சுன்னம்ரண்டு
பண்டானயன்னமென்ற பேதிரண்டு
 பாங்கானபொடியோடே யொக்ககூட்டி
தண்டானமேருவுக்குள் ளரைவாசிப்போட்டு
 சாதகமாய்வாலுகையின் மேலேவைத்து
செண்டானவடுப்பேற்றி வைப்பாயப்பா
 செகமறியபன்னிரண்டு சாமந்தானே. ௧௫௰

தானென்றவீரத்தை யெடுத்துப்பார்த்தால்
 சாதகமாயடியிலே தானேநிற்கும்
நானென்றகுருவாகும் தண்ணியிலேகுழைத்து
 கரப்பானகானகத்தி நிற்கிற்பூசை
தேனென்றவிம்முறைதான் யார்தான்சொல்லார்
 தெளிந்ததோர்சித்தர்கள்தான் முனிகள்சொல்லார்
கோனென்றகுக்கிரகுப் போல்வாகுங்
 கொள்ளையோகொள்ளையிதில் வாதந்தானே. ௧௫௧

வாதந்தானெப்படிதான் வருகுமக்கா
 மகத்தானதுரிசல்லோ நீறுபண்ணவேண்டும்
சூதந்தான்தன்னையல்லோ கட்டவேண்டும்
 துடியானசூதமல்லோ காயசித்தியாகும்
வேதமென்றபொருளறிந்தால் ஞானியாவான்
 விரைந்தாறுதலங்கண்டால் யோகியாவான்
காதந்தானென்றுசொல்ல வகையுமாச்சு
 கலந்தோடிநடந்தாக்கால் துலையும்பாரே. ௧௫௨

## துருசிபற்பம்.

பார்ப்பதுபோல்துருசியொரு பலத்தைவாங்கி
 பரிவானசோரையென்ற வீரந்தன்னை
சேர்ப்பதுதான்முக்காசி யிடையேதூக்கி
 செயமானவாய்நீரால் மத்தித்சேதான்
கார்ப்பதுதான் துரிசியின்மேற் பூசுபூசு
 கனமானரவிதனிலே போடுபோடு
தோர்ப்பதுதான்பத்துநாள் போட்டாயானால்
 சுகமான துரிசிபது நீறுமாமே. ௧௫௩



ஆமேதான்சாறுவார்த் தளைகளெல்லால்
 அதட்டிமெள்ளக்குழிப்போட்டு புழியத்தண்ணீர்
போமேதான்பாலெல்லா மிதந்துநீராய்
 பொட்டில்லைசுத்தஜலம் போலேயாகும்
வாமேதான்சரக்குகளின் சுருக்குப்போட
 வசப்பட்டுமெழுகாகும் வேதையாகும்
போமேதானவலோகந் தீய்ந்தாயானு
 லொருகோடிகொடுமயிது சத்திதானே. ௧௫௪

உகத்தியென்ற விராலியெல்லக்குள்ளேசேரு
 உரலிலிட்டுஇத்தபிலந் துருசுசுன்னம்
புசத்தியென்றவிராகனிடை யதிலேபோட்டு
 பிசைந்துவைத்துக்கிண்டியபின் பிழியத்தண்ணீராகு
மசத்தியென்றசூதமது துய்யசட்டியிலிட்டு
 மக்களாகொடுஞ்சுருக்காய் போட்டுசாமம்
நசத்தியென்றயிட்டலிப்போலே யாகும்பாரு
 நாமறியோமிதுப்போற போக்குத்தானே. ௧௫௫

## சூதசெந்தூரம்.

போக்காகசூதத்தில் தங்கமிட்டு
 போரானகெந்தகமோ சரியாய்க்கூட்டி
தாக்கானதாளகமுஞ் சரியும்வீரம்
 தயங்காதமல்லிகையின் சாற்றாலாட்டி
நோக்கானகுப்பியிலே பொடிபண்ணிப்போட்டு
 நுகந்துநன்றாய்வாலுகையில் செந்தூரித்து
வாக்கானஆபிரத்துக் கொன்றேயீயமா
 மாத்தென்னபதினெட்டு காணுந்தானே ௧௫௬

தானென்றவுபசரங்கள் நூற்றிரண்டுபத்து
 தளமானபாஷாண மறுபத்துநாலும்
தோணவந்தலவணமுத லிருபத்தஞ்சும்
 சொல்முறையாய்நவலோக நத்தினங்கள்கூட
ஆனந்தமிதுவெல்லாஞ் சத்தாய்வாங்கி
 மம்மாசூதத்திலொவ் வொன்றாயீந்து
பூணந்தகுடரிவிட்டுக் கக்கப்பண்ணி
 புகலானசாரணையில் சாய்த்திடாயே. ௧௫௭

## குளிகைவேதை.

சாய்த்திடவேயொருதரந்தா னுபசத்திலீய்ந்து
சாதகமாய்சகடென்ற குளிகையாச்சு
வாய்த்திடவேரண்டுதரந் தீய்ந்தாயானல்
மாசற்றயோகியென்ற. குளிகையாச்சு
மாய்த்திடவேமூன்துதரந் தீர்ந்தாயானல்
மகத்தானபொடியென்ற. குளிகையாச்சு
ஆய்த்திடவேயஞ்சுதரந் தீர்ந்தாயானல்
அட்டமாகுளிகையொன்று அறிந்திட்டாயே. கடுஅ

அறிந்திட்டவேழுதரந் தீய்ந்தாயானல்
அப்பனேமோசினியாங் குளிகையாச்சு
தெரிந்திடவேயிருநாலுந் தீய்ந்தாயானல்
செகமறிய அட்டமாசித்தியாச்சு
சரிந்திட்டமுப்பத்தி ரெண்டேயானல்
சமதக்கினிநாமமென்ற குளிகையாச்சு
கரிந்திடவேபதினாறு தீய்ந்தாயானல்
கமலினியாங் குளிகையென்றநாமமாச்சே. கடுகூ

ஆச்சப்பாபதினாறுதரமுந்:தீர்ந்தால்
அப்பனேசந்தான குளிகையாச்சு
போச்சப்பாபதினேழு தரமுந்தீர்ந்தால்
பேரானசொரூபமென்றக் குளிகையாச்சு
மூச்சப்பாபதினெட்டு தரமுந்தீர்ந்தால்
முனையானசொரூபநிலை குளிகையாச்சு
வாச்சப்பாசொரூபமென்ற குளிகையாலே
வளமானசிலம்புபோல மேவலாமே. கசு0

## லிங்கமெழுகு.

மேலவேதுரிசியென்ற குருவைத்தொட்டு
விளம்புகிறேன் காசானப்பூவைவாங்கி
பாவவேதுரிசியிட்டு புழிந்துக்கொண்டு
பாங்காகுவயச்சட்டிக் குள்ளேவார்த்து
தாவவேநெடுங்கம்பி லிங்கமொன்று
தனைபொடித்து அயச்சட்டிக்குள்ளேபோட்டு
காவவேவெடியுப்புக் காசிடைபேபோட்டு
கனமானஅடுப்பேற்றித் தீமைமூட்டே. கசுக



மூட்டவேவெந்துநன்றாய் மெழுகுமாகும்
முனியவேவழிச்செடுத்து பீங்கானில்வைத்து
நாட்டவேநவலோகம் நூற்றுக்கொன்று
நலமானமாத்தென்ன பத்தரையேகாணும்
மாட்டவேதினங்குன்றி யுள்ளேகொள்ள
அருணன்போலதேகமுமாங் கண்டுகொள்ளு
பூட்டவேநரையெல்லா மாறிப்போகும்
பொறசடையோன்தேகமுமாங் கண்டுபாரே. கசுஉ

## பாஷாணமெழுகு.

கண்டுபார்விராகனிடை துரிசுசுன்னங்
கனமானசதிரகள்ளி பாலில்போட்டு
விண்டுபார்சாமந்தான் மூடிவைக்க
விடுபட்டசுத்தசலம் போலேயாகும்
கொண்டுபார்வெள்ளையென்ற பாஷாணந்தான்
கொடிதான்வயச்சட்டிக் குள்ளேவைத்து
மண்டுபார்நாலுசாமஞ் சுருக்குப்போடே
மகத்தானவெள்ளையது மெழுகுமாமே. கசுங

மெழுக்கெடுத்துவங்கத்தி னிடைக்கிடைதானீய
மெதுவானவங்மது நொருங்கும்பாரு
அழுக்கெடுத்துவங்கத்தை வெளியேதாக்க
வப்பனேரசிதமது பொடியேயாகும்
தழுக்கெடுத்துசூதத்தைச் சமனாய்ச்சேர்த்து
தாக்கியரைப்பாலென்ற தண்ணீர்விட்டு
நழுக்கெடுத்துநால்சாமம் அரைத்தபின்பு
நலமாகவழித்தெடுத்து அகலில்வையே கசுச

தைத்துமேஅயஅகலால் மூடிச்சீலை
மண்செய்துபத்தெருவில் புடத்தைப்போடு
தைத்துமேவெந்ததுவும் குருவாய்நிற்கும்
சயங்களென்னகபங்களெல்லா மறுத்துப்போடும்
சைத்துமேஒரிடைதான் கொடுத்தாயானல்
நலமானமாத்தென்ன பதினஞ்சாகும்
மெய்த்துமேசெம்பு அபந்தன்னிலீய
விடுதிபட்டவெளிய மாகும்பாரே. கசுரு

## ரதிதபாஷாணம்.

பாரப்பாரசிதமென்ற பாஷாணந்தான்
பண்பாகசொல்லுகிறேன் மக்காகேளு
நேரப்பாசாங்கினுட சுன்னந்தானும்
நிறுத்தல்லோதான்பார்த்து சமனதாக
காரப்பாசினமது பலமும்ரெண்டு
கருவானபூரமது பலமுங்கால்தான்
வேரப்பாவெள்ளையென்ற பாஷாணம்பத்து
மேவியதோர்சாரமது பலமுரெண்டே. ௧௬௬

ரெண்டோடேசூதமது பலமும்பத்து
நேர்ப்பானதிராவகத்தா லெட்டுநாலாட்டி
தண்டோடேரவிதனிலே யுலரப்போடு
சாங்கமாய்ப்பொடிபண்ணி மேருக்சேற்றி
வெண்டோடேவாலுகையின் மேலேவைத்து
விரவியேகமலம்போல் தீயைப்போட்டு
பண்டோடேபன்னிரண்டு சாமமானல்
பக்குவமாய்பலகைப்போல் தங்கமாமே. ௧௬௭

ஆமிந்தபாஷாணம் பலந்தான்வாங்கி
அயச்சட்டிக்குள்ளிட்டு அப்பால்சேளு
வேமிந்தரெண்டுமொன்றாய்க் கலக்கிவைத்து
விரவியதோர்க்கருணைவிபலம் பொடித்துப்போட்டு
போமிந்தவயச்சட்டிப் பொதியமூட்டி
பொருந்தவேமண்சீலை முழுதுஞ்செய்து
வோமிந்தமூன்றுநாள் கலக்கிவைத்து
வுற்பனமாந்தண்ணீராஞ் சுருக்குப்போடே. ௧௬௮

சுருக்கிடவேரசிதமென்ற பாஷாணந்தான்
துடியானமெழுகாகும் சுரண்டிவாங்கி
சுருக்கிடவேவெள்ளீயத் தீய்ந்தாயானல்
சலமானநீர்வத்தி ரசித்தமாகும்
முருக்கிடவேமெழுகாகும் சூதங்கட்டும்
முயர்ச்சியாந்துரிசியது குருவுமாகும்
குருக்கிடவேவாதமொன்றும் பார்ப்பமென்றால்
குலமாவாவாதியல்ல குருடனாமே, ௧௬௯



குருடனென்றால்யுத்தியுண்டு பயபத்தியுண்டு
கூரானவாதியென்றாலிலை தனையைத்தேடி
முருடனைப்போலொன்றோடே யொன்றுசேர்த்து
முயர்ச்சியாயடைத்தங்கே புடத்தைப்போட்டு
திருடனைப்போல்முழித்தங்கே யெடுத்துப்பார்த்து
சீயென்றுயெறிந்துவிட்டு பின்னொன்றுபார்ப்பான்
கெருடனைப்போல் ஞானமுத்தவாதியென்றால்
கேழ்வியாய்மனம்பத்திகுருத்தேடுவானே. ௧௭௦

குருத்தேடியவரவர்கள் சொன்னமொழிகேட்டு
குறையாதேசாத்திரத்தைத் தேடிப்பார்த்து
கருதேடிகைமுறைகள் கொண்டுதேறி
கலங்காதேயோகத்தில் கண்டுதேறி
யுருதேடியுளக்கருவிபிறக் கருவியறிந்து
உடலறிந்துஉயிர்நிற்குந் தானந்தேடி
இருதானையறிந்துமே தேடியவள்சொல்ல
யிதமாகக்கேட்டுணர்ந்து வாதம்பாரே. ௧௭௧

## சிவதைபாஷாணமெழுகு.

பாரப்பாதுரிசியென்ற சுன்னந்தானும்
பதராமல்விராகனிடை எடுத்துக்கொண்டு
நேரப்பாயெரிக்கினுட பாலாண்டுசேரில்
நினைவாகயதனிலிட்டு சாமம்வைக்க
சேரப்பாபிட்டியது சிலமாய்நிற்கும்
சிவப்பானகௌரியென்ற பாஷாணந்தான்
வாரப்பாஅயச்சட்டிக் குள்ளேவைத்து
மரவாமல்நாற்சாமம் சுருக்குப்போடே. ௧௭௨

போட்டேனேமெழுகாகும் மெடுத்துமக்காள்
பேரானகாரியம் பலந்தானேரில்
நீட்டேனேசரியிடையாய் மெழுகிலீய
நேரப்பாவாங்கியது தூளாய்ப்போகும்
மாட்டேனேயித்தூளித் தங்கத்திலீய
செலிந்துதங்கம்கொருங்கியே தூளாய்ப்போகும்
ஆட்டேனேயதற்குநீர் சூதங்கூட்டி
யரைத்துமுன்னீர்தன்னாலே வில்லைகட்டே ௧௭௩

கட்டியேஅயச்செம்புக் குள்ளேவைத்து
   கனமானபத்தெருவில் புடைத்தைப்போடு
ஒட்டியேகுருவாகு நூற்றுக்கொன்றீய
   வோடுமெப்பாபத்தரை தாடுமெத்த
துட்டியேயீயமெழுகு சூதங்கட்டுந்
   துலையாதசரக்கெல்லாங் கொல்லுங்கொல்லும்
வெட்டியேவெகுதூர மோடுமோடும்
   வெடுக்கெடுக்க தூரியாதழுத்துமாமே. ௧௭௪

ஊத்தானதாளகந்தான் பலந்தான்வாங்கி
   உறுதியாய்சுன்னத்தில் சுத்திபண்ணி
மாத்தானஅயச்சட்டிக் குள்ளேவைத்து
   மருவவேயெலைக்கள்ளிப் பாலுக்குள்ளே
நீத்தானதுருசியென்ற சுன்னம்போட்டு
   நேராகமுதிர்ந்தபின்பு யெடுத்துக்கொண்டு
காத்தானதாளகத்தில் சுருக்குப்போட
   கனமானமெழுகாகு மெடுத்துக்கொள்ளே. ௧௭௫

கொள்ளவேசுத்திசெய்து செம்புவொன்று
   குவிந்துநின்றுவருகையில் மெழுக்கொண்டீய
மெள்ளவேவெங்கலம்போல் தவந்துநிற்கும்
   மேதிச்சுவருகயிலே தங்கமீய
தள்ளவேசுழுத்தியென்று யாகும்போது
   தங்கத்தின்சரியிடைக்கு நாகமீய
அள்ளவேகூட்டியெல்லாம் பொடியாய்ப்பண்ணி
   அதிகமாய்சூதத்தை சரியாய்க்கூட்டே ௧௭௬

## சிவப்புநவாச்சாரம்.

கூட்டவேசூதந்தான் கெந்தகத்தின்தொட்டி
   குறிப்பாகமுன்பாலின் தன்னீராலாட்டி
நாட்டவேபில்லைசெய்து அயச்சிமிளில்வைத்து
   நலமாகமேல்மூடி மண்சிலைசெய்து
வாட்டவேபத்தெருவிற் புடத்தைப்போடு
   மகத்தானசெந்தூர மாவிதானப்பா
ஆட்டவேமதிதன்னில் நூற்றுக்கொன்றீய
   அருணனைப்போல் சிவப்பானதங்கமாமே ௧௭௭



தங்கமாங்கருப்போட்டா லச்சூதங்கட்டும்
   சாவென்றபேர்போச்சு தேகத்துக்கு
பங்கமாஞ்சரகுதனில் போட்டுப்போட்டு
   பதைத்தங்கேகட்டுப்போய் தூரியோடுங்
கெங்கையடாபூசாறு வாதங்களெல்லாங்
   கெட்டியாய்ப்பிசைக்தமீளப் பிழியத்தண்ணீர்
சங்கையாய்முட்கொள்ள காயசித்தியாகி
   சதாகோடியுகம்வரைக்கு மிரிதாயெண்ணே. ௧௭௮

எண்ணவேசிவப்பான நவாச்சாரத்தை
   யிதமாகக்கேளுங்கள் மக்களாகேள்
பண்ணவேவெடியுப்பு யிருபதுபலந்தான்
   பருவமுடன்சீனமது இருபத்தஞ்சு
கண்ணவேரெண்டையுந்தான் கல்வத்திட்டு
   காரமாம்நாயுருவி சாற்றாலாட்டி
தெண்ணவேதெல்லுபோல் பில்லைதட்டி
   திறமானரவிதனிலே காயப்போடே. ௧௭௯

போடவேதினமூன்றுக் காயக்காயப்
   பொருப்பானபின்பெடுத்து சூதத்தில்விட்டு
ஆடவேசக்கரமாம் பானைவேலே
   அணைத்தாய்போல்வைத்திட்டு மண்ணைப்பூசி
நீடவேஅடுப்பில்வைத்து தீயைமூட்டு
   நினைவாகவெள்ளைநீர் வருகும்பாரே
வாடவேசிதந்தநீர்பின் வருமேமக்காள்
   மதத்தானபீங்கானி லெடுத்துவையே. ௧௮௦

வைக்கவேஅரக்காலே குப்பிபண்ணி
   வருகிறதோர்திராவகத்தை யதிலேவாரு
நைக்கவேவெள்ளைதன்னை வீசிப்போடு
   நவாச்சாரமொருசேரை கல்வத்திட்டு
அயக்கவேதிராவகத்தா லாட்டுஆட்டு
   அறுசாமம்மாட்டியபின் வழித்தெடுத்து
வைக்கவேபெரும்பீங்கான் தன்னில்வைத்து
   பருவமாய்திராவகத்தை குடுத்துகுற்றே. ௧௮௧

குத்தியேவெய்யில்வைத்து மூன்றுநாள்தான்
   குறிப்பாகத்தனல்மேலே பீங்கான்வைத்து

பத்தியேபொடிபோலே வறுத்துப்போடு
பருவமாய்க்காசியென்ற மேருக்கேத்தி
அத்தியேஅரைவாசி மட்டும்போடு
அழகானவாலுகையின் மேலேவைத்து
எத்தியேதீபோடு கமலம்போலே
யிதமாகபன்னிரண்டு சாமந்தானே. கஅஉ

தானென்றநால்சாம மெரித்துப்போடு
சாந்தமாய்ராக்காலம் ஆரப்போடு
கானென்றமூன்றுநா ளானபின்பு
கடுங்குப்பிலெடுத்தடைத்தால் தேங்காய்ப்போலே
தேனென்றசிறுதிடத்தில் சிவந்துகாணும்
திரும்பியிட்டுகல்வத்தில் பொடியாய்ப்பண்ணி.
பானென்றதிராவகத்தை விட்டுஆட்டி
பரும்பீங்கானிலிட்டுத் திராவகத்தைகுத்தே. கஅங

குத்தியேநாள்மூன்று ரவியிற்போடு
குவிந்தபின்பு தவலையேலறுத்துப்போடு
எத்தியேபொடியாக்கி தமருக்கேத்தி
யிதமானமாதுகையில் தீயமூட்டு
பத்தியேகமலம்போல் எரிப்பாயப்பா
பன்னிரண்டுசாமந்தான் கடந்தபின்பு
தத்தியேகுப்பியைத்தா னுடைத்துப்போட்டு
தணலில்நிற்கும்பதங்கத்தை யெடுத்துகொள்ள. கஅச

கொள்ளவேமுன்போல திராவகத்திலாட்டு
குவிந்தபின்புநீர்க்குத் திரவிற்போட்டு
அள்ளவேதணலுக்கு வறுத்துப்போடு
ஆதித்தமாங்காசியென்ற மேருக்கேற்றி
தள்ளவேவாலுகையின் தீயைமூட்டித்
தணலையெடுத்துமுன்போலே பாவனையேசெய்து
துள்ளவேயேழுதரந் தீர்ந்தாயானல்
சூரியன்போல்சிவந்திருக்குஞ் சாரந்தானே. கஅரு

சாரந்தான்பலம்பத்து நிறுத்துக்கொண்டு
சமத்தாகசூதமது பலமும்பத்து
வீரந்தான்தங்கமது ரெண்டரைப்பலந்தான்
விரைவாகமருவிநின்றால் தேடிகல்வத்திட்டு



நீரந்தானெலுமிச்சம் பழச்சார்விட்டு
நிரளஅரைமூன்றுள் பொடியாகப்பண்ணி
காரந்தான்காசியென்ற மேருக்கேத்தி
கனமானவாலுகையில் வைத்திடாயே. கஅசு

வைத்துமேபனிரெண்டு சாமந்தீயை
மறவாமல்போட்டுமே தீபம்போல
மைத்துமேமாதளம்பூப் போலேயாகும்
மைந்தனேவேறென்று குப்பிக்கேற்றி
நைத்துமேசீலையினல் காத்தோடாமல்
நலமாகக்கட்டிவைத்து ஆயிரத்துக்கொன்று
தைத்துமேகாசிடைதான் கொடுப்பாயானல்
தங்கமதுபதினறு மாத்துமாமே. கஅஎ

தங்கமேயாச்சுதென்று கொர்ச்சிக்காதே
தளராமல்காயத்தை சுத்திபண்ணி
பங்கமேவாராமல் பதனம்பண்ணு
பளபளக்கும்உடம்பெல்லாம் பாலையாவாய்
அங்கமேசரீரமது பழம்போலாகும்
மானுண்டகற்பமது யானுமுண்டேன்
சிங்கமேயிவனென்ன பராவைபோலில்லை
செகமெல்லாந்தன்றி இடைக் கொவ்வாவாதே. கஅஅ

## குரு புத்தி.

ஒவ்வாதுதேகமப்பா சாரத்துக்கு
உத்தமியான்மனேன்மணித் தாய்பிலப்பு
சவ்வாதுவுடன்கூட்டி சரக்கில்பூசி
தணலிட்டுவாட்டையிலே சவலையாகும்
கவ்வாதுநவலோகப் பெருகுமுன்னே
காமமயமாகிவிடுங் கணக்கோமெத்தப்
பவ்வாதுஉலகத்தில் கெட்டபேர்கள்
பரியாசமென்பார்கள் பாஷாண்டித்தானே. கஅகூ

பாஷாண்டிமெத்தவுண்டு லோகத்துள்ளே
பரிவாகஅவருடனே பேசவேண்டாம்
பாஷாண்டிவாதமுண்டோ வென்றுகேட்டால்
பண்பாகசெய்தொழிலே வாதமென்றுசொல்லி

பாஷாண்டிவைத்தாலும் சகித்துக்கொண்டு
பத்திரமாய்புத்திமார்க்கம் விசேஷஞ்சொல்லி
பாஷாண்டிமுகத்து மூன்றேனிற்குந்தேவி
பாங்கானதேசம்விட்டு மறுதேசம்புக்கே. ககூ0

புக்கியேஞானமுத்த வாசியுடன்பேச
யுத்தியில்லாமனதினுடன் பேசவேண்டாம்
மக்கியேமனசடக்கிப் போதம்பாரு
மகத்தானபெரியோர்க்குத் தொண்டுபண்ணு
யெக்கியேமூலத்தைக் குப்பித்தேரு
யியலானதலங்களெல்லாம் சோதித்தேறி
நக்கியேஅமுதத்தை மவுனமுன்னி
நாதாக்கள்ரிஷியுடைய மறைப்பால்கில்லே. ககூக

கில்லென்றுஅறுபத்து நாலுமறையுள்ளே
கிலத்தகிற்கும்வாதசித்தி குளிகையுத்தி
கல்லென்றகாயசித்தி கெவுனசித்தி
கரைகாணுயோகசித்தி ஞானசித்தி
இல்லென்றயெட்டெட்டு சித்தியுண்டு
மேதினியில்கொள்ளாது சரைகொள்ளாகு
சில்லென்றகாடுபோல் சத்திரங்கள்மெத்த
செப்பவிதுஉரைகாணு வாதந்தானே. ககூஉ

சூதக்களங்கு.

வாதத்தைமுன்பின்னுப் சொல்லிவைத்து
மறைந்தாரேசரக்கென்று வைப்புகன்னே
நீதந்தான்னுதியுப்பை யிழுக்காய்ச்சொல்லி
கிலைத்துகிற்கும்வீரத்தை மறைத்துபோட்டார்
வேதந்தான்முடுக்கியே யோகப்படையை
வீரத்தைவைத்தாலே வாதமாகும்
பாதந்தானில்லாமல் கடக்கப்போமோ
பரிவாகசிவந்திருந்த சாரந்தானே. ககூங

சிவந்திருந்தசாரத்தின் மகிமைசொல்ல
சித்தர்முதல்ரிஷிகளால் முடியாதப்பா
அவந்திருந்தநாலாக்கி நாயனர்சொல்ல
வண்மையாய்கேட்டிருப்பான் கொஞ்சங்கேட்டேன்



நவந்திருந்தசூதத்தை தூரத்திகொல்ல
நலமாகவெகுசருக்கு நங்கப்போகா
சவந்திருந்தபிள்ளைசென்று நடந்தாப்போலே
சரக்கெல்லாங்கண்ணிமைக்குள் கொல்லுந்தானே. ககூச

கொல்லுகிறகருவேது வென்றாயானல்
குவிந்தபடிசொல்லுகிறேன் குறிப்பாய்கேளும்
வெல்லுகிறசூதமொன்று கெந்தியொன்று
விடுப்பட்டதாளகமும் சிலையும்வைத்த
அல்லுகிறசிவப்பான சாரமொன்று
அப்பனேபழச்சாரால் சாமம்ஆட்டி
தெல்லுகிறபில்லைகட்டி புலரப்போடு
சிறப்பானஅயக்குகையில் வைத்திடாயே. ககூரு

வைத்துமேசிலைசெய்து புடத்தைப்போடு
வயிரவர்க்கும்வஸ்துவைத்து பூசைபண்ணி
கைத்துமேகவுசத்தை வாங்கிப்போடு
களங்காகவேயிருக்கும் நவலோகத்தில்
அத்துமேஆயிரத்துக் கொன்றேபோடு
அப்பனேமாத்தென்ன பன்னிரண்டாம்
நைத்துமேநாபிக்கு உப்புக்கோதான்
நலமாகசிஷருக்கு தொழிலைச்சொல்லே. ககூசு

சூதக்கட்டு.

சொல்லுமேசூதத்தை கட்டிதாக்கு
சுருக்காகவழிசொல்வேன் கேளுமக்காள்
அல்லவேயிப்பகலில் சாருவிட்டு
ஆத்மமென்றசாரத்தைப் பொடியாய்ப்பண்ணி
மல்லவேசூதமொரு பலத்தைவிட்டு
மறவாமல்தணலில்வைத்து பொடியாய்ச்செய்து
கல்லவேகட்டியது மணிப்போலாகும்
கரியில்வைத்துவுருக்கிடவே ரசிதமாகும். ககூஎ

ஆமப்பாநவாச்சாரம் பொடியாய்ப்பண்ணி
அப்பனேமஞ்சளென்ற கருவைப்போட்டு
ஓமப்பாரவியில்வைக்க தயிலமாகும்
மூர்ப்பனமாம்பணவிடைதான் தயிலங்கொள்ள

பேரமப்பாசாவுபொய்யாய் கற்பகாலம்
 புகழானவயிரம்போ லிருக்கும்நீதகன்
காமப்பாலித்தைக்கு மெத்தநன்று
 கைவிட்டசூத்திரம்போ லாகும்பாரே. ௧௯௮

## துருசிவைப்பு.

பார்க்கவே துருசியொரு வைப்புசொல்வேன்
 பண்பாகசெம்பிலே பானைபண்ணி
கார்க்கவேகல்லுப்பு பொடியாய்ப்பண்ணி
 காணித்துக்குப்பதினறில் வெடியுப்புசீனம்
ஏர்க்கவேநிறுத்தந்த பானையிலேபோட்டு
 இதமானபழச்சாரு மொருபடிவார்த்து
ஆர்க்கவேமேல்மூடி புதைத்துப்போடு
 ஆறுநாளானபின்பு வெடுத்துப்பாரே. ௧௯௯

எடுத்துப்பார்பச்சையாய்க் கட்டியாக
 இதமானவயிரம்போல் துருசியாகும்
அடுத்துப்பாருப்பதுவுட் சித்தியாச்சு
 மப்பனேசெம்பதுவுஞ் சிவனுமாச்சு
கடுத்துப்பாரித்துவும் விஷ்ணுமாச்சு
 கலந்துநின்றபழச்சாறு வதுவுமாச்சு
தொடுத்துப்பாரிதைக்குரு செய்யில்வேதை
 துரியாதவாதத்தி லாதியாமே. ௨௦௦

வாதத்திலாதியென்ற சூதக்கட்டு
 வகைசொல்வேன்பச்சையென்று மயங்கவேண்டாம்
நீதத்தில்துரிசியது பலமுமொன்று
 நேர்ப்பாகப்பொடிபண்ணி வைத்துக்கொண்டு
பூதத்திலிரும்பான கரண்டிதன்னை
 தூக்கியேதண்ணீர்விட்டு கழுவிப்போட்டு
சூதத்தைநிறுத்தல்லோ பலமும்போட்டு
 துப்பறவாய்த்தண்ணீறு முக்கால்வாறே. ௨௦௧

## பச்சைதுரிசில் சூதக்கட்டு.

தண்ணிதான்கொடுக்கையிலே துரிசிதானே
 சாதகமாய்த்துவிவாத் தண்ணீராமே



தெண்ணீர்தான்சுண்டிடவே மறுதண்ணீர்விட்டு
 திறமாகத்துவிவா துருசித்தானே
வெண்ணீரில்மூன்றுதரம் விட்டுக்காய்ச்சி
 மெழுகுபோலுருண்டிருக்குஞ்சூதந்தானும்
தண்ணீரைவிட்டுநன்றாய் கொதிக்கவைத்து
 தாஷ்டிகமாய்க்கழுவிடவே தீர்த்தமாமே, ௨௦௨

தீர்க்கமாயுருட்டியதை வைத்துக்கொண்டு
 செப்பரியமருதங்காய்க் குள்ளேவைத்து
மூர்க்கமாய்வெள்ளியது விராகனிடைபத்து
 முசுநாகநிமிளைப்போல் திருவில்வைத்து
ஆர்க்கமாய்மேல்மூடி சீலைசெய்து
 அப்பனேரவிதனிலே காயப்போடு
தூர்க்கவேசூதவுண்டை நடுவேவைத்து
 தும்பரவாய்மேல்மூடித் திருவிப்போடே. ௨௦௩

திருவியேமருசுத்தால் நல்லெண்ணெய்
 சிறப்பாககலசத்தி லளவைமட்டும்வார்த்து
மருவியேவெள்ளியென்ற கன்னிதன்னை
 வடமிட்டூஞ்சல்போல் கலசத்திலிட்டு
சருவியேமேலோடு கொண்டுமூடி
 சாங்கமாய்மாசமண் மேலேபூசி
கருவியேகலசத்தின் கழுத்துத்தண்ணில்
 கழுகியேபணம்போலே தமரும்போடே. ௨௦௪

தமரிட்டுகலசத்தை ஆனிமேல்வைத்து
 தயங்காதேவிரற்பருமன் திரியைப்போட்டு
கமரிலடுவிளக்கேற்றி நாலுசாமம்
 கலங்காதேயெரியிட்டு ஆறவிட்டு
வமரிட்டுவெள்ளியென்ற கின்னிதன்னை
 வசையாமல்திருகல்விட்டு வுண்டைவாங்கி
பமரிட்டுதண்ணியிலே கழுவிப்போட்டு
 பத்துவிசையவிப்புடமாய்க் காயப்போடே. ௨௦௫

காயயிலேபோட்டபின்பு தண்ணீரில்கழுவி
 கசங்காமல்வெள்ளியுட மிமிளில்வைத்து
பாயயிலேமுன்போல வெண்ணெயிலேபோட்டு
 பக்குவமாய்நால்சாம மரைத்துப்பின்பு

போகையிலேயிப்படிதா னாறுபுடம்போடு
பேரானஎண்ணெயிலே பத்துவிசைபோடு
தேயயிலேவெள்ளியைத் தாண்டிப்போடு
சிறப்பானவெள்ளியைத்தான் புடமிட்டுதே. ௨௦௬

ஊதியேமுன்னிறையில் சிமில்போல்பண்ணு
உத்தமனேபுடம்பார்த்து யெடுத்துக்கொண்டு
பாதியேயிப்படிதான் செய்துக்கொண்டு
பரிவாகக்கரியில்வைத்து உருக்கவாருங்
கோதியேதங்கமிட்டு உருக்கிக்கொண்டு
குறிப்பானநாகமது கூடவிட்டு
ஆதியேசமனாகப் பொடியாய்ப்பண்ணி
யாதிகெந்திச்சூதமிடை சமனாய்கூட்டே. ௨௦௭

கூட்டியேகலயத்தில் பொடியாய்ப்பண்ணி
கொடியானமல்லிகையின் சாற்றாலாட்டி
நீட்டியேமூன்றுநா ளரைத்தபின்பு
நேராகப்பொடிபண்ணி குப்பிக்கேற்றி
மூட்டியேவாலுகையின் மேலேவைத்து
முயர்ச்சியாய்த்தீமூட்டு கமலம்போல
ஆட்டியேபன்னிரண்டு சாமமானால்
அருணநிறம்போலாகும் வேதைகேளே. ௨௦௮

கேளப்பாநூத்தொன்று நவலோகத்தோடுங்
கெடியானமாத்தென்ன யெட்டுமாகும்
வேளப்பாகுளிகைக்குச் சாரணையேசெய்தால்
விரவியகோடிலட்சங் காதமோடும்
தாளப்பாஆதிகண்டு தயங்கவேண்டாந்
தயங்காதமூலிகையி லாசைமெத்த
பாளப்பாதருசுவிட்டே சூதங்கட்டு
படும்பேச்சுமூலிகையிற் காட்டாதென்னே. ௨௦௯

என்னவேஉபாயங்கள் துத்திரெண்டுபார்த்து
யிலைகளினால்சுருக்கிட்டால் சாறுவாறு
பன்னவேபாஷாணம் அறுபத்துநாலும்
படுமுன்னேகட்டாச்சு சுன்னமாக
மன்னவேயுப்புவகை யிருபத்தைஞ்சு
மல்லிகைப்பூப்போலேமலர்ந்து சுன்னமாக



தன்னவேகாரகா ரங்களாலே
சகலமுந்தானகட்டினமாங் குருவுமாமே. ௨௧௦

ஆமப்பாமூலிகையால் சித்துவுண்டு
யந்தவகைமூலிகைதான் மனிதருக்கேயென்பார்
வாமப்பாமலைகளிலே உண்டுவுண்டு
மகத்தானதயிலமது வில்வஞ்சூதம்
ஓமப்பாமனுஷரெங்கே சஞ்சரிக்கப்போரார்
ஓகோகோநாதாக்கள் ரிஷிகள்சித்தர்
போமப்பாமனுஷருக்கு சரக்குகாரம்
புகழாகவாதத்தி லாதியாமே. ௨௧௧

ஆதியாந்துரிசிலொன்றில் களங்கஞ்சொல்ல
யறைகிறேன்பண்பாக யறிவுள்ளோர்க்கு
பாதியாந்துரிசிபலம் பத்துக்குத்தான்
பண்பாககெந்தியது பலமேழுக்கால்
வாதியாஞ்சூடன்பல மறைதான்போடு
மாசற்றவீரமது பலமுங்கால்தான்
பேதியாந்திரிமூன்று முனிநீர்விட்டு
பெலக்கவகைநால்சாமம் பண்புகேளே. ௨௧௨

கேளுநீமெழுகாகும்பதத்தில்வாங்கி
கெடிப்படவேதுரிசியின் மேலேபோடு
வாளுநீஉலர்ந்தபின்பு யதின்மேலேபோட
வகையாகச்சுண்ணாம்பு கவசம்போடு
தாளுநீஉலர்ந்தபின்பு சீலைசெய்து
தளநீராநீதியதை குகையில்வைத்து
நாளுநீர்முச்சீலை செய்துநன்றாய்
நாகாரமிடைகுடுக்கு மணியுமாமே. ௨௧௩

மணியெடுத்துஉடைத்தாக்கால் ரவியுமாகும்
மாசற்றவெள்ளிதன்னை நாலுக்கொன்று
தனியாகவுருக்கிடவே மூன்றுமாத்து
தப்பாதுகைகண்ட தொழிலுமாகும்
மணியாகயிச்செம்புக் களங்கஞ்செய்ய
மகிதராலாகுமோ லாகாதப்பா
கணியாகலாறு காணுங்காணுங்
கருத்துக்குள்ளேதென்றால் கெந்திதானே. ௨௧௪

தானுகுந்துரிசியென்ற செந்தூரத்தை
சாத்துகிறேநிதில்குருவு முன்னேபாரு
தேனுகும்வெடியுப்பு செயநீர்தன்னில்
சிறந்துநின்றதுரிசிபொரு பலந்தானெட்டு
கானுகுஞ்செயநீரில் தோய்த்துதோய்த்து
கருவியிற்போட்டுவா தினந்தானேழு
பானுகும்வெடியுப்பு முப்பதுபலந்தான்
பண்பானசீனமது முப்பத்தஞ்சே. ௨௧௫

அஞ்சவேகல்வத்தில் பொடியாய்ப்பண்ணி
அப்பனேகழுதையிட அமுரிவார்த்து
துஞ்சவே அரைத்துநன்றாப் பில்லைபண்ணி
துடியானரவிதனிலே யுலரப்போடு
மிஞ்சவேகலசத்திற் போட்டுநீயும்
மேலாகசக்கரமாம் பானைவைத்து
கொஞ்சவேயுளுந்தரைத்துச் சீலைசெய்து
கொடியாகஅடுப்பேற்றி தீயைமூட்டே. ௨௧௬

மூட்டவேமேலோடி புகையோடொக்க
முக்காலேசலர்வீழ்கும் வெள்ளைநீராய்
ஆட்டவேவெள்ளையைத்தா னகலவைத்து
யதின்பின்புசிவந்தஜலம் வருகுமக்காள்
பூட்டவேபீங்கானில் வாங்கிவாங்கி
போரானஅரக்காலே குப்பிபண்ணி
நீட்டவேயதில்வாரு கரையாதப்பா
நேரானலோகமென்றால் கரைந்துபோமே. ௨௧௭

## துருசுசெந்தூரம்.

போமெனவேரவியில்வைத்து துரிஸசவாங்கி
பொடிபண்ணிகல்வத்தில் திராவகத்தைவார்த்து
ஆமெனவேஅறுசாம மறைத்தபின்பு
அப்பனேபரும்பீங்கான் தன்னில்வைத்து
காமெனவேநீர்க்குத்தி ரவியிற்போடு
கலங்காதேமூன்றுநா ளானபின்பு
தாமெனவேதணலுக்குள் வறுத்துப்போடு
தயங்காதேபொடிபோலே மேருக்கேத்தே. ௨௧௮



ஏத்தியேதீமூட்டி பன்னிரண்டுசாம
மிதமாககிடந்தபின்பு ஆறவிட்டு
மாத்தியேயுடைச்செடுத்து கல்வத்திட்டு
வாகானதிராவகத்தி லரைத்துமுன்போல்
தூத்தியேபெரும்பீங்கான் தன்னில்வைத்து
துடியானதிராவகத்தை குத்துகுத்து
ஆத்தியேதணலுக்குள் வறுத்துப்போடு
அதிகமாய்நாசியென்ற பெருகள்போடே. ௨௧௯

போட்டுமேவாலுகையின் மேலேவைத்து
பொலிவாகதீபம்போல் தீயைப்போடு
பாட்டுமேபன்னிரண்டுசாமமானல்
அப்பனேஆறவிட்டு எடுத்துப்பாரு
காட்டுமேஜந்துதர மிப்படியேபண்ணு
கசடத்தஅருணனைப்போல் சிவந்துகாணும்
தீட்டுமேஅம்மரத்தை கத்திகொண்டு
செதுக்கியேவாரொக்குந் துரிசியாட்டே. ௨௨௦

ஆட்டானசெந்தூரம் நவலோகத்தில்
அணைத்திடவேபத்தரையா மாத்துக்கொன்று
மூட்டானசூதத்தை கரண்டியிலேவிட்டு
மூதிர்ந்துநின்றசெந்தூர மார்க்குங்கிட்டுங்
காட்டானசாரதனில் பிழிந்தாயானல்
கமலம்போல்திரண்டுருண்டு மணியுமாகும்
வாட்டானசூடான தீய்க்குள்ளேவாட்டி
மருவிநன்றாயுருக்கிடவே சோதியாமே. ௨௨௧

சோதியாக்குளிகைதனை வாயில்வைக்க
சுக்கிலஸ்தம்பனையாகும் வசியமாகும்
வாதியாம்வகைக்குளிது யிருந்ததென்றால்
வாதாடிசண்டையிட்டோர் வணக்கமாவார்
சாதியாங்குளங்களென்று தர்க்கம்பேசி
சண்டையிட்டுமயிர்பிடித்து சாகவேண்டாம்
பேதியாங்காயத்தை சித்திபண்ணு
போரானசித்தருட மரபில்தில்லே. ௨௨௨

சித்தரென்றநாமமது யெதினலாச்சு
சிவசிந்தைகட்டியதோர் திறமையாலே

பத்தரென்றநாமமது பெதினலாச்சு
பாணமென்றதூக்கான பருவத்தாலே
நித்தரென்றநாமமது பெதினலாச்சு
நிலைத்தாறுதலங்கண்ட நினவினாலே
முத்தரென்றநாமமது பெதினலாச்சு
மூச்சற்றவிடங்கண்ட ஞானியோர்க்கே. ௨௨௩

ஞானிகளென்றுசொல்லிவாய்பேசாமாண்பர்
நலமான அவ்வேடம் பூண்டுக்கொண்டு
யோதிதனைக்காரைகொண்டு சாத்திரங்கள்சொல்லி
யுண்மையென்றமந்திரங்க ளுபதேசித்து
பானியென்றபணம்பறித்துப் பொய்கள்சொல்லி
பாத்துகவேவழியொன்று நரகத்தில்புக்கு,
சூனியென்றநோய்வந்தா லமைச்சபடியென்று
சுழண்டலைவார்ஞானியல்ல வேடத்தோரே. ௨௨௪

வேடமாந்துரிசியென்ற செந்தூரம்பலந்தான்
விளங்கியதோர்சுத்திக்கு சூதமொன்று
காடமாந்தங்கமென்ற ரேக்குத்தானும்
கருகவேயரைப்பலந்தான் கூடவிட்டு
பாடமாம்பொற்றலையின் சாற்றாலாட்டி
பக்குவமாய்பொடியாக்கிக் குப்பிக்கேற்றி
வாடகமாம்வாலுகையின் மேலேவைத்து
வளமாகபன்னிரண்டு சாமமெரியே. ௨௨௫

எரித்துமேஆறவிட்டு எடுத்துப்பாரு
எழிலானசிவப்பென்றால் அருணன்போலாம்
எரித்துநவலோக மாயிரத்துக்கொன்று
யணைத்திடவேபதினறுமாத்து காணுமப்பா
பெரித்துபணவிடைதான் தேனிலுண்டு
பேரானமண்டலந்தான் கொண்டாயானல்
கரித்துமேதிரேகமது பளபளக்கும்
களிம்பானமுடப்பெல்லா மண்ணைப்போமே. ௨௨௬

மண்ணைகொண்டல்லோ சிறிதுபேர்கள்
மாயமாவாசினையா லிறந்துபோனர்
பெண்ணைகொண்டல்லோ சிறிதுபேர்கள்
பொன்தோத்துபேயாய் மாண்டுபோனர்



உன்னைகொண்டல்லோ சிறிதுபேர்கள்
உத்தமராய்பிச்சையெடுத் துண்டிறந்தார்
கண்ணைசைபசுவுக்கு யிருக்குமாப்போல்
கலக்கமுத்துஞானிக்குவேட மென்னசொல்லே. ௨௨௭

## இந்துப்புவைப்பு.

வேடமாயிந்துப்பு வைப்புச்சொல்வேன்
விளங்கியதோர்நால்டுப்பு வரிசையாய்க்கட்டி
பாடமாமடிகனத்த சட்டிவைத்து
பருவமாங்கடல்நீரி லுப்புக்காச்ச
கோடமாந்தினந்தினமுங் காச்சிக்காச்சி
கொண்டிட்டேவயடியப்பா வுள்ளேபானைக்
காடமாய்நிறைந்திட்டு யடுப்பிலேற்று
காலாயக்கினியால் யெரியைமூட்டே. ௨௨௮

மூட்டிடவேவெந்துருகி சிலமாய்நிற்கும்
முனையாகமுப்பதுக் கொன்றுசினம்
நீட்டவேவெடியுப்பு முப்பதுக்கொன்று
நேராகப்பொடிபண்ணி யதிலேபோட்டு
யாட்டவேவெந்துஒன்றாய் குழம்பாய்நிற்கும்
மாறவிட்டுபானையை வுடைத்துவாங்கி
காட்டவேபெருட்பாக கட்டியாகுங்
கல்லுப்பில்செய்தாக்கால் சிவந்துபோமே. ௨௨௯

சிவக்கின்றயிந்துப்பு வாதத்துக்காகா
செய்கின்றபேர்களுக்கு கல்லுப்புச்சுளுவு
பவக்கின்றலோகத்தோர் கல்லுப்புச்செய்வார்
பாங்கியென்றால்கடனீரில் வுப்புக்காச்சி
சிவக்கின்றவெண்ணீறு தண்டுப்போலே
சிகரமாய்கட்டிவைத்து செய்வாரையா
அவக்கின்றகட்டியாய் வெளுப்புமெத்த
ஆகையால்சுண்ணம்புக் கிதுதானென்றே. ௨௩௰

## கெந்தியுப்பு வைப்பு.

நன்றெனவேகெந்தியுப்பு வைப்புச்சொல்வேன்
நலமானகடல்நீரி லுப்புக்காச்சி
கன்றெனவேயடிகனத்த பானையில்போட்டு
காச்சினதோருப்புக்குப் பதினறிலொன்று

கண்டெனவேகெந்தியை முடித்துப்போட்டு
சதுரமாய்மூப்பதுக்கொன் றுநீலம்
பண்டெனவேவெடியுப்பு யிப்படியாகும்
பாங்காகபொடித்தெல்லாங் கூடப்போடே. ௨௩௧

கூடவிட்டுஅடுப்பேற்றி யெறிந்தால்சாமங்
கொடியதடாவக்கினியாந் தீரையைப்பூடு
ஆடயிட்டுஉப்பு நகி நீர்க்கும்போது
அதில்போடுமருந்தெல்லாம் பொடியாய்ப்பண்ணி
வாடஇட்டுநால்சாம மெரித்தபின்பு
மயங்காதேசிதளமா யாறப்போடு
நாடயிட்டுபானையைத்தா னுடைத்துவாங்கி
நலமானவயிரம்போ லுப்புமாமே. ௨௩௨

உப்பானகெந்தியது திராவகத்துக்காதி
உத்தமனேசாரணைக்கி உதவியாகும்
தப்பாநச்சொல்வில்லை கருமறைப்பாயில்லை
சத்தியமாய்நான்பார்த்த படிதான்சொன்னேன்
கப்பானவஞ்சுகொம்பில் மனந்தான்சென்று
கலகத்தில்விழுகாதே கருத்தூணிப்பாரு
அப்பானவுப்புப்போல் நேர்மைப்பாரு
அழும்பருடன்பேசாம லிருக்கநன்றே. ௨௩௩

## குடோறவைை.

நன்றெனவேகுடோரியொன்று சொல்லக்கேளு
நலமானவெடியுப்பு நாலாங்காச்சல்
கன்றெனவேபலம்நாலு கல்வத்திட்டுக்
காளித்துச்சமனுக நீறுபோட்டு
வின்றெனவேவெள்ளியென்ற பாஷாணந்தான்
வெங்காரம்பலம்நாலு பொறித்துப்போட்டு
தண்டெனவேதாளகந்தான் நாலுபலம்போடு
சாதகமாய்சூதமது பலமும்நாலே. ௨௩௪

நாலோடுஅரைப்பலந்தான் சாமம்போடு
நலமானகல்லுப்பு வறுத்துப்போடு
சாலோடுநாலுபலங் கூட்டிப்போடு
தனையெல்லாம்யெருக்கின்பால் தன்னிலாலே



காலோடுமறுச்சாமம் மறைத்துநன்றாய்
கனமானரவிதனிலே பொடியாய்ப்பண்ணி
மேலோடுகாசியென்ற மேருக்கேற்றி
விரவியேயரைவாசி மட்டுப்போடே. ௨௩௫

போட்டுமேவாலுகையில் மேலேவைத்து
பொலிவாகித்தீமூட்டி கமலம்போல
பாட்டுமேபன்னிரண்டு சாமந்தானும்
பதராமல்போட்டுவா கமலத்தீயால்
ஆட்டுமேஆறவிட் டெடுத்துப்பாரு
அரகராவயிரம்போல் பதுங்கிநிற்கும்
காட்டுமேசத்துகளிற் கரைந்துநீருங்
கண்விட்டுயிமம்போ லிறங்குந்தானே. ௨௩௬

## சூடன்வைப்பு.

தானென்றசூடனுட வைப்புகேளு
தனித்துநின்றவாழையுட கிழங்குதண்ணீர்
தேனென்றபடிபத்து அளந்துக்கொண்டு
சிறப்பானசெம்பினுட பாண்டத்தில்விட்டு
வேனென்றவெடியுப்பு நாற்பதுபலந்தான்
வெருளாதேபொடிபண்ணி கூடப்போட்டு
மானென்றஅடுப்பேற்றி யெரிநேரப்பா
வத்தியெல்லாங்குளம்புபோல் வருகும்பாரே. ௨௩௭

வருதல்கண்டுகருவாயின் பட்டைதன்னை
வகையாகத்தூள்பண்ணித் தயிலம்வாங்கி
திருதல்கண்டுபடிதானுங் கூடவிட்டுச்
சிறப்பானபுட்டான பதத்தில்காச்சி
கருதல்கண்டுயிறக்கியே யாறவிட்டு
கசக்காமலுளிகொண்டு வெட்டிவாங்கி
அருதல்கண்டுபானைதன்னி லடைத்துப்போடு
ஆச்சரியஞ்சூடனென்ற பேருமாச்சே. ௨௩௮

## கிண்ணிசூடன்வைப்பு.

ஆச்சந்தசூடனைத்தான் பொடியாய்ப்பண்ணி
அகண்டசெம்புப்பானையில்கால் வாசிப்போட்டு
பாச்சிந்தசெம்பினுடக் குடத்தில்நீரைப்

பக்குவமாய்மேல்வைத்து சீலைசுத்திக்
காச்சிக்தஅடுப்பேற்றிக் கமலம்போல
கைபொருக்கத்தண்ணீரைப் பதத்தைப்பார்த்து
கீச்சிந்தஆறவிட்டு எடுத்துப்பார்க்க
கிண்ணியென்றகற்பூர மாகும்பாரே. ௨௩௯

பாரப்பாகிண்ணியென்ற கற்பூரத்தில்
பக்குவமாய்கட்டினதோர் சரக்கையெல்லாம்
வாரப்பாதுருசுசுத்தி வாட்டென்றதெல்லாம்,
மைந்தனேயிதினுடைய தீயில்வாட்டு
நேரப்பாபுகையடக்கி புரியுள்வாட்டி
நேர்ப்பாகசெந்தூர மாகும்பாரு
காரப்பாவிளக்குத்தான் கற்பூரவிளக்கு
கருகாமல்சிவக்குமிந்த தீபந்தானே. ௨௪0

## அயமுருக்க.

தானென்றஅயமுருக்க வித்தைகேளு
சாதகமாயெறிமாரம் பலமிரண்டு
கானென்றகெந்தகத்தை பொடியாய்ப்பண்ணி
கனமானநாலுபலங் கூடப்போட்டு
வேனென்றவெங்காரம் பலமும்ரெண்டு
மெலிவானகுரோரிகால் பலமும்போடு
ஊனென்றசெவ்வாலி கிழங்குந்தானும்
உரலிலிட்டுபொடித்துச்சார் சேரவாரே. ௨௪௧

வாத்துடனேஎள்ளெண்ணை ரெண்டுசேரு
வாகாகாயிதுவெல்லாங் கூட்டிவிட்டு
போத்துடனேயடுப்பேற்றி யெறிந்துமெள்ள
பொங்காமல்தயிலமென்ற பதத்தில்வாங்கு
ஆத்துடனேகணபதியைப் பூசித்தேதான்
அப்பனேகிருபையுடன் பணிந்துபோற்றி
சேர்த்துடனேஅயப்பொடியைப் போட்டுமேதான்
சிறப்பாகதயிலத்தில் பிசரிவையே. ௨௪௨

வைத்துமே மூன்றுநாளானபின்பு
வச்சிரமாங்குகைதன்னி லடைத்துமூட்டி
பொய்த்துமேசரவுலையில் வுருக்கிபோட்டு
போரானஅயந்தானுங் காடுமாகும்



நைத்துமேபொடியாக்கி தைலத்தில்பிசரி
நலமாகமுன்போலே வுருக்கித்தீரு
கைத்துமேஐந்துதர முருக்கித்தீர்ந்தால்
கனமானஅயன்தானும் நாகமாமே. ௨௪௩

நாகமாம்அயந்தானும் சிவந்திருக்கும்
நாமப்பாயிடைக்கிடைதான் தங்கத்திலீய்ந்து
பாகமாயுருக்கையிலே நாகமீயப்
பதையாமல்நாகமங்கே கட்டிப்போகும்
காசமாம்கல்வத்தி லிதனைவிட்டு
தனைப்பொடிநாகமிடைச் சூதங்கூட்டு
ஆகமாஞ்சூதத்தில் ரெண்டுகெந்தி
அரைத்துமேமல்லிகையின் சாத்தாலாட்டே. ௨௪௪

ஆட்டுவதுநாலுசாம மானபின்பு
அப்பனேரவியில்வைத்து பொடியாப்பண்ணி
பூட்டுவதுகாசியென்ற மேருக்கேத்தி
போரானவாலுகையின்மேலேவைத்து
சாட்டுவாய்பன்னிரண்டு சாமந்தீய
கமலம்போலெரியிட்டு காலைவாங்கி
ஒட்டுவதுநவலோகம் நாத்துக்கொன்றீய
உள்புகுந்துபத்தரைத்தான் தப்பாவாறே. ௨௪௫

வாறுகேள்செந்தூரங் குன்றியுண்ணு
மண்டலத்தில்நரையிரைக ளெல்லாமாறும்
கூறுகேள்தேகமது கருங்கல்லாகும்
குத்திநல்மலைகளெல்லாம் பொடியாய்ப்போகும்
நேறுகேள்தேகமது உகாந்தகாலஞ்
சென்றாலும்பதினாறு வயசுபோலாகும்
வேறுகேள்வாசியெல்லாம் முன்னேநிற்கும்
வெளியோடேமனங்கலக்கப் பண்ணும்பாரே. ௨௪௬

பண்ணவேநாகத்தின் சுருக்குகேளு
பருக்கையாய்ப்பொடித்துமே சட்டியிலிட்டு
குண்ணவேகொள்ளியின் சாறுவாங்கி
குன்றுதேநால்சாமம் சுருக்குபோடு
விண்ணவேவெள்ளாடு உதிரம்வார்த்து
விளங்கவேஅதின்தோலின் வைத்துக்கட்டி

கண்ணவேகுளிவெள்ளி குகைக்குள்வைத்து
 கலங்காதேயிருபதுநாள் மூடிப்போடே. ௨௪௭

போட்டபின்புஎடுத்ததனை கல்வத்திலாட்டி
 புகழானகொள்ளிலையின் சரக்கிறுலே
நீட்டபின்புகலசத்தில் சாறுவிட்டு
 நினைவாகயதர்க்குள்ளே பாண்டம்வைத்து
வாட்டபின்புமேல்மூடி சீலைசெய்து
 வலியபுடம்போட் டெடுத்துக்கொண்டு
நாட்டபின்புநல்லெண்ணை படிதானென்று
 நலமானகுன்றுமணி படியரைதான்போடே. ௨௪௮

## ஊசிக்காந்தச்சத்து.

போட்டதனைகொள்சாத்தி லூறவைத்து
 புகழானஆறியபின் கல்வத்தாட்டி
நீட்டதனைமெழுகதுபோ லரைத்துவாங்கி
 நினைவாகஅந்த நல்லெண்ணைபோட்டு
ஆட்டதனைஎவிஆலம்பால் சேரவிட்டு
 அழகானகொள்ளிலைச்சார் சேரவிட்டு
கேட்டபின்புகெந்தகந்தான் நாலுபலம்போட்டு
 கெடியானவெண்காரம் ரெண்டுபலமும்போடே. ௨௪௯

போடப்பாகுடோரியொரு பலமுங்கால்தான்
 பொடித்தெல்லாங் கொள்ளிலையின்பாலலாட்டி
நாடப்பாநல்லெண்ணைத் தன்னிற்போடு
 நலமாகஅடுப்பேற்றி யெரிநேர்ப்பாக
கூடப்பாகுழம்பாகி யிறக்கிவைத்து
 கொடியதொருகாந்தத்தில் பிசரிக்கொண்டு
மூடப்பாமூன்றுநா ளானபின்பு
 மூச்சைக்குள்ளெடுத்திட்டு வுருக்கிடாயே. ௨௫௦

உருக்கவேவெந்துருகி காடுமாகும்
 உத்தமனேஉடைச்செடுத்துப் பொடியாய்ப்பண்ணி
தருக்கவேமுன்குளம்பில் பிசரிவைத்து
 சாதகமாய்மணிபோலே யுருக்கித்திரு
பருக்கவேயிப்படிதான் ஏழுதரமூது
 பண்பாககாந்தமது சித்தியாகும்



இருக்கவேநற்பாந்திர காலமென்றால்
 யென்மகனேமெழுகட்டிக் கிண்ணிவாரே. ௨௫௧

வார்றந்தகிண்ணியிலேசூதம்வாற்று
 வாகானகருவூமத்தஞ்சாறுவிட்டு
ஏத்திந்தவாளுகையில் மேலேவைத்து
 யிதமாகத்தீயெரிக்க வுண்டையாகும்
காத்திந்தவுண்டைக்குச்சாரிணை தீய்ந்து
 கனமாகரவிதனிலே காயவைத்து
பாத்திந்தவழிச்செடுத்துகளஞ்சி நிறைபாக
 பக்குவமாயுண்டைபண்ணி தமருஞ்போடே. ௨௫௨

தமரிட்டுஉண்டைபண்ணி தண்ணியிலேபோட்டு
 சாதகமாம்பராபரியைப் பூசைபண்ணி
கமரிட்டுவனத்துசுத்தி யர்ச்சனையேசெய்து
 காரணமாஞ்சாம்பவி யோஷணமேபண்ணி
தமரிட்டுஆதார நிதாரம்பார்த்து
 சற்பனையாய்முக்கோண தீட்சைசெய்து
வமரிட்டுஅமுர்தநிலை நின்றுகொண்டு
 வர்காகசபைதன்னில் மனசையுன்னே. ௨௫௩

உன்னியேபிரசங்கங் கேளாபக்கம்
 மூலந்திருந்துநெட்டையிலே சிவமேசெய்து
கன்னியேஅஞ்செழுத்துமூன் றெழுத்தும்மோதிக்
 காரணமாங்குருசொல்லக் கருதிகேட்டு
பன்னியேமதியில்நின்று அமுர்தத்தையுண்ண
 பருதிகண்பனிபோலே பாவம்நீங்கி
மன்னியேசிலம்பொலியி னதங்கேட்டு
 மகிட்சியாய்கற்பத்தை யுண்டுதேரே. ௨௫௪

## அரியகாந்தச்செந்தூரம்.

தேர்க்கவேமாந்தசத்து பலம்நால்வாங்கி
 சிறப்பாகதங்கத்தை யிடைக்கிடையேகூட்டி
பார்க்கவேரெண்டுமொன் றாகும்போது
 மைந்தனேநாகமொரு பலத்தைப்போடு
ஆர்க்கவேகல்வத்தி லிதனைக்கொட்டி
 யாட்டியேபொடிபண்ணி சூதஞ்சேர்த்து
கார்க்கவேரெண்டுபலங் கெந்திபிட்டு
 காரியமாய்பொர்த்தழைபின் சாத்தாலாட்டே. ௨௫௫

ஆட்டியேஆறுச்சாமம் ரவியில்வைத்து
அப்பனேபொடிப்பண்ணி குப்பிக்கேத்தி
நீட்டியேவாலுகையின் மேலேவைத்து
நினைவாகதீயாட்டு பன்னிரண்டுசாமம்
பூட்டியேசெந்தூர பதத்தைப்பாரு
புகழாகசிலாகைநுணிக் கறுப்புக்காணும்
மாட்டியேஆறவிட்டு டிறக்கிக்கொட்டி
மைந்தனே தங்கமென்றே சிமிளில்வையே. ௨௫௬

வைக்கவேநவலோகம் நூத்துக்கொன்று
பாட்டிடவே பன்னிரண்டு பாத்தமாகும்
மெய்க்கவேபணவிடைதான் தேனிலுண்ணு
மேனியெல்லாந்தங்கமா யாகும்பாரு
நைக்கவேநரைத்திரைக ளெல்லாமாறும்
நமனென்றசொல்லுமில்லை கர்ப்பக்கோடி
கைக்கவேபுளியுப்பு இரண்டுபவிட்டு
சன்னியின்மேலாசைவிட்டு உண்ணுஉண்ணே. ௨௫௭

## அவபத்தியம்.

உண்ணவேகர்ப்பத்துக் குறுதிகேளு
உப்புபுளிகாரமும் பெண்ணுமாகா
கண்ணவேதுவர்ப்பாகா மோருமாகா
காச்சிந்தநல்லெண்ணெய் சுண்ணம்பாகா
விண்ணவேவித்நிரையின் சோம்புலாகா
வேழுனமாங்கிஷங்கள் மச்சமாகா
பண்ணவேகடுகுள்ளி காயமாகா
பலபலவாஞ்சிந்தைபெல்லா மறுத்துத்தள்ளே. ௨௫௮

தள்ளியேயுண்ணுகிற பத்தியத்தைக்கேளு
சார்வானநெய்யாகும் பாலுமாகும்
மள்ளியேசிறுபயறு முருங்கையாகு
மப்பனேவெள்ளாடு மூனுமாகும்
துள்ளியேதூதுவளை யிலைக்காயாகும்
சுண்டெலியாங்கவுதாரி காடையாகும்
பள்ளியேபழமாகுங் கஞ்சாவாகும்
பனவெல்லந்தேனுகும் பாலுமாகும். ௨௫௯



ஆமப்பாசிறுகீரை யரைக்கீரையாகும்
மதிதமாய்ப்புளியாரை நல்லாரையாகும்
தேமப்பாவழுதலங்காய் பிற்கங்காயாகும்
சிறப்பானமுசலாகு முர்க்குருவியாகும்
காமப்பாகல்லாரை முருங்கையாகும்
கனமானவல்லாரைப் பூவுமாகும்
வாமப்பாமரையாகு மானுமாகும்
வகையாகவிப்படிதான் பத்தியமாயுண்ணே. ௨௬௦

உண்ணுறதுஒருசே ரரிசியப்பா
உத்தமனேயொருப்பொழுது வென்னீர்கொள்ளு
பண்ணியதோர்மருந்துகளின் காந்திகொண்டால்
பகல்ராரிக்கொருசேரு கறிதான்கொள்ளு
ஜின்னுறதுதினந்தினந்தான் துடிக்காயுண்ணு
விரும்பியேதோர்தான்றியுடன் மாசியுண்ணு
திண்ணுறதுமண்டலந்தா னிதுதானப்பா
திறமாகக்காயாதி கற்பமுண்ணே. ௨௬௧

உண்ணவேவயதங்கே யிருபதாகி
லுத்தமனேயிருபதுநாள் கடுக்காய்கொள்ளு
நண்ணவேவயதங்கே முப்பதாகில்
கடிசாகமுப்பதுநாள் கொள்ளுகொள்ளு
கண்ணவேவயதங்கே நாற்பதாகில்
நலமாகவிருபதுநா ளேழுகொள்ளு
எண்ணவேவயதங்கே யன்பதாகில்
எளிதாகபதினைந்து நாளேகொள்ளே. ௨௬௨

கொள்ளவேவயதங்கே யிருபதாகில்
குறையாதேகடுக்காயைப் பத்துநாட்கொள்ளு
அள்ளவேவயதுபத்துமேல் வயதேயானல்
ஆச்சரியங்காயசித்தி யாகாஆகா
விள்ளவேகடுக்காயைப் பொடியாப்பண்ணி
மெல்லியதாய்ச்சீலையிலே யரித்துக்கொண்டு
துள்ளவேயமுரிதனை முரித்துக்கொண்டு
சுகமாகக்கூட்டினத்தூள் குழப்பிக்கொள்ளே. ௨௬௩

கொள்ளுதற்குஅமுரிதனை குறுக்கிக்கொள்ளு
குருவாமாங்காந்தமெனப் பாத்திரத்தில்

விள்ளுதற்குமுன்னீராம் மழுரிதன்னி
விளங்கவேகொள்ளுமட்டும் பின்னீர்வாங்கு
துள்ளுதற்குதேத்தனுட வித்துதன்னைத்
துடியாகவிதில்கலக்கி வைத்துப்பின்னும்
மள்ளுதற்குத்தெளிவித்து தூளைப்போட்டு
மங்கென்றுவாசியோ டிழுத்துவாங்கே. ௨௬௪

வாங்கவேதினந்தோறு விடியற்காலம்
மாலையிலேகியாழமொன்று வைக்கக்கேளு
பாங்கியேமிளகுசுக்குதா னிருபத்தஞ்சு
பரிவாகஅறுகம்வேர் பிடிதானென்று
தேங்கியேபிடித்துநன்றாய் சாடியிலேபோட்டு
திறமாகப்படியொன்று தண்ணீர்விட்டு
ஆங்கியேயாழாக்காய்க் காய்ச்சிக்கொண்டு
ஆவின்வெண்ணை பார்க்களவு போட்டருந்திடாயே. ௨௬௫

அருந்தியேகாலமே சுருக்காய்க்கொள்ளு
அப்பனேமாலையிலே கியாழங்கொள்ளு
பொருந்தியேயுடலுக்குத் தாகமில்லை
புளிப்புடனேநல்லெண்ணை யெல்லாங்கொள்ளு
குருந்துமேவெண்மரியி னிறைச்சிகொள்ளு
கொடிதானமுயற்கண்ட முடும்புகொள்ளு
இருந்துமேசெங்கடுக்காய் மெத்தநன்று
இதமாகக்கிடையாட்டால் பொற்கடுக்காயருந்தே. ௨௬௬

அருகுமேஆனி ஆவணிக்குமப்பா
அமுரிதான்வெல்லத்தி னோடேகொள்ளு
தருகுமேசித்திரை வைகாசிக்கப்பா
சாதகமாய்சுக்கினுட கியாழத்திற்கொள்ளு
மருகுமேபுரட்டாசி யானிக்கப்பா
மாசற்றகுருஞ்சித்தே தன்னிற்கொள்ளு
குருகுமேயைப்பசுக்குங் கார்த்திகைக்குமப்பா
குமரியாம்சோறதனில் வைத்துக்கொள்ளே. ௨௬௭

வைத்துமேமார்கழிதை மாசிக்கப்பா
வாகானகாண்டிபி னோடேகொள்ளு
பைத்துமேபங்குனி நெய்யிற்கொள்ளு
பன்னிரண்டுமாதத்துக்குப் பருவஞ்சொன்னேன்



கைந்துமே யிப்படிதான் பருவமாக
நானுண்டபடிசொன்னேன் நீயுமுண்ணு
பொய்த்துமேபோகாமல் பூசைபண்ணு
போக்கோடேவாசியைத்தா னிழுத்துவாங்கே. ௨௬௮

## சதுரக்கள்ளி பற்பம்.

வாங்கியேசதுரக்கள்ளி காயோபத்து
மைந்தனேகுமரிச்சோற் காசுரண்டு
தேங்கியேயமரியுடன் கலந்துசொன்னேன்
சிதைந்துநின்றயேகமெல்லாந் தள்ளிப்போடு
பாங்கியேமுன்னுண்ட புளியுமுப்பும்
பலபலவாய்மலத்தோடே தள்ளிப்போடு
ஏங்கியேசட்டீத்தினுட விஷநீர்வைத்து
எலும்பில்நின்ற சுண்ணைப்புவேகம்போமே. ௨௬௯

வேகம்போமிருபதுநாள் காலமேகொள்ளு
மெலிவானமாலையிலே கியாழங்கொள்ளு
தாகம்போந்தானிசபத் திரியுஞ்சுக்கும்
தனித்தகொரு சீரகமாஞ்சியேலம்
போகம்போம்விராகனிடை வொவ்வொன்றுக்கு
புகட்டியேசட்டியிலே பொடித்துக்காய்ச்சி
தாகப்போம்மாலையிலே ஆழாக்குகொள்ளு
நமனுவாய்நன்றாகப் பாருபாரே. ௨௭௦

## மிளகு பற்பம்.

பாரப்பாயிதுகடந்து பின்புநீதான்
பரிவாகயயிவஞ்சா மிளகையேற்றி
சேரப்பாவமுரியிலே காலமேகொள்ளு
சிறப்பாகநாற்பதுநாள் கொள்ளுகொள்ளு
காரப்பாயிருபதுநாள் சுத்திபண்ணு
கைம்முறையாய் நூறுமட்டுமானபின்பு
தூரப்பாஅயவஞ்சா குறைத்துவுண்ணு
சொல்முறையாய்மாலையிலே பொடியையுண்ணே. ௨௭௧

பொடியாவதென்னவென்றால் சொல்லக்கேளு
போனபொற்கொன்றை பூவினோடு
கொடிதானமல்லிகையின் பூவினோடு
கொக்கிறகுமந்தாரை வெள்ளைப்பூவும்

அடியாகநிழலுலர்த்தலா யுலர்த்திக்கொண்டு
அப்பனேபொடித்துநன்ருய் சூரணமேசெய்து
கொடியாகதேனதிலே குழப்பியுண்ணு
நேர்ப்பாகமாலேயிலே மண்டலந்தானுண்ணே. உளஉ

## பூப்பொடி.

மண்டலந்தானுண்டபின்பு சொல்லக்கேளு
வாகான தூதுவளே யிலேயினேடு
வெண்டலந்தான் தர்க்கோலஞ் சாதிக்காயும்
வேரானவாலுளுவை வித்துனேடே
குண்டலந்தான்கொடுவேலிபொர்க் கொன்றைப்பூவுங்
கூரானநிலேபனேயின் கிழங்குகூட்டி
மூண்டலந்தான்பொடிசெய்து வைத்துக்கொண்டு
மூக்கழஞ்சிமுன்பன்றி நெய்யாக்கொள்ளே. உளங

கொள்ளவேவாதத்தை யகத்திப்போடுங்
கொடிதானபித்தமெல்லா முரிந்துபோகும்
தள்ளவேசிரசில்நிற்குங் கதத்தைத்தள்ளும்
சங்கிலிப்போல்கோழையறு பதமாதீர்க்கும்
விள்ளவேமதிதனி லமுர்தஞ்சேர்க்கும்
மெய்நிறைந்தநாடியெல்லா மிருக்கிக்கொள்ளும்
துள்ளவேயிந்திரியம் வேயிந்திரியம்சேரு
துடியாதேகாமனேப் கொல்லத்தானே. உளச

கொல்லுகின்றகாமத்தை மீதிலேத்தும்
குறிப்பாகவாறுதலங் கூர்ந்துபாரு
புல்லுகிறமனக்குரங்கு யஞ்சுகொப்பில்
பிலந்தாண்டாவிவேகமென்ற வாளால்வீசும்
மல்லுகிறயோகமதை நித்தம்பாரு
மதில்நிற்குமமுதத்தை சித்சியுண்ணும்
வல்லுகிறயாத்தாளே நித்தநித்தம்
வரிவில்நின்றகருப்பத்தை யடுத்துக்கொள்ளே. உளரு

## கருசியிலே.

கேளப்பாகரிசாலே குப்பைமேனி
கெடியானகாந்தையொடு வல்லாரிநீலி
வாளப்பாபொர்த்தலேயின் செருப்படையினேடு
வகையாகநிழலுலர்த்தாய் வுலர்த்திக்கொண்டு



தாளப்பாயிடித்துநன்ருய் சூரணமேசெய்து
சாதகமாய்வொருகடிதான் தேனிலுண்ண
தேளப்பாகெட்டியதோர் வேகம்போல
கூணத்திலேகாயசித்தி யந்திசந்தியுண்ணே. உளசு

உண்ணப்பாமண்டலந்தா நோய்மூன்றுபோகு
மூத்தமனேவுதத்தில் கிருமிப்போகும்
கண்ணப்பாபவளம்போல் சிவந்திருக்கும்
காயமெல்லாஞ்சம்பழத்தின் வாசம்வீசும்
விண்ணப்பாயந்திரத்தில் மீனங்களெல்லாம்
வெகுளாமல்பகல்க்காண தோத்துவிக்கும்
மண்ணப்பாபாதாளாதிகளுந் தோற்றும்
வாய்த்திறந்தளமாகும் வெள்ளியாய்ப்போமே. உளஎ

## வேம்பு.

போமப்பாயிதுகடந்த பின்புநேரான்
புகழ்பெறவேனாத்தாண்டின் வேம்பைப்பார்த்து
ஆமப்பாபட்டையைத்தான் வெட்டிவந்து
அப்பனேநிழல்தனிலே யுலர்த்திபின்பு
காமப்பாயிடித்துநன்ருய் சூரணமேசெய்து
கரிசாகமல்லிகையின் சாறுவார்த்து
தேமப்பாயஞ்சுதரம் பாவினேயேசெய்து
சிறப்பாகவொருகடித்தாள் கொண்டிடாயே. உளஅ

கொண்டிடவேயனுபான வகையைக்கேளு
குளிர்ச்சித்தேனதில்குழைத்து நாற்பதுநாள்கொள்ள
விண்டிடவேயந்திசந்தி கொள்ளுகொள்ளு
மெய்யெல்லாங்கருங்காலி வயிரமாகும்
துண்டிடவேநரைதிரைக ளெல்லாம்போகுஞ்
சுக்கிலந்தான்யேலேறுங் கீழோடாது
கண்டிடவேயாறுதலம் வெளியேகாணும்
காலனுமேயஞ்சிடுவான் காணுந்தானே. உளகூ

## சக்கரைவேம்பு.

காணவேமலேதோறுஞ் சக்கரைவேம்புண்டு
காயந்தின்ருல்கர்க்கண்டு போலேதோன்றும்
பூணவேயிலேத்தின்ருல் மண்டலத்தில்சித்தி
புகழாககாய்தின்ருல் படியேசித்தி

மாணவேபூதின்றால் மயக்கமில்லை
மைந்தனேவேர்தின்றால் காயசித்தி
யாணவேளைவழி பறக்குமப்பு
மாச்சரியமிதுதேடி யறிந்துக்கொள்ளே. உஅ௦

## சிவப்புக்கத்தாழை.

கொள்ளவேசிவப்பான கத்தாழைதானுங்
கொண்டுவாமண்டலந்தான் அந்திசந்தி
விள்ளவேதேகமிது கஸ்தூரிவீசம்
வேர்வைதான்தேகத்தில் கசியாதப்பா
துள்ளவேநரைதிரைக ளெல்லாமாறும்
சோம்பலென்றநித்திரையுங் கொட்டாவியில்லை
கள்ளவேகாயமது வுடம்பிலூறுங்
கணங்களுமேசவ்வல்லி பூப்போலாமே. உஅக

ஆமிந்தசோறெடுத்து சூதத்துக்கு
அண்ணலேவைத்துமெள்ள சுருக்குப்போட
வாமிந்தசூதமது மணிப்போலாடும்
வகைவகையாய்பாஷாணங் கட்டிப்போடும்
சேமிந்தச்சூதத்தை யுருக்கிச்சாய்க்க
சிணத்திலேசெம்பாகுந் தூரவோடும்
நாமிந்தப்படிபார்த்தோங் காரீயஞ்செம்பாம்
நாதாக்களிப்படியே பார்த்திட்டாரே. உஅஉ

## மூலிவகை.

பார்த்திட்டவடமலைகளிலே மூலிகையோகேளு
பரிவானகருநெல்லி கறுத்தநொச்சி
பூர்த்திட்டபுலசோரி பெரியசோதி
புகழ்ப்பெரியவெள்ளைப்பூ தத்தியோடு
ஏர்த்திட்டகரிலுங்குள் கொஞ்சமப்பா
யெளிதானரோமவிருட்ச மெருண்மவிருட்சம்
கார்த்திட்டகருவேலிச் சுணங்கவிருட்சம்
கருத்திருக்குங்கொடுவேலி செந்தீராயே. உஅங

செந்தீராய்வெண்புரசு வெள்ளைகண்டாஞ்
செங்கள்ளிசெம்பல்லி குண்டலமாம்பாலை
கந்தீராய்கசப்பான பாளையோடு
கடியதொருபோர்ச்சிந்தி சாய்கைபேதி



அந்தீராய்கருவிழி சிவத்ததில்லை
அதில்வெள்ளைதூதுவளை கறுத்தவாழை
கந்தீராய்கறுப்பானக் கரியச்சாலை
கருத்தூமத்தைவெண்காந்தை கல்லாரையாமே. உஅச

ஆமப்பாமூவிலையாங் குருந்திலோடு
ஆச்சரியங்கருந்தும்மை வெள்ளைக்காந்தி
யோமப்பாவெண்டான ஆதண்டையோடு
முத்தமனேமுப்பத்து ரண்டுமூலி
வாமப்பாமலைதோறு முண்டுமுண்டு
மகத்தானமூலிகைதான் பரிசைவேதை
காமப்பாவொவ்வொன்றில் சூதங்கட்டுங்
கலந்துநின்றவாசனைக்கும் பாஷாணஞ்சாமே. உஅரு

சாகவேசரக்கான வறுபத்துநாலும்
தனதனவேதையுமாஞ் சக்கரத்துக்கோடும்
சாகலேயுபாயங்கள் நூற்றிரண்டுபத்தும்
சவளைப்போல்சத்தாக விறங்கும்பாரு
சாகவேலவணமுத லிருபத்தைந்தும்
தனித்தனியேகட்டாகுஞ் சரக்கைகொல்லும்
சாகவேபண்ணும லிருத்திவைக்கும்
சங்கல்பவிருப்பமென்ற சட்டைபோக்கே. உஅசு

## கிளிமூக்கு மாங்காய்.

போக்கானகிளிமூக்குமாவொன் றுண்டும்
புகழானக்கிளிபோலே காயுங்காய்க்கும்
வாக்கானயிலையதுவு மாசிலைப்போலகாணு
பைந்தனேயிதினுடைய பழத்தையுண்ணு
நேர்க்காளவழிநடக்கச் சுருக்காயோடும்
நொடியிலேகாயசித்தி கிடைக்குமப்பா
போக்கானபூப்பூத்தபத் தானுள்பழமாம்
புண்ணியமாஞ்சித்தருக்கு ளெய்தும்பாரே. உஅஎ

## விடத்தோல்வேர்.

வாருகேள்விடத்தோல்வேர் பட்டைவாங்கி
மருவநன்றாய்நிழலுலர்த்தி சூரணமேசெய்து
பேருகேள்பலம்நாலும் நிறுத்துக்கொண்டு
பேசரிபரு [illegible] மது பல[illegible]

தாருகேள்கல்வத்தி லிதனைப்போட்டு
சாதகமாய்மல்லிகையின் சாறுவிட்டு
தேருகேள்யெண்சாம மரைத்துமைபோல்
தேன்வார்த்துயுண்டைசெய்து சிமிழில்வையே. ௨௮௮

வைத்ததொருமருந்தெடுத்து அந்திசந்தி
வகையாகமண்டலந்தா னுண்டாயானால்
நைத்ததொருசடமிருகி தங்கம்போலாம்
நாடியெல்லாம்விருவாகி யழுந்துந்தேகம்
கைத்தொருபித்தமது கவத்தைச்சாடும்
கசடானஆறுதலந் திறந்துபோகும்
மெத்ததொருசோதிநிர்த் தஞ்சைவாழ்யோகம்
வினைப்போலவொலியாகும் நாக்குத்தானே. ௨௮௯

## பொற்சீந்தி.

தானென்றபொற்சீந்தி ஆனால்நன்று
சாதகமாய்சிவப்புநன்று கிடையாவிட்டால்
பானென்றசீந்திமேல் யொலியைப்போக்கி
பருத்தண்டாய்க்கொண்டுவந்து கிழிந்துப்போட்டு
கோனென்றநிழலுலர்த்தி சூரணமேசெய்து
கூரானகற்கண்டு சமபாகஞ்சேர்த்து
வேனென்றவெருகடிதான் அந்திசந்தி
வெருளாதேமண்டலமும் வுண்டியாரே. ௨௯௦

பாரப்பாமேகமென்ற தெல்லாம்போகும்
பரிவாகவாதபித்தம் பக்குவமுமாகும்
சேரப்பாகபாலத்தில் வெட்டிபோகும்
செகமறியஅத்திசுரம் வேகம்போகும்
சாரப்பாதாதுமுந்துந் தகச்குந்தேகம்
சதிரானஆறுதலம் வன்னிபிறும்
போமப்பாசீந்திக்குச் சாவுமில்லை
பேரின்பசாத்திரத்தைப் பேணிப்பாரே. ௨௯௧

## நெல்லிக்காய்.

பேணிப்பார்நெல்லிக்காய் முத்தல்வாங்கி
போனபால்விட் டவித்துக்கொண்டு
ஊணிப்பார்நிழலுலர்த்தல் சூரணமேசெய்து
உத்தமநேசுத்தித்த கெந்திசரிகூட்டி



பேணிப்பார்தேன்தனிலே குழைத்துவுண்ண
போரானமண்டலந்தான் உண்டாயானால்
ஆணிப்பார்முன்னெடுத்த தேகமாகும்
ஆச்சரியஞ்சிவசத்தி தேகமாச்சே. ௨௯௨

சத்தியதுயேதென்றால் கெந்தகமுமாச்சு
தனித்துநின்றசிவன்தானும் சூதமாச்சு
புத்தியதுயேதென்றால் மூலமாச்சு
புகழானஆறுதலத் துண்ணிப்பாரு
பத்தியதுயேதென்றால் அறிவுக்குள்ளே
பகிப்பார்பாதத்தில் பத்தியாகும்
முத்தியதுவேதென்றால் மவுனந்தாண்ட
மோசமில்லைகச்சைதனில் முத்தியாமே ௨௯௩

## சிவனார் வேம்பு.

ஆமப்பா அதுகடந்த சிவனார்வேம்பை
அப்பனேஇடித்துநன்றாய் சூரணமேசெய்து
தேமப்பாவாலுளுவை சரியாய்க்கூட்டி
சிரப்பாககாந்தச்சார் வார்த்தரைத்து
தாமப்பாபில்லைபண்ணி நிழலுலர்த்தி
சாதகமாய்பூடத்தில் தயிலம்வாங்கி
வாமப்பாமுற்களஞ்சி யந்திசந்தி
மறவாதேமண்டலமுங் கொண்டிடாயே. ௨௯௪

கொண்டிடவேகுட்டமெல்லாம் போகுமப்பா
கூரானசரீரத்தில் வாதம்போகும்
விண்டிடவேவிஷகடிக ளெல்லாப்போகும்
மேனியுமேமாந்த நிறமுமாகும்
கண்டிடவேகன்னியர்கள் வசமதாவாள்
காரியமாமைம்புலனை யறுத்துச்சாடும்
துண்டிடவேஆசையுற்றால் காயசித்திபோகும்
தூஷித்துகன்னியைத்தான் தொடலாகாதே. ௨௯௫

## அகண்டகற்பம்.

ஆகவேஅகண்டத்தின் கற்பங்கேளு
அப்பனேகருங்கோழி கானலுடன்போடு
வாகவேவளத்தன்னில் மூட்டையெல்லாம்வாங்கி
வகையாகக்கல்லுப்புக் குள்ளேவைத்து

போகவேயிருபதுநாள் கழித்தபின்பு
பொதித்தல்லோஅயச்சட்டிக் குள்ளேவைத்து
போகவேகெருடனுட கிழங்குசாறுவிட்டு
புடமாகஅடுப்பேத்தி யெரித்திட்டாயே. ௨௯௬

எரித்திடவேசாரெல்லாஞ் சுண்டிப்போகும்
மிதமாகஆறவிட்டு வைத்துக்கொண்டு
சரித்திடவேதினமொன்று மேலோடுவாங்கி
சாதகமாய்தினந்தினமும் ஒவ்வொன்றாக
குரித்திடவேரவிதனிலே காயவைத்து
குறிப்பாகமண்டலந்தான் கொள்ளுகொள்ளு
மரித்திடவேயெடுத்தசரங் கற்பாந்திரகாலம்
வைத்திருக்கவேணுமென்றால் மண்டலந்தான்கொள்ளே. ( )

கொள்ளவேகாயமது சிவந்துமின்னும்
குறிப்பானகணங்கள்ரெண்டுங் கஞ்சப்போலாம்
விள்ளவேகைகள்ரெண்டும் சல்தூணாகும்
மெலிவானநாடியெல்லா மிறுக்கிக்கொள்ளு
துன்னவேயனுபவித்தால். விந்துவீழா
சுக்கிலந்தானிறுகியங்கே யேலேயோடுந்
தள்ளவேசட்டையொன்று கக்கிப்போடும்
சமர்த்தடனேயிவ்வளவுஞ் சாதித்தேரே. ௨௯௮

சாதித்துதலைமிஞ்சும் வரிசைகேளு
சாதகமாய்பட்சத்துக் கொருநாளப்பா
பேதித்துமிளகோடு மஞ்சள்நெல்லி
போரானவேப்பரிசி கடுகாயோடு
வாதித்துசமபாகம் நிறுத்துக்கொண்டு
வளமானஆவின்பால் விட்டுஆட்டி
காதித்துதலைதனிலே தேய்த்துக்கொண்டு
கனமானவெந்நீரில் முழுகிடாயே. ௨௯௯

முழுகிடவேகபாலமது கட்டியாகும்
மூச்சானவாயுவது மேல்கொண்டேகும்
நழுக்கிடவேரோமமது தும்பிபோலாம்
நரைதானுங்குளியாது வன்னிமீறும்
மழுக்கிடவேகண்ணீர்தண்ணீர் வீழாமல்
மாதரத்தின்மீன்களெல்லாம் பகலில்தோறும்
வெழுக்கிடவேரிடனுக்குள் விஷநீர்வற்றும்
மேனியுமேபொன்னிறம்போ லாகும்பாரே. ௩௦௦



பார்க்கவேமாதாந்ததிருக்காலப்பா
பரிவாகயாவிநெய்யை தேய்த்துக்கொண்டு
ஏற்கவேபசும்பயறு அரையாய்ப்பண்ணி
எளிதாகமுன்நீரில் முழுகிவாநீ
கார்க்கவேரோமமது வண்டுபோலாம்
கண்ணுக்குள் ளொளிமீறுந்தாகமில்லை
தேர்க்கவேசுழிமுனையும் கெட்டேயேறும்
சுழலாமல்பிரவஞ்ச மாய்கைநீக்கே. ௩௦௧

## தாம்பூலம்.

நீக்கவேதாம்பூலந் தின்பதற்கு
நினவாகச்சுண்ணாம்பு சேளுகேளு
கார்க்கவேகற்பூரச் சிலையின்மேலே
கல்லுக்குள்சுண்ணத்தை சலசம்போட்டு
பார்க்கவேகரியோட்டி லூதவூது
பஞ்சுபோல்பெருமியங்கே சுன்னமாகும்
ஆர்க்கவேகல்நாரி யிப்படியேவூது
அடியான யண்டத்தோ லூதிடாயே. ௩௦௨

ஊதியேகெருடபச்சை பவழமுத்து
வுத்தமனேயிவ்வகையா மஞ்சுசுன்னம்
கோதுவதுகொட்டைப்பாக் கதனைசீவிக்
குறிப்பாகப்பழுத்திருந்த வெள்ளிலையில்பூசி
ஓதுவதுசாரத்தையு மிந்துப்போட்டு
உத்தமனேதாம்பூலந் தின்றுதுப்பு
வாதுவதுபித்தமுடன் சேப்பனத்தைப்போக்கும்
வகத்தாவள்வாசத்தின் சுன்னந்தானே. ௩௦௩

தானென்றகாலையிலே வழலைவாங்கச்
சாதகமாய்ச்சொல்லுகிறேன் மக்காள்கேளு
வானென்றகரிசாலை சாற்றினோடு
வளமானயாவிநெய்யைச் சமனாய்ச்சேர்த்து
ஊனென்றயங்குஷ்ட விரலில்தோய்த்து
உத்தமனேயண்ணாக்கில் திரளவேற்று
தேனென்றசங்கிலிபோல் கவந்தான்வீழும்
சிறப்பாகபதினாறு திரமும்வாங்கே. ௩௦௪

வாங்குவாயிப்படிதான் மண்டலந்தானப்பா
மாலையிலேசெய்யுகிற வரிசைகேளு

பாங்கியேபோணடைத் தேனைவாங்கி
பரிவாகதாச்சனையில் தோய்த்துக்கொண்டு
தேங்கியேபரவைபோல் கேணியூணி
சிறப்பாகயபானத்தில் சுத்திரே
ஓங்கியேயிடசாரி யிருப்புனாறு
ஒளித்திருந்தப்பமெல்லாங் கலந்துபோமே. ௱௦௫

போமெல்லாமகலவிட்டால் காயசித்தியில்லை
புகழாகவிள்ளாட்டா லமுர்தமுந்தாம்
வாமமேயில்லாட்டால் பூசைபோச்சு
மாய்கையிங்கேசொல்லுவது மறைந்துபோச்சு
கேமமேபொருந்தாம லிருந்துவிட்டால்
நிட்சயமாய்சடலமதுக் கழிவுண்டாச்சு
காமமேதகியென்று விழுகவேண்டாங்
கைமுறையாயிருதலத்தின் கசட்டைதள்ளே. ௱௦௬

மூலிகைப்பயிர்.

தள்ளியேமூலிகையிற் கரிப்புபண்ண
சாதகமாயரைமட்டும் குழிதான்வெட்டி
தெள்ளியேசெங்கொட்டை பொன்றரண்டாய்வெட்டி
சிறப்பாகமுறையாகப் பரப்பிமேலே
அள்ளியேகாம்பைமண்ணை மேலேபோட்டு
அழகாகப்பாத்திகட்டி நீரைவிட்டு
நள்ளியேவுழிகவிட்டு மூன்றுதிங்கள்
நலமாககொத்தியே ஆறப்போடே. ௱௦௭

ஆறவிட்டுபரிப்பதற்கு விபரங்கேளு
அழகானகுமரியோடு ஓமங்கஞ்சா
தேறவிட்டுவல்லாரை கரியான்சாலை
சிறப்பானசெருப்படையும் நீலிவீழி
ஏறவிட்டுபொற்றலையின் நொச்சிநெல்லி
யிதமானகரந்தையொடு மந்தைதும்பை
சேறவிட்டுகொல்லனு கோவைவாளை
சிறப்பாகப்பதித்துவைத்துத் தண்ணீர்வாரே. ௱௦௮

வார்த்தல்லோபயிராக்கி தண்ணீர்வாத்து
வாகாககாச்சபின் விதையைவாங்கி
சேர்த்தல்லோமுன்போல செங்கொட்டையிட்டு
கொரோவச்சுருக்கமாய்த் தீயிற்போட



நார்த்தல்லோமூலியது சிரட்டைவேகும்
நவிலுவேவுள்மூலி வேகாதப்பா
ஏர்த்தல்லோயிப்படிதான் நாலுதிரம்போடு
யென்மகனே முழுகரிப்பாம்மூலிதானே. ௱௦௯

தானனைமூலிகைதான் மலைகள்தோறும்
சாதமதாய்வைத்தாரோ ரிஷிகள்சித்தர்
வானென்றகரிப்புக்கு பரிட்சைகேளு
வாகாககொக்கிறகு கொண்டுவந்து
பானென்றயிலைகசக்கி மேலேபூசி
பரிவானகாகத்தி னிறமேயாகும்
கோனென்றயிலைதின்றால் காயசித்தி
கொடுஞ்சுருக்காய் கோடிவரையிருந்துந்தானே. ௱௧௦

இருத்தியல்லோகுமரியுட கற்பமுண்டு
யெழுவதுதான்கோடியுகம் யிருந்தாரப்பா
அருத்தியதோர்யேமமுண்டு கோலாங்கிநாயன்
அவறுதான்கோடியுகம் வாதம்பார்த்தார்
திருத்தியதோர்கஞ்சாவால் கோரக்கர்தானும்
தினந்தோன்றிசமாதியிலே யேழுயுகம்நின்றார்
தரித்தியதோர்கரிசாலை கற்பமுண்ட
தவலோகமுனியுடைய திறமைகேளே. ௱௧௧

கேளப்பாவைந்துயுகம் காதாக்களோடே
கெடியாகதற்கித்து வேதாந்தம்பார்த்தார்
வேளப்பா நீலியுண்டுராமதேவர்
வீராகயேழுயுகம் யோகம்பார்த்தார்
நாளப்பாபிரமமுனி காடுயுண்டு
நாளேழுலட்சயுகம் சமாதியுற்றார்
தேளப்பாஓமமுண்டு அனந்தநாதா
செகத்திலுள்ள அதிசயங்கள் பார்த்திட்டாரே. ௱௧௨

பார்த்திடவேவிழியுண்டு கஞ்சமலைசித்தர்
பத்துயுகம்ஆரூடச் சமாதியிலேநின்றார்
ஏர்த்திடவேபொத்தலையார் கொங்கணர்தானப்பா
யேழுயுகங்குளிகைகட்ட வாதம்பார்த்தார்
கார்த்திட்டபதஞ்சலித்தான் காந்தையுண்டு
கைகொட்டிசிதம்பரத்தில் நடனங்கண்டார்
போர்த்திட்டகொல்லனுட கோவையுண்டு
போகமுனியென்றுசொல்லிப் புளகித்தேனே. ௱௧௩

புளகித்துகோடியுகம் வாதம்பார்த்து
போக்கோடேநூல்நன்றாய் விரித்துயானும்
இளகித்துயேழுகாண்டம் முன்னேசொன்னேன்
ஏழையுந்தான்யெழுநூறு கிகண்டாய்ச்சொன்னேன்
அளகித்துக்கண்டபடி சொன்னேன்மக்காள்
ஆச்சரியம்வெட்டவெளி மரப்போயில்லை
உளகித்துஉப்பைநன்றாய் கட்டியுண்ணு
ஒருசொல்லுந்தப்பாது சித்தியாமே ரு.கச

## உப்புக்கட்டு

சித்தியாயன்னத்தில் யுப்புகட்டச்
செப்புகிறேநாதாக்கள் சொன்னதெல்லாம்
பத்தியாம்புங்கம்வேர் பாலைவாங்கி
பரையுப்புத்தோய்த்தெடுத்து ரவியிற்போடு
முத்தியாலேழுநாள் ரவியிர்ப்போட்டு
முனையானவெடியுப்பு பலந்தானஞ்சு
வெத்தியாய்சீனமது பலந்தானஞ்சு
வெண்காரம்பலமஞ்சு கல்லுப்பஞ்சே. ரு.கரு

அஞ்சோடுசாரமஞ்சு பூனீரஞ்சு
ஆதியாய்கடல்நுரையஞ் சூடனஞ்சு
நஞ்சோடுவேழுநாள் வார்த்தரைத்து
நலமானரவிதனிலே யுலரப்போட்டு
நெஞ்சோடுரவிதனிலே காய்ந்தபின்பு
நேராகக்கல்வத்தி லிட்டுக்கொண்டு
குஞ்சோடுயஞ்சுநீர் பலந்தானஞ்சு
குழப்பியேபாலாலே வைத்துக்கொள்ளே. ரு.கசு

கொள்ளவேபாரையுப்பில் தோய்த்துதோய்த்து
குறிப்பாகக்கரியோட்டில் வாட்டுவாட்டு
மெள்ளவேதணலுக்கு ளடர்ந்துவாட்டு
வெதுப்படங்கியுப்பதுவும் வெண்மையாகும்
தள்ளவேசுண்ணாம்பு முப்புநீரே
சமனாகப்பொடித்துமைபோல் மூரியாலே
துள்ளவேரெட்டையாய்த் தட்டிவைத்து
துடியாககாயசித்தி யுப்பைவையே. — ரு.கள

வைத்துமேவடைமூடிச் சட்டியிலேவைத்து
வாகாகநால்சாமந் தீமைமூட்டி



மொய்த்துமேல்மூடியொரு சீலைசெய்து
முசியாமல்நாற்றெருவில் புடத்தைப்போடு
தைத்துயேயாறவிட்டு யெடுத்துப்பாரு
தவளம்போல்பளிங்குநிற மாகிநிற்கும்
நைத்துமேகரிசோற்றி லிந்துப்பைபயிட்டு
நலமாகநாள்தோறுங் கொண்டிடாயே. ரு.கஅ

கொண்டிட்டாலிந்தவுப்பு சட்டைதள்ளுங்
கூசாதேவாசியெல்லா நெட்டிட்டேறு
விண்டிட்டயமுரியிலே யிரங்காதுப்பு
விரும்பியேபச்சையுப்பு தின்றாயானால்
தொண்டிட்டதிரேகமது சட்டைதள்ளுந்
துடியானநரம்பதுவு முறுக்கேயேறும்
மண்டிட்டசித்தியெல்லாம் பாழாய்ப்போகும்
வாய்த்திருந்தகற்பமெல்லா மண்ணாய்ப்போமே. ரு.ககூ

போமென்றவுப்புக்குக் காரமேற்றி
பொலிவாகச்சுன்னமென்ற குணையிலாத
ஆமென்றபூப்போலே சுன்னமாகும்
அந்திடைக்குச்சாரமிடச் செயநீராகும்
வேமென்றசரக்கான வறுபத்துநாலும்
வெருளாமல்போதானங் கண்விட்டாடும்
சாமென்றசரவுபொய்யாம் வேதையாகும்
சகஸ்திரந்தான்மாராகுந் தன்னில்பாரே. ரு.உ0

பாரப்பாயுப்புநின்று வுருகும்போது
பரிவோடுயிடைக்கிடைதான் நாகம்போட்டு
காரப்பாநாகமிடை சூதம்போட்டு
கனமானகெந்தகந்தான் ரெட்டிப்போடு
சேரப்பாயெடுத்துடனே களங்கமாகும்
சேர்ந்தநவலோகத்தி லன்பதுக்கொன்றீய
வேரப்பாமற்றாருங் காணுங்காணும்
வெகுளாதேபணவிடைதான் தேனிலுண்ணே. ரு.உக

உண்ணவேமண்டலத்தி லொளியேமீறு
முத்தமனேகால்கள்ரெண்டுள் கலந்
விண்ணவேபச்சைரச மென்னுதின்
வெகுளாதேபாஷாண மெல்லாந்தின்னு

கண்ணவேபாசத்தை சற்றேயுண்ண
கலங்காதேவாசிகொண்டு யுள்ளேபூசி
பண்ணவேடக்கையிலு மிருக்கையிலும்நீதான்
பழக்கமுற்றமூலத்தைப் பாருபாரே. ௧௨௨

பார்க்கவேயுப்பென்ற களங்குதன்னை
பலபலவாய்லோகத்தி லன்பீதுக்கொன்றீய்ந்து
ஏற்கவேயிதைக்கொண்டு நவலோகத்தில்
யிட்டதுவுந்தொட்டதுவும் வேதையாகும்
கார்க்கவேயிந்தவித்தை யுண்டுகண்டாய்
கனமானகர்ப்பந்தை யுண்டுதேறு
தோர்க்கவேயுட்புகுந்து மூலம்பாரு
தொடுகுறிபோலாறுதலம் வெளியாய்ப்போமே. ௧௨௩

## அப்பிரேகச்சத்து.

வெளியானவப்ரேக சத்தைச்சேரு
விளங்கும்வெள்ளை பிறகாசமுத்தந்தானே
ஒளியானரெத்தினவன்னம் ரெண்டாய்ப்பார்ச்ச
உத்தமனேயொளிவானக் கிட்னவர்னம்
ஒளியானவப்பிரகம் நவனீதம்பண்ணி
வப்பனேகிளிபோலே சட்டிக்கொண்டு
களியானகொள்ளியிலேச் சாறுதன்னால்
காலங்காதேநாள்மூன்று தோசையர்க்கே. ௧௨௪

ஆர்க்கவேடொலைப்போல சட்டியிலேயிட்டு
அசையாதேகொள்ளிலையின் சார்தன்னாலே
பார்க்கவேயடுப்பேற்றி யெரித்துப்பின்பு
பருவாழைக்கிழங்குதான் சார்மூன்றுநாள்தான்
தோர்க்கவேமுள்ளாங்கிக் கிழங்குச்சாற்றில்
டொலைக்கட்டியெரித்திடுநீ மூன்றுநாள்தான்
கார்க்குநீசார்மூன்று நாள்மூன்றுதான்
கலங்காதேயெரித்துமே கிளியைவாங்கே. ௧௨௫

வாங்கியேபலம்பத்து கல்வத்திட்டு
வகைய்ரவெண்காரம் பலந்தான்பத்து
தேங்கியேகாரமஞ்சக் கட்டுப்பொன்று
சிறப்பானசர்க்கரைதேன் பழமும்போடு



ஒங்கியேயாதலையின் பாலைவார்த்து
உறுதியாங்கோரேரி யொருபலமும்பேரட்டு
நீங்கியேமூன்றுநாள் வேகவாட்டி
நினைவாகவடைதட்டி யுலரப்போடே. ௧௨௬

உலர்ந்தபின்புவங்கமென்ற தூளைத்தூவு
வுத்தமனேசரவுலையில் வைத்துவைத்து
அலர்ந்தபின்புஅப்பிரகம்சீரத்தால்வீழும்
மாராய்ந்துசத்தெல்லா மொருக்கிக்கொண்டு
நலர்ந்தபின்புமூசையிலே சீலைசெய்து
நலமாகரவிதனிலே காயவைத்து
கலந்தபின்புபில்லைதட்டி சரவுலையில்ஊது
கனமாகயப்பிரக சத்துமாமே. ௧௨௭

ஆமப்பாகரடெடுத்து கல்வத்தாட்டி
அரைத்துநன்றாய்வில்லைதட்டி ஐந்துதிரமுந்தீர்த்து
ஓமப்பாசத்தெல்லா மொன்றாய்ச்சேர்த்து
உத்தமனேவெண்காரஞ் சரியாய்க்கூட்டி
தாமப்பாகுகையிலிட்டு வுருக்கிநன்றாய்
சாய்க்கவேநல்லெண்ணெய் தேங்காய்க்கூட்டி
நாமப்பாயிலுப்பைப்பூ நெய்யுந்தேனும்
நல்லதொன்றாய்மததிச்சு சாய்த்திடாயே. ௧௨௮

சாய்த்திடவேமூன்றுதிரங்காமிங்கள்போகும்
தங்கமதுரெண்டுக்கு மப்பிரகநாலு
பாய்த்திடவேரெண்டுமொன்றா யுருக்கிக்கொண்டு
பருவாகமெழுகுகட்டி கிண்ணிவார்த்து
மாய்த்திடவேகிண்ணிக்குச் சீலைசெய்து
வாலுகைமேல்வைத்துக்குள் சூதம்வாரு
ஏத்திடவேகருவூமத்தஞ் சாறுவிட்டு
யிதமாகவெரித்திடவே வெண்ணெயாகும். ௧௨௯

வெண்ணெயெல்லாம்வழித்துமோர் மொத்தையாக
மேலானகுளுந்தண்ணீர் தன்னில்போட்டு
திண்ணியாயிருக்குமது கல்லுப்போலாம்
தேர்ந்தெடுத்துவுறையிலே கவசங்கட்டி
உண்மையாய்க்கவசபுடம் போடுபோடு
வுத்தமனேகுருவாக்குப் பொய்யாதையா

தண்ணையாயவிப்புடமாய்ப் பத்துபோடு
தயங்காதேமத்தங்காய்க் குள்ளேபோடே. ௯௯௦

போட்டெடுத்துச்சூடனுட தீயில்வாட்டி
புகழாககரண்டியிலேவெண்ணெய்க் குத்திஉருக்கி
ஆட்டெடுத்தொன்றுக்கு நாலுதங்க
மப்பனேசூதத்தில் பாதிஞகம்
நீட்டெடுத்துஉருக்கியொன்றாய் மணியாய்வாங்கி
நேர்பாகக்கல்வத்தில் பொடியாய்ப்பண்ணி
தோட்டெடுத்துசுத்தித்த கெந்திதானும்
துருசாகசூதயிடைக் கூடக்கூட்டே. ௯௯௧

கூட்டியேயெல்லாம்பொற்றலையின் சாற்றாலாட்டி
குறிப்பாகபொடிபண்ணிக் குப்பிக்கேத்தி
ஆட்டியேவாலுகையின் மேலேவைத்து
அறுச்சாமமானபின்பு கடுந்தீப்போட்டு
நீட்டியேபன்னிரண்டு சாமமானல்
நிலைத்துநிற்குமாதளம்பூ நிறத்தைப்போலே
வாட்டியேநவலோகம் நூத்துக்கொன்று
மாத்தென்னபனிரெண்டாம் பணவிடைதானுண்ணே. ()

உண்ணவேமண்டலந்தான் அந்திசந்தி
உத்தமனேஉகந்தவரை யடுக்குந்தேகம்
தண்ணவேயிருட்டறையில் யிருந்தானானல்
சந்திரனுசூரியனு என்பார்பாரு
மெண்ணவேகஸ்தூரி வீசுங்கமல
மேன்மையாங்கால்கையு மிருதுவாகும்
எண்ணவேகர்ப்பமெல்லாம் படிப்படியேயேறும்
பெழிலானசமாதிக்குள் கர்ப்பமொன்றே. ௯௯௩

## கெந்தகச்சத்து.

மூன்றானகெந்தகந்தான் பலமோபத்து
உத்தமனேசுத்திபண்ணி அயச்சட்டியிலேயிட்டு
கன்றானகுபரிச்சாற் றேமேலுமிட்டு
களரவேகொதிக்கவைப்பாய் நாலுசாமம்
பன்றானபயலிச்சார் சுருக்குப்போட்டு
பருவமாய்ப்புங்கம்பால் நாலுசாமம்



கன்றானநிழலுலர்த்திக் கல்வத்திட்டு
கடுகவேபொடியண்ணி மாந்துளிர்ச்சாறே. ௯௯௪

சாறதனால்யெண்சாமம் ஆட்டுஆட்டு
தயங்கமணித்தக்காளிச் சாற்றாலாட்டு
பேறதனூர்காக்கணம் வெள்ளைப்பூவை
பிசைந்தந்தசாரதனல் யெண்சாமமாட்டு
கூறதனல்கொக்குமந் தாரைப்பூவால்
குழுறவேயெண்சாமம் ஆட்டுவாட்டு
தேறதனுத்தாமரைப்பூச் சாற்றாலாட்டு
சிறப்பாகஅயமஞ்சு பலமும்போடே. ௯௯௫

போடவேவெண்காரம் பலந்தானஞ்சு
பெரிதான்தொட்டோரியொரு பலமும்போடு
நீடவேகுன்றிமணி கடுகுவுப்பு
நிலைக்கவொருபலம்போட்டு யாதனையும்பாலால்
வாடவேயெண்சாம மாட்டிப்பின்பு
வகையாகவில்லைதட்டி வுலரப்போடு
நாடவேநல்லெண்ணெய் படிதானென்று
நலமாகஅயச்சட்டிக் குள்ளேவாரே. ௯௯௬

வார்த்துமேயடுப்பேற்றி பில்லையிட்டு
வாகானகமலப்போல் றுயர்நேர்ப்பாக
ஏர்த்துமேபொருத்ததொரு பதத்தில்வாங்க
யிருபுறமுந்துரித்தியிட்டு சாவலையில்வூது
போர்த்துமேமணியாயச் சத்துவீழும்
பொர்க்கண்டையெல்லாஞ் சோதித்துவாங்க
கார்த்துமேமுன்போலக் காரங்கூட்டி
கலங்காதேயஞ்சுதர மூதிடாயே. ௯௯௭

ஊதியேசற்றெல்லா மொன்றாய்ச்சேர்த்து
வுத்தமனேவெண்காரங் கூடக்கூட்டி
காதியேயக்குகையி லுருக்கியாட்டி
கனமானயப்பிரகன் சாய்த்தாய்ப்போலே
சாதியேசாய்த்தாக்கா லருணம்போல
தயங்காதேசத்தாகுங் கெந்திசேர்த்து
வாதியேமிதைக்காணப் போராரப்பா
மாசற்றநாதாக்க ளாடும்ஆட்டே. ௯௯௮

ஆட்டானகெந்தகத்தின் வேகமறிவார்
அப்பனேசிவயோகி யல்லால்காணார்
நீட்டான்வம்பலத்தில் சொர்னந்தானும்
நிலைத்துநடராசரைத்தான் வார்க்கச்சொன்னார்
பூட்டானசிற்பர்கள்தா னுருகக்கட்டிவார்த்தார்
புண்பூண்டுபோகவுமே சிறுபோங்கி
கூட்டானமதிநொந்து நிற்கும்போது
கொடுமூலநாயனுமே வந்திட்டாரே. ௧௩௯

வந்திட்டுசிற்பரைத்தான் வரவழைத்து
மனக்குறைதான்யென்னசொல்லு மைந்தாவென்ன
நொந்திட்டுவிக்கிரகம் வார்க்கவார்க்க
பின்னமாய்ப்போகுதையா யென்னசெய்வோம்
நொந்திட்டமனதுகண்டு திருமூலாதாரமும்
கொடியிர்க்குள் வார்த்திடுநீயென்றுசொல்லி
கந்திட்டுகாசிடைதான் செம்புமீய்ந்தார்
கடுகவேசிற்பருந்தான் வார்த்திட்டாரே. ௧௪௦

வார்த்திடவேதங்கமெல்லாஞ் செம்பாய்ப்போச்சு
மனம்புண்ணாய்நிற்கும்போற் சோழன்வந்தான்
யேர்த்திடவேவிக்கிரகம் வார்த்ததெங்கே
யெடுத்துவாவென்றிடவே கொண்டுமுன்வைத்தார்
பார்த்திடவேதங்கமெல்லா மெடுத்துக்கொண்டு
பரிவாகசெம்பாலே வார்த்தாயென்று
வார்த்திடவேயாக்கினைதான் பண்ணச்சொன்னான்
வாகானசோழன்முன்னே பட்டதாமப்பா. ௧௪௧

தாமப்பாசிற்பரைதான் கொல்லவேண்டாந்
தங்கமுனக்கதிகமா தாரோமென்று
வேமப்பாவெள்ளியைத்தா னுருக்கச்சொல்லி
விரைந்துமூவாயிரத்தில் காசிடைதான்போட்டார்
தாமப்பாமாற்றதுவும் யிருபத்தஞ்சு
சாதகமாய்குகையிலிட்டு மறைந்துபோனார்
சேமப்பாதவசியெங்கே யென்றுகேழ்க்க
தேடியெங்கும்பார்த்துவிட்டுத் திகைத்திட்டாரே. ௧௪௨

திகைத்திட்டுவந்துசொன்னார் சொன்னமுன்னே
சிவசிவாயென்றுசொல்லி வாயைப்போற்றி



கைத்திட்டுசிற்பருக்கு வெகுமானஞ்செய்து
நாதாக்கள்மகிமைசொல்ல யாராள்கூடும்
மிகைத்திட்டுவிடுதிக்குப் போனான்சோழன்
வேண்டியதோர்கெந்தகத்தின் சத்தின்வேகம்
பகைத்திட்டுச்சித்தருட னுங்களுக்காய்சொன்ன
பாரதிக்குள்செந்தூரஞ் செய்யக்கேளே. ௧௪௩

கேளப்பாகட்டியதோர் சூதமொன்று
கெட்டியாகவருக்கையிலே சத்துவொன்று
நீளப்பாதங்கமொன்று நாகமொன்று
நேராகவுருக்கியொரு மணியாய்வாங்கி
வேளப்பாகல்வத்தில் பொடியாய்பண்ணி
விளங்கிநின்றதாளகமுஞ் சிலையோவொன்று
நாளப்பாபொற்றலையின் சாற்றலாட்டி
நலமாகதெல்லுப்போல் பில்லை பண்ணே. ௧௪௪

பண்ணியதோர்பில்லைதனை யகலவிட்டு
பாச்சியேமூட்டியொரு சீலைசெய்து
தண்ணியபத்தெருவில் புடத்தைப்போடு
கண்கொள்ளாவருணனைப்போல் செந்தூரமாகும்
நண்ணியேசெந்தூர மாயிரத்துக்கொன்று
நாட்டவேபதினாறு மாற்றுமாகும்
புண்ணியமேசெய்வதற்கு செந்தூரமாமே
பொல்லாததுரோகிக்குப் பொய்யாவாரே ௧௪௫

வாருகேள்செந்தூரங் குன்றிவொன்று
மண்டலந்தான்யந்திசந்தி மறவாமல்நீயும்
தேருகேள்தேகமது செப்புதானும்
சிதறவடித்தால்மலைகள் தவடுபொடியாகும்
காருகேள்கத்தியினால் வீசினாக்கால்
கலகலென்றுவெண்கலத்தின் யோசையாகும்
நாருகேள்நரம்பெல்லாஞ் சிவந்துகாணும்
நாதாக்கள்சித்தியெல்லா மிதுகளாச்சே. ௧௪௬

ஆச்சப்பாமாயிரத்தின் செப்பெடுக்க
அறிகிறேன்யானுந்தா னறிந்தமட்டும்
வாச்சப்பாமயிலிறகு கொண்டுவந்து
வளமாகதிரிந்துநல் லெண்ணெய்தோய்த்து

நீச்சப்பாசுட்டெடுத்து கரியாய்ப்பண்ணி
நிலைக்கவொருசேருமட்டும் நிறுத்துக்கொண்டு
தேச்சப்பாகல்வத்தி லிதனைப்போட்டு,
துடிரசவர்க்கமொரு பலந்தானஞ்சே. ௧௪௬

அஞ்ஞானவெண்காரம் பலந்தானஞ்சு
ஆரியாங்குடோரியொரு பலமுங்கொண்டு
நஞ்சானவீரமொரு பலமேயிரண்டு
நாயகமாங்கல்லுப்பு பலமுமொன்று
பிஞ்சானகுன்றுமணி யெள்ளுமொச்சை
பேசாதவொவ்வொன்று பலமும்போட்டு
கஞ்சானயாதனையின் பாலைவார்த்துக்
கடிகியரைமூன்றுநாள் பில்லைதட்டே. ௧௪௭

தட்டியேபில்லைதனை நாளத்தூதி
தட்டோடேமமணிணியா ரனிதானிர்க்கும்
ஒட்டியதோர்செம்பெல்லா மெடுத்துக்கொண்டு
ஓகோஓகோகாடெல்லா முன்போலூது
தெட்டியதோரைந்துதிர மருந்திட்டாட்டி
தெல்லுபோல்பில்லைதட்டி யூதுவூது
அட்டியதோர்செம்பெல்லாங் காரமிட்டு
அரகராமுன்போலச் சாய்த்திடாயே. ௧௪௮

சாய்த்திட்டசெம்பாலே சூதங்கட்டும்
சமுசயங்களெண்ணாதே பாஷாணஞ்சாகும்
மாய்த்திட்டயாமமது நீண்டாதையா
மகத்தானவிஷங்களொன்று கிட்டாதப்பா
பாய்த்திட்டசெம்போடே தங்கஞ்சேர்ந்து
பாங்கானமோதிரங்கள் பண்ணுபண்ணு
காய்த்திட்டகுண்டலங்கள் விக்கிரங்கள்பண்ணு
காட்டிலுள்ளேசித்தரெல்லாந் தரிப்பார்பாரே. ௧௫0

பாரப்பாமாயிரத்தின் செம்பொன்று
பாங்கானநாகமொன்று தங்கமொன்று
சேரப்பாமூன்றுமொன்று யுருக்கிக்கொண்டு
செயமானசூதத்தை யொக்கக்கூட்டி
காரப்பாகல்வத்திற் பொடியாய்ப்பண்ணி
கசடகத்திகெந்தகத்தைப் பாதிக்கூட்டி



வாரப்பாசெருப்படியின் சாற்றாலாட்டி
வளமாகதெல்லுபோல் வில்லைகட்டே. ௧௫௧

கட்டியேஅஞ்செருவி லப்புடைத்தைப்போடு
கைமுறையாய்ஆறவிட்டு யெடுத்துப்பாரு
தட்டியேமாதளம்பூப் போலேயாகும்
தனையெடுத்து ஆயிரத்துக்கொன்றேபோடு
மட்டியேமாத்தென்னப் பதினாறாகும்
மைந்தனேபணவிடைதான் பாலிலுண்ணு
வெட்டியேகாயமது விருப்புத்தாணும்
யென்னென்னகடித்தாலும் செத்துப்போமே. ௧௫௨

போமென்றஅயத்தினுட செம்புகேளு
புகழானரோமமது வெள்ளெண்ணெய்தோய்த்து
ஆமென்னஅயச்சட்டிக் குள்ளேவைத்து
அப்பனேமூன்றுபத்து பலத்தைப்போடு
காயென்றஅரப்பொடிதான் பலமோபத்து
கைமுறையாய்அரப்பொடியை பிசறிவைக்க
தேமென்றஅடுப்பேற்றி ரோமத்தின் தயிலம்
சிறப்பாகஉண்ணஉண்ண பிரட்டித்தீரே. ௧௫௩

தீரென்றரோமமெல்லாங் கரியாகுமட்டும்
செயமுறையாரப்பொடியை பிரட்டிவாங்கி
காரென்றகரியோடே வைத்துக்கொண்டு
கார்த்திகையின்கிழங்கதுவும் பலமும்பத்து
வேரென்றகுருமூலி பலமும்பத்து
விரும்பியேகல்வத்திற் பிழிந்துகொண்டு
வாரென்றபழச்சாறு கூடவிட்டு
வாகாகவெள்ளெண்ணெய் படிதான்வாரே. ௧௫௪

வார்த்தல்லோகுழம்புபோல் வருதல்கண்டு
வகையானவெண்காரம் பலந்தானஞ்சு
சேர்த்தெல்லாந் துரிசியொருபலந்தானஞ்சு
தேசில்லாகெந்தகந்தான் பலமுமூன்று
கோர்த்தெல்லாம்பொடியாக்கி யெண்ணெயிலேபோட்டு
கொதிப்பித்துகுழம்பான பதத்தில்வாங்கி
கார்த்தெல்லாம்வழித்துமொரு கலசத்திட்டு
கைமுறையாயரப்பொடியை பிசரிவையே. ௧௫௫

வையப்பாரோமமென்ற கரியினோடே
மயங்காதேகுகையிலிட்டு மாட்டியூது
தையப்பாமணிமணியா யிறங்கும்பாரு
தன்னையெடுத்துயுடைத்துமுன்போல் தயிலத்தில்பிசரி
கையப்பாயஞ்சுதிர முருக்கித்தீரு
கசடற்றவெள்ளிபொன்போல் கண்விட்டாடும்
மெய்யப்பாகசடற்ற செம்பேயாகும்
வேதையதில்முடிவுசொல்ல வீண்கொள்ளாதே. ௩௫௬

கொள்ளாதஅயச்செம்பு பலந்தானாலு
குறிப்பானதங்கமொன்று நாகமொன்று
விள்ளாதேயீயமொன்று யுருக்கியாட்டி
வீரமிடுகல்வத்தில் பொடியைப்பண்ணி
அள்ளாதசூதமது பலந்தானென்று
அசடில்லாகெந்தகமும் பலமும்நாலு
துள்ளாதமல்லிகையின சாற்றாலாட்டி
துடியாகவெண்சாமம் ரவியிற்போடே, ௩௫௭

போட்டெடுத்துட்பொடிபண்ணி மேருக்கேற்றி
புகழானவாலுகையின் மேலேவைத்து
ஆட்டெடுத்துபண்ணிரண்டு சாமந்தீயை
ஆறவிட்டுப்பார்த்தாக்கால் செந்தூரமாகும்
பூட்டெடுத்துவாயிரதுக் கொன்றுபோடு
புகழாகபதினாறு மாற்றுங்காணும்
நீட்டெடுத்துமண்டலந்தான் குன்றியுண்ணு
நேரானசட்டைக்கி வாலையாமே. ௩௫௮

காந்தச்சத்து.

ஆமென்றகாந்தமது பலந்தான்பத்து
அப்பனேகிண்ணிபோ லுடைத்துக்கொண்டு
காமென்றசெம்பிலிப்பால் படிதானாலு
கலரவிட்டுசுருக்கிநீ நாலுசாமம்
தாமென்றகலப்பத்தில் செம்பிலிப்பால்விட்டு
தாங்கியதைநாற்சாமம் புடத்தைப்போடு
ஆமென்றபாலாலே யரைத்துரைத்து
அப்பனேவஞ்சுதிரம போட்டுத்தீரே. ௩௫௯



தீய்ந்தபின்புபொடியாக்கி யயச்சட்டியிலேயிட்டு
செம்புலியின்ரோமமது பலந்தான்பத்து
ஆய்ந்தபின்புசுருக்கிட்டு ரோமந்தன்னை
அப்பனேதயிலத்தி லுலரப்போடு
காய்ந்தபின்புரோமத்தின் தயிலமெல்லாங்
கரியோட்டைவாரிவைத்து கருத்தைக்கேளு
தேய்ந்தபின்புகருங்குன்றிச் சாற்படிதானென்று
சிறப்பானகொள்ளிலையின் சாற்படிதானென்றே. ௩௬௦

ஒன்றானபொன்னாவாரைச் சார்படிதான்
உயர்ந்தபாதனியின்பால் படிதானென்று
கன்றானசெவ்வாலிக்கிழங்குச் சாற்படிதான்
கார்த்திகையின்கிழங்குசார் படிதானென்று
சின்றானபுலியரணை கிழங்குச்சாறு
சிறப்பானநல்லெண்ணெய் சமனாய்க்கூட்டி
நன்றானவடுப்பேற்றிக் கமலம்போலெரித்து
நலமாகக்கும்பான பதத்திற்பாரே. ௩௬௧

பார்க்கவேகெந்தகந்தான் பலமூன்று
பரிவானவெண்காரம் பலமுமைந்து
ஏர்க்கவேதுரிசியொரு பலமுமைந்து
எளிதானவீரமது பலமுமொன்று
தார்க்கவேகுடோரியது பலமுமொன்று
கல்வத்திலிட்டெல்லாம் பொடியாய்ப்பண்ணி
சேர்க்கவேமுன்மருந்தில் யொக்கப்போட்டு
சிறப்பாககுழம்பான பதத்தில்வாங்கே. ௩௬௨

வாங்கியேகாந்தத்தில் பிசறிக்கொண்டு
வளமானசரவுலையி லூதவூது
தாங்கியேகாட்டோடே சத்தாய்வீழும்
தப்பாமல்சற்றெல்லாம் புக்கிக்கொண்டு
தேங்கியேகாட்டெடுத்து தயிலத்தில்பிசரி
செப்பரியநா ளூதத்தீறு
பாங்கியேவஞ்சுதிர மூதித்தீரு
பருதிப்போல்செம்பாக நிறமுமாச்சே. ௩௬௩

செம்பானகாந்தமது பலந்தானாலு
திறமான தங்கமது பலந்தானென்று

கம்பானநாகமது பலந்தானொன்று
கருதியதோர்கட்டான சூதமொன்று
நம்பானயிதனாலு முருக்கிக்கொண்டு
நலமாககல்வத்தில் பொடியாய்ப்பண்ணி
கொம்பானகுலாமல்லிச் சாற்றாலாட்டிக்
குமரவேமூன்றுநாள் ரவியிற்போடே. ௱௬௪

போட்டுவாமுன்சொன்ன நூகலாட்டி
பெரிதானகெந்தகத்தைச் சுத்திசெய்துபோடு
கேட்டுவரப்பொடிபண்ணி மேருகேற்றி
கெடியானவாலுகையின் மேலேவைத்து
நாட்டுவாய்பன்னிரண்டு சாமந்தீயை
நலமாகவாறவிட்டு யெடுத்துப்பாரு
காட்டுவாய்மாதளம்பூப் போலேயாகும்
சகஸ்திரத்துக்கொக்கூடும் வேதைதானே. ௱௬௫

தானாகுஞ்செந்தூரங் குன்றியுண்ணு
சாருகமாய்மண்டலத்தில் சட்டையாகுங்
கோணனாயமெல்லாஞ் சிவந்துமின்னுங்
கொடிதானநரம்பெல்லா பவழம்போலாம்
பாணவஸ்துண்டால் நீரிசில்லை
பாஷாணவர்க்கங்கள் கரிச்சோரும்
மூணசடந்தானுங் கோடிகாலம்
உத்தமனேசமாதியி லிருக்கலாமே. ௱௬௬

இருக்கவேலோகமென்ற திராவகத்தை
இயம்பிடவேஆனந்தா வாத்துக்கேதான்
பருக்கவேவெடியுப்புப் பலந்தானாறு
பரவியதோர்சீனமது யெண்பத்தஞ்சு
தருக்கவேதுருசமது நாற்பதாகும்
சமத்தானசாரமது யிருபதாகும்
உருக்கவேகல்லுப்புப் பலந்தான்பத்து
உசத்தீயாம்பூநீறு பலந்தானஞ்சே. ௱௬௭

## துருசுதிராவகம்.

அஞ்சானசத்தியென்ற சாரம்நாலு
அழகானவெடியுப்புப் பலந்தான்மூன்று



மஞ்சானயருவியுப்பு பலந்தானொன்று
வகையெல்லாம்பொடித்து வொருசட்டியிலிட்டு
கஞ்சானகழுதையுட ரத்தம்வார்த்து
கருகியரைத்தேழுநாள் ரவியிற்போட்டு
துஞ்சானவடிகனத்த கல்வத்திட்டு
துயரவேகலசமட்டு முயரப்போடே. ௱௬௮

போட்டதின்மேல்சக்கரமாய் பாந்தசட்டி
பொருந்தவேமேல்கவுத்து மாசந்தன்னால்
நாட்டதின்மேல்சீலைசெய்து ரவியில்வைத்து
நலமாகயடுப்பேற்றி யெரிநேர்ப்பாக
நீட்டத்தின்மேல் தண்ணீர்குத்தி
நேர்ப்பாகத்தீமூட்டி யெரிநேரப்பா
பூட்டத்தின்மேல்புகையோடே சலந்தான்வீழும்
பொருந்திமுன்னீர்தனையசற்றிப் பின்னீர்வாங்கே. ௱௬௯

வாங்கியேமுன்வைத்த சாங்கந்தன்னை
வகையாகவஞ்சுபங்கு பண்ணிவைத்து
தேங்கியேமறுப்பங்கி லிதனையூற்று
சிறப்பாகமுன்போலே கலசத்திட்டு
சாங்கியேயடுப்பேற்றி யெரித்துவாங்கி
சாந்தமாய்முன்போலே மறுசரக்கிலூற்றி
பாங்கியேபுலரவிட்டு கலசத்திலிட்டு
பக்குவமாயஞ்சுதரம் படியேவாங்கே. ௱௭௰

வாங்கியேயரக்காலே குப்பிபண்ணி
வளமாகதிராவகத்தை யதிலேவாரு
தேங்கியேசூதமது பலந்தானெட்டு
சிறப்பாககல்வத்தி லிட்டுக்கொண்டு
பாங்கியேதினமூன்று திராவகத்திலாட்டி
பரும்பிக்கான்தன்னிலே வழித்தெடுத்து
தாங்கியேகரியோட்டில் வறுத்துக்கொண்டு
சமரசமாய்ப்பொடுபோலே மேருக்கேற்றே. ௱௭௧

ஏற்றியேவாலுகையின் மேலேவைத்து
இதமாகத்தீயெரித்துப் பன்னிரண்டுசாமம்
போற்றியேயாறவிட்டு யெடுத்துக்கொட்டி
புகழாகதிராவகத்தில் யரைத்துலர்த்தி

தூற்றியேபொடிபோலே குப்பிக்கேற்றி
சுகமானவாலுகையின் மேலேவைத்து
பாற்றியேபன்னிரண்டு சாமந்தானும்
பக்குவமாய்தீயெரித்து யாறவிட்டுவாங்கே. ௧௭௨

வாங்கியெல்லாமுன்போலே யரைத்தெடுத்து
வரிசையாயஞ்சுமுறை தீர்ந்துயேரு
தாங்கியேசெந்தூர மருணன்போலாம்
தகளத்திலேயிருக்கு மட்பீாய்தன்னில்லே
ஓங்கியேகோடிக்கு பொன்றுபோடு
உத்தமனேகதலியுட பழத்தைவாங்கி
தேங்கியேபணவிடைதா னுள்ளேகொளளு
சிவசிவாசூரியன்போல் தேகமாச்சே. ௧௭௩

ஆச்சப்பாதிராவகத்தி லிந்தவித்தை
ஆராய்ந்துவொவ்வொன்றாய் பார்த்துத்தேரு
ஏச்சப்பாசுன்னமுதல் களங்குகோடி
பிணங்கியதோர்க்குருக்கோடி பேரிகோடி
மூச்சப்பாசெந்தூர மனந்தங்கோடி
முசியாதுலேகியங்கள் முறைகோடி
பாச்சப்பாவொவ்வொன்றில் வேதைகோடி
பரிசிக்கதரியமுதா வெட்டுமாமே. ௧௭௪

ஆமென்றதரிணுடதிரா வகத்தைச்சொல்வேன்
னத்துருசுமதுபலந்தா நூறுவாங்கு
காமென்றவெடியுப்பு பலந்தாநூறு
கலங்காதேசீனமது பலந்தாநூறு
வேமென்றசவுட்டுப்புப் பலமுமஞ்சு
வெகுளாதேவளையிலுப்புப் பலமுமஞ்சு
தாமென்றகெந்தியுப்பு பலமுமஞ்சு
தயங்காதேயிந்துப்புப் பலமுமஞ்சே. ௧௭௫

அஞ்சோடுசத்தியென்ற சாமம்பத்து
யப்பனேகல்லுப்புப் பலமும்பத்து
நஞ்சோடேவீரமது பலமுமூன்று
நவச்சாரம்ரெண்டுபத்து பலமும்போட்டு
மிஞ்சோடுகருவெங்கு பலமுமூன்று
பேசாதவாலையுப்பு யுருவியுப்பு



பஞ்சோடுமணியுப்பு மேனியுப்பு
பதாராதேவொவ்வொன்று பலமும்போடே. ௧௭௬

போட்டெல்லாம்பரங்கியுட சாராயம்வார்த்து
பொருந்தவேமூன்றுநா ளாட்டுஆட்டு
வாட்டெல்லாம்ரவியிலிட்டு வஞ்சுபங்குபண்ணி
அப்பனேஒருபங்கு கல்சத்திலிட்டு
பூட்டெல்லாம்பாலையென்ற சட்டிமூடி
புகழாகமாசத்தால் சீலைசெய்து
மூட்டெல்லாம்அடுப்பேற்றி பீங்கான்வைத்து
முயற்சியாய்திராவகத்தை வாங்கிடாயே. ௧௭௭

வாங்கிட்டதிராவகத்தை சிரக்குலூத்தி
வளமாகரவியிலிட்டு கலசத்திற்போட்டு
தேங்கிட்டதிராவகத்தை வாங்கித்தீரு
சிறப்பாகஐந்துதிர மப்படியேவாங்கு
பாங்கிட்டவளையினல் குப்பிப்பண்ணி
பதலமாய்முடிவைத்துப் பங்கைக்கேளு
தேங்கிட்டபொறையுப்புப் பலமீரேழு
சிறப்பாகதிராவகத்தில் தோய்த்திடாயே. ௧௭௮

தோய்த்துமேதினமேழு ரவியிற்போடு
தொன்மையாம்வெடியுப்புச் சீனக்காரம்
காய்த்துமேகடல்நுரையுஞ் சூடனிந்து
கடுங்காதேபூநீறு காக்கவிரம்
தேய்த்துமேநவாச்சாரந் துருசுவெள்ளை
சிறப்பாகபதினொன்று திராவகத்திலாட்டி
ஆய்துமேயில்லைதட்டி யுலரப்போடு
அரைத்தரைத்துவஞ்சுதிரம் தானுமாட்டே. ௧௭௯

ஆட்டியேகவசிக்க மருந்துகேளு
வகையாகயேறவே னற்கினிஞ்சிதன்னை
காட்டியேசுண்ணாம்பு சவுட்டுமண்ணும்
கலங்காதேதண்ணீரில் கலக்கிக்கொண்டு
ஓட்டியேதீயெரித்து வற்றுமட்டும்
முத்தமனேபுடம்போட்டு தூளாய்பண்ணி
நாட்டியேதிராவகத்தி லரைத்தரைத்து
நலமாகஅஞ்சுபுடம் போட்டுத்தீரே. ௧௮௦

தீரவேபுடம்போட மருந்துதன்னை
திராவகத்திலரைத்துருட்டி மெழுகுபோல
ஆரவேமுன்னுப்பில் கவசங்கட்டி
யரையாதேகலசற்றிற் பூநீறுவைத்து
வூரவேயதின்மேலே யுப்பைவைத்து
வுத்தமனேமேலுமந்தப் பூநீறுபோட்டு
தேரவேசிலம்பிட்டு சீலைச்செய்து
திறமாகக்கெசபுடமாய் போட்டுவாங்கே. ௫௮௧

வாங்கியேவுப்புமணி பதத்தில்மக்காள்
வயிரம்போலுருகியது தங்கம்போலாம்
ஒங்கியேகரியில்வைத்து உருக்கிப்பாரு
உத்தமனே தங்கம்போல் கணவிட்டாடும்
தேக்கியேகரியில்நின்று கம்மித்தானல்
சிறப்பாகமுன்போலே புடத்தைப்போடு
யேங்கியேயொருவருடன் பேசவேண்டாம்
யேகாந்தகடுங்காரச் சன்னத்திலாதே. ௫௮௨

சண்ணமென்றகுளிகைதனில் யூதிமைந்தா
துடியாகப்பலம்நாலு நிறுத்துக்கொண்டு
கன்னமென்றதிராவகத்தி லதனைப்போட்டு
கவ்வவேமத்திச்சு வைத்துக்கொண்டு
பன்னமென்றசூதமது பலந்தானெட்டு
பாக்கியேகல்வத்தில் திராவகத்தைவாரு
சின்னமென்றசாமமொன்று அரைத்துநன்றாய்
சிறப்பாகரவிதனிலே போட்டிடாயே. ௫௮௩

போட்டுவாஅரைத்தரைத்து ரவிதனிலேயப்பா
புகழாகமாசமெல்லா மறவாமல்நீயும்
காட்டுவாசூதமொரு சிவப்பேயாகும்
கண்கொள்ளாவேதையுமாங் கண்டுகொள்ளு
நீட்டவேகுகையிலிட்டு காயவைத்து
நினவாககையிடவே குளுந்துபோகும்
பூட்டுவாவென்னீரை கொப்பரையில்காய்ச்சி
புகழாகதுளிச்சூத மிதுக்குட்போடே ௫௮௪

போட்டேனேகுளுந்தண்ணீர்ப் போலேயாகும்
போக்காகபாலரசத்தின் பரிசைசெம்மை



நாட்டேனேநாலுபலம் நிறுத்துக்கொண்டு
நலமானதங்கமது பலந்தானென்று
பூட்டடேனேகல்வத்தி லிதனைப்போட்டு
புகழானகருந்துளசி சாறுவிட்டு
தூட்டடேனேநாள்மூன்று வரைத்துப்பின்பு
துடியானகெந்தகத்தைச் சேரைபோடே. ௫௮௫

## பாலரசம்.

போட்டரைத்தினமொன்று ரவியில்வைத்து
பொடியாக்கிகாசியென்ற மேருக்கேத்தி
நீட்டரைத்துவாலுகையின் மேலேவைத்து
நினைவாகத்தீயிடுவாய் பன்னிரண்டுசாமம்
கூட்டரைத்துவாறவிட் டெடுத்துப்பாரு
கொடியானமாதளபூ நிறமேயாகும்
தூட்டரைத்துசந்திர னுதயந்துலங்க
துடியானமகிமைசொல்ல முடியாதாமே. ௫௮௬

முடிவானதாலாம்ரசங் குன்றியுண்ண
மூனையானகாயமது சிவந்துபின்னும்
பிடியாதமதயானை பிலத்துக்கொக்கும்
பெண்களுடனுபோகம் பண்ணினக்கால்
துடியாதநூறுபே ரிருக்கவேண்டும்
சுகிலத்தாறாறுகின்ற கேலியாகும்
மடியாதநோயெல்லா மடித்துப்போகும்
மம்மம்மாசெண்பகத்தின் சணப்போலாமே. ௫௮௭

ஆமென்றசெந்தூர மாயிரத்துக்கொன்று
அணைந்திடவேயிருபத்தஞ்சு மாத்துங்காணும்
போமிந்தச்சரக்குகளில் பொட்டுபோட்டால்
பொருப்பாகக்கண்டு மெழுகுமாகும்
தாமிந்தவீரமது மெழுகுமாகும்
தனியானபூரமது மெழுகுமாகும்
காமிந்தரிசியினல் சூதங்கட்டும்
கருந்தானலிங்கமது மெழுகுமாமே. ௫௮௮

மெழுகாகப்பொன்னின் ஆவாரைதன்னை
மேதித்துபிடித்துலர்த்திக் குருவைப்போட்டு
நழுவாகச்சாறுமொரு படிதான்வாங்கி
நல்லிங்கம்மொருபலந்தான் கட்டியாகச்

சமுகாகஅயச்சட்டிக் குள்ளேவைத்து
சுருக்கிடவேலிங்கமது மெழுகுமாகும்
விழுகாகநவலோகம் நூற்றுக்கொன்றிய
வேதிச்சுமாத்தென்ன பன்னிரண்டாமே. ௩௮௯

## சந்திரத்தயிலம்.

ஆமப்பாமகத்தான திராவகத்தைச்சொல்வேன்
அப்பனேயெருக்கோடு குப்பைமேனி
போமப்பாதாழையொடு அருகுவாழை
போராநகருங்காலியோடு துத்திகள்ளி
தாமப்பாதன்னிலையும் நாயுருவிநாணல்
தயங்காதபிரண்டையொடு முடக்கத்தானும்
சாமப்பாபுரசோடு முல்லைகொன்றை
தயங்காதேகாயவைத்து சாம்பலாக்கே. ௩௯௦

காயவைத்துசுட்டுமே சாம்பலாக்கி
கலங்காதேவெவ்வேறாய் தன்னில்கரைத்து
தோயவைத்துமூன்றுநாள் தெளிவைவாங்கி
சுகமாகவடுப்பெரித்து வுப்பாய்க்காச்சி
நேயவைத்தொவ்வொன்றாய்க் காச்சிவேறே
நெகிழாமலொவ்வொன்று பலமுந்தூக்கி
சாயவைத்துமழுவிறொடு ஆனைதானும்
தயங்காதவொட்டையொடு கழுதைதானே. ௩௯௧

தானென்றகுதிரையொடு மாடுயேழும்
தனித்தனியேநீர்வாங்கி யுப்பாய்க்காச்சி
வானென்றரண்டுபலம் தூக்கிக்கொண்டு
வளமானமுயல்புழுக்கை எலிபுழுக்கையோடு
தேனென்றவவ்வாலின் புழுக்கையோடு
சிறப்பாகயிதுமூன்றுஞ் சுட்டுச்சாம்பல்
கானென்றரெண்டுபலங் கடல்தண்ணீர்க்குள்
கலங்காதேதெளியவைத்து வுப்புக்காச்சே. ௩௯௨

காச்சியேபலம்பத்து நிறுத்துக்கொண்டு
கடிதானவீரமது பலமுமூன்று
தாச்சியேதாளகமுப் பலமுமூன்று
தயங்காதசிலையதுவும் பலமுமூன்று



பாச்சியேவெள்ளையது பலமுமூன்று
பரிவானகெந்தகமும் பலமுமூன்று
வாச்சியேதுருசுமது பலமுமூன்று
மகத்தானவேகியது பலமுமாறே. ௩௯௩

ஆறாகசாமமது பலந்தானாறு
அடவாகக்கல்லுப்பு பலந்தானாறு
ஏறாகயிந்துப்பு பலந்தானாறு
யெளிதானவளையலுப்புப் பலந்தானாறு
கூறாகமதியுப்பு பலந்தானாறு
கொடிதானசவுட்டுப்புப் பலந்தானாறு
நேராகசூரியுப்பு பலந்தானாறு
நிலைத்தகெந்தியுப்பதுவும் பலந்தானெட்டே. ௩௯௪

எட்டாதகல்நாறையும் பலந்தானெட்டு
யியலானதுருசுமது பலந்தானெட்டு
கட்டானவெடியுப்புப் பலந்தானொன்று
கலங்காதசீனமது பலமும்நூறு
தெட்டாதபரங்கியுட சாராயம்வார்த்து
சிரப்பாககாரமுள் ளரைத்துலர்த்து
பட்டாதஅஞ்சுபங்கு பண்ணிவைத்து
பக்குவமாயொருபங்கு கலசத்தூட்டே. ௩௯௫

ஊட்டியேமேல்சட்டிக் கவிழ்த்துமூடி
உத்தமனேமாசத்துச் சீலைசெய்து
நீட்டியேயடுப்பேற்றி யெரிநேர்ப்பாக
நிலைத்ததுவும்புகையோடே சிலந்தான்வீழும்
காட்டியேபுகைகண்டால் திராவகமும்நிற்கும்
கலங்காதேமுன்வைத்த சரக்கில்வார்த்து
சூட்டியேரவியில்வைத்து கலசத்திலிட்டு
துடியாகத்தீநீரை வாங்குவாங்கே. ௩௯௬

வாங்குமேஜெந்துதிரம் மூட்டியூட்டி
மரக்காதேஅரக்கான குப்பியிலேவாரு
தேங்குமேமணக்கல்லு ரோமத்திற்
சிறப்பானநவலோக மெல்லாஞ்சாம்பல்
எங்குமேமுகத்திலக்த தாபம்பட்டால்
யொளிதல்லகணங்களெல்லாங் கரைந்துபோமே

தூமமுகம்பார்த்துநில்லு பதராகாதே
   தீவிரமாய்விரகைமெள்ள அடுப்பில்போடே. ௯௯௭

போட்டிட்டுதூரத்தே நின்றுகொள்ளு
   புகைமேலேபட்டுதென்றால் சடம்விரிந்துபோகும்
வாட்டிட்டுசரக்குகளில் தோய்த்துப்போட
   மகத்தானமெழுகாகும் வேதையாகும்
நீட்டிட்டுயேறலென்ற கிளிஞ்சிதன்னை
   நீரோடேவுவருமண்ணும் தண்ணில்போட்டுப்
காட்டிட்டுஅடுப்பேற்றி யெரித்துவாங்கு
   கனப்புடமாய்போட்டெடுத்துத் தூளாய்ப்பண்ணே. ௯௯௮

பண்ணியேதிராவகத்தில் பொடியைப்போட்டு
   பதறாதேமூன்றுதினங் கழித்தல்பின்னை
நண்ணியேதிராவகத்தில் யரைத்துருட்டி
   நலமாகஅனலிலிட்டு புடத்தைப்போடு
கண்ணியேயஞ்சுதினங் திராவகத்திலரைத்து
   கடுகியேபுடமஞ்சும் போட்டுத்தீரு
திண்ணியேபொடிபாக்கி பீங்கானில்வைத்து
   சிறப்பாகச்சாரமென் கட்டிவாங்கே. ௯௯௯

வாங்கியேமேலுமந்தப் பொடியைப்போட்டு
   வாகாகமேல்மூடி சீலைசெய்து
தாங்கியேஅஞ்செருவில் புடத்தைப்போடு
   தயங்காதேயாறவிட் டெடுத்துக்கொண்டு
தூங்கியேதிரியாம லிந்தபாகம்
   துடியாகசெய்திடுவாய் முறைபொய்யாது
ஓங்கியேபொடியெல்லாம் பொடித்துக்கொண்டு
   உத்தமனேமுன்போல காட்டிவையே. ௲00

காட்டிவைத்துமுன்போல காணப்பா
   ஏழுநாள் புடம்போட்டுத்தீரு
ஆட்டிவைத்ததந்தம்போ லிருக்கும்பாரு
   ஆச்சரியமாச்சரத்தின்முடிவு சொல்லப்போகா
மூட்டிவைத்தசாரத்தில் செனிரக்கோடி
   மூதண்டகுருக்கோடி செந்தூரங்கோடி
போட்டுவைத்துறந்ததுபோல் வாதமாச்சு
   போதத்தில்மெத்தவுண்டு புகட்டிஆடே. ௲0௧



## சாரக்கட்டு.

ஆடவேசாரத்தைக் கட்டியாக
   அதின்மேலேசவ்வீரம் பூரஞ்சீனம்
நீட்டவேபுழுகோடு சூதமஞ்சு
   நேரானவாய்நீரி லரைத்துபூசி
கூடவேசுண்ணம்புக் குகையிலிட்டு
   கூசாதேகரியோட்டில் ஊதிவாங்கு
சூடவேநீராகும் பீங்கானில்வைத்து
   துடியாகப்பனியில்வைக்க செயநீராகும். ௲0௨

ஆமின்னஞ்செயநீரால் சொல்லக்கேளு
   ஆச்சரியஞ்சூதத்தை கல்வத்திட்டு
வேமின்னஞ்செயநீரா லரைத்தரைத்து
   வெருளாதேரவிதனிலே காயப்போடு
தாமின்னமிருபதுநா ளரைத்தரைத்து
   சமாத்தானரவிதனிலே காயப்போடு
சேமின்னமெழுச்சட்டை நீக்கிப்போட்டு
   சிவந்திருக்கும்ரசந்தானும் செய்திகேளே. ௲0௩

## கெந்தகத்தயிலம்.

செய்திகேள்தேங்காயின் குடுக்கையிலேவார்த்து
   சிறப்பாகமெழுகடைத்து வைத்துக்கொண்டு
வாதிகேளரவிமதி யிலத்தகடுவாங்கி
   வளமாகரசந்தடவி புடத்தைப்போடு
பாதிகேள்பதினாறு மாற்றுமாகும்
   பருஞ்சினத்தில்வேதையுமாம் பாருபாரு
சோதிகேளிந்தரசம் தின்றால்காயம்
   சுருக்காகசட்டைகக்கிப் பாலையாமே. ௲0௪

ஆமிந்தகெந்தகத்தின் தயிலஞ்சொல்வேன்
   அப்பனேகெந்தகந்தான் பலமும்பத்து
காமின்னங்கத்தாழைக் குள்ளேவைத்து
   கடுக்காவின்பால்நெய்யால் சுத்திபண்ணி
தேமின்னங்கல்வத்தி லிதனைப்போட்டு
   சிறப்பானகுருக்கத்தின் விரையைவாங்கி
ஓமின்னங்கொண்ணையின் விரையினூடே
   உற்பனமாய்ச்சமனுக்கி வெங்காயச்சாறே. ௲0௫

LB 1874
181946

சாற்றில்லரைத்தரைத்து பில்லைதட்டி
சார்வாகபுடத்திலது பலமும்வாங்கு
தேற்றினால்தயிலம்விட்டு கெந்தகத்தை
சிறப்பாகயிருபதுநா ளாட்டுஆட்டு
போற்றினால்துஞ்சுவெள்ளை பலந்தானென்று
பொர்க்கட்டியானதோர் சாரமொன்று
காற்றினால்கட்டியதோ ருப்புவொன்று
கலங்காதேகூட்டிவிட்டு மூன்றுநாளாட்டே. ௪௦௬

## கேசாதிதையிலம்.

ஆட்டியபின்காசியென்ற மேருக்கேற்றி
அப்பனேமூக்கின்வாய் கதப்பைவைத்து
மூட்டியபின்குப்பித்து சட்டியிலேபோடு
மூக்கின்வாய்ப்பிரம்மைவிட்டு மண்ணைக்கொட்டி
கூட்டியபின்படுப்பேற்றிக் குள்ளேவைத்து
சிறப்பாகபீங்காணும் பாணிவைத்து
ஒட்டியபின்சட்டியிலே யெருவைப்போட்டு
உத்தமனேதயிலமெல்லா மெடுத்துவையே. ௪௦௭

தயிலமெல்லாமிறங்கியே வீழதாகும்
தரமானமூன்றுபுடம் போடுபோடு
அகிலமெல்லாமீய்ந்தாலும் தைலமெத்த
ஆச்சரியம்பரிமேலே பூசிக்காச்ச
மகிலமெல்லாமீய்ந்தாலும் தங்கமதுசெம்பாம்
யாசற்றசெம்பொன்னும் நவலோகங்கோடி
மையிலகாய்வருகையிலே செம்பையீயக்
கண்கொள்ளாவேறையுமாங் கண்டுபாரே. ௪௦௮

பாரப்பாகேசரத்தின் தயிலஞ்சொல்வேன்
பரிவானகேசரந்தான் பலமும்நூறு
சேரப்பாயிளவயசு ரோமன்தன்னை
சீக்காயைக்கோதியிட்டு கழுகிப்போட்டு
காரப்பாயெள்ளுப்போல் நறுக்கிக்கொண்டு
கக்காமல்பெண்ணெய்தன்னில் தோய்த்துவாங்கி
சீரப்பாச்சட்டியிலே வறுத்துக்கொண்டு
சிறப்பாகக்கல்வத்தி லிதனைப்போடே. ௪௦௯



## அய்யச்செம்பு.

போடவேகெந்தகந்தான் பலமும்பத்து
பொரிவானதாளகமும் பலமுமஞ்சு
நாடவேசிலையதுவும் பலமுமூன்று
நஞ்சானவீரமது பலமும்ரெண்டு
கூடவேகட்டியதோர் சாரமொன்று
குறிப்பாகக்கட்டியதோர் கல்லுப்பொன்று
தேடவேபரிசியது பலந்தானென்று
சிறப்பாகக்கூடவிட்டுத் திறமாயாட்டே. ௪௧௦

ஆட்டவேயெருக்கம்பால் நாலுசாமம்
அப்பனேமெழுகாகும் பதத்தில்வாங்கி
பூட்டவேதிரவுப்போல் பில்லைதட்டி
போரானபூப்புடத்தில் தயிலம்வாங்கி
நாட்டவேபரணியிலே அடைத்துவைத்து
நலமானஅரப்பொடிதான் பலமுமெட்டு
மூட்டுவதுதயிலத்தில் பிசரிக்கொண்டு
முயர்ச்சியாய்காரமிட்டு உருக்கிடாயே. ௪௧௧

## தாளகச்செம்பு.

உருக்கிடவேயைந்துதிரந் தயிலத்திலேபிசரி
உத்தமனேரவிப்போலே செம்புமாகும்
சொருக்கிடவேமதிதனிலே யன்பதுக்கொன்றீய
துடியாகமாத்தேழு காணுங்காணும்
அருக்கிடவேதங்கமிட்டு உருக்கிக்கொண்டு
ஆதியென்றசூதமிட்டு கேந்தியிட்டு
பருக்கிடவேவாலுகையில் செந்தூரித்தால்
பதினாறுமாற்றாகும் விளங்கும்பாரே. ௪௧௨

பாருமின்னந்தாளகந்தான் செம்புசொல்வேன்
பருநலவுஞ்சுண்ணாம்பு சுட்டுக்கொண்டு
காருமின்னந்தாளகத்தைக் கிளிப்போலகட்டி
கலச்சுன்னங்கீழ்மேலும் மூடிநன்றாய்
வாருமின்னம்வென்னீரை விட்டுநீத்து
மறவாதேயிருபதுக் கொன்றுநீயும்
தேருமின்னங்கூழ்பாண்டங் காடியிலேபோட்டு
திறமாகக்கொதிக்கவிட்டு யிறக்கிடாயே. ௪௧௩

இறக்கியேகல்வத்தில் சேரப்போட்டு
யிதமானகுலாமல்லிச் சாற்றலாட்டி
அறக்கியேஊறவிட்டு அஞ்சுநாளாட்டு
ஆடுதிண்ணைப்பாலைச்சார் நாலுசாமம்
மறுக்கியேசிருக்குட்டித் தக்காளிச்சாறு
மைந்தனேஅவுரியிலைச் சாற்றிலாட்டு
நறுக்கியேயெருக்கினுட பழுப்புச்சாறு
நலமானஅகத்தியுட பழுப்புச்சாறே. ௪௧௪

பழுப்பானகெருடனுட கிழங்குச்சாறு
பரிவானயெருக்கினுட கிழங்குச்சாறு
கொழுப்பானவெள்ளாட்டு வுதிரத்தோடு
கூரானமுயல்கோழி லுதிரத்தோடும்
செழுப்பானவெள்ளைமந் தாரப்பூச்சாறு
திறமானயிந்திரமாங் கோபப்பூச்சி
கழுப்பானபூணகம் நூறுபோட்டு
கலக்கரைத்து யொவ்வொருநா ளுலரப்போடே. ௪௧௫

உலர்ந்தபின்புதுரிசுபலம் நாலுபோட்டு
உத்தமனேவெண்காரம் பலந்தான்மூன்று
அலர்ந்தபின்புவெடியுப்புப் பலந்தான்ரெண்டு
அப்பனேவீரமது பலந்தானொன்று
நலர்ந்தபின்புகட்டியதோர் கல்லுப்பொன்று
நவாச்சாரங்கட்டியது பலந்தானொன்று
குலந்தனக்குகோடாலி குடோரியொன்று
கூசாதேகூடவிட்டு வரைத்திடாயே. ௪௧௬

அரைத்திடவேயெலியாலம் பாலாலாட்டு
அப்பனேமூன்றுநாள் அரைத்தபின்பு
நிரைத்திடவேகெல்லுப்போல் வில்லைகட்டி
நேராகசரவுலையி லூதுஊது
திரைத்திடவேஉருக்கியது சத்தாய்வீழும்
சிதராமல்யெடுத்தெல்லாங் கறட்டைதள்ளு
புரைத்திடவேபின்பொருக்கா லுருக்கிப்பாரு
பொன்போலேசத்தெல்லா மெடுத்துக்கொள்ளே. ௪௧௭

கொள்ளவேகுகையில்வைத்துக் காரமிட்டு
கூசாதேஉருக்கியெலா மணியாய்வாங்கி



விள்ளவேநவலோகம் நூறுக்கொன்று
மேவியதோர்காசிடைதான் சத்தேயீய
துள்ளவேபதினாறு மாற்றுமாகும்
துடியானசத்திலே கிண்ணிவார்த்து
அள்ளவேசீலைசெய்து வாலுகையில்வைத்து
ஆகியதோர்சூதம்விட்டு கொதிக்கவையே. ௪௧௮

கொதிக்கையிலே கருமத்தஞ் சாறுவாறு
கூசாதேவெண்ணெயைப்போ லாகமட்டும்
விதிக்கையிலேவெண்ணெயெல்லாம் வழித்துக்கொண்டு
மேலானகுளுந்தண்ணீர் போட்டுநன்றாய்
மதிக்கையிலேபலம்போலே சிவத்தைபண்ணு
மாசற்றவாரையிலே கவசங்கட்டி
வதிக்கையிலேயிரஞ்சு புடத்தில்போட்டு
வாகானமூவேழு மாற்றுதானே. ௪௧௯

தானென்றமணியாலே செந்தூரம்பண்ணு
சமத்தாககருப்பண்ணு களங்குபண்ணு
வானென்றவெளிக்கடக்க காயசித்திபண்ணு
மாசற்றயோகசித்தி கெவுனசித்திபண்ணு
தேனென்றஅமுதமங்கே சித்திபண்ணு
செகச்சாலவார்த்தையெல்லாஞ் சகம்போலெண்ணு
கோனென்றகுருதேடி தொண்டுபண்ணு
கூப்பிட்டாலேனென்பா ராயிதானே. ௪௨௦

## சாதிலிங்கவைப்பு.

தானென்றசாதிலிங்கம் வைப்புக்கேளு
சாற்றரியசூதமது பலந்தானாறு
தேனென்றகெந்தகந்தான் இருபத்தஞ்சு
சேரப்பா[illegible]கத்தை வேட்டிவிட்டு
வானென்றதணலில்வைத்து உருக்கிக்கொண்டு
வரிசையாய்சூதத்தை யதிலேகொண்டு
கானென்றஅயத்துடுப்பால் கிண்டிக்கிண்ட
கருப்பாகத்தூள்போல வாகும்பாரே. ௪௨௧

ஆகும்பாகெந்தகத்தில் நாகமொன்று
அறையாதேவெடியுப்புப் பொடித்துப்போடு

வாகுமப்போசெம்பாலே விட்டுப்பூப்போல்
வகையாகஅதுக்குள்ளே தூளைப்போட்டு
ஏகுமப்போஅரைவாசி மட்டும்போடு
எளிதானவாலுகையின் மேலேவைத்து
போகுமப்போதீயெரிப்பா யெட்டுநாள்தான்
புகழாகப்பதங்கிச் சங்கிலியுமாமே. ௪௨௨

ஆமப்பாபதங்கிச்சு பவழம்போலே
அரையாதேபேலநின் றதுதான்லிங்கம்
போமப்பாயாண்டமது செம்புக்கொட்டி
புகழாகஅடியில்நின்ற தீயுமுருகலாச்சு
காமப்பாநடுவில்நின்ற கார்முசியுமாச்சு
கட்டியிதைமெழுகுசெய்யில் வேதையாச்சு
சேமப்பாபாஷாணம் முப்பத்திரண்டு
சிறப்பானவைப்புக்கு நாவுமாச்சே. ௪௨௩

## செப்புதொட்டி வைப்பு.

வைப்பானநாகமென்ற பாஷாணத்தை
வகையாகச்சொல்லுகிறேன் வேதையாக
மெய்ப்பானநாகமது பலந்தான்பத்து
விரனியேகல்லுப்பை நெய்சுத்திபண்ணி
நைப்பானகட்டிச்சு புளியிலைப்போலுருக்க
நயமானகூத்தனென்ற யிலைபரைத்து
கைப்பானகட்டுக்கு கவசங்கட்டி
கடுகிடஞ்சுயெருதனிலே புடத்தைப்போடே. ௪௨௪

போட்டபின்புயிரஞ்சி புடந்தானப்பா
புகழாகஅயச்சட்டி தணிவும்மாக்கி
நீட்டபின்புகுமரிவேற் பொடியாய்நறுக்கி
தினவாகக்கூடவிட்டு அயத்தால்கிண்டு
சாட்டபின்புபன்னிரண்டு சாமந்தானும்
சத்தானம்வேர்போட்டு கிண்டுகிண்ட
மாட்டபின்புமஞ்சள்நிறம் பஸ்பமாகும்
மைந்தனேயிதைநிறுத்துக் கல்வத்தில்போடே. ௪௨௫

போடவேநாகமென்ற தூள்தான்பத்து
பொன்னனைகூதமது பலந்தான்பத்து
நீட்வேதுரிசியது பலந்தானஞ்சி
நேர்ப்பானகூடனது பலந்தானஞ்சு



வாட்டவேவெண்காரம் பலமுமஞ்சு
வரிசையாய்கெந்தியது பலமுமஞ்சு
தேடவேவெள்ளையது பலமுமூன்று
சிறப்பானவீரமது பலமுமூன்றே. ௪௨௬

## தாரமுநிர்சாரம்.

மூனேடுதாளகந்தான் பலமுமூன்று
முபர்ச்சிபாம்சிலைபது பலமுமூன்று
தூனேடுவிதுவல்லாங் கலவத்திட்டு
தூடியாமல்பொடிபண்ணி சூட்சங்கேளு
காரேடுகொம்மட்டி மாதுளையின்பழச்சார்
கல்க்கரைத்துயெட்டுநாள் ரவியில்வைத்து
பூனேடுபேர்ப்பண்ணி குப்பிக்கேற்றி
புகழாகவாலுகையில் வைத்திடாயே. ௪௨௭

வைத்திட்டுதீயெரிப்பாய் பன்னிரண்டுசாமம்
வாகாககமலம்போல் தீயைமூட்டு
சைத்திட்டுஆறவிட்டு மூன்றுநாளாய்ப்போடு
சாதமாயாறியபின் னெடுத்துடைத்துப்பாரு
மொய்த்திட்டுமொம்பதங்கிப் போடுபோடு
மூர்ச்சனும்பாஷாண மிந்திரனும்
கைத்திட்டவிபரபக்கம் சோரமென்ற
காணப்பாஅடிச்சிலையின் நாகமாமே. ௪௨௮

## கோசபாஷாணம்.

ஆமென்றபாஷாண மூன்றுதானும்
மன்றெரித்தார்மன்மதனை யீசன்தானும்
ஓமென்றநெத்திக்கண் சுவாலைக்கொக்கு
முத்தமனேசாகருக்கு காலன்காலன்
போமென்றவெகுதூரம் யோட்டியோடு
போனபின் [illegible]ப்பகமாம் வருஷமப்பா
வேமென்றகாலனிட கர்ப்பமப்பா
விரைந்துண்ணகாயசித்தி மண்டலத்திலாமே. ௪௨௯

## இரசகபாஷாணம்.

சித்தியாஞ்சூதமென்ற பாஷாணவைப்பு
செப்பரிதுசித்தரிடந் தானுமில்லை

பத்தியாம்பாஷாணந் தானுமென்பார்
பரியாசபேச்சாச்சு வாதம்பேச்சு
முத்தியாஞ்சென்மமே செம்பிலீய
முந்நூற்றுக்கொன்றிடவே பத்துமாற்று
வெத்தியாய்ப்பாஷாணம் பச்சைதன்னில்
வேதைநூலாராய்ந்து சொன்னேன்காணே. ௪௫௦

காணப்பாயெந்நூலி லொன்றுதப்பில்லை
கடைக்கெட்டபேர்களென்று சொல்லிக்காட்டு
பூணப்பாகைதப்பிப் போக்குதப்பும்
புத்தியுண்டாய்செய்திடவே யென்றுபொய்யா
வீணப்பாஒருதரந்தான் தப்பிற்றானால்
மீளாவேமூன்றுதர மலைஞ்சுபாரு
தூணப்பாதுரும்பான வாறுபோல்சொல்
முறைகள்தப்பாதே சூட்டிப்பாரே. ௪௫௧

சூட்டியதோரெந்நூலில் பாஷாணங்கள்
சுளுகாகும்வேதைக்குப் பச்சைதன்னில்
பூட்டியதோர்பூட்டென்ன பாஷாணத்தில்
புரச்சித்துக்குள்வேதை சொன்னேனில்லை
காட்டியதோர்கொடித்துடையில் புண்தனக்கு
கண்மறையச்சீலையினால் மூடிப்போனால்
மூட்டியதோர்மூட்டென்ன யிதுதான்மைந்தா
முட்டாளேயிம்மட்டு மறிந்துஆடே. ௪௫௨

ஆடவேசூதமது பலந்தான்பத்து
அந்திடைக்குவெள்ளையென்ற பாஷாணந்தான்
நிட்டவேசெந்தியது பலமுமஞ்சு
நிலையானவெடியுப்புப் பலமுமூன்று
வாடவேதுரிசியது பலமூன்று
மகத்தானதாடகமும் பலமும்ரெண்டு
மூடவேசிலையது மண்டலமுமொன்று
முயற்சியாய்கல்வத்திற் பொடியாய்பண்ணே. ௪௫௩

பொடிபண்ணிகைமுறையில் முருங்கைச்சாற்றில்
போக்கோடேயேழுநா ளரைத்துமைபோல்
முடிபண்ணிரவியிலிட்டு மேருக்கேத்தி
முயற்சியாய்வாலுகையின் மேலேவைத்து



அடிபண்ணியெரிப்பாய் பன்னிரண்டுசாமம்
ஆறவிட்டுராவொரு பகலிலபோட்டு
கெடிபண்ணிபன்னிரண்டு சாமமானால்
கெட்டியாய்குப்பியைத்தா னுடைத்துப்பாரே. ௪௫௪

உடைத்திடவேமேலோடுபதங் கழிச்சுநின்றால்
உத்தமனேசூதமென்ற பாஷாணமாச்சு
அடைத்திடவேநடுவில்நின்ற பாஷாணந்தான்
அப்பனேநீலமென்ற மேருமாச்சு
கடைத்திடவேஅடியில்நின்றால் காபாஷாணமாச்சு
காணித்துகரைகண்டு சொல்லப்போகா
நடைத்திடவே சிவகாமிசொல்லைக்கேட்டு
நாதாக்கள்பதறிமயச் சொன்னேன்பாரே. ௪௫௫

சொன்னதொருசாத்திரத்தின் பலன்களெல்லாம்
சொற்பெரியமணித்தாயுக் குருவுமாச்சு
பண்ணதொருமனதிலுள்ள கருவையெல்லாம்
பாடினேன்வெட்டவெளி யாகத்தானும்
மன்னதொருநாதாக்கள் நூலைப்பார்த்து
பவுனமாய்வைத்ததெல்லாம் வெளியாய்ப்போட்டேன்
இன்னதொருசாத்திரத்தைக் குகைக்குள்வைத்து
யிழுக்காகும்நூல்களையே வெளிவைத்தாரே. ௪௫௬

வைத்ததொருசாத்திரத்தில் வழக்கந்தன்னை
வகையாகச்சொல்லாமல் கருமறைத்துபோட்டார்
பெய்த்ததொருவீரமே போக்குதன்னை
வெளியாகச்சொல்லாமல் சூத்திரமாய்ச்சொன்னார்
நைத்ததொருசரக்கான வைப்புத்தன்னை
நலமாகவொத்துவிட்டால் வாதமெங்கேசெய்வார்
பைத்ததொருவாதத்துக் காதியென்னை
பாங்கான[illegible]லையொடு வீரந்தானே. ௪௫௭

தானென்றவழலையந்த சுன்னமானால்
சரக்கெல்லாங்கட்டுண்டு சுன்னமாகும்
வேனென்றமகாவீரம் வாச்சுதானால்
வேதையென்றசொல்லுக்கு வுறுதியாகும்
கானென்றகல்லுப்பு கரியில்நின்றுடுங்
காடானசரக்கெல்லா முலரப்போடும்

வேனென்றமகாவீர மாகாவிட்டால்
வேதையென்றசொல்லெல்லாம் விழலாய்ப்போமே. ௪௩௮

## குங்குமப்பாஷாணம்.

போனென்றகுங்கும பாஷாணவைப்பு
பூட்டுகிறேன்புத்தியில்லாப் புலவருக்குங்காண
ஆமென்றசூத பாஷாணம்பத்து
அழுக்கானகுதிரைபலம் பாஷாணம்பத்து
வேமென்றவெண்காரப் பொறிபலந்தான்
வெளுப்பானசீனத்தின் பொரிப்பலந்தானஞ்சு
கடிதானகெந்தகந்தான் பலமுமஞ்சே. ௪௩௯

பலமானதாளகந்தான் சிலையுநாற்பலந்தான்
பாங்காகநிறுத்தல்லோ கல்வத்திலிட்டு
குலமாகஎலுமிச்சம் பழச்சார்விட்டு
குமட்டியரைத்தேழுநா ளாறப்போட்டு
தலமாகுங்காசியென்ற மேருக்கேத்தி
தளராமல்வாலுகையின் மேலேவைத்து
நிலமாகும்பன்னிரண்டு சாமந்தீமூட்டு
நிசமாகும்பதம்பார்த்து வாறப்போடே. ௪௪௦

ஆறவிட்டுயுடைத்துப்பார் கட்டியாகும்
அப்பனேகுங்குமத்தின் நிறமதாகும்
நீறவிட்டுசரக்குக் காலனாகும்
நெடுங்கானமிருகவென்றால் வீசமிடையுண்ணு
தேறவிட்டுமண்டலத்தில் சடலமிருக்குமானும்
சித்தர்கள்தானுண்டல்லோ காயத்துமானார்
வீரவிட்டுமெழுகாகப் பண்ணிக்கொண்டு
விரவியதோர்சூதத்தில் பொட்டுப்போடே. ௪௪௧

போடவேயானையைபோல் வீரிட்டுசாகும்
போக்கோடே தங்கமிடுநாகமிட்டு
ஆடவேகெந்தியிட்டு செந்தூரத்தால்
ஆயிரத்துக்கொன்றிடவே ஐயந்தாங்கும்
வாடவேமயங்காமல் சரக்குவைப்பு
வரிசையாய்வொவ்வொன்றாய்ப் பார்த்துத்தேறு
தேடவேகாயத்தை சித்திபண்ணு
செகசாலதுன்மார்க்கச் சட்டைபோக்கே. ௪௪௨



போக்கானவுண்மையென்ற பாஷாணத்தை
பொல்லாதவாதிக்கே காட்டவேண்டாம்
தேக்கானயெத்துனல் யெடுத்துக்கேட்டால்
செகசாலமயக்கத்தில் சிக்கிகொண்டு
நோக்கானபெண்ணாசை தனிலுழன்று
நோயோடேகுடிகெடுத்து லுனுக்கமாகித்
தாக்கானலோகத்தோர் குடிகெடுத்துச்
சங்கியாதேயிரு பாஷாணந்தானே. ௪௪௩

தானென்றபெண்ணாசை யற்றுதானால்
சண்டாளகோபத்தை நிறுத்தமாட்டார்
ஊனென்றசுகத்தையெல்லா மிச்சித்துக்கொண்டு
உத்துநின்றசையோகத் தோடேகேட்டு
வானென்றபொருள்தேட மாட்டாரப்பா
மரணமப்பாமகத்தான அறுதலத்தில்
பானென்றஞானமெள்ளம் மூண்டுக்கொண்டு
பதறாமலிருந்தறியார் மூடர்தானே. ௪௪௪

தானென்றவெடியுப்பு பலந்தானாறு
சாதகமாய்பாண்டத்தில் போட்டுபின்பு
காயென்றகாடியொடு யெலுமிச்சம்பழச்சார்
கலந்துகொண்டுசமனாக உப்புக்குநாலு
பானென்றஅய்ந்துதிரம் காய்ச்சிக் காய்ச்சி
பக்குவமாய்வடிகட்டி பதத்தில்காச்சி
வானென்றஅய்ந்துதிரம் காய்ச்சிக்கொண்டு
மார்க்கமாரவியுலர்த்திப் பிரம்பாய்வையே. ௪௪௫

பிரம்பானபூநீறு கலந்தானாறு
புளியானகாடியொடு யெலுமிச்சம்பழச்சார்
திரமானதெளிவிறுத்து வுப்புக்காச்சி
சேர்த்துநின்றவைப்பதனை முன்போலக்கரைத்து
அரம்பானயொருநிறைச்கு நாலுநிறைநிறுத்து
அசட்டையாய்விடுகாதே அஞ்சுதிரங்காச்சி
உரம்பானபழச்சாறு புளிச்சக்காடி
உகந்துநாறு பலந்தான்வாரே. ௪௪௬

வார்த்தப்பாவெடியுப்பு காச்சிக்கொண்டு
வாகாகவஞ்சுதிரங் கரைத்துமேதான்

கார்த்தப்பாரூதமது சமன்தான்கொண்டு
   கட்டியதோர்வெடியுப்புக் கெந்திகூட்டி
சேர்த்தப்பாசாரமது பலந்தானைந்து
   சிறப்பானசீனமது பலந்தான்மூன்று
கோர்த்தப்பாபொரிகாரஞ் சிலையுங்கூட்டக்
   குறிப்பானகுங்கும பாஷாணமாச்சே. ௪௪௭

## இங்கித்தயிலம்.

ஆச்சென்றகொடுஞ்சிலந்தி தயிலஞ்சொல்லுவோமேன்
   ஆதளையின்பாலுவை புரசுரெட்டி
நீச்சென்றகஞ்சாவுங் காந்தைபுங்கு
   நெடிசாரூபூவகத்தி அழிஞ்சல்புனனை
வாச்சென்றதாளியொடு வாளம்வேம்பு
   வகையானநீர்வெட்டி கழுதைமுள்ளி
காச்சென்றபதினஞ்சும் விரையைக்கட்டி
   கணக்காகப்படியொன்று யளந்துபோடே. ௪௪௮

போட்டெல்லாங்கெருடனுடக் கிழங்குசாற்றில்
   போரானயூரவைத்து மூன்றுநாள்தான்
ஆட்டெல்லாங்கல்வத்தி லிட்டுஆட்டு
   ஆதில்போடமருந்தினந்தா னறையக்கேளு
நீட்டெல்லாம்மரிதாரம் சிறப்புத்தேத்தி
   கோரானவெடியுப்புச் சீனச்சூடன்
ஆட்டெல்லாஞ்சாம்பிராணி சாரம்வீரம்
   ஆழ்ழந்தகருங்குங்கிலியும் பூரீர்தானே. ௪௪௯

தானென்றதுரிசியொடு அன்னபேதி
   சாதகமாய்வகைக்குரெண்டு பலந்தான்போடு
கானென்றமுன்மருந்தோ டொக்கப்போடு
   கலந்தரைப்பால்கெருடனுட கிழங்குச்சாற்றல்
தானென்றபெட்டுநாள் மெழுகுபோலாட்டி
   சாதகமாய்நெல்லுப்போல் பில்லைப்பண்ணி
பானென்றபூப்புடத்தில் தயிலம்வாங்கி
   பாற்சியேபரணிதன்னி லடைத்திடாயே. ௪௫௰

அடைத்திட்டதயிலத்தில் துருசுவெள்ளை
   அப்பனேபலமொன்று நிறுத்துக்கொண்டு
கிடைத்திட்டதயிலத்தில் வாச்சுதப்பா
   கெடியானலிங்கத்தில் சுருக்குப்போட



முடைத்திட்டநவலோகந் தன்னிலீய
   முசியாதேமாயிரத்துக் கொன்றேஓடும்
படைத்திட்டமாற்றதுவுட் பதினாறுகும்
   பரிசினத்தில்வேதையுண்டு கண்டுபாரே. ௪௫௧

பானென்றரூதமது பலந்தானெட்டு
   பாச்சியல்லோகல்வத்தி லிட்டுநீயும்
ஆமென்றதயிலமது ஒருதுளிக்குத்தி
   அரைத்திட்டுவெண்ணைபோ லாகும்பாரு
கானென்றகிளிகட்டிச் சூடந்தீயில்
   கலங்காதேயிருநடிபை வாட்டிப்பின்பு
சீனென்றநாண்டியிலே யெண்ணெய்குத்தி
   திறமாகவுருக்கிடவே மணியுமாமே. ௪௫௨

ஆமிந்தமனிதனுக்கு சாரணையேசெய்யி
   லண்டாண்டபதமளவும் போகலாகும்
போமிந்தமணியெடுத்து வாயில்வைத்துப்
   புகழாகஉமிநின்ற உள்ளேகொள்ள
சாமிந்தசடந்தானும் சட்டைகக்கி
   சந்திரர்கள்சூரியர்கள் போலாம்தேகம்
நாமிந்தபடியுண்டோம் பாட்டருண்டா
   நாதாக்களிப்படியே யுண்டார்பாரே. ௪௫௩

உண்டிட்டமனிதனுக்கு நாலத்தொன்று
   உத்தமனே தங்கமிட்டு நாகமிட்டு
பண்டிட்டகாரமிட்டு உருக்கிக்கொண்டு
   பாச்சித்துக்குள்சரியா கெந்திகூட்டி
கண்டிட்டகல்வத்தில் பொடித்துக்கொண்டு
   கலங்காதேகுதாமல்லி சாற்றாலாட்டி
மண்டிட்டமூன்றுநா ளரைத்தபின்பு
   மயங்காதேகாசயென்ற மேருக்கேத்தே. ௪௫௪

ஏத்தியல்லோமுத்தியுண்ணு மூன்றுநாள்தான்
   யிதமாகயாறவிட் டெடுத்துப்பாரு
போத்தியல்லோஅருணனைப்போல் சிவந்துநிற்கும்
   பொலிவாகப்பணவிடைதான் தேனிலுண்ணு
சாத்தியதோர்மண்டலந்தான் தப்பாதுண்ண
   சட்டைகக்கிசந்திரன்போல் முகமுமாகும்

அத்தியல்லோகெவுனவெளிச் சுருக்குமெத்த
ஆச்சரியஞ்சிங்கியென்ற தயிலந்தானே. ௪௫௫

தானென்றதுவாதேசி தயிலஞ்சொல்வேன்
சாதகமாய்செங்கொட்டை நீர்வெட்டிமுத்து
தேனென்றகுருக்கத்தி வாலுளுவைவித்து
சிறப்பானகும்மட்டி வித்திஞேடு
கானென்றபெறுங்கடா மணக்கண்வித்து
காக்குரட்டான்வித்துஞேடு நேர்வாளவித்து
பானென்றபுல்லா மணக்கின்வித்து
பாதிகுன்றுமணி யிளஞ்சிவித்தே. ௪௫௬

வித்தோடுபிராயமணி பன்னிரண்டுங்கேளு
விளங்கியதோர்படியொன்று யளந்துபோட்டு
புத்தோடுசெங்காலி கிழங்குச்சாற்றில்
பொலிவாகயூறவைத்து மூன்றுநாள்தான்
பத்தோடுகல்வத்தில் மைபோலாட்டி
பகரிந்தகெந்தகமும் சிலையிஞேடு
கொத்தோடுசவ்வீரங் கெவுரிவெள்ளை
கொடியதொரு பூநீருசவுட்டுவுப்பே. ௪௫௭

உப்பானகல்லுப்பு வெடியுப்புச்சீனம்
உத்தமனேதுருசோடு சூடனிந்து
வெப்பானமுன்மருந்தோ டொக்கப்போட்டு
விரவியரையெட்டுநாள் கிழங்குச்சாற்றில்
வப்பானதெல்லுபோ லுண்டைபண்ணி
வாதியாம்பூப்புடத்தில் தயிலம்வாங்கே
செப்பானததிலிட்டு துருசுரீரிட்டு
சீரானகழில்சுருக்குப் போடுபோடே. ௪௫௮

சுருக்கிட்டுயெதுவென்றால் லிங்கம்வெள்ளை
துடியானமால்தேவி சிலையும்வீரம்
முருக்கிடவேகெவுரியொடு கெந்திச்சூதம்
முனையானநாகமொடு காரீயவங்கம்
நருக்கிடவேதுரிசியொடு செம்புச்சாரம்
நலமானசிலையொடு மெழுகுமாகும்
குருக்கிடுவதொவ்வொன்றில் வேதைகோடி
குறையில்லைகணக்கில்லை கண்டுபாரே. ௪௫௯



பாரப்பாதிசைமுகமாங் குருவிநாட்டம்
பணபேதிசினபேதி சத்தப்பேதி
தாரப்பாதூமமொடு சிந்தாணப்பேதி
தயங்காதபரிசமொடு சினபேதி
சேரப்பாதீபமொடு சுட்டுமாகும்
சித்தருட நூல்களிலே யில்லையில்லை
ஆரப்பாயிதின்பெருமை யறியப்போரார்
அரன்வாரந்தானதான மிந்தவாறே. ௪௬௦

வாறானபூனீறு பதக்குவாரி
மாட்டிதுக்குளெட்டிலொன்று கல்லுப்புச்சுன்னம்
பேரானகழுதையுட மூத்திரத்தில்
பிசந்துநின்றாய்கலக்கிவைத்து மூன்றுநாள்தான்
தாரானநாலாம்நாள் தெளிவைவாங்கி
தயங்காதேகல்லுப்புச் சுன்னம்ரெண்டு
ஆரானவகைக்கிரண்டு பலமேதாக்கி
அப்பனெபொடிபண்ணி தெளிவில்போடே. ௪௬௧

போட்டுமேலடுப்பேற்றி சரித்துவப்பாய்
போனபதத்திலெடுத்துக் கல்வத்திட்டு
மூட்டுமேமூன்றுநா ளரைத்துநீதான்
முசியாமலவணம்போ லிருக்கும்பின்பு
ஆட்டுமேஅண்டநீர் வர்க்கம்பாலும்
அதட்டிநன்றாய்வைத்து தெளிவித்தபின்பு
நீட்டுமோவிதனிலே காயப்போட்டு
செப்பில்வைத்துசிலைசெய்து புடத்தில்போடே. ௪௬௨

புடப்போடுயஞ்செருவில் யாறவிட்டு
வாங்கிபோனமுன்போலே யரைத்துகட்டு
கடப்போடுமூன்றுதிரம் போட்டுத்தீரு
கசகாமல்வெ[illegible]யென்ற குருத்தான்சூதந்
திடம்போடுசெப்புக்கு ளெடுத்துவைத்து
திறமானகுருத்தாலுஞ் சூதத்தோடு
அடப்போடுபதத்தெடுத்து யானநீர்விட்டு
அதட்டிநன்றாய்கலக்கிவைத்து தெளிவைவாங்கே. ௪௬௩

வாங்கியேயண்டோடு சுன்னம்பண்ணி
மளமாகபலம்ரெண்டு கூடப்போட்டு

தேங்கியேயிந்துப்பு பச்சைபூரம்
சிறக்கவேரெண்டுபலங் கல்வத்திட்டு
தாங்கியேயரைத்துமைபோல் தெளிவிலிட்டு
சார்வாகயடுப்பேற்றி யெரித்தூவுப்பாய்
பாங்கியேகல்வத்தி லிட்டுஆட்டி
பதராமல்முன்போலே வரைத்துக்கட்டே. ௪௬௪

கட்டியேமுன்புடந்தான் தீர்ந்தபின்பு
கசகாமல்வெவ்வேறே யெடுத்துவைத்து
தெட்டியேபூரமென்ற குருத்தானஞ்சு
செகமெல்லாமெச்சுமிந்த குருத்தானப்பா
தட்டியேபெருக்கோடு மூலஞ்சுட்டு
தயங்காமல்பத்தெடுத்து குதிரைநீரில்
மட்டியேயிருதூணி நீரில்போட்டு
மறவாமல்மூன்றுநாள் கலக்கிவையே. ௪௬௫

வைத்தபின்புதெளிவிருத்து பாண்டத்திலிட்டு
மறவாமல்சலகுநீரிரண்டு பலம்போட்டு
நைத்தபின்புகடல்நுரையும் சாரம்ரெண்டு
நலமாகப்பலம்ரெண்டு கலவத்திட்டு
கைத்தபின்புபொடிபண்ணி குழம்பிப்போட்டு
கலங்காதேவுப்பான பதத்தில்வாங்கி
மொய்த்தபின்புமுன்னீரா லரைத்துக்கூட்டி
மூன்றுபுடம்போட்டெடுத்துப் பதனமாய்ப்பண்ணே. ௪௬௬

பண்ணியபின்சாரமென்ற குருதானுச்சு
பகரானசதிர்க்கள்ளி சுட்டசாம்பல்
நண்ணியபின் பதத்தெடுத்து பாண்டத்திட்டு
நயமானவெள்ளாட்டு யமுரிதானுங்
கண்ணியபின்யிருதூணி யமுரிவிட்டுக்
கலக்கிவைத்துதெளிவிறுத்துக் கிளிஞ்சில்சுன்னம்
எண்ணியபின்ரெண்டுபலங் கூடவிட்டு
இதமாகவடுப்பேற்றி யெரித்திடாயே. ௪௬௭

எரித்திடவேகுரிகெபது குழம்புபாவாய்
வெளிதானவெண்காரந் துருசுரெண்டும்
முரித்திடவேபொடியாக்கி குழப்பிவிட்டு
முதமாகக்காய்ச்சியதை யுப்பாய்ப்பண்ணி



தரித்திடவேமுன்போலே புடத்தைபோடு
தயங்காதேயெரித்துவைத்து மாட்டக்கேளு
குரித்திடவேதுரிசியென்ற குருத்தானுச்சு
கொடுவேலிநீயுமதைச் சாம்பலாக்கே. ௪௬௮

சாம்பலைத்தான்பதத்தெடுத்து பாண்டத்திட்டு
சார்வானபசுவினுட கோமியத்திலிட்டு
வாம்பலைத்தான்கரைத்துவைத்து மூன்றுநாள்தான்
வகையாகதெளிவிறுத்து நத்தைச்சுன்னம்
கூம்பலைந்தான்ரெண்டுபலங் கூடப்போட்டு
குழம்பானபக்குவத்தில் வெடியுப்புப்போட்டு
வேம்பலைத்தான்வீரமது பலமுப்ரெண்டு
விரவிநன்றாயப்பொடி பண்ணி குழம்பில்போடே. ௪௬௯

போட்டபின்புவடுப்பேற்றி யெரிக்கவுப்பாம்
புகழாகமுன்னீரா லரைத்துக்கூட்டு
நாட்டபின்புமுன்போலே மூன்றுபுடம்போட்டு
நலமாகயெடுத்துமே செப்புக்குள்ளே
ஆட்டபின்புவீரமென்ற குருத்தானுச்சு
அம்மம்மாயிதின்வேகம் யண்டாண்டமீறும்
நாட்டபின்புபொடிக்கள்ளி சாம்பலாக்கி
நலமாகமனுஷருட யமுரியிலேபோடே. ௪௭௦

போட்டுமேயரைத்துநன்றாய் கலக்கிவைத்து
பேராகதெளிவிறுத்து வடுப்பிலேற்றி
வாட்டுமேநகாரமாம் மண்டுசுட்டு
வகையாகசுண்ணாம்பு ரெண்டுபலம்போட்டு
தீட்டுமேபத்துவிசை தீட்சைசெய்து
திறமாகவெதுப்பிட்டு யெடுத்துக்கொண்டு
நோட்டுமேகுழம்பான பதத்தில்வாங்கி
சிறப்பானவெள்ளையுப்பை வாங்குவாங்கே. ௪௭௧

வாங்கியேமுன்போல யரைத்துக்கூட்டி
வகையாகமூன்றுபுடம் போட்டுத்தீர்த்து
தாங்கியேசெப்புக்கு ளெடுத்துவைத்து
சாதனைத்தான்கொண்டுவந்து கிழலுலர்த்தி
பாங்கியேசுட்டுநன்றாய் சாம்பலாக்கி
பதராமல்பாண்டத்தில் போட்டுமேயும்

தேங்கியேயிருதூணி யொட்டைநீர்விட்டு
சிக்கினவேசலக்கியதின் தினமும்வாங்கே. ௪௭௨

வாங்கியேவூமையென்ற சிப்பிதன்னை
வகையாகசுத்திபண்ணி சுண்ணம்பாக்கி
தேங்கியேரெண்டுபலம் நிறுத்துக்கொண்டு
சிறப்பாகவடுப்பேற்றிக் குழம்பாய்க்காச்சி
ஓங்கியேதாளகமும் வளையிலுப்பு.
மொக்கவேபொடிபண்ணி ரெண்டுபலமும்போட்டு
ஏங்கியேவுப்பாக்கி காய்ச்சிக்கொண்டு
எடுத்தரைத்துமுன்போலே புடத்தைப்போடே. ௪௭௩

போடென்றவுமிரிசுட்டு சாம்பலாக்கிப்
புகழாகபதறுமல் பாண்டத்திற்போடு
நாடென்றகடலில்நிற்குஞ் சிவந்திருந்தசோதி
நலமாகவெடுத்துவந்து பாண்டத்துள்ளே
ஊடென்றவுப்பிடவுந் தண்ணீராகும்
உத்தமனேயிருதூணி நீரைவிட்டு
ஆடென்றமூன்றுநாள் கழித்தபின்பு
அன்பானதெளிவிறுத்து பாண்டத்தில்வாங்கே. ௪௭௪

வாக்குமப்போவடுப்பேற்றி யெரிக்கும்போது
வளமானநண்டோடு சுன்னம்பண்ணி
தாங்குமப்போரெண்டுபலங் கூடப்போட்டு
தயங்காதேவடுப்பேற்றி யெத்தாயானால்
ஒக்குமப்போகுழம்பான பதத்தில்பார்த்து
உறுதிநின்றசரக்கையினிச் சொல்லக்கேளு
தூக்குமப்போசூதம்ரெண்டு பலத்தைப்போட்டு
துடியானகெந்தியுப்பு ரெண்டுபலம்போடே. ௪௭௫

போட்டெல்லாமடுப்பேற்றி வுப்பாய்க்காச்சி
பொலிவானபின்பெடுத்து கலவத்திட்டு
மூட்டெல்லாமுன்னின்ற லரைத்துக்கூட்டி
மூன்றுநாள்புடம்போட்டு வெடுத்துவைத்துக்கொள்ளு
ஆட்டெல்லாஞ்சூதத்தி லாட்டுஆட்டு
அண்டரண்டபகிரண்டம் வெந்துநீறும்
காட்டெல்லாம்வாழைபுட சாக்குசுட்டு.
காரியமாப்பதராமல் பாண்டத்திற்போடே. ௪௭௬



போட்டுமேவாழையுட கிழங்குச்சாற்றில்
போரானதெளிவிறுத்து வடுப்பில்வைத்து
ஊட்டுமேசுண்ணும்பு சொல்லக்கேளு
உசந்தவாய்க்கூடமச்சி சுண்ணம்புபண்ணி
நாட்டுமேபலம்ரெண்டு நிறுத்துப்போட்டு
நலமானகுழம்பாகும்பதத்திற்சேளு
பூட்டுமேபொடிபண்ணிக் குழம்பில்போட்டு
புறட்டியேவாங்கியெல்லாங் கலவத்தாட்டே. ௪௭௭

ஆட்டியேமுன்போலே மூன்றுபுடம்போட்டு
அச்சிமினிளெடுத்துமே பதனமாக
பூட்டியேயாறவிட்டுச் சாம்பலாக்கி
புகழாகபதக்களந்து பாண்டத்தில்ப்போட்டு
மூட்டியேகள்ளென்ற காடிதானும்
மூசியாமலிருதூணி விட்டுப்பின்பு
மாட்டியேமூன்றுநாள் கலக்கிவைத்து
மறவாதேதெளிவிருத்து யடுப்பிலேற்றே. ௪௭௮

ஏறியதோர்பதங்கமெல்லாம் வழிச்செடுத்து
இதமாகயப்பிரகம் நவநீதம்பண்ணி
கூறியதோர்வெண்கருவா லரைத்துவாங்கி
குகைப்போலேமேல்மூடி ரெண்டுசெய்து
மாறியதோர்பதங்கத்தை யுள்ளேவைத்து
வகையாகமேல்மூடி சீலைசெய்து
தேறியதோர்கெசபுடத்தில் போட்டெடுத்து
சிறப்பாகமருந்தெல்லாம் வாங்கிக்காச்சே. ௪௭௯

காச்சியேகுழம்பான பக்குவத்தில்
கலக்கிடுநீகெருடபட்சை சுண்ணம்ரெண்டு
பாச்சியேகுடவனும் பலமும்ரெண்டு
பகரியவெ[illegible]கமும் பலமும்ரெண்டு
தாச்சியேமுன்போலே அரைத்துக்கூட்டி
தயவாகப்பில்லைதனைச் சீலைசெய்து
மூச்சியேவிடுகாமல் தீயைமூட்டு
மூன்றுபுடம்போட்டெடுத்துப் பதனம்பண்ணி. ௪௮௦

பண்ணியபின்திரமுகமாங் குருவுமாச்சு
பணவிடைதான்மெடுத்தொன்றாய்க் கூட்டிக்கூட்டி

நுண்ணியேகல்வத்தில் முன்னீராலாட்டி
உத்தமனேசெம்புக ளெடுத்துவைத்து
நண்ணியபின்மேல்மூடி சீலைசெய்து
நலமாகஅஞ்செருவில் புடத்தைப்போட்டு
எண்ணியபின்யாறவிட்டு யெடுத்துக்கொண்டு
யிதமானபேச்சிமிளில் பதனம்பண்ணே ௪௮௧

பண்ணியதோர்குருவெடுத்து விளக்கிலிட்டு
பரிவாகச்சாறெடுத்து வயச்சட்டியில்வார்த்து
ஒண்ணியதோர்தேஞ்சுகொளு கரியிலூது
உத்தமனேகாந்தியத்தில் கூட்டிதோய்ப்பாய்
விண்ணியதோர்கொளுக்காச்சி தோய்க்கத்தோய்க்க
விண்டுவிண்டுஅதற்காரப் பொருமிமீளும்
நண்ணியதோர்சாறெல்லாம் வார்த்துதோய்த்து
நலமானபதறெல்லாம் வாரிக்கொள்ளே. ௪௮௨

வாரியேபெருங்காடாம் மணக்கினெண்ணெய்
வார்த்தல்லோவெண்காரஞ் சமனாய்க்கூட்டி
நாரியேகுகையிலிட்டு மூன்றுதரமுருக்க
நலமானயீயம்போல் சவளையாகும்
யேறியேவுடைந்ததுபோல் வாதவெள்ளம்
யிறைக்கிறைக்கத்தொலையாது வயத்தின்வித்தை
வாரியேபொங்கயிலே சகலமும்மூழ்கு
மகத்தானவயமுருக்கில் கொல்லுந்தானே. ௪௮௩

தானென்றநாகத்தை பதையாமல்க்கொல்லு
சமுசயங்களெண்ணாதே சகலமும்உட்கொள்ளும்
வானென்றசூதமது கட்டிப்போகும்
மாசற்றவயநாக மட்டுமட்டு
தேனென்றசிவகாமி சொன்னமார்க்கம்
செப்பரியநாதாக்கள் மெச்சும்வித்தை
பானென்றசெந்தூரங் களங்குச்செய்யில்
பரிவாகவாயிரத்துக் கோடும்பாரே. ௪௮௪

ஓடுமேயரைத்ததைப் பணப்போல்பொத்து
உத்தமனேகளஞ்சிடைதான் குருவைப்போட
வாடுமேசெந்தூருக்க மேலேவைத்து
மாசற்றவிதனிலே சாமம்வைக்கத்



தேடுமேவண்டமெல்லாம் மெழுகாய்ப்போகும்
சேர்ந்தமூவாயிரத்துக் கொன்றேவோடும்
பாடுமேவினையைப்போல் மெழுகுக்கொள்ள
பரிவாகவண்டத்தின் னுண்மைதானே. ௪௮௫

அண்டவித்தைவருக்காம் சிவயோகிக்காகும்
ஆத்தாளைபூசித்த வாமிககாகும்
பிண்டவித்தைமும்மூல யோகிக்காகும்
பேரானவசைவைப்புடன் நாலில்சேர்க்கும்
வண்டவித்தைபொல்லாத துரோகிக்கெய்தும்
மகத்தானவேதாந்த ரிஷிகள்சித்தர்
கண்டவித்தைமனதடக்கி உண்மையாவார்
காரணமாம் சீஷருக்குப்போதிப்பாரே. ௪௮௬

பாரென்றகுருவெடுத்துக் காசிடைதான் தூக்கிப்
பரிவான தாரக்கள்ளிப் பாலில்போடக்
காரென்றசாற்றில் சுத்தஜலமுமாகும்
கல்வதநில்சூதமிட்டு சுத்திப்பண்ணி
பாரென்றவயச்சட்டிக் குள்ளேவிட்டுப்
பதராமலொருசாமம் சுருக்குப்போட
கோரென்றஇட்டிலிப்போல் கட்டியாகும்
கூப்பிட்டால்யெங்கெங்கும் வாதந்தானே. ௪௮௭

வாதந்தான்வெல்லுமென்ற நாகத்தைக்கட்டு
வாகாகபட்டகர்மம் மெட்டுமாகும்
காதந்தானட்டகர்ம மெட்டுமாகும்
கடிதாககோடியது யிமைக்குமுன்னே
வேதந்தானுதிடத்து முடிவுக்கொக்கும்
மேவியதோர்சிலம்பொலியி னுதங்கேழ்க்கும்
நீதந்தான்சூதத்துக் கடுத்தவாறும்
நிமஷத்தில்காயசித்தி கெவுனசித்துமாமே. ௪௮௮

ஆமிந்தமணிநின்று வுருகும்போது
அந்நிடைக்குதங்கமிட்டு உருக்கிப்பாரு
வேமிந்ததாளமும் சீலையும்வீரம்
வேதிச்சுகல்வத்தி லிட்டுயாட்டிச்
சேமிந்தகெந்தக்குகை ரெட்டியிட்டு
சிறப்பானபொற்றலையின் சாற்றாளாட்டி

ஓமிந்தகாசியென்ற மேருக்கேற்றி
உற்பனமாய்வாலுகையி மேலேவையே. ௪௩௯

வைக்கவேபனிரெண்டு சாமந்தானும்
மறவாமல்மூத்தீயு மாட்டுமாட்டு
தைக்கவேமாதளம்பூ நிறத்தைப்போலாம்
சார்வாங்கிலாக்கையிட்டு கிண்டிப்பாரு
உய்க்கவேநவலோக மாயிரத்துக்கொன்று
வுத்தமனேமாற்றுவும் பத்துமாகும்
மெய்க்கவேசெந்தூரங் குன்றியுண்ணு
மேனியுமோ அருணநிறமாகுந்தானே. ௪௪௰

## வங்காளப்பச்சை.

தானென்றவங்காள பச்சைவைப்பு
சாதகமாய்ச்சொல்லுகிறேன் மக்காள்கேளு
ஊனென்றசெம்பான வரப்பொடிதான்பத்து
உத்தமனேதுரிசிபத்து வெடியுப்புரெண்டு
வானென்றஎலுமிச்சம் பழச்சாறுவிட்டு
மருவமேமத்திச்சு கலவத்திட்டு
கோனென்றகுப்பியினால் மூன்றுதிங்கள்வைத்துக்
கூசாமலெடுத்துப்பார் பச்சையாமே. ௪௪௧

## செம்புசுத்தி.

ஆமப்பாசெம்புதன்னை சுத்திசெய்ய
அறைகிறேன்கருங்குன்றி கொள்ளலையின்சாறு
வாமப்பாகல்லுருவி நெச்சியோடு
வகைநாலுமிடித்துநன்றாய் பழச்சாறுவிட்டு
காமப்பாகுன்றிமணி யரைத்துப்போட்டு
கலக்கியொன்றாய்மத்திச்சு வதுக்குள்சாய்ப்பாய்
சேமப்பாபத்துமுறை தீட்சைசெய்தால்
செம்பினிடவூரெல்லாங் கன்றுபோமே. ௪௪௨

போகவெகுசெயபால கிண்ணிபண்ணு
புகழானசெங்கோட்டைநீர் வெட்டிமுத்து
வேகவேவெளிக்காட்டான் மணக்கம்வித்து
விரைந்துமேவாழ்வித்து சரியாய்க்கூட்டி
சாகவேதுருசியொன்று சாரமொன்று
சாதகமாய்கல்லுப்பு வெடியிப்பொன்று



ஏகவேஉரலிலிட்டு யிடித்துக்கொள்ள
யிதமாகக்கார்த்திகையின் கிழங்குச்சாறே. ௪௪௩

சாற்றினால்மூன்றுநா ளரைத்துமைபோல்
சந்திரனார்பணிதனி லடைத்துவைத்து
வாற்றினால்பதங்கமொன்று சொல்வேன்யானும்
வகையானகல்லுப்பு வெடியுப்புசீனம்
காற்றினுலுவருப்புக் கறியுப்புசுன்னம்
கருதியதோர்சவுட்டுப்பு வெண்காரந்தான்
தோன்றினால்துருசினுட சாரந்தானும்
திறமாகவொவ்வொன்று காசிடைதான்தூக்கே. ௪௪௪

தூக்குவதுவேதாரஞ் சிலையுங்கெந்தி
துடியானவெள்ளிலையோ கெவுரிலிங்கம்
ஆக்குவதுகடல்நுரையும் விரங்தொட்டி
அழகானகுதிரைப்பால் யன்னபேதி
தேக்குவதுபூனீறு சத்தச்சாரம்
சிறப்பானவெண்காரங் காந்தஞ்சிங்கி
நீக்குவதயப்பிரக மாகவர்க்கம்
நேரானகிமிலையொடு பொன்னுந்தானே. ௪௪௫

தானனையரப்பொடியும் நாகமாறும்
சார்வானகாரீயம் வெங்கலத்தின்பொடியும்
தேனனவகைக்கு காசிடையேநோத்து
சிறப்பாகமுப்பத்து வொன்றுமாக்கி
கோனனகலவத்தில் பிசரிக்கொண்டு
குறிப்பாக வடிகட்டியானபின்பு
வானனதயிலத்தைக் குத்தியாட்டி
வகையாகவுழுதிர மரைத்துலர்த்தே. ௪௪௬

உலர்த்தியேயிரும்பாலே வுள்ளங்கைப்போல்
உத்தமனே சலசாக சட்டிபண்ணி
மலர்த்தியேயறைப்படி செம்புக்கிண்ணி
மருவலேயரைக்குள்ளே வழக்கம்பார்த்து
அலர்த்தியேசட்டியிலே மருந்துவைத்து
அதின்மேலேகிண்ணிவைத்து பொருத்தம்பார்த்து
சிலர்த்தியேசந்துக்குச் சீலைசெய்து
திறமாகவசிசையுடன் செப்பினேனே. ௪௪௭

செப்பவேசெம்பிலிடையரப் பொடியுமங்கே
திறமாகயிரும்பினிடை யரப்பொடியுங்கூட
அப்பவேகறுமண் ணூஞ் சங்குநீறம்
அடவானகுருந்தகல மழிவுகட்டி
நப்பவேமெனச்சருவு மத்திப்பாலும்
நலமாகஉரலிலிட்டு யிடித்தியைய
உப்பவேமெழுகுபோல் பதமாய்ப்பண்ணி
உத்தமனேசங்குக்கு ளடைத்திடாயே. ௪௯௮

அடைத்திட்டுசெம்புமேல் கவசம்பண்ணி
அசங்காமல்பதனமாய்ச் சீலைசெய்து
உடைத்திட்டுமுக்கவரில் சட்டிவைத்து
உர்ப்பனமாயிலுப்பைநெய்யில் விளக்குவைத்து
புடைத்திட்டியங்குவிட்ட பருவமாக
பத்திநின்ற திரிபோட்டுவிளக்கையேற்றி
கடைத்திடினும்விடாமலே மூன்றுநாளெத்தி
கைக்கண்டபதங்கமது யேறும்வாங்கே. ௪௯௯

வாங்கியேகுகையில்வைத்தக் காரமிட்டு
வளமாகயுருக்கியொரு மணியாய்வாங்கி
தாங்கியேயெடுத்துப்பார் முத்துப்போல
தவளம்போல்சூதமது யிருக்கும்பாரு
ஏங்கியேயில்லையென்று பயங்கவேண்டாம்
யிதவாதகெந்தியிட்டு தங்கஞ்சேர்த்து
ஓங்கியேநாகமிட்டு கல்வத்தில்போட்டு
உத்தமனேமைக்கொண்ணைச் சாற்றுலாட்டே. ௫௦௦

ஆட்டியேகாசியென்ற பேருக்கேற்றி
அப்பனேவாலுகையின் மேலேவைத்து
மூட்டியேபன்னிரண்டு சாமந்தீயை
முசியாமலாறவிட்டு எடுத்துப்பாரு
நீட்டியேசெந்தூர மருணன்போலாம்
நேரானநவலோகம் நூற்றுக்கொன்றீய
காட்டியேதிசைமாத்தாங் கண்டுப்பாரு
கனமானபதங்கத்தின் மகிமைதானே. ௫௦௧

மகிமையென்றபதங்கத்தைப் பலன்தான்தூக்கி
மகத்தானகல்வத்தில் பொடிதான்பண்ணி



மகிமையென்றபரைப்பொடியை நாலுபலம்போட்டு
மகத்தானகாரமொடு பலந்தான்போட்டு
மகிமையென்றபெருங்காட்டா மணக்கினெண்ணெய்
வார்த்தரைத்துசாமமொன்று குகையிலிட்டு
மகிமையாய்மூன்றுதிரி முருக்கிப்போடே
மாக்சுதங்கமைந்தாகும் நாகமாமே. ௫௦௨

நாகமென்றஅந்திடைக்குத் தங்கமிட்டு
நலமாகவுருக்கையிலே நாகமிட்டு
யோகமென்றபுகையேழுங் கட்டிப்போகும்
உத்தமனேசூதமிட்டு கெந்தியிட்டு
பாகமென்றபொற்றலையின் சாற்றுலாட்டி
பக்குவ்மாயஞ்செருவில் புடத்தைப்போடு
வேகமென்றநவலோகம் நூற்றுக்கொன்றீய
வேதிச்சுமாற்றென்ன பன்னிரண்டுமாச்சே. ௫௦௩

## கற்பூராதி.

ஆச்சப்பாவெள்ளையென்ற பதங்கங்கேளு
ஆதிவெள்ளைபாஷாணங் குதிரைப்பல்லு
ஓச்சப்பாதாளகமும் பூநீறுவீரம்
உத்தமனேநவாச்சாரம் துருசுசீனம்
பாச்சப்பாகல்லுப்பு வெடியுப்புகெவுரி
பரிவாகவெள்ளையென்ற யப்பிரகத்தோடு
காச்சப்பாநாகமொடு வெள்ளியப்பொடியும்
கனமானகடல்நுரையுஞ் சங்குத்தோடே. ௫௦௪

தொட்டோடேஅன்னமென்ற நிமளைக்காந்தம்
துத்தியாம்சத்தியென்ற உசத்திறோடே
நாட்டோடியிருபத்து வஞ்சுமாச்சு
நலமானசூதமது யிருபத்தஞ்சு
பாட்டோடியருக்கம்பால் விட்டுயாட்டி
பதாமல்மூன்றுநாள் அரைத்துக்கொண்டு
நாட்டோடுரவிதனிலே காயவைத்து
நலமாகயறைத்துநன்று யுலர்த்திடாயே. ௫௦௫

உலர்த்தியேவில்லைபண்ணி வைத்துக்கொண்டு
உத்தமனேவெள்ளியால் கிண்ணிபண்ணி

மலத்தியேவயச்சட்டி யுள்ளங்க்கப்போல்
வப்பனேயாறவிட்டு கிண்ணில்வைத்து
பிலர்த்தியேமருந்ததனை யுள்ளேவைத்து
போகவேமேற்கிண்ணி பொருத்தம்பார்த்து
புலத்தியனேமுள்வெசம் போலேசெய்து
புகழாகமுக்கவரின் மேலேயேத்தே. ௫௦௬

ஏத்தியேவிளக்குவைத்து தீயைப்போட்டு
இதமாகமுன்னெண்ணை விளக்கினூத்தி
போத்தியேமூன்றுநாள் விடாமலேவைத்து
போனதங்கமது யேறும்பாறு
ஆத்தியேபதங்கமெல்லா மெடுத்துவாங்கி
அதின்வெள்ளைவப்பிரகம் நவநீதம்பண்ணி
சாத்தியேகுகையொன்று சில்லுப்பண்ணி
சார்வானயண்டவெள்ளைக் கருவால்பண்ணே. ௫௦௭

பண்ணியதோர்க்குகைக்குள்ளே மருந்தைவைத்துப்
பரிவாகமேல்மூடிச் சீலைசெய்து
கண்ணியதோர்கெசப்புடத்தில் போட்டெடுத்து
கனமானகுகைக்குள்ளே வைத்துருக்கி
நண்ணியதோர்சூதம் நின்றுயுருகுமப்போ
நலமானகன்னிகைநீர் கட்டிப்போடு
திண்ணயதோர்சூதயிடை வெள்ளீயம்போட்டுத்
திறமாகச்சாரமிட்டு வுருக்கிச்சாயே. ௫௦௮

சாய்த்திட்டமருந்தெடுத்து நிறுத்துக்கொண்டு
சார்வாகநாலுக்கு சூதமொன்று
பேய்த்திட்டமருந்துக்கு நாலத்தொன்று
புகழானவெள்ளையது நிறுத்துப்போட்டு
கார்த்திட்டமுலைப்பாலை விட்டேயாட்டி
கனமாகவில்லைசெய்துவயச் செம்பில்வைத்து
பேத்திட்டயஞ்செருவில் புடத்தைப்போடு
பெரிதானசெம்புவகை நூத்துக்கொண்ணே ௫௦௯

ஒண்ணனவெள்ளையது பலமுங்கேளு
உர்ப்பனமாயிருபத்தி யைந்துமாற்றுக்
கண்ணனசூதமது வெள்ளையாகுங்
காரீயம்வெள்ளீயம் நாகம்வெள்ளை



மண்ணனவதுவெள்ளை யாகுமக்காள்
மாயமாய்வாசனையை நீக்கித்தள்ளு
விண்ணனவம்பலத்தே நீசற்றப்பால்
மேவியதோர்சிலம்பொலியும் நாதங்காணே. ௫௧௦

## பச்சைக்கற்பூரம்.

நாதமென்றபச்சைக் கற்பூரம்பண்ண
நலமாகச்சொல்லுகிறேன் கேளுகேளு
போதமெனறசூதமது பலந்தானெட்டு
போனகெந்தகமோர் பலந்தானென்று
நீதமென்றகெந்தகத்தை யோட்டிவிட்டுருக்கி
நினைவாகசூதத்தை யதிலேவிட்டுகிண்டு
நாதமென்றகரிப்போலே தூளாய்ப்போகும்
நலமாகவெடுத்துமே பாகங்கேளே. ௧௧௧

கேளப்பாமண்ணாலே தொட்டிரெண்டுபண்ணி
கெட்டியாய்வாய்பொருந்தச் சட்டிமேலே
நாளப்பாமேல்தோண்டிக் குள்ளேபூசு
நலமானபத்தான யரைத்தோண்டிமட்டும்
வாளப்பாபொடிபண்ணி தோண்டியிலேயிட்டு
மருவியதோர்செங்கலமாய் பொடிக்கையினாலே
கேளப்பாசெந்துருக்குச் சீலைசெய்து
கெடியானகாடாக்கினிப் பதங்கமாமே. ௧௧௨

ஆரப்பாதங்கமது மேல்தொண்டிக்குள்ளே
அப்பனேபத்தியது மைபோல்நிற்கும்
எடுப்பாபதங்கமெல்லாங் குச்சுக்கட்ட
எடுத்தல்லோமேருவுக் குப்பிக்கிட்டு
வாமப்பாவாலுகையின் மேலேவைத்து
மறவாமல்தீப்போட்டு பனிரண்டுசாமம்
காமப்பாபதங்கமது யிறக்கியேரி
கம்பிபோல்வெளுப்பாக யிருக்கும்பாரே. ௧௧௩

இருக்கிறதோர்கலவத்தில் பொடியாய்ப்பண்ணி
இயல்பாகபணவிடைதான் தேனிற்கொள்ள
செருக்கியேமதிக்கிறதோர் கர்மங்கள்சூலை
சிறப்பாகபித்தமெல்லாங் ஓமேசாடும்

மருக்கியதோர்வாதங்கள் கால்கைகள்முடக்கம்
மகாவிஷங்கள்புண்சூலே பவுத்திரங்கிரந்தி
இருக்கின்றவியாதியெல்லாங் கழன்றுபோகும்
யிதமானகண்டபனி போலாகும்பாரே. ருகச

## செந்தூரம்.

பனியென்றபச்சைசெந் தூரஞ்சொல்வேன்
பாங்கானசூதமது பலந்தானெட்டு
கனியென்றகெந்தகந்தான் ரெண்டுபலமாகும்
கனமானயோட்டிலிட்டு வுருக்கிக்கொண்டு
தொனியென்றசூதத்தை யதிலேவிட்டு
சுழலவேயக்கருவால் கிண்டுகிண்டு
நனியென்றசூதமது கரிப்போலாகும்
நலத்தோடேவாங்கிமெள்ளக் குப்பியிலேபோடே. ருகரு

போட்டுமேயரைவாசிக் குப்பிக்கப்பா
போரானவாலுகையில்மேலேவைத்து
நாட்டுமேயோட்டாலே மேலேமூடி
நலமாகயடுப்பேற்றி சாமம்ரண்டு
ஓட்டமேஒடதனைவாங்கிப்போட
வுக்கிரமாய்யெரித்தாக்கால் செந்தூரந்தான்
வாட்டுமேகெந்தகத்தி னலத்தொன்று
வளமானதாளகத்தை திருத்துவையே. ருகசா

வைக்கவேகொஞ்சமாய் குப்பியிலேபோட்டு
வகையாகவயக்கருவால் கிண்டுகிண்டு
நைக்கவேதாளகத்தைப் போட்டுபோட்டு
நலமாகக்கிண்டுவாய் சிலாகையாலே
உய்க்கவேசரக்கெல்லாந் தங்கமாகும்
உத்தமனேவெருங்குப்பி யடியில்காணும்
செய்க்கவேபடியிலே மருந்திட்டாக்கால்
சீரானதங்கமென்று தீயையாற்றே ருகஎ

ஆற்றியேயிருநாழிகை யானபின்பு
அயக்குராட்டாலேதலை வெளியாய்வாங்கிப்
போற்றியேநீர்தெளித்து யாறப்போட்டு
புகழாகக்குப்பியெல்லாந் தள்ளிப்போட்டு
தேற்றியேசிகப்பான கம்பிபோலே
சிறக்கதூராய்கம்பிபோ லிருக்கும்பாரே



சாற்றியேபணவிடைதான் தேனிலுண்ண
தப்பாதுநோய்களெல்லாஞ் சாட்டிப்போமே. ருகஅ

சாட்டியேகல்வத்தி லதனைப்போட்டு
தங்காமல்பொடிப்பண்ணி காட்டில்கெம்பை
நீட்டியேகிழங்குச்சாற் வைத்துக்கொண்டு
நினைவாகயரைத்திடுவாய் மூன்றுமேதான்
வர்ட்டியோரவியில்வைத்துப் பொடியாய்ப்பண்ணி
வளமானகாசியென்றக் குப்பியிலேபோட்டு
ஒட்டியேவாலுகையின் மேலேவைத்து
உர்ப்பனமாயடுப்பெரித்து யாறவிட்டுவாங்கே. ருககூ

வாங்கியேமுன்போலே கல்வத்தில்போட்டு
வளமானகிழங்குச்சார் விட்டியாட்டி
தேங்கியேயரைத்திடுவாய் மூன்றுநாள்தான்
திறமாகப்பொடியாக்கி குப்பிச்சேற்றி
ஓங்கியேகமலாக்கினி நாலுசாமம்
முத்தமனேகாடாக்கினி யாறுசாமம்
தாங்கியேமுன்றுநாள் தீயைமூட்டி
தப்பாமலிப்படிதா னஞ்சுதரமேற்றே. ருஉ0

அஞ்சுமேவாலுகையில் தளத்தில்நிற்கும்
அசங்காமல்சிமிளிலே யெடுத்துவைத்து
உஞ்சுமேநவலோகம் நூற்றுக்கொன்றீய
வுர்ப்பனமாய்மத்தரையே மாத்துக்காணும்
கெஞ்சுமேநோய்களெல்லாந் தவுடுபொடியாகும்
கெடியானகாலனுமே யஞ்சிப்போவான்
மிஞ்சுமேபுளியுப்பு விட்டுதென்றால்
பேனியதோர் சட்டைகக்கிவாலையாமே. ருஉக

## கோழிக்கெந்தி.

வாலையாய்சிகப்பான கெந்திதன்னை
வளமானபராபரைக்கு முதல்நாள்தாம்
ஓலையாலெழுதவென்றால் தென்னிறைட்டு
உத்தமனேகடல்தண்ணீர் மையமாகும்
மாலையாய்சொண்ணைபைத்தான் தரித்தசீஷன்மைந்தா
மயங்கிஞரிதினுடைய யாட்டைப்பார்த்து

வாலையாம்பூரக்கெல்லாங் கொல்லுங்கொல்லு
மம்மம்மாயாபினுட நாதந்தானே. ௫௨௨

நாதமென்றதிதுக்குப்பேர் சூராதுண்டகெந்தி
நலமானகோழிதலைக் கூடனென்றுமப்போ
போதமென்றப்பிசினுடைய வைப்பைக்கேளு
போக்கோடேவெளியாகச் சொன்னேன்மக்காள்
நீதமென்றநெல்லிக்காய் கெந்தகத்தை
நினைவாகப்பலம்பத்து நிறுத்துக்கொண்டு
கீதமென்றசெவ்வாதி செவ்வள்ளிமுருக்கு
கெடியானசெவ்வாலி செம்பருத்திதானே. ௫௨௩

தானாகப்பார்த்துமொன்றாய் கலக்கிக்கொண்டு
தனிவெடியுப்புச் சீனபரெண்டு
வானாகபசுவின்பால் படிதானஞ்சு
மாசற்றயெலுமிச்சம் பழச்சார்சேர
தேனாகலக்கியொன்று வைத்துக்கொண்டு
திறமாகசட்டியிலே படிதான்வார்த்து
நீனாகட்டியதின்மேலே கெந்தி
நினைவாகப்பரப்பிமேல் சட்டிமூடே. ௫௨௪

மூடியேசீலைசெய்து குழிதான்கில்லி
முயர்ச்சியாயடிசட்டியை பேர்த்துப்போடு
நாடியேமேல்சட்டி தெரியவைத்து
நழுகாமல்புடம்போடு பத்தெருவிலப்பா
தேடியேயாறவிட்டு யெடுத்துப்பாரு
சிறப்பாகயுருக்கியெல்லாஞ் சாற்றதனில்நிர்க்கும்
வாடியேமணியெல்லாம் பெருக்கிக்கொண்டு
மறுபடியுஞ்சாறுக்கப் படிதான்வாரே. ௫௨௫

வார்த்துமேசீலைவடி கொண்டபின்பு
வகையாகமணியெல்லாம் பெருக்கிக்கொண்டு
சார்த்துமேமறுபடியு மூசையிலிட்டுக்
கனமாசமூன்றுமுறை யுருக்கிப்பாரு
தீர்த்துமேமணிபோலே யுருண்டுநிற்குந்
திறமானகெர்தகத்தின் வேதையாச்சு
பார்த்துமேபசும்பாலில் முறைமூன்றப்பா
பாங்காகக்குருமுறைப்போல் செய்துபோடே. ௫௨௬



போட்டபின்புயெடுத்ததனை கல்வத்திட்டு
பொடிபண்ணிகல்வத்தில் மயில்நெய்வார்த்து
நாட்டபின்புயேழுநா ளரைத்துமையோல
நலமாககுழம்பாக்கி வய்க்குகையில்வைத்து
பூட்டபின்புவாலுகையின் மேலேவைத்து
பொருந்தவேதீமூட்டிக் கமலப்போல
தேட்டபின்புநால்சாமம் மாறவிட்டுப்பார்த்தால்
திரமாசமாதளம்பூ நிறமுமாமே. ௫௨௭

நிறமாககெந்தகத்தின் வேகம்பட்டால்
நிமைக்குமுன்னேசூதமது யெல்லாமாகும்
பறயானலோகத்தில் பரிகத்தானப்பா
பரனுடையகற்பமது யானுமுண்டேன்
நிறமானதங்கமது செய்பேயாகும்
நேர்ந்தநவலோகத்துக் கொன்றேயோடுங்
குறமானமாயியுட சூதமப்பா
கொண்டாக்கால்கடிகையிலே சித்தியாமே. ௫௨௮

சித்தியாந்தேவருக்கு மஞ்சபூதம்
சித்துநின்றவிருடயெல்லா மஞ்சபூதம்
புத்தியாமுப்பினமு மஞ்சபூதம்
போக்கான அஞ்சனுமெல்லாமாச்சு
முத்தியாஞ்சித்தருக் கஞ்சபூதம்
முடிவானயோகிக்கு வஞ்சபூதம்
பத்தியாம்வாதத்தில் பஞ்சபட்சி
பாஷாணம்வைப்பதனைப் பாடினேனே. ௫௨௯

பாடினேன்வடமொழியைப் பகுத்துப்பார்த்து
பதிவாகயாத்தாள்சொல் கேட்டுகேட்டு
வாடினேன்மனமிதலைவாதம்பார்த்து
மயக்கமெல்லாங்குருசொல்ல மனதிலெண்ணி
தேடினேன்பஞ்சபூத மார்க்கந்தன்னைத்
தெளிவாகஞானிக்கு விளக்கமாக
நாடினேன்உலகத்தில் நன்மைபோல
நவியாமல்வெளியாகத் திறந்திட்டேனே. ௫௩௦

## பஞ்சபட்சிபாஷாணம்.

திறந்திடாதேயிருந்த சரக்குவைப்பை
செகத்திலேவாதமே பொய்யாமென்று

இறந்திடாதிருக்கவென்று வெளியாய்ச்சொன்னேன்
யேழைமதிப்போகாமல் பார்க்கவென்றால்
மறைந்திட்டவுருவையெல்லா முன்னிப்பாரும்
மாயமறவாசிலைபால் மனம்புண்ணாகும்
பிறந்திட்டாதிருக்கவென்றால் காயசித்திபண்ணு
பெரியோர்கள்பதம்போற்றி மறையக்கேளே. ரு௱க

அறைத்திட்டுபொடிபண்ணி மேருக்கேற்றி
ஆறவிட்டுபன்னிரண்டு சாமந்தீபை
வறைத்திட்டுபதங்கமது யுருகியேறி
வகையானபட்சி பாஷாணமாகும்
கறைத்திட்டுப்போகாது மெழுகுபண்ணிக்கொண்டால்
நவலோகமாயிரத்துக் கொன்றுபாரு
புறைத்திட்டுவீசமிடை பாரிலுண்ணு
பொலிவானசத்திகந்தி வாலையாயே. ரு௱உ

## பவளப்புத்து.

ஆமென்றபவளப்புத்து பாஷாணந்தான்
அறைகிறேன்நான்தான் மறியுமட்டும்
போமென்றதாளகந்தான் பலமும்பத்து
புகழானவெள்ளையென்ற பாஷாணந்தான்
காமென்றபலம்பத்து கலவத்திட்டு
கனமாகயரைத்துமே மெழுகதாக்கி
தேமென்றரண்டுபலங் கெங்கையிட்டு
சிகூப்பாககாசியென்ற மேருக்கேற்றே. ரு௱௩

ஏற்றிவாலுகையின் மேலேவைத்து
யிதமாகக்கமலம்போல தீயைமூட்டு
போற்றியேநால்சாமங் கமலம்போலாட்டு
புகழாகயாறவிட்டு தண்ணீர்குத்தி
சாற்றியேகுப்பிடைத்தான் வுடைத்துப்பார்த்தால்
சாங்கமாம்புத்துப்போல் பவளமாகு
மாற்றியேயிதைக்கேட்டு வேதைபோட்டால்
மம்மம்மாவெகுதூரம் யோடுங்காணே; ரு௱ச

காணப்பாகெவுரிபுடன் வைப்பைக்கேளு
கடிதான்வெள்ளைப் பாஷாணமுந்தான்



ஊணப்பாபலம்பத்து யிருத்துக்கொண்டு
உத்தமனேகெந்தம் ரெண்டரைப்பலந்தான்
பூணப்பாபொடிபண்ணி மேருக்கேற்றி
புகழானவாலுகையில் தீயைமூட்டு
வீணப்பாகமலம்போல் நாலுசாமம்
விரிபுடமேயெடுத்திட்டு வுடைத்துவாங்கே. ரு௱ரு

வாங்கியேயுடைத்தாக்கால் வடுக்குப்போலாம்
வகையானகெப்புமஞ்சள் போலிருக்கும்
ஓங்கியேயிதைக்கட்ட யாராலாகும்
உத்தமனேவெடியுப்பு நீராலாகும்
தேங்கியேவெடியுப்புச் செயநீராகில்
சிகப்பானபருங்கம்பி நாலாங்காச்சல்
வாங்கியேபலம்பத்து நூற்றுக்கொன்று
வகையாகசாரமது காசிடைதானஞ்சே. ரு௱சா

## வெடியுப்புசெயநீர்.

அஞ்சோடேகல்லுப்பு காசிடைதானஞ்சு
அழகானபூனீறு காசிடைதானஞ்சு
பஞ்சோடுசீனமது காசமஞ்சு
பாங்கானசூடமது காசுமஞ்சு
நஞ்சோடுவீரமது காசுமஞ்சு
நலமானவப்பிரதங் காசுமஞ்சு
பிஞ்சோடுவெள்ளையது தானுமஞ்சு
பேரானதுருசுமது காசுமஞ்சே. ரு௱எ

காசுதானஞ்சாகும் வெங்காரம்பூரம்
காடிக்குச்சாமனைக் கடல்நுரையேயாட்டு
மாசுதான்யிந்துப்பு அன்னபேதி
மகத்தானசத்தியென்ற சாரத்தோடு
தூசுதானிதுவெல்லாங் கல்வத்திட்டு
துடியாகப்பொடிப்பண்ணி சொல்லக்கேளு
பூசிதான்பழம்புளியும் பலமும்பத்து
புகழானகொடுக்காயும் பழமும்பத்தே. ரு௱அ

பத்தானயேறலென் றலையினாடு
பாங்கானபெருங்கொன்றை பழத்தைக்கேளு

வித்தானபலம்பத்து நிறுத்திக்கொண்டு
  மேவியதோரெலுமிச்சம் பழச்சார்விட்டு
முத்தானமயில்போல மெழுகாய்ப்பண்ணி
  முயர்ச்சியால்வில்லைசெய்து யுலரப்போடு
அத்தானபூப்புடத்தில் தயிலம்வாங்கி
  அழகாகமுன்மருந்தில் விட்டுஆட்டே.

ஆட்டியேயேழுநாள் ரவியில்போட்டு
  அழகானஅடிகனத்த கலசம்வாங்கி
பூட்டியேகல்சுன்னங் குழைத்துக்கொண்டு
  பேரானவிரல்பருமன் மழகாய்ப்பூசி
நீட்டியேகசப்புடத்தில் போடுபோடு
  நேரானதவளம்போற் பற்பமாகும்
கூட்டியேமூன்றுமுறை யிந்தபாகங்
  குறிப்பாகசில்லிட்டுக் சீலைசெய்யே. ௫௪௦

செய்தபின்புநூரெருவில் புடத்தைப்போடு
  சிறப்பாகஆறவிட்டு யெடுத்துப்பாரு
மைதபின்புபொடிபண்ணி சாரங்கூட்டிக்
  கனமானபீங்கானி விதனைவைத்து
நைதபின்புபனிபடவே செயநீராகும்
  நலமானவீரமுடன் பூரம்போட்டு
யெய்தபின்புசரக்கான கருபத்தினுறு
  யிதமாளசெயநீராய்த் தோய்த்துவாட்டே. ௫௪௧

வாட்டியபின்சுருக்கிடவே மெழுகாய்ப்போகும்
  வகையானகட்டினமும் நீற்றினமுமாகும்
பூட்டியேபின்செந்தூரம் களங்கமாகும்
  போக்கானசததுவகை குளிகையாகும்
நீட்டியபின்நவலோகம் வேதையாகும்
  நிலைத்துநிர்க்கும்பூரத்துக் காரமேறும்
மூட்டியபின்செயநீரால் கவசம்வெக்க
  வுர்ப்பனமாங்காயசித்தி கெவுரிசித்தியாமே. ௫௪௨

ஆமப்பாசாரநீர் சொல்லக்கேளு
  அடுக்கானசாரமது பலந்தான்பத்து
ஓமப்பாவண்டநீர் பலந்தான்ரெண்டு
  வுர்ப்பனமாய்சாரநீர் காசுமஞ்சு



மாமப்பாயிந்துப்பு காசுமஞ்சு
  மகத்தானபூநீறு காசுமஞ்சு
காமப்பாதுருசுமது காசுமஞ்சு
  கடல்நுரைதான்காசுமஞ்சு சீனமஞ்சே ௫௪௩

சீனமாம்பூரகம் காசுமஞ்சு
  சிறப்பானசூடனது காசுமஞ்சு
பானமாம்பூரமது காசுமஞ்சு
  பருகின்றவெண்காரம் காசுமஞ்சு
ஊனமாம்வீரமது காசுமஞ்சு
  உர்ப்பனவாஞ்சத்தியென்ற சாரமஞ்சு
காமமென்றஅன்னத்தின் பேதியஞ்சு
  கனமானகல்வத்தில் பொடியாய்ப்பண்ணே. ௫௪௪

பண்ணவேவெடியுப்பு நீரைவார்த்து
  பாங்காகயரைத்திடுவாய் யெட்டுநாள்தான்
யுண்ணவேகல்வத்தில் சுண்ணம்பூசி
  உத்தமனேயதுக்குள்வைத்து புடத்தைப்போடு
நண்ணவேயாறவிட்டுப் பனியில்வைத்தால்
  நலமானவாரிதிபோல் செலமுமாகும்
கண்ணவேயின்னீரில் வீரம்பூரம்
  காசிடைதான்பொடித்திட்டு வைத்துக்கொள்ளே. ௫௪௫

கொள்ளென்றசெயநீரால் பாஷாணந்தான்
  குறிப்பாகசுருக்கிடவே கட்டிப்போகும்
மள்ளென்றகல்லுப்பு மணிபோலாடும்
  மாச்சரியநாகத்தைத் துக்கிக்கொல்லும்
துள்ளென்றசூதத்தை வாலையாகும்
  துடியானபூரத்தைச் சுன்னம்பண்ணும்
பொன்னென்றலிங்கத்தை மெழுகுபண்ணும்
  போக்கதிலேவெகுகோடி யாடலாமே. ௫௪௬

ஆடலாந்துருசென்ற செயநீர்லோ
  வப்பனேதுருசுமது பலந்தான்பத்து
கூடலாங்கெந்தகந்தான் பலமூமூன்று
  கொடிதானசூதமது பலமுமூன்று
ஊடலாம்வீரமது பலந்தானொன்று
  வுர்ப்பானமாம்வெள்ளை யதுபலந்தானொன்று

நீடலாப்பூநீறுபலந்தா னென்று
  நிட்சயமாங்காரமது பலமுமொன்றே. ௫௪௭

ஒன்றானசத்தியது காசுமஞ்சு
  வுர்ப்பனமாந்தாளகங் காசுமஞ்சு
மன்றானசிலையது காசுமஞ்சு
  மாசற்றசீனமது காசுமஞ்சு
குன்றான அண்டநிலை காசுமஞ்சு
  கோழியுடன்வெள்வெங்கங் காசுமஞ்சு
வென்றானசூதமது காசுமஞ்சு
  மெய்யானவுழுந்ததுவுங் காசுமஞ்சே. ௫௪௮

காசிடைதானஞ்சாகும் வெள்ளூரம்பூரம்
  கருத்ததொருகருவண்டு அன்பத்தொன்று
தூசிடைதான்கலவத்தில் பொடியாய்ப்பண்ணி
  துறையாகயேழுநாள் சாரநீரில்
மாசுடைதான்தெள்ளுபோல் வில்லைபண்ணி
  வளமானகலவத்தில் சுண்ணம்புபூசி
ஆசிடைத்தான்மருந்துவிட்டுச் சீலைசெய்து
  அன்பதெழுவனைத்துமெள்ள புடத்தைப்போடே. ௫௪௯

புடம்போட்டுயெடுத்துடனே குருவுமாகும்
  பேராகநாலிலொன்று சாரங்கூட்டி
திடம்போடுகலவத்தி லிட்டுஆட்டிச்
  சீராகநால்ஜாம மாட்டுஆட்டு
தடம்போட்டுவண்டோட்டி. லிட்டுமூடிச்
  சார்வாகப்புடம்போட்டு பனியில்வைக்க
நடம்போட்டுமறுகோலச் செயநீராகும்
  நலமானஇந்நீரில் வீரம்போடே. ௫௫0

வீரமிட்டால்சிகப்பாகுஞ் செயநீரப்பா
  விடுபட்டமதயானை சூதமதுகரும்பு
சாரவிட்டபுளிகையி லாடுயபோலாம்
  சாந்துபோஞ்செயநீரால் மூன்றுநாளாட்டித்
தூரமிட்டவெண்ணெயைப்போ லாகுப்பாரு
  துடியானகிளிகெட்டி சூடனிலேவாட்டி
வாரமிட்டுயுருட்டிநன்றா யெடுத்துக்கொண்டு
  மானமத்தங்காய்க்குள்ளே வாட்டிடாயே. ௫௫௧



வாட்டியேயேழுபுடம் போட்டெடுத்து
  வரிசையாய்கரண்டியிலே யெண்ணெய்குத்தி
பூட்டியேயெடுத்து பனியதன்பின்போல
  புகழாகபளிச்சென்று மணியுமாகும்
மூட்டியேயுவரசங்க நூற்றிரண்டுபத்து
  முத்தமனேபாஷாணம் மறுபத்துனாலுந்
தீட்டியெல்லாம் வண்டுமுதல்யிருபத்தேழும்
  திறமானநவரத் தினமுமூட்டே. ௫௫௨

ஊட்டியேசத்தெடுத்து விடுத்தாக்கால்
  உத்தமனேசாரணை தான் ஒன்றேயாச்சு
பூட்டியேயிப்படியே யிருபத்தொன்றும்
  போக்கானசத்தெடுத்து தங்கந்தாக்க
யாட்டியேசுரூபமென்ற குளிகையாச்சு
  யண்டமுதல்பதங்களெல்லாம் நெரிக்கிபுக்கி
சூட்டிநீமீண்டுவருங் குளிகைவேகம்
  சுருங்கித்துகெவனசித்து சுருக்காம்பாரே. ௫௫௩

சுருக்கானதாம்பிரத்தில் சுன்னஞ்சொல்வேன்
  சூலுகபுளியிலைபோல் நறுக்கிக்கொண்டு
முருக்காகப்பலமெட்டு நிறுத்துக்கொண்டு
  முனையானபழச்சாற்றி லூறவைத்து
நருக்காகக்கருகியே யெடுத்துக்கொண்டு
  நாறுகின்றசெம்பினுட யூரல்வுரிக்கி
இருக்காகவெள்ளியம் சட்டியிலேபோட்டு
  யிதமாகநிமளை தன்னை பொடியாய்ப்பண்ணே. ௫௫௪

பண்ணியதோர்பொடி தானும் வாங்கத்துக்கு
  பரவியதோர்சாமமா நிறுத்துக்கொண்டு
உண்ணியதோர்வெடியுப்பு நிமிளைக்குப்பாதி
  யுத்தமனேபொடியாக்கி மேலேவைத்து
நண்ணியதோர்வங்கம்னின் றுருகும்போது
  நலமானவொவ்வொன்றால் மாறிமாறி
தண்ணியதோர்வங்கத்தில் போட்டுக்கிண்டு
  சாகாமல்சுண்ணமது வாகும்பாரே. ௫௫௫

## தாம்பிரசுன்னம்.

சுன்னமின்னமாக்குதற்கு முறையைக்கேளு
  துடியானவெள்வங்கம் வில்லைதட்டி

சுன்னமின்னங்குகைவைத்து புடத்தைப்போட்டு
திறமாகவெந்தபின்பு யெடுத்துவாங்கி
சுன்னமின்னம்வீரமுடன் பூரங்கூட்டித்
துடியாகச்சாரமுடன் சீனங்கூட்டி
சுன்னமின்னாலுபலம் நிறுத்துக்கொண்டு
துடியாகசூதமது பலந்தானென்றே. ௫௫௬

பலமதுதான்கெந்தகத்தே நிறுத்துப்போட்டு
பாஷாணம்வெள்ளையது காசுமஞ்சு
நிலமதுதாலகமும் காசுமஞ்சு
நீச்சானவீரமது காசுமஞ்சு
குலமதுகல்லுப்புக் காசுமஞ்சு
கொடிதானசாரமது காசுமஞ்சு
நலமதுதான்சீனமது காசுமஞ்சு
நஞ்சோடியிதுவெல்லாங் கலவத்தாட்டே. ௫௫௭

ஆட்டியேவெண்கருவு மெருக்கம்பாலு
மப்பனேவார்த்தரைத்துக் குப்பிக்கொண்டு
நாட்டியேதாம்பூரத் தகட்டிற்பூசி
நாள்மூன்றுரவிதனிலே காயப்போட்டு
மாட்டியேவுலர்ந்தபின்பு யெடுத்துக்கொண்டு
வகையாகமேல்கவசஞ் சொல்லக்கேளு
மீட்டியேகொடுவேலின் வேரின்பட்டை
மெலிவானயெலியாலன் பட்டைசேரே. ௫௫௮

சேர்த்ததெல்லாம்பொடியாக்கி யெருக்கம்பாலு
சினத்தண்டவெண்சருவும் வைத்துக்கொண்டு
யேய்த்ததல்லோமேல்மூடி சீலைசெய்து
யியலாகக்குழிவெட்டி முழங்கால்மட்டும்
பேர்த்தல்லோபொடிபண்ணி யெருவடுக்கிப்
புடமாகப்போட்டுமே தீட்சைசெய்து
கோர்த்ததுமேமூன்றுமுறைப் படியேசெய்து
கொப்பெனவேரவியில்வைத் தெடுத்துவாங்கே. ௫௫௯

வாங்கியேமுன்கலசந் தன்னிற்போட்டு
வாகியாய்முன்குழம்பில் பிசரிக்கொண்டு
தாங்கியேமுன்குகையில் வைத்துமூடித்
தனியாசமுன்போலே புடத்தைப்போடு



நீங்கியேயிப்படிதான் மூன்றுதரம்போடு
நீலம்போல்கருவாகுஞ் செம்புதானும்
ஓங்கியேகருவுக் குள்ளம்போல
உத்தமிதாயொப் பென்றுரைசெய்தேனே. ௫௬௦

உரைசெய்தகருவுக்கு னிடைக்கிடைதானப்பா
உத்தமனேபொடிசெய்து மூன்றோலாட்டு
கரைசெய்யப்புடம்போட்டு பனியில்வைக்க
கடிதானசெயநீராம் வீரம்பூரம்
உரைசெய்யப்பொடியாக்கி நீரில்போட்டு
ஓகோகோகருகுகிற முறைமைக்கேளு
பரைசெய்துநீரைவிட்டு ரசத்தைபாட்டி
பரிவாகயெடுத்துநன்று புருட்டிக்கொள்ளே. ௫௬௧

உருட்டியேதாவடமாகக்கொண்டு
உத்தமனேயைந்தெழுந்து மெட்டெழுத்துமோது
மருட்டியதைச்சித்தர்கள்தான் பார்ப்போமென்று
வாங்கியேவாயிலிட்டு வோடிப்போவார்
நெருட்டியதையொளித்துவிட்டால் மார்க்கமேது
நேரானகெவுனசித்தி யோகமேது
தெருட்டியேகுளிகைதனை யறிந்துகொண்டால்
திறமானநேமநிஷ்டை தெளிந்துபோற்றே. ௫௬௨

போற்றவேபொர்த்தொட்டி வைப்பைக்கேளு
புகழானதங்கத்தால் மேருபண்ணி
மாற்றவேசிலைமண்தான் விலகச்செய்து
மகத்தானசூதமது பலந்தானெட்டு
ஏற்றவேரெண்டுபலஞ் சுத்தகெந்தி
இயல்பானகெந்தவோட்டில் கெந்தகத்தையுருக்கி
தோற்றவேசூதத்தை விட்டுக்கிண்டு
துடிநின்றசூதமது கரிப்போலாமே. ௫௬௩

கரியானசூதத்தில்வெடியுப்புப் பலந்தான்
கனமானதாளகமும் பலந்தான்போட்டு
உரிபானபொடிப்பண்ணி யெருவில்போட்டு
உத்தமனேகுப்பியின்வாய் சில்லிட்டுமூடி
பரிவானவாலுகையின் மேலேவைத்துப்
பாங்காகத்தீமூட்டி பன்னிரண்டுசாமம்

தெரியானகெந்தகத்தின் லயச்சிக்கண்டால்
சில்லதனைத்தள்ளிவிட்டு சிலாக்கையிட்டுகிண்டே. ௫௬௪

கிண்டையிலேயடிக்களிலே மருந்தில்லாட்டால்
கெட்டிதான்பதமென்று தீயைமாற்றி
சண்டையிலேயாறவிட் டொருசர்மந்தான்
சாதகமாய்யிரும்பான குறட்டினாலே
மண்டையிலேகுப்பிதனை வெளியாய்வாங்கி
மாத்தானதண்ணீரைத் தேத்தியாற்றி
பண்டையிலேயிரும்பான கத்திகொண்டு
பக்குவமாய்மேலோடு பிரம்பாய்வாங்கே. ௫௬௫

வாங்கியேயோட்டின்பேர் பொற்றெட்டியாச்சு
மருவியேமேலோடி பதங்கிற்றிநின்றால்
ஓங்கியதோர்நடுவில்நின்றால் கறியுமாச்சு
உத்தமனேமூக்கில்நின்றால் கரண்டகமாச்சு
தாங்கியதோரித்தனையு மொவ்வொன்றாய்ப்பார்த்து
தந்தரமாய்வெவ்வேறா யவைத்துக்கொண்டு
ஆங்கியேயித்தனையு மறியவேண்டி
அறியாதபேர்களுக் கமைத்துக்கொள்ளே. ௫௬௬

அமைத்திட்டார்நூல்களிலே யறைப்பில்லாமல்
அறியாதபசங்களுக்கு வறியவென்று
குமைத்திட்டமுத்துபோ லொருக்கயற்றில்
கோர்த்தென்னகொடிக்கொம்பு வகைக்கோர்போல
கமைத்திட்டநூல்களுமோ மெத்தவுண்டு
சமுசியங்களெண்ணாதே யிதுபோலில்லை
எமைத்திட்டபிள்ளைகட்கு வுகந்துசொன்னேன்
எண்ணூற்றைப்பார்த்தவர்க ளெண்ணலாமே. ௫௬௭

ஆமின்னாதத்தைச் சொல்லக்கேளு
ஆச்சரியம்நாகமது பலந்தான்பத்து
ஓமின்னாகத்தைத் தடுத்துவாங்கி
ஒழிந்தமயில்கொன்றையிலை யரைத்துக்கொண்டு
தாமிந்தகடுமேல் பொதிந்துமூடி
சார்வாகப்புடம்போட்டு யெடுத்துக்கொண்டு
காமின்னமிப்படியே பத்துவிசைபோட்டு
கார்த்திகையின்கிழங்கிலே பத்துவிசைபோடே. ௫௬௮



போடப்பாவெருகினுட கிழங்குபலம்பத்து
பொடியானபுளிநடலைக் கிழங்குபலம்பத்து
நாடப்பாயினவெடுத்து வுருக்கிக்கொண்டு
நலமானகிண்ணியைப்போல் வார்த்துக்கொண்டு
ஊடப்பாநேர்வாள தயிலம்வாங்கி
உத்தமனேசாரமது காசுமஞ்சு
நாடப்பாதுருசுமது காசுமஞ்சு
நலமானகல்லுப்புக் காசுமஞ்சே. ௫௬௯

## தாம்பிரசுன்னம்.

காசுதானஞ்சாகு சினமஞ்சு
கலந்திந்தயிடையெல்லாம் யிருபத்தஞ்சு
மாசுதான்சூதமது யறுபதாகும்
மகத்தானகல்வத்தி லிட்டுக்கொண்டு
ஆசுதான்நேர்வாளத் தயிலத்தாலே
ஐந்துநாளரைத்துநன்றாய் பில்லைதட்டி
வாசுதான்அயத்துக்கே குளித்துதப்பா
வாகாக்கிண்ணியைத்தான் பதித்திடாயே. ௫௭௦

பதித்திடுவரைத்துநன்றாய் சீலைசெய்து
பாங்ொசமுன்னுரைத்த மெழுகினாலே
நிதித்திட்டுயிலுப்பைநெய்யால் விளக்கையேற்றி
நேராகவிளக்கெரிப்பாய் மூன்றுநாள்தான்
கொதித்திட்டுரசுமெல்லாம் பதங்கமேறும்
கூறுதங்கபதங்கத்தைக் கத்திகொண்டுவாங்கி
விதித்திட்டுநவலோகம் நூற்றுக்கொன்றீய
விரைந்ததுவும்பணமிரண்டு மாற்றுமாமே. ௫௭௧

மாற்றுரைத்துசிங்குவைப்பைக் கேளுகேளே
மருவியதில்காயசித்தி யோகசித்தியாகும்
கூற்றானயென்மனம்போல் சுருக்குமெத்த
கொடியவிச்சூதத்தை நிமைக்குமுன்னேகொல்லும்
மாற்றானகாரீயப்பொடிப் பலந்தான்பத்து
மகத்தானபொடிதானும் ரெண்டரைப்பலந்தான்
நீற்றானகத்தின்பொடி பலந்தான்பத்து
நெல்லிக்காய்கெந்தகந்தான் பலமும்பத்துபோடே. ௫௭௨

பத்துடனேவெடியுப்பு பலமுமைந்து
பாங்கானதாளகமும் பலமும்நாலு
கொத்துடனேகுதிரை பாஷாணமூன்று
கொடிதானசாராயம் விட்டுஆட்டி
சித்துடனேலோகமெல்லாங் கரையுமட்டும்
சிறப்பாகவாயிலிட்டு பொடியாய்ப்பண்ணி
முத்துடனேகாசியென்ற மேருக்கேற்றி
மூதண்டாவாலுகையில் வைத்திடாயே. ௫௭௩

வைத்திட்டுத்தீயெரிப்பா யெட்டுநாள்தான்
மறவாமல்ராபகலாஞ் சாமமட்டும்
நைத்திட்டுவடியிலே தானேநிற்கும்
நலமாகயாறவிட்டு வுடைத்துவாங்கி
கைத்திட்டுகம்பியா மருணன்போல
கட்டியாயிருக்குமப்பா யெடுத்துக்கொள்வாய்
பைத்திட்டுயிதினுடைய வறட்டினாலே
பத்துயுகமாட்டியல்லோ கரைக்காணேனே. ௫௭௪

கரைக்காணரெத்தசிங்கி பலந்தான்பத்து
கல்யிதுக்குள்சூதமது பலமும்பத்து
உரைக்காணசூதமது பலந்தானஞ்சு
உகந்துநின்றவெடியுப்புப் பலந்தானஞ்சு
மரைக்காணதாளகமும் பலந்தானொன்று
மகத்தானசிலையது பலமுமொன்று
புரைக்கானஅவரிச்சாற் விட்டுவிட்டு
பேரானநாள்மூன்று மயத்தாலாட்டே. ௫௭௫

அயமூன்றுநாளரைத்துப் பொடியாய்ப்பண்ணி
அப்பனேகாசியென்ற மேருக்கேற்றி
நயமுடனேவாலுகையின் மேலேவைத்து
நாட்டியேதீமூட்டி மூன்றுநாள்தான்
பயமுடனேயாறவிட்டு வுடைத்துவாங்க
பாங்காகயேமமென்ற சிங்கியாச்சு
வியமுடனேநாள்வீச மிடையேயுண்ணு
மேனியுமோதங்கநிற மாகுந்தானே. ௫௭௬

தங்கநிறமானக்கால் மேனிதானும்
சாவேதுகோவேது கர்ப்பகாலம்



பங்கநிறப்பெண்மாய்கை தன்னைநீக்கி
பாஷாணம்புளியுப்பை தள்ளிவிட்டு
சங்கநிறமாகவுந்தான் பாலிலுண்ணு
சாவென்றதும்பொய்யாது யுகந்தவரைநிற்கும்
கொங்கைநிறைவாகவுந்தான் நவலோகத்தில்
கோதித்திடவேபதினாறு மாற்றுமாமே. ௫௭௭

மகத்தானமிருதாரு சிங்கிவைக்க
மாணாக்கள்சொல்லுகிறேன் மகிழ்ந்துகேளும்
மகத்தானகாரீயம் ரெண்டுபத்துபலந்தான்
வாகானதுரிசிநாலி லொன்றுக்குள்
முகத்தானகெந்திக்கு பாரிவெடியுப்பு
முயர்ச்சியாய்ப்பொடிபண்ணி வைத்துக்கொண்டு
செகத்தானயீயத்தை சட்டியிலேயுருக்கி
சிறப்பாகபொடியிட்டு வைத்திடாயே. ௫௭௮

வைத்திடவேபொடிபோலே யீயமாகும்
மாசற்றபொடியல்லாங் கல்வத்திட்டு
நைத்திடவேகலையத்தி லரைவாசியிட்டு
நேராகமேல்மூடிச் சீலைசெய்து
கைத்திடவேயடுப்பேற்றி பன்னிரண்டுசாமம்
கல்மலம்போல்தீயைவிட்டு வுடைத்துவாங்கி
மைத்திடவேபார்த்தாக்கால் கம்பிபோல
மாசற்றமிருதார சிங்கமாமே. ௫௭௯

ஆமப்பாபாஷாணமுப் பத்திரண்டு
அப்பனேவைப்பதனைச் சொல்லிப்போட்டேன்
ஓமப்பாசித்தர்சொன்ன நூலைப்போல
ஒளித்துவைத்தசூத்திரத்தைச் சொல்லவில்லை
நாமப்பாகருவெல்லா மாராய்ந்துபார்த்து
நலமாகவொவ்வொன்றாய் பார்த்துக்கொண்டு
சேமப்பாஎண்ணாற்றில் சிக்கில்லாமல்
சிறப்பாகவெளியாகத் திறந்திட்டேனே. ௫௮௦

திறந்திட்டேன்சிவயோகச் சித்தரெண்ணி
சீராகப்பிழைக்கவென்றால் திருவிளத்துக்கொப்பாய்
திறந்திட்டேன்நாதாக்கள் சொல்லைக்கேட்டு
தேகசித்தியாகவென்று லோகத்தோர்கள்

திறந்திட்டேன்மவுனசித்தி கெவுனசித்தி
திறமாகமுனிவர்க்குஞ் சித்தற்கென்று
திறந்திட்டேன்தேவியுட பூசைக்காக
சிவசொத்தைவருமைபோ லுண்டிடாயே. ௫௮௧

வருமைபோலுண்டிடவே வாதம்பாரு
மதத்தேறியதிகமா யுண்டிடாதே
வருமைபோலுலகத்தில் திரிந்துக்கொண்டு
மகத்தானகரிமுகரே தெண்டுபண்ணு
வருமைபோல்திரிந்துகொண்டு நாட்டிலுள்ளோர்
மணமிருந்தவன்றுயிர்க்காய் மனதுநண்ணி
வருமையாய்மனதிலுள்ள வதிசெயத்தைப்பாரும்
மகாமூலிசமரசாணம் வகைத்திடாயே. ௫௮௨

## பாஷாணவைப்பு.

ஐகையேழுபாஷாணம் வைப்புதன்னை
மைந்தனே முப்பத்திரண்டுதாது
துகையுங்கேள்மலைகளெல்லா முண்டுவுண்டு
சுணங்களுய்த்திரியாதே வுட்புகுந்துபாரு
நகையேழுபாஷாணம் பேருதன்னை
நகையானநாகமொடு மூன்றுசூதம்
இவையேழுவரிதாரங் கெந்தகமும்வீரம்
எழிலானவகைநடந்தால் ப்ரதாளந்தானே. ௫௮௩

தானென்றயமுர்தமொடு சிரணந்தொட்டு
சங்கபாஷாணமொடு குரம்பல்கெவுரி
பானென்றபலனறுத்த பாஷாணந்தான்
பரிவானசரகண்ட லிங்கபாஷாணம்
தேனென்றதாளகமும் பாஷாணத்தோடுஞ்
சிலையோடு கல்பாஷாணந்தானும்
மூனென்றநல்லான பாஷாணத்தோடு
முத்தமனேகச்சால பாஷாணமாமே. ௫௮௪

ஆமென்றவஞ்சென பாஷாணத்தோடு
அப்பனேசிராங்க பாஷாணமாகும்
வேமென்றகாஞ்சிலை பாஷாணந்தான்
வெள்ளையொடுயப்பிரக பாஷாணமாகும்



தாவென்றாசித பாஷாணமாகும்
தங்கமாமலைவர்ண பாஷாணந்தான்
கோமென்றயலைதோறு முண்டுமுண்டு
கூறியதோர்பெரியோரை வணங்கக்கேளே. ௫௮௫

கேழ்க்கையிலேயாருடைய வர்க்கமென்றால்
கெடியாலமூலவைரக் கலங்கினார்கள்
தாக்கயிலேகாலாங்கி மைந்தர்போகர்
சார்வானசீஷரென்று சொல்லக்கேட்டு
மீழ்க்கையிலேசந்தோஷங் களைத்துமுன்னை
வேண்டியதோர்பாஷாண மூலிகையுமீய்வார்
வாழ்கையிலேவீடுசுற்றும் வேட்டநாய்போல
மாய்த்ததேவுள்ளடக்கால் வாதம்போமே. ௫௮௬

வாதமுந்தான்வாய்த்ததென்று யெண்ணவேண்டாம்
மகத்தானசிவனுடைய தெரிசினைபொக்கும்
நாதமென்றசிலம்பைபோல் கேழ்க்கபண்ணு
நாதாக்களருகிருந்து வளைத்தேசொல்லும்
கீதமென்றபாஷாணந் தளுக்குமாகும்
கெடியானலங்கிர்த பாஷாணமாகும்
நீதமென்றசிங்கியைத்தான் செம்புபண்ணு
நிலவரமாய்பதினாறு மாற்றுமே. ௫௮௭

சிங்கியென்றசெம்புக்கு தண்ணீர்மிட்டான்
திறமானப்படிச்சாறு தண்ணீர்வாங்கி
அங்கியென்றசிங்கியைத்தான் பொடியாய்பண்ணி
அயச்சட்டிதன்னில்வைத்து சுருக்குபோடும்
மங்கியென்றபொடிப்போலே வைத்துப்போடு
மாசற்றதண்ணீர்மிட்டான் கிழக்குவாங்கி
கெங்கியென்றபொடிப் பொடியாய்சீவிவைத்து
கெடியாகநிழலுலர்த்தி தயிலம்வாங்கே. ௫௮௮

வாங்கியேதயிலத்தால் வாட்டியாட்டி
மறவாமல் மூன்றுநாளாகுமட்டும்
யேங்கியந்தவெண்காரங் கூடவிட்டு
யெடுத்திட்டுமூசைக் குகைதன்னிலூது
தாங்கியந்தமணியணியாய் செம்பேயாகுந்
தாங்கியேகரடெல்லாம் தயிலத்திலாட்டி

தேங்கியந்தமுன்போல மூன்றுதிரம்ஊது
சிவசிவாசிங்கியென்ற செம்புமாச்சே. ருஅகூ

சிங்கியென்றசெம்பாலே சுன்னக்கோடி
திறமானசெந்தூரங்களங் கங்கோட்டி
தாங்கியென்றசெம்பெடுத்து தழில்லங்கூட்டி
சார்வானதகடாக்கி சூதங்கெந்தி
ஙங்கியென்றசாற்றரைத்து தகட்டில்பூசி
நலமாகமூன்றுபுடம் போட்டெடுதது
தேங்கியென்றநவலோகம் நூற்றுக்கொன்றீய
திறமானமாற்றதுவும் பனிரண்டாமே. ருகூ௦

## அயச்செம்பு.

ஆமென்றஅயச்செம்புச் சொல்லக்கேளு
அயத்தாலேகீழ்மூடி மேல்மூடிச்செய்து
போமென்றதுருசதவும் பலந்தான்ரெண்டு
போக்கானகெந்தியது பலமுமொன்று
காமென்றசூடனது பலமுமுக்கால்
காரமாம்வீரமது காசுமஞ்சும்
சாமென்றபொடிப்பண்ணி அயத்தில்போட்டு
சம்பிரப்பழச்சாறு தினமும்வாரே. ருகூக

வார்த்தல்லோஅயமெல்லாம் நீராய்ப்போகும்
வாகானமருந்தோடே சுரண்டிவாங்கி
யேர்த்தல்லோசுண்ணும்பு முப்புயநேரே
யிடித்தல்லோமருந்துக்கு கவசங்கட்டி
பார்த்தல்லோரவிதனிலே காயவைத்துப்
பாங்காகயெருவடிக்கிப் புடத்தைப்போடு
வார்த்தல்லோபுடம்போட்டு யெடுத்துக்கொண்டு
வகைப்படியேகுகையிலிட்டு வுருக்கிடாயே. ருகூஉ

உருக்கிடவேசெம்புக்கு கொடுத்தாயானல்
உத்தமனேமாற்றஞ்சு காணுங்காணும்
மருத்திடவேதங்கமிட்டு கொந்தியிட்டு
வாதியென்றச்சூதமிட்டு செந்தூரித்தால்
முருக்கிடவேமகிழம்போல் நிறமுமாகு
முலையர்னபற்பமு கிராகாது



பருக்கிடவேபத்துக்கு குறையாதப்பா
பாரிரதசெந்தூரங் குன்றியூன்றே. ருகூங

ஊனென்றபூரனகச் சத்துக்கேளு
முத்தமனேசெம்மணலில் பூரனகந்தான்
கானென்றமயிடத்தின் சாணிதன்னை
கலந்தெடுத்துபிசைந்துநன்றாய் தட்டிபோடு
மானென்றகாய்ந்தபின்பு பாண்டத்தில்போட்டு
மறவாமல்மூகியே யெடுத்தெடுத்து
நானென்றசாம்பலைத்தான் காடிவிட்டு
நலமானதெளிவையெல்லா நிறுத்துப்போடே. ருகூச

இறுத்திவிட்டுயடிவண்ட லூற்றப்பார்த்தால்
இதமர்கப்பளிச்சென்று மின்னக்காணும்
மறுத்துவிட்டுகாரத்தை விட்டுதோய்க்க
மாசற்றசெம்பெல்லாம் புடத்துக்கொள்ளும்
கருத்துவிட்டுக்காரத்தை விட்டிருக்க
கண்விட்டுயாடியல்லோ செம்பாய்நிற்கும்
அறுத்திவிட்டகுளிகைக்கு முந்திமுந்தி
அப்பனேயுருக்கையிலே யிச்செம்பைத்தாக்கே. ருகூரு

தாக்கிட்டால்குளிகைக்குத் தீவரமேயில்லை
சார்வானசற்றெல்லா முட்கொள்ளாது
தாக்கிட்டால்கெவுனசித்தில் சுருக்கோடாது
தனித்துமின்னலிடிதனக்குஞ் சுத்திபோகும்
தாக்கிட்டால்சந்திரக் குளிர்ச்சியாலே
சஞ்சரிக்கவொட்டாது குளிர்ச்சிகாணும்
தாக்கிட்டாலக்கினியில் காந்திதானும்
தாக்கியல்லோகாரணம்போ லாட்டினரே. ருகூசு

ஆட்டினதோர்செப்புக்கு நாலிலொன்று
அப்பனேதங்கமிட்டுத் தகடுதட்டி
ஓட்டினதோர்சூதமொடு சிலையுங்கெந்தி
உத்தமனேதாளகமும் வீரஞ்சேர்த்து
நாட்டினதோர்மூன்றுபுடம் போட்டெடுத்து
நலமாகப்பாச்சிறையே யேலேபூசி
பாட்டினதோர்மூன்றுபுடம்போட்டெடுக்கப்
பாங்காகப்பத்துக்கு வோடும்பாரே. ருகூஎ

ஓடுமேபடிகத்தின் செம்புசொல்வேன்
  உத்தமனேவெகுசுளுவு வோடும்வேதை
பாடுமேபடிக்கக்கல் பொடியாய்ப்பண்ணி
  பண்பாகப்பொடிபண்ணி சேரைநாலு
ஆகுமேயாவரை வேரின்பட்டை
  அப்பனேமறுதோன்றி வாகைநெல்லி
தேடுமேபூவரசு மருதங்கொல்லி
  சிறப்பானகிளுவைபொடு வுணர்வோர்தானே. ௫௯௮

தானென்றகருவேலுந் தங்கிபூலா
  சார்வானயிரும்பூரல் கடுக்காயோடு
வானென்றயிவ்வகையின் பட்டையெல்லாம்
  வளமாகசமபாகம் நிறுத்துக்கொண்டு
கோனென்றவுரலிலிட்டு யிடித்துநெய்யில்
  கொடியதோர்பாண்டத்தில் தண்ணீர்விட்டு
பானென்றயெட்டிலொன்றாய் காச்சிகொண்டு
  பக்குவமாய்வடிந்தறுத்து பாண்டத்திலூற்றே. ௫௯௯

ஊத்தியப்படிக்காரஞ் சேருவென்று
  வொளிவானகெந்தகந்தான் பலமுநாலு
மாத்தியபின்தாளகமும் பலமும்ரெண்டு
  மாசற்றதுருசுமது பலமுமநாலு
சாத்தியபூனீறு பலமும்ரெண்டு
  சாதித்துஆதளையின் பாலினாலே
யேத்தியபின்கியாழத்தில் கூடவிட்டே
  யெலியாலம்பால் சேருகூடவாரே. ௬௦௦

வார்க்கவேநல்லெண்ணெய் நாலுசேரு
  வளமாகக்காச்சியெல்லாம் குழம்புபண்ணு
யோர்க்கவேகலசம் வார்த்துக்கட்டி
  யிச்சையாய்ப்படிக்காதின் மாவிலேதான்
தேர்க்கவேஅரைத்திடுநால் சாமமட்டும்
  தெல்லுபோல்வில்லைபண்ணி சரவுலையில்வைத்து
பார்க்கவேதுருத்தியிட்டு யிருபுரமூதது
  படிகமதுசெம்பாகும் பண்பாய்வாங்கே. ௬௦௧

வாங்கியேசெம்பெல்லாம்யெடுத்துக்கொண்டு
  வளமாகதறடெடுத்து தயிலத்திலாட்டி



பாங்கியேமுன்போலே யைந்துதிறமூது
  பருவமாய்செம்பெல்லா மெடுத்துக்கொண்டு
ஓங்கியேகுளிகைக்கு செம்புயிய
  ஓடுகிறகெவுனத்தில் யிருளெல்லாந்தீர்க்கும்
தாங்கியேயிச்செம்பை ரசத்திலீய
  சார்வாகப்பன்னிரண்டு மாற்றுமாமே. ௬௦௨

மாற்றானபடிக்கத்தைப் போலேயப்பா
  வளமாகசங்கத்தளை செம்புபண்ணு
கோற்றானகுளிகைக்கு கொடுத்தாயானால்
  கொடுவேகமாடையிலே நாதம்பண்ணு
நாற்றானதுவிளைந்தல் நல்லான்போலே
  நலமானசங்கத்திலுஞ் சத்திராதே
மூற்றானமூதேவி விட்டுப்போவாள்
  முழங்கியதோர்தங்கத்தை செந்தூரித்துண்ணே. ௬௦௩

உண்ணவேவர்க்கத்தின் செம்புதன்னை
  உயர்ச்சியாய்பலம்பத்து நிறுத்துக்கொண்டு
கண்ணவேலுவிரலிக் கொரட்டைகோவை
  கடிதானமுசுமுசுக்கை மணத்தைக்காளி
வண்ணவேயமுக்கிரா யறுகுதானும்
  வளமாகசமபாகம் நிறுத்திக்கொண்டு
திண்ணவேகிழுலர்த்தி பூப்புடத்திலப்பா
  சிறப்பாகயுலர்த்தியல்லோ கலசத்தில்வையே. ௬௦௪

வைப்பானவெண்காரம் பலந்தாநாலு
  வகையானதுருசுமது பலந்தாநாலு
மெய்ப்பானகெந்தகந்தகந்தான் பலமுநாலு
  மேலானகலவாரி லொக்கப்போடே
கைப்பானதயிலத்தை வார்த்துஆட்டு
  கணக்கவோர் சாமமதுபில்லைக்கட்டி
பொய்ப்பாகப்போகாமல் சாவுலையிலூது
  போக்காகமணிமணியா யிறங்கும்பாரே. ௬௦௫

இறங்குகின்றசத்தெல்லா மெடுத்துக்கொண்டு
  எளிதாககாட்டுக்குமுன் மருந்தகூட்டி
அறங்குதயத்தயிலத்தா லரைத்தெடுத்து
  அடவாகபில்லைதட்டி சரவுலையிலூது

தறங்குகின்றசர்றெல்லா மெடுத்துக்கொண்டு
சார்வாகமுன்போலே வுருக்கிப்பாரு
உறங்குகின்றயானையைப்போல் சற்றுவேகம்
ஒருநொடிக்குள்சூதமது விரைந்துபோமே. ௯௦௬

போமென்றசூதத்தில் தங்கஞ்சேர்த்து
புகழாகநாகமிட்டு கெந்தியிட்டு
ஆமென்றவாலுகையில் செந்தூரித்தால்
வருணனைப்போல் செந்தூரமாகும்பாரு
ஓமென்றநவலோகம் நூற்றுக்கொன்றீய
ஒளிவானபதினாறு மாற்றுகாணும்
தாமென்றசெந்தூரங் குன்றியுண்ணு
சதகோடிவருஷமது நாளுமாமே. ௯௦௭

ஆமென்றஇவைசிறந்த சத்துக்கேளு
வப்பனேபலம்பத்து நிறுத்துக்கொண்டு
வோமென்றகாரமது பலந்தானஞ்சு
ஒய்ந்துநின்றகெந்தியது பலந்தானஞ்சு
தாமென்றகலவத்தி லிதனைப்போட்டு
சாதித்து அரவிப்பூச் சாற்றினாலே
தேமென்றவில்லைதட்டி யுலரப்போட்டு
சிறப்பாகசரவுலையில் வூதிடாயே. ௯௦௮

ஊதிடவேயுருக்கியெல்லாம் சத்தாய்வீழும்
முயர்ந்துநன்றாயாராய்ந்து பிசரிக்கொண்டு
காதுடவேகாட்டெல்லாம் முன்போலாட்டி
கலங்காதேதுருத்திக்கொண்டு கடுகவூது
சோதிடவே அய்ந்திரம் யுருக்கித்தீரு
குறிப்பானசத்தெல்லாம் யொன்றாய்ச்சேர்த்து
வாதிடவேகாரமிட்டு வுருக்கியாட்டி
மைந்தனே தங்கமிட் டிதற்குவாரே. ௯௦௯

தங்கமிட்டுதகட்டின்மேல் பூசக்கேளு
வண்மையாய்சூதமது தாளகமுங்கெந்தி
பங்கமிட்டுதரிசயிடை நிறுத்துக்கொண்டு
பரிவானகல்லிட்டு முலைப்பாலாட்டி
தங்கமிட்டதகட்டின்மேல் பூசிப்பூசி
திடியாகமூன்றுபுடம் போட்டெடுத்து



நங்கமிட்டநவலோகம் நூற்றுச்கொன்றீய
நலமானமாற்றதுவும் பன்னிரண்டாமே. ௯௧௦

ஆமென்றவுலகத்தோர் வாதந்தேடி
ஆராய்ந்துசரக்குகளை பார்த்துப்பார்த்து
பாமென்றயிதனாலே சிலபேர்கள்தான்
யத்துப்பேர்கூட்டங்கள் கூடிகூடி
நாமென்றரோசிதனை தானம்பண்ணி
கலநதுநின்றசாத்திரத்தை மறைத்துப்போட்டு
நாமென்றசெயநீரா லப்பாநீயும்
நலமானசாறுவிட்டு அரைப்பார்பாரே. ௯௧௧

அரைத்துமேபுடம்போட்டு பரயிலேவைத்து
ஆத்தாளைசெயநீரு வாச்சுதென்பார்
நிறைத்துமேபுடம்போட்டு சரக்கைகூட்டு
நேராகவாச்சுதென்று லோகந்தீய்ந்து
கரைத்துமேசெம்பைவிட்டுத் திராவகத்தை
குத்திகசடற்றஆதியே யுரைத்துப்பார்த்து
மறைத்துமேநால்மாற்று வாச்சுதென்று
மயங்குவாருலகத்தில் சண்டிதானே. ௯௧௨

சண்டிகள்தான்மெத்தவுண்டு வுத்தமர்களப்பா
சடமானகுடும்பத்திலே யொருவன்பொன்னைச்சேர்த்து
மண்டியேகடைதனிலே யுரைத்துக்காட்டி
மனதுநொந்துபோட்டாயோ என்றுசொல்லி
தண்டியே வொருகாசும்ரண்டுகாசும்
சார்வாகபின்னென்று பார்ப்போமென்பார்
அண்டியேநான்போட்டேன் நீபோட்டாயென்றும்
அலறியேசண்டையிட வழக்கம்பாரே. ௯௧௩

வழக்கிட்டுசண்டையிட்டு பின்னொருவன்வந்து
வாதியொருபரதேசி வநதாநப்பா
நழக்கிட்டுதொழில்செய்துகடையில் வைத்தான்
நான்பார்த்தேன்வெகு சுறுக்குநீயும்பாரு
அழகிட்டுவொன்றோடே யொன்றுசேர்த்து
அமர்த்தியேபுடம்போட்டு புகைந்துபோகும்
புழகிட்டுவிம்படியே சாகுமட்டும்
புலம்பியேயிறந்தவர்கள் கோடிதானே. ௯௧௪

இறந்திட்டசித்தர்கள் சாதிஞானி
   யியலானசாத்திரத்தை யாராய்ந்துபார்த்து
மறந்திட்டகுருவையெல்லா மனதிலெண்ணி
   மகத்தானபெரியோர்க்குத் தொண்டுபண்ணி
திறந்திட்டகுருசொன்ன மொழிப்படிக்குச்
   சுச்சிவயோகமார்க்கநெறி செல்வதற்கு
அறந்திட்டஆத்தாள்சொல் லுறுதிகேட்டு
   அவள்சொன்னபடிசொல்வார் பெரியோர்தாமே. ௬௧௫

பெரியோர்களென்றுசொன்ன மொழியேதுக்கு
   பேரின்பசாத்திரத்தி லுரைத்ததாலே
பெரியோர்களாவதுதானே தென்றாக்கால்
   பேரானகற்பமுண்டு காயசித்திசெய்து
பெரியோர்களாவது யென்னவென்றால்
   பேரின்பகடல்தன்னையே நீக்கநன்று
பெரியோர்கள்குருபதத்தை மறவாமலென்றும்
   பேசாமலூமை போலிருப்பார்தாமே. ௬௧௬

பாரப்பாகிர்மூட வர்திகட்கு
   பலியாதுயேமமென்ற வித்தைதானும்
நேரப்பாபொய்சொல்லும் புலையருக்கு
   நிச்சயமாய்க்காணுகிற யோகம்பொய்யாம்
சேரப்பாகர்மமென்ற சாமிக்குத்தானும்
   செயலானகாயசித்தி சேரப்பொய்யாம்
தூரப்பாகுருசொன்ன மொழிமறந்து
   துட்டருக்குசகலநூலெல்லாம் பொய்யே. ௬௧௭

பொய்யென்றுவாதத்தைச் சொன்னானாகில்
   போக்கோடேயேழுஜென்மம் புலையனாவான்
பொய்யென்றுபூசையைத்தான் தூஷித்தாக்கால்
   போகமூவேழு வங்கிஷம்பாழாம்
பொய்யென்றுயோகத்தைச் சொன்னானாகில்
   பிறந்திடுவான்கழுதையென்ற ஜென்மமாக
பொய்யென்றுகவனசித்திக் கொள்வானாகில்
   பூலோகம்பரலோகம் பாழுமாமே. ௬௧௮

பாழாகும்வையசத்தி பானந்தன்னை
   பாதையாய்ச்சொன்னவர்க்கு வலுவுண்டாம்



கூழாகுங்கஞ்சிக்கு யேங்கியேங்கி
   கொடிதானபெரு வயிறுபிழைப்புமெய்தி
மீழாகுங்குன்மமது வலித்துக்கொண்டு
   மேகமெய்திநகையெய்தி வீடுதோறும்
நாளாகுமிரப்புண்டு தான்கொடுத்து
   நமனுக்குபகையெய்தி நகையெய்துவாரே. ௬௧௯

எய்தவேசாஸ்திரமாம் சாற்றக்கேளு
   இதமானஆதலையின் பாலைச்சேரு
கொய்யவேயெருக்கம்பால் சேரைரண்டு
   கோழிமுட்டைவெண்கருவுஞ் சமனாய்ச்சேர்த்து
பையதுவேவெண்காரம் பலந்தானைந்து
   பகருகின்றகெந்தகமும் பலந்தானாலு
கையவேதுருசுமது பலந்தான்மூன்று
   காட்டுவாய்தாளகமும் பலமும்ரண்டே. ௬௨௦

இரண்டெல்லாம்பொடியாக்கி யிதனில்போட்டு
   நேர்ப்பானபன்றிநெய்யுஞ் சேரவிட்டு
பண்டெல்லாஞ்சட்டிக்குள் தானேவார்த்து
   பக்குவமாயடுப்பேற்றி யெறித்துவாங்கி
கொண்டல்லோதருணம்பார் பதத்திறக்கி
   கொட்டியே கலயத்தில்கட்டி வைத்து
துண்டெல்லாஞ் சதிரமாம்வேதிதன்னை
   துவளவரை யெணசாமம்விலைகட்டே. ௬௨௧

வில்லைகட்டிசாவலையில் போட்டூது
   மேலானசத்தெல்லாங் கழன்றுவீழும்
கல்லைகட்டிசத்தெல்லாம் பொருக்கிக்கொண்டு
   சத்தெடுத்துதயிலத்தி லரைத்தூது
பில்லைகட்டியைந்துதரமூதவூது
   சிறப்பாகசத்தெல்லா மொன்றாய்ச்சேர்த்து
முல்லைகட்டிகாரமிட்டு வுருக்கினாக்கால்
   முத்துப்போல்வெளுப்பாகும் சத்துமாமே. ௬௨௨

சத்தேதுபலமொன்று நிறுத்துக்கொண்டு
   தங்கமதுஎளுக்கு நூன்றுபோடு
பத்தெடுத்துகந்தகர்தை ரெண்டுபலம்போடு
   பாங்காகக்கல்வத்தில் பொடியாய்ப்பண்ணி

வித்தெடுத்துக்கல்வத்தில் பொடித்துக்கொண்டு
விருமபியேகையானசாற் றன்னாலாட்டு
மத்தெடுத்துவந்திமல்லி சாற்றிலாட்டி
வகையாகப்பெட்டிபண்ணிக் குப்பிக்கேற்றே. ௬௨

குப்பிக்கேயேத்திட்டு வாலுகையில்வைத்து
கூசாதேபன்னிரண்டு சாமந்தீயைப்போடு
குப்பிக்கேசூரியன்போல் சிவந்துகாணும்
குறிப்பாகப்பணவிடைதான் தேனிலுண்ணு
சிப்பிக்கேயுடல்போலக் கண்முட்டைதள்ளும்
தேசிபோல்நடப்பதற்கு வலுவுண்டாகும்
அப்பிக்கேயாயிரத்துக் கொன்றுவீய
அறுபதென்றமாற்றகும் அறிந்துகொள்ளே. ௬௨

கொள்ளென்றஅண்டத்தோடு சத்துகேளு
குன்றிமணித்தோல்போக்கிப் படிதானென்று
வள்ளென்றரோமமது பலந்தானபத்து
வானையுடகந்தகத்தின் தூள்தான்பத்து
தெள்ளென்றமயிலிடத்தின் குழம்புத்தூள்பத்து
சிறப்பானகுங்கிலிகம் பலந்தான்பத்து
முள்ளென்றமுசலெலும்பு பலந்தான்பத்து
முயற்சியாயெருக்கம்பால் வார்த்தாட்டே. ௬௨

ஆட்டியேயைந்துக்குள் வில்லைபண்ணி
அழகானபூப்புடத்தில் தயிலம்வாங்கி
பூட்டியேகல்வத்தில் கட்டிவைத்து
பொரிக்கெடுத்தமுரட்டைதோல் பலமும்பத்து
நீட்டியேகல்வத்தில் பொடியாய்ப்பண்ணி
நினைவாகவெண்காரம் பலமுமைந்து
தீட்டியேவீரமது பலமுமொன்று
சிறப்பாகக்கூடயிட்டுத் தயிலத்தாட்டே. ௬௨

ஆட்டியேமூன்றுநாள் வில்லைதட்டி
அசங்காமலைந்துதரம் ஊதவூது
பூட்டியேசத்தெல்லாம் பொருக்கிக்கொண்டு
பொரிகாரமிட்டுருக்கி யொன்றாய்ச்சேர்த்து
வாட்டியேநாலுக்கு ஒன்றுதங்கம்
மருவினின்றுவுருக்கையிலே கூடவிட்டு



கூட்டியேகாரமிடை மிகவேயிட்டு
குறையாமல்கெந்தியிட களங்கமாமே. ௬௨௭

ஆமிந்தகளங்கெடுத்து நவலோகத்திலஞ்சு
லைஞூற்றுக்கொன்றிடவே யைம்பத்தைந்தாம்
வாமிந்தபொன்னதுவும் பச்சைபோல்காணும்
வைப்பாருக்குப்பியிலே செந்தூரித்துண்ணும்
சேமிந்தசடந்தானும் பச்சைநிறமாகும்
தேகமெல்லாம்பொருச்சிப்போ லுந்திகாணும்
காமிந்தகற்பாந்தர கோடிகாலம்
காலனுமேயணுகாமல் சித்தியாகும். ௬௨௮

சித்தியாம்வெகுசனவு நாகபற்பந்
திறமாகக்கேளுங்கோள் மாணக்காளே
பத்தியாநாகமது பலந்தான்பத்து
பகருகின்றயிலுப்பைநெய்யில் சாரம்போட்டு
முத்தியாய்மூவாறு திறந்தான்சாய்த்து
முழியாமல்தகடுதட்டி புளியிலைபோல்நறுக்கி
சுத்தியாங்கடுகுஒரு பலந்தானைந்து
காரமாமிளகாயில் பலமுமஞ்சே. ௬௨௯

அஞ்சானஅபினைந்து பலமுந்தூக்கி
அழகானஎலுமிச்சம் பழச்சார்விட்டு
துஞ்சானமூன்றுநாள் நெகிழரைத்து
துடியாகவழித்தெல்லாங் குழம்பாய்வைத்து
பிஞ்சானதகடுக்கு பூசிப்பூசி
பேரானவாகையுட பட்டைவாங்கி
தஞ்சானபிடித்துநன்றாய் தகடுவைத்து
சார்பாகமேல்மூடி புடத்தைப்போடே. ௬௩௦

மூடியேசீலைசெய்து அவிர்ப்புடமாய்ப்போட்டு
முயர்ச்சியாய்ப்பத்துவிசை போட்டெடுத்து
ஆடியேவிளக்கெண்ணை விட்டுருக்கி
அப்பனேநாலுகிண்ணி பண்ணிக்கொண்டு
நாடியேகிண்ணிநின்ற சூதமப்பா
நலமானதாளகமுஞ் சரியாய்க்கூட்டி
தேடியேதேசிச்சார் விட்டரைத்து
சிறப்பாகக்கிண்ணிதனி லுள்ளேபூசே. ௬௩௧

பூசியேவாலுகையில் சட்டிவைத்து
  பொருந்தவேமணலிட்டு அடியில்தானும்
நேசியேயதின்மேலே வுப்பையிட்டு
  நினைவாகக்கிண்ணிதன்னை பதித்துவைத்து
தேசியேயெலுமிச்சம் பழச்சார்தானும்
  சிறப்பாகவெறியிட்டு சுருக்குப்போடு
மாசியேபதினைந்து நாள்தானதீயை
  மறவாமல்போட்டிடுவாய் ராப்பகல்தானே. ௬௰௨

தானனஎலுமிச்சம் பழச்சார்தானும்
  சாதகமாய்வழித்தெடுத்து சுருக்குப்போடு
பானனபதினைந்து நாள்தான்சென்றால்
  பக்குவமாயெடுத்துவைத்துப் பிங்கானுக்குள்
கானுமல்லிகைப்பூப்போலேயிருக்கும்
  காச்சுதடாசெப்பிலே நூற்றுக்கொன்று
கோனனமெழுகோட்டி கொடுத்தாயானால்
  குறையாதேபன்னிரண்டு மாற்றுமாமே. ௬௰௩

ஆமப்பாதுருசியது பலமுமூன்று
  அழகானதாளகமும் பலமுமொன்று
வேமப்பாகள்ளிப்பால் வார்த்தரைத்து
  விளங்கவேமூன்றுநா ளாகுமட்டும்
நாமப்பாகுன்றிப்போல் உண்டைபண்ணி
  சார்வானவெள்ளியம் பலந்தானாலு
போமப்பாகுகையில்நின்று வுருகும்போது
  போ கானவுண்டையெல்லாங் கிராசயபோடே. ௬௰௪

போட்டேனேயெல்லாந்தா னுருப்பின்பு
  பொடிபண்ணசாரத்தாள் மேலேபோட்டு
வாட்டேனேகற்றாழைச் சோற்றில்சாய்த்து
  வளமாகவேழுதரம் முருக்கிச்சாய்ப்பாய்
பூட்டவேவங்கத்தில் சமனாய்வெள்ளி
  பொலிவாகவுருக்கியல்லோ கிண்ணிவார்த்து
மாட்டேனேகிண்ணியிடை சூதம்வீரம்
  மருவியதோர்வெள்ளையென்ற பாஷாணந்தானே. ௬௰௫

தானிந்தமருந்தெல்லாங் கல்வத்திட்டு
  தனியானயெருக்கம்பால் வார்த்தாட்டி



பூனிந்தமருந்தெல்லாங் கிண்ணிக்குள்பூசி
  பேரானவாலுகையின் மேலேவைத்து
ஆனிந்தவடுப்பேற்றி பட்சமொன்று
  வாறுமலெரியிட்டு அப்பால்வாங்கி
தோனிந்தபிங்கானி லெடுத்துவைத்து
  தோளசமாங்குருவாகும் நூற்றுக்கொன்றீயே. ௬௰௬

ஈவதுதான்வங்கத்தில் செம்புநூற்றில்
  எடுத்துப்பாரிருபத் தைந்துமாற்று
ஆவதுதான்சூதமது வெள்ளியாகும்
  அதிகமாம்பித்தளை வெள்ளியாகும்
தோய்வதுதான்நாகமது தங்கமாகும்
  துடியானவெள்வங்கம் நீரும்வாங்கும்
தேவாதுதான்வித்தைச் சுருக்குமாகுமெத்த
  சிவசித்தர்சொன்னார் கரைகாணாரே. ௬௰௭

கரைகாணாசாஸ்திரங்கள் மெத்தவுண்டு
  காரணமாங்காலாங்கி நாதர்தாமே
நிரைகாணாரேமூலட்சம் விரித்துச்சொன்னார்
  நேர்ப்பாகவிரிவையெல்லாம் பார்த்துப்பார்த்து
வுரைகாணச்சூத்திரமாய்ச் சுருக்கியப்பா
  னூர்ப்பனமாந்தொழிலையெல்லாஞ் சொன்னேனானும்
பகைகாணாயென்னாலே பொய்யென்றெண்ணி
  பாழாகும்நரகத்தி லெய்துவாரே. ௬௰௮

எய்துவர்கள்கோடி நரகத்தில்தானும்
  ஏனமென்றபிறப்பாகச் சபிப்பாளாத்தாள்
ஐவதுதான்வாதம்பொய் யென்றுசொன்னா
  லாகாரவங்கிஷங்கள் குடும்பமெல்லாம்
நைவதுதான்நாசெய்தும வெண்வமயாகும்
  நாதாக்கள்பெரியோர்க ளிட்டசாபம்
கொய்வதுதான்யாராலுந் தீர்க்கக்கூடா
  கொடுஞ்சித்தரிஷியிட்ட சாபந்தானே. ௬௰௯

தானுகுங்குருவுடைய பதத்தைப்போற்றி
  சமுசயமாயிருந்ததெல்லாங் கேட்டுகேட்டு
கோனுகுங்குருசொல்ல வாதம்பார்த்து
  குருவில்லாதிருந்தாக்கால் நாலைப்பாரு

ஆனைநூலில்லான் வாதம்பார்த்தால்
அனுகாதவாதமொன்று தலைகீழாகும்
தேனனசூதத்தில் தூபம்பட்டு
திபங்கியேநரகெய்தி மாளுவாரே. கூச௦

மாளாமல்கனமான கற்பமுண்டு
வாயைத்தான்பூசைபண்ணி மயக்கம்போக்கி
தாளாமல்வாசியைத்தான் பூட்டைவாங்கி
சாதகமாய்க்குருபதத்தில் சரணம்பண்ணு
ஆளாமலம்பலத்தில் மனதையூன்றி
ஆனந்தமாவதற்கு அமுதமுண்ணு
மீளாமல்கெவுனத்தி லேறவென்றால்
விடுச்சூதமனவசிக்குண மருந்துகேளே. கூசக

கேளுநீயானையென்ற சூதாரசன்
கெவுனத்தில்பறக்குகின்ற மார்க்கமெல்லாம்
வேளுநீதருசத்தி லேமமாகும்
விளங்கியதோர்பகலிரவு மொன்றாய்க்காட்ட
தாளுநீயிமைக்குமுன்னே சோடிகாதம்
சஞ்சரித்தவர்களெல்லாந் தாண்டியேற
மீளுநீயட்டமா சித்தியாட்ட
மிகுந்தவடவாக்கினிபோல் பசியுண்டாக்கே. கூசஉ

ஆக்குவதுசூதமது கையில்நின்று
அம்மணியாயுருக்கையிலே பூநாகஞ்சேர்த்து
நோக்குவதுசமனாக் கொடுத்துவாங்கி
நேராகப்புடம்மிட்டு விடுவித்தாக்கால்
தேக்குவதுசூதமென்ற ரசாவுக்குத்
தீவரமாபாலம்போல் பசியுண்டாகும்
நீக்குவது அதனைப்போல் நினைத்ததெல்லாம்வெல்லும்
நெரிப்பூத்தகெந்தகத்தை யிடித்துத்தாண்டே. கூசங

தாண்டியபின்னுபச ரங்களெள்ளாமூட்டு
தனித்தபின்புமூல கையில்சாற்றைவிட்டு
தீண்டியபின்தனி த்தங்கேசெம்பையூட்டு
சிறப்பானநவலோக மிட்டுத்தீரு
வாண்டியபின்நவபுடந்தா னன்றாய்யிட்டு
மகிழ்வாகமணிபார்த்தால் வருணன்போலாம்



தூண்டியபினிலவளவு கடந்துயேற
சுகமாகச்செப்பையினி சொல்லக்கேளே. கூசச

சொல்லுவேன்குகைக்குள்ளே மருந்துபூசி
துடியானசிலைகெந்தி நிமிளைகண்டு
கொல்லவேபூநாக மிளைவைத்தான்சூதம்
கொத்தாகசமபாகம் நிறுத்துக்கொண்டு
கல்லவேகஞ்சாவின் விரையினோடு
காலவேரோமத்தின் றயிலம்வார்த்து
பல்லவேமூன்றுநா ளாட்டிக்கொண்டு
பக்குவமாய்ரோமத்தின் றயிலம்வாரே. கூசரு

வார்த்துமேயரைத்துநன்றாய்க் குகையில்பூசி
வீரானகட்டினதோர் சூதம்வைத்து
ஏர்த்துமேபுடந்தானுஞ் சொல்லக்கேளு
யெழிலானகுக்குடமா மூன்றுபோடு
போர்த்துமேபுடம்போட்டு யெடுத்துக்கொண்டு
போர்வானசித்திர மூலந்தானும்
கோர்த்துமேதோடையொடு முள்ளாங்கிதானும்
கொடிதானநாயுருவி யமுரிகூட்டே. கூசசு

கூட்டுநீபுரசோடு தேவதாளி
கொடிக்கள்ளிபுனல்முருங்கை சதிரக்கள்ளி
மாட்டுமேயெள்ளோடு புறுவினேச்சம்
மகத்தானபதினைந்தும் வெவ்வேறேவாங்கி
தீட்டுநீவெவ்வேறாய்ச் சுட்டுச்சாம்பல்
திறமாகவகைக்குவகை படியளந்துபோட்டு
மூட்டுநீபாண்டத்தில் கொட்டிநீயும்
மூன்றுதரம்பதினைந்து படியும்வாரே. கூசஎ

படியஞ்சுகோமயத்தைக் கூடவாரு
பாங்கானகழுதையொடு குதிரைஆனை
கெடியஞ்சுஆட்டோடு நாலுகேளு
நிலவரமாயிப்படியே யஞ்சுக்கு
கொடியஞ்சுபடிதானும் நாற்பத்தஞ்சு
கூசாதேசாம்பலுக்குள் கரைத்துவைத்து
தடியஞ்சுமூன்றுநாள் தெளிவைவாங்கி
சாதகமாயடுப்பேற்றி யெரித்திடாயே. கூசஅ

எரித்திட்டுக்குழம்புபோல் வருதல்கண்டு
இணங்கனேபரிகனக சந்திரனுப்பு
விரித்திட்டுகல்லுப்புச் சத்திசாரம்
மேலானநவாச்சார மெவாச்சாரந்தான்
எரித்திட்டுவெண்காரம் சவர்க்காரந்தான்
இயலானகெந்தியுப்பு வளையலுப்பை
சரித்திட்டுகடல்நுரையு மன்னபேதி
சார்பானதுருசோடுபூநீறுதானே. ௬௮௯

தானனவகைக்கொன்று பலமுமைந்து
சார்வாகபொடிபண்ணி குழப்பிலிட்டு
பானனபாஷாண நிலைக்கேளு
பரிவானகெந்தியொடு சங்குசுன்னம்
தேனனவகைவகைக்கு வொருபலந்தான்
சிறக்கவேயெருக்கமபால் படியேவாரு
கானனகுழம்பதிலே வொக்கவிட்டு
கலரவேவடுப்பேற்றி மெழுகுவாங்கே. ௬௯௦

வாங்கியபீங்கானில் பதனம்பண்ணி
வளமானநெற்குழியில் புதைத்துவைத்து
பாங்கியேபட்சத்தின் பிறகுவாங்கு
பரிவாகபுடதாச னென்றுபேரு
தேங்கியேகோபமா மருந்தினர்க்குஞ்
சிங்கமாங்கொடுஞ்சனூர் வாதனர்க்கும்
கோங்கியேகொடுங்காலம விஷமதாகும்
குளிகைக்குபுடந்தானும் சுருக்கம்பாரே. ௬௯௧

பாரென்றபுடந்தானுஞ் சாத்திரத்துள்ளே
பலபலவாய்ச்சொன்னர்கள் நாதாக்கள்சித்தர்
கோனென்றதிருமூலராயிரத்தில் சொன்னர்
திறமாகக்காலாங்கி சொல்லைக்கேட்டு
தேனென்றவெழுநூற்றில் திறந்துசொன்னேன்
திறமாகநான்செய்பு மார்க்கமாகு
மானென்றயாகாசம் வீதியோட்டில்
மயங்காமல்சிறுபிள்ளை யோடும்பாரே. ௬௯௨

பாரிந்தருதம்நின்று வுருகும்போது
பதங்காதேசமபாகம் சத்தையூட்டு



பூனிந்ததமாம்பார்த்து சத்துபத்துத்தானும்
பொலிவாகயுருக்கையிலே புடமொன்றுபோட்டு
வானிந்தசித்தினி மனுடராசையெல்லாம்
வப்பனேபலபலவா வண்ணங்கானும்
கோனிந்தருதத்தை நிறுத்துப்பார்க்க
கொடிதானமணியிடையே நிற்குமென்றே. ௬௯௩

எண்ணவேபுடத்துக்கு யேதுவொப்பு
ஈசனுடபுடந்தானும் தோற்றுப்போகும்
மன்னவேமணித்தாயார் சொன்னல்யானும்
வகைவகையாசோதித்துப் பார்த்துக்கண்டேன்
சன்னவேயுவசரங்கள் நூற்றிரண்டுபத்து
சராசுரங்கள்முதலிருபத் தஞ்சுபண்ண
பண்ணவேபாஷாண மறுபத்துநாலும்
பாங்கானநவலோக நவரெத்நமூட்டே. ௬௯௪

ஊட்டியிப்படிதான் சாரணையேசெய்யில்
ஒன்றுச்சுகெவுனமது நூற்றுக்கோடு
மூட்டியேமறுதிரந்தான் விடுவித்தாக்கால்
மூன்றுபத்துசகஸ்திரமாங் காதமோடும்
ஆட்டியேமூன்றுதாம் விடுவித்தாக்கால்
அப்பனேலெட்சமாங் காதமோடும்
பூட்டியேநாலுதிரம் விடுவித்தாக்கால்
புகழாகநாலுலட்சம் மோடிப்போமே. ௬௯௫

போமென்றேயஞ்சுதிரம் விடுவித்தாக்கால்
பொருந்தியொருகோடிக்கு யோடும்பாரு
காமெனவேயாரார பரிசவேதி
கரண்டியே யெழுதிரங்கடந்துயேறு
தாமெனவேலெக்கங்கள் சொல்லப்போகா
தாண்டவனர்லோகத்தில் தெரிச்சுவேதை
நாமெனவேகாண்கிலாஞ் சித்தம்வேதை
நண்ணியேயுனதிகிலோ வேதையாமே. ௬௯௬

வேதையென்றுசெம்பிடிலோ வேதையாகும்
விளங்கிடவேவென்றால் பழுக்கும்வேதை
காதையாங்குளிகைதன்னைக் காத்தில்தைத்துக்
கருதியேயுரப்பாகில் பொன்னுமாகும்

மாதையாய்பொன்னென்று வுன்னெஞ்சிலுன்ன
மலைகளெல்லாய்பொன்னுமே மக்காள்பாரு
பாதையாம்பகலிரவு யொன்றாய்ப்போகும்
பார்பத்தாய்சிவன்வாது பாசிப்பாரே. ௫௫௭

பாருநீயுபசரங்கள் தூற்றிரண்டுரத்து
பாஷாணவர்க்கங் ளறுபத்துநாலு
வாருநீலவணவகை யிருபத்தஞ்சும்
மகத்தானமூலிகையின் சத்துகூட
கோதுநீவலோகம் நவரத்தினங்கள்
குறிப்பாகுள்கைச்சு குடுக்கிலாடும்
ஆடுநீவிடுவித்தால் சகடுமாச்சு
யறிந்தபடிசெய்வீரால் நாலுமாமே. ௫௫௮

ஆமிந்தமார்க்கமாய் சூதத்திற்கு
வனைத்தனைந்து சத்துகளை யீவானாகில்
போமிந்தகெவுனம்பொய் சித்தும்பொய்யாய்
போகமட்டும்கண்டனைத்து புழுத்துசாவான்
காமிந்தயுபசரங்கள் பொன்னேயாச்சு
கடுமச்சூர்றுசாங்க செகப்பணிந்தால்
தாமிந்தப்பூகமுடன் சூதங்சேரு
தனிவேலையாத்தாளும் பதியக்கேளே. ௫௫௯

கேளுநீபனிரண்டாங் குளிகைதன்னை
கெடியானகருவியொடு போகந்தன்னை
வாளுநீரண்டுக்கும் நவலோகப்போதும்
மற்றமற்றகுளிகைதன்னை வித்தேயேறும்
வேளுநீசத்துகளை யூட்டுவூட்டு
விடுவித்துசாரணை தான செய்யாவிட்டால்
தாளுநீகெவுனமது விடுபடாது
தனித்துமேபாரிசத்தில் வேலையெண்ணே. ௫௬௦

எண்ணவேசாரணையை திறமாச்செய்யில்
எடுத்தோடுமண்டமெல்லாம் பதமுந்தாண்டி
பண்ணவேரிஷிகோடி சித்தர்கோடி
பருதியிலேசணங்களெல்லா மசங்கிப்போகும்
தண்ணவேகுளிகையினால் மேல்கொண்டோடுஞ்
சந்திரனிலோடையிலே நடுக்கங்காணும்



மண்ணவேகுளிகையினால் குளிரும்போகும்
மாயமாஞ்சுரூபமெல்லாம் வெளியாய்ப்போமே. ௫௬௧

வெளியானசூதத்தைக் கட்டாவிட்டால்
விறைந்தேறஞானமெல்லாம் பொய்யாய்ப்போகும்
ஒளியானயோகமது பாழாய்ப்போகும்
மூர்ப்பனமாங்காயசித்தி யொன்றுமாகாத்
துளியானவாசாரக் குறியுமில்லை
தொடுகையிலேபேதிக்கும் யேமமில்லை
நெளிதானமனதாலே யோகம்பார்த்தால்
நிர்மூடஞானியென்று சொல்வார்பாரே. ௫௬௨

பாரப்பாமூலவன்னி துலங்கினுக்கால்
பனிச்சென்றுவாறுதலம் வெளியாப்போகும்
நேரப்பாமேலேறும் வெளியாய்ப்போகும்
நெரிப்பானவட்டசித்தி கூறுங்காணும்
சேரப்பாபராபரையின் சியலுங்காணும்
சேர்ந்தவன்னிநிர்க்களமும் வெளியாய்ப்போகும்
ஆரப்பாநீராகத் தடங்கினேக்கும்
ஆதியந்தநாமமது வுரைக்கத்தானே. ௫௬௩

உரைக்கவேஉளித்திக்கி யிரைகுடாமல்
உளுக்கார்ந்துஅக்கினிதான் மந்தித்தப்போ
பரைக்கவேஅசனத்தைப் பரிக்கினேற்கும்
பகலூங்கியிரவுதனில் விழிக்கத்தாலும்
புரைக்கவேபுலால்தனையே பொசிக்கலாலும்
புணர்ச்சியினின்மயக்கத்தால் பொருந்தலாலும்
யிரைக்கவேகடுஒட்டம் ஓடினாலும்
மெய்திடுமென்றுளமாந்தை யிசைக்கலாமே. ௫௬௪

இசைக்கவேவூவாந்தை நாலதாகும்
இதினுடையநாமத்தை யியம்பக்கேளு
வசைக்கவேவாதை ஊமாந்தையோடு
மருவகின்றபித்த ஊமாந்தையாகும்
திசைக்கவேசெத்த ஊமாந்தையோடு
சியலானதொக்கவூ மாந்தையாகும்
அசைக்கவேகாலினிடை யாண்மைதன்னை
அசாத்தியசாத்தியமென்று யறிந்துவுண்ணே. ௫௬௫

உண்ணவேஉருநெஞ்சு பழுக்கபக்கம்
உருமிகினைவழிந்திருமி உறக்கநொந்து
துண்ணவேபஞ்சுபோல் சுரமுந்தோன்றி
சீழ்கட்டியாய்ப்பழுத்து சிதறிவீழும்
திண்ணவேசிலேட்டுமந்தான் மீறிக்காணும்
செரிக்காமல்அசனந்தான் திரும்பிவீழும்
கண்ணவேகாரையிலே கசப்புக்காணும்
கருகுமேவாதளவு மாந்தைகாணே. ௬௬௬

காணவேமிகத்திரண்டு கீழ்வயிற்றில்
கட்டியாய்மிகப்பொருமிபுண் போல்நொந்து
ஊணவேஉடம்பெங்கும் உளைச்சலாகி
உரைப்பானதலைவலியும் சுரமுங்காணும்
யீணவேயிருமலொடு சீயுமுண்டாம்
இரைப்பாகிமிடறெல்லாம் புண்ணுமாகும்
பேணவேமயக்கமொடு பிரட்டலாகும்
பித்தஉளமாந்தையென்றே பேசலாமே. ௬௬௭

பேசமாயுடலுருகி புழிந்தாப்போலே
பெலமானமேனியெல்லாம் புண்போல்நொந்து
வாசமாய்வாயிலே சீயுமுண்டாம்
மனமருக்கிசத்தியொடு மயக்கமாகும்
நாசமாய்சிலேத்துமம் நடுக்கிலாகி
நலங்கியேபஞ்சுபோல் மிகவெளுக்கும்
ஆசமாய்அய்யவுள மாந்தையென்று
அவனியுள்ளோர்தங்களுக்கு அறியக்கூறே. ௬௬௮

கூராகத்தலைவலியும் சுரமுந்தோன்றி
குணங்கெட்டயிருமலொடு கோழையுண்டாம்
ஊராரசஉறக்கமது கோழையாகும்
உறுதியாய்சீழ்விழுந்து நாற்றமுண்டாம்
கூராகயடிவயிறு குத்தலாகும்
குமுறியேதலைவலியு மிடியுமுண்டாம்
தூராகசடமெங்கும் தினவுண்டாகும்
தொந்தவுளமாந்தையென்று செப்பலாமே. ௬௬௯

செப்பியதோர்அசாத்தியத்தைச் சொல்லக்கேளு
தேர்ந்தவுளமாந்தையொடு சிலேத்துமந்தான்



வப்பியதோர்வாதவுள மாந்தைதானும்
மகாவவிழ்தம்தன்னாலும் வசப்படாது
தப்பியதோர்பித்தளவு மாந்தைதானும்
கனவவிழ்தமதன்னில் காரியமுவாகும்
ஒப்பியதோர் ஆயுருவேதத்தில்தானும்
ஒன்றுபொய்போகாது வுரைத்துப்பாரே. ௬௭௦

பாரென்றசயமதுதான் பனிரெண்டாகும்
பண்பானகாசமது பனிரெண்டாச்சு
ஊரென்றவுளமாந்தை நாலுமாச்சு
உகப்பாசயிருபத்து யெட்டுமாச்சு
காரென்றயிதுவெல்லாஞ் சயத்தில்கூட்டு
காரணமநந்தேரணமா முனிதான்சொல்ல
ஊரென்றபோகர்முனி பார்த்துதேர்ந்து
உலகத்தோர்க்காக யெண்ணிவுரைசெய்தேனே. ௬௭௧

உரைசெய்தபெரும்பாடு நால்தானாகும்
உகந்துமேவாதத்தின் சீரால்மாகும்
பொரைசெய்தபித்தத்தின் சீரால்வொன்று
போரானசேத்துமத்தின் சீரால்வொன்று
துரைசெய்ததொந்தமாஞ் சீரால்வொன்று
துகையெல்லாநாலுவித சீரால்வாச்சு
கரைசெய்தயிதினுடைய உற்பத்தியெல்லாம்
கண்டபடிசொல்லவே கருதிடாயே. ௬௭௨

கருதியேகனமான கொடுமைசெய்து
கணவனைநிந்தாட்சை சொன்னபோக்கும்
பருதியின்மலசத்தை விட்டபேர்க்கும்
பரதேசிஏழைகளை பழிக்கின்றோர்க்கும்
குருதியேயிறைக்கின்ற காலந்தன்னில்
கூசாமல்புருஷங்கை பண்ணினோர்க்கும்
சுருதியேபலபோகம் விரும்பினோர்க்கும்
சுருக்கில்பெரும்பாடுவந்து பவிக்குந்தானே. ௬௭௩

தானென்றகெர்வங்க ளிருக்கையாலு
சண்டாளகோபத்தால் சபிப்பினாலும்
ஊனென்றமாங்கிஷங்கள் பொசிக்காலும்
உறக்கமாமுழிதலா லழித்தியா

பானென்றபசியின்றி பொசிக்கலாலும்
பாரமாம்சுமைதாங்கல் பசர்தலாலும்
கூனென்ற முடக்குதாங்கில்
கொடூரமாமபெரும்பாடு கூடுந்தானே. சுஎச

கூடுமேதலைவலியுமேலக் கடுப்பீதானும்
கூறுனமுதுகிடுப்புச் சலுண்டாம்
மாடுமேதிரேகமெல்லாங் கருகலாகும்
மாதவிடாய்தரித்துமே மயந்தன்போலா
ஊடுமேவயறூதி உடச்சலுண்டாம்
ஊத்துமேசென்னிற முங்கருகலாக
தேடுமேதற்கெந்தஞ் சேரவொட்டா
செகமறியவாதத்தின் சிராவமாமே. சுஎரு

அரமென்றஅன்னத்தை யிரங்கொட்டாது
அழுகின்றமஞ்சல்நிறம் போலேஊத்தும்
வேமென்றயோனியிலே வேக்காடுண்டாம்
மேனியுமோபெத்துமே மிருக்குப்போகும்
காமென்றகாங்கையும் அழுத்தலாகும்
கருகமாய்க்கட்டிபோல் உதிரம்வீழும்
தேமென்றசிருக்கும் அங்கமெல்லாம்
சீறியதோர்பித்தத்தின் சிராவமாமே. சுஎசு

ஆகுமேவெள்ளைநிற மாகஊத்தும்
அழலானநாதந்தான் மிகஉண்டாகும்
வேகுமேஉடம்பெங்கும் பூதிபூர்க்கும்
வெண்ணதணலாய்உடம்பெங்கு மெரிச்சலாகும்
பாகுமேபடபடப்பு மூச்சுமுண்டாம்
பாரமாங்கோழையொடு யிருமலுண்டாம்
தேகுமேஅடிக்கடிக்கி மயக்கமாகும்
சிலேத்துமத்தின்சிறுவமென்றே செப்பலாமே. சுஎஎ

செப்பவேகருகலாய் சிகப்புமாகும்
சேர்ந்ததிலேகட்டியாய்க் கறுப்பாய்வீழும்
உப்பவேவயறதும் உளைச்சலாகும்
ஊசலாநாற்றமுடன் ஒழுக்குமாகும்
நப்பவேமஞ்சள்நிற கயப்புமாகும்
நாணியேதலைதானும் நடுக்கலாகும்



துப்பவேவாய்நீரும் மிகவேஊறும்
தொந்தமாரும்பெம்பாடு சூட்டினேமே. சுஎஅ

சூட்டினதோர்அசாத்தியத்தைச் சொல்லக்கேளு
சிலேத்துமமாம்பெரும்பாடு தொந்தசீராவம்
பூட்டினதோரிதிலொன்றும் பிசைக்கொடாது
புகழானசாத்தியத்தை புகலக்கேளு
வாட்டினதோர்வாதத்தின் பெரும்பாடோடும்
வகையானபித்தத்தின் சிராவந்தானும்
தீட்டினதோர்மருந்துக்குள் சியமுமாகும்
செப்பரியதோர்நூலை தெளிந்துபாரே. சுஎகூ

தெளிந்ததோர் கல்லடைப்பு உற்பத்திகேளு
சிறிதுநீர்ள்துடங்கியே மேகந்தன்னால்
தளிந்ததோர்சலப்பையி லுதிரந்தோய்ந்து
சத்துருசத்தாகவே பருத்துக்கொள்ளும்
வளிந்ததோர்வாதபித்தங் கோபித்தாக்கால்
வத்துபெருங்கல்லாய் வழியடைந்து
களிந்ததோர்நாலுவிதங் கல்லடைப்பி
நண்பானவரலாறு நாட்டக்கேளே. சுஅ0

நாட்டமாய்க்கற்பழிந்துக் கடமைவாங்கி
நலிபண்ணிக்கொடாமலே வழக்குபேசி
கூட்டமாய்குருவுடைய கடமைதன்னை
கொடாமலேகைக்கொண்டு தவடுபண்ணுங்
தோட்டமாயிடுப்புவலி வதிங்காணுங்
திடமானசத்துவலி பிலத்துக்காணும்
காட்டமாங்குடைச்சலொடு விக்கல்காணுங்
காலாந்தரகல்லடைப்பில் கலங்குவாரே. சுஅக

கலங்கினதோர்தண்ணீர்தான் குடித்தபேர்க்கு
நல்லெழும்புமயிர் மணந்தான்சலந்தி
அலங்கினதோர்அன்னங்கள் அருந்தலாலும்
அழுகலொடுமுதிர்பாண்ட மருந்தலாலும்
மலங்கினதோர்மாப்பாண்டம் அருந்தலாலும்
மந்தத்தில்வாயு பதார்த்தந்தன்னை
துலங்கினதோருசிதன்னில் வைத்தாலும்
சுருக்காய்கல்லடைப்பு வந்துதோன்றுந்தானே. சுஅஉ

தோன்றியதோர்காசினுட நாமங்கேளு
சுறுக்கானவாதத்தில் கல்லடைப்பு
பூண்டியதோர்பித்தத்தின் கல்லடைப்பு
புரண்டதோர்சேத்துமத்தின் கல்லடைப்பு
தான்றியதோர்தொந்தமாங் கல்லடைப்பு
திரேகத்தில்பத்தியே சிலதுகாலம்
தான்றியேகலப்பையில் வந்திழிந்து
சருவியேலிங்கத்தில் தரிக்குந்தானே. ௬௮௩

தரித்துனுபிக்கிழ்சுருக் காய்குத்தி
சலமலந்தான்வீழாமல் தம்பமாகி
வருந்துமேலிங்கத்தில் வலியுமாகி
மருவியதோர்பொதியெல்லாஞ் சுரந்துசட்டி
திரித்தியேகிடைகுடா பிரட்டலாகி
தேம்பியேமூச்சுமாய் வயறுமுப்பும்
உரித்தோர்சதையெல்லாம் உளைவுமாகும்
ஓங்கியதோர்வாதக்கல் லடைப்புதானே. ௬௮௪

அடைப்பாகிசலந்தானு அருவலாகி
அயங்காச்சிசெருக்கிறைப் போலேநோகும்
புடைப்பாகிபொத்தியங்கும் புழுக்கமாகி
பூட்டுப்போல்பிருவாகி பிரட்டலாகும்
மடைப்பாகிஉதிர்நிறமாய் கல்லுமாகி
வந்திழிந்துலிங்கத்தில் மாட்டிக்கொள்ளும்
குடைப்பாகிக்குத்தலாய் குடைச்சலாகி
கொட்டுமேபித்தக்கல் லடைப்புதானே. ௬௮௫

தானுனதொப்புளிலே வில்லைப்போல
சழுங்காமல் சுரந்துமேசத்தேருத்தும்
ஏனுனகாலோடு கைகாள்சந்து
இடுப்புத்தான்குடைச்சலாயிசுவுகாணு
வேனுனலிங்கத்தின் வென்றுதன்னில்
விருவிரென்றே கடுப்பாவேர்வைகாணும்
தேனுனவெறுப்புக்கல் சிருகல்லாக
சிக்கலாய்வந்திறங்குஞ் சிலேத்துமந்தானே. ௬௮௬

வந்திறங்குநீர்த்தாரை யடியில்தானும்
மகவருத்தமுண்டாகி வலியுமாகி



நொந்திறங்கிநீர்தானும் யருவிட்டாயும்
நோய்தானுஞ்சிறுமணல்போல் நொருங்கிக்கல்தான்
சந்திறங்கிநீர்வழியில் வந்துவீழும்
தாக்கானசிறங்கைக்கல் தினமொன்றுக்கு
அந்துறங்கித்தினந்தினமு மிழிந்துகொல்லும்
தொந்தமாங்கல்லடைப்பு சூட்டிடாயே. ௬௮௭

சூட்டிட்டசாத்தியத்தை சொல்லக்கேளு
சுளுக்காகும்வாதத்தின் கல்லடைப்பு
பூட்டிட்டபித்தத்தின் கல்லடைப்பு
புகழானசேத்துமத்தின் கல்லடைப்பு
மூட்டிட்டயிதுமூன்றுஞ் சாத்தியமாகும்
முனையானமருந்துகளில் செம்மையாகும்
தோட்டிட்டதொந்தமாங் கல்லடைப்பு
தொடிசாவேகொல்லுமிது சூட்சந்தானே. ௬௮௮

சூட்சமெல்லாஞ் சிவன்சொல்ல
துரியமாந்நதிசொல் லந்தமந்திரிசொல்ல
ஆட்சமெல்லாமயசுவனியாந் தேவர்சொல்ல
அதீதமாம்விசுவனியும் யகஸ்தியர்சொல்ல
பூட்சமெல்லாம்புலத்தியர்தான் தோரர்சொல்ல
புளித்துபோகர்முனி தானுஞ்சொல்ல
தீட்சமெல்லாம்செகததோர்கள் பிழைக்கவென்று
செப்பினேன்சகலருக்குந் தெரியத்தானே. ௬௮௯

தெரியவேசிரிஷ்சத்தின் செயலைதானுஞ்
செப்பவேநாலுவகை சீருமாகும்
உரியவேதாதமூர்த்திரக் கிரிட்சமாகும்
உகப்பானபித்தமூத்தரக் கிரிட்சமாகும்
பரியவேசேத்துமமூத்திரக்கிரட்சமாகும்
பாங்கானமேகமூத்திரக் கிரிட்சமாகும்
காயவேகிரிட்சந்தா நாலுமாகும்
காட்டமாய்வுற்பத்தி நவிலக்கேளே. ௬௯0

நவிலவேகுருவியரைத் துரோகம்பண்ணி
நடுகிலேகைவிட்டு நழுவினோர்க்கும்
குவிலவேகுழந்தைகள்தான் பசித்திருக்க
கூடவேவைத்துண்ணுஞ் கொடுமையோர்க்கும்

தவிலவே தவிச்சுவந்த பேர்களுக்கு
  தாகந்தான் தவிழ்க்காத சண்டாளருக்கும்
கவிலவே மூத்திரமாங் கிருட்சம்வந்து
  கலக்குமென் றுமாமுனிவர் கருதினாரே. ௬௯௧

கருதியேமாப்பண்டம் கதித் துவுண்ணல்
  காலங்கள்மாரியேமிகப்பொசித்தால்
பருதியேபகல்தனிலே ஸ்ரீசங்கிக்கள்
  பகல்தனிலேபல்கொள்ளல் பகலுறங்கல்
நிருதியேநிசிதனிலயற் பினங்கள்செய்தல்
  நிந்தையாம்லாகிரிகள் ளிபுரம்பவுண்ணல்
வருதியேயக்கினியில் சஞ்சரித்தல்
  மகத்தானகிரீடத்தில் மருகுவாரே. ௬௯௨

மருகவேமேகம்வந்து வுற்பவித்தால்
  வளத்தானபிதன்னில் துன்மாங்கிஷஞ்சிக்கி
துருகவேசுக்கிலத்தால் மாகிஷமுத்தி
  சுழண்டுமேஸ்தம்பித்து வாய்வுதன்னால்
சிறுகவேசிறுனீர் வீழ்ந்துதலானசிக்கு
  திரேகமெங்குந்துளைத்துமே கடுப்புமாகும்
அருகவே துன்மாங்கிஷம் கறுப்பாய்வீழும்
  அருக்குமேவாதத்தின் கிரிட்சந்தானே. ௬௯௩

தான்மூத்திரமஞ்சனித்து மிகச்சிவக்கும்
  தளர்ந்துமேமைகாலும் பசதியாகும்
பானருகிச்சிருகாலாய் யருவிப்பாயும்
  பாரமாம்குதகமண்டலம் லிங்கந்தானும்
கானவாய்தான்மீறி வயறுவுப்பும்
  கலகலென் றுயிரைச்சலாய் கசகியேறும்
வேனலாய்வாயுலர்ந்து மிரட்சியாகும்
  விடுப்பித்தமூத்திரத்தின் விபரந்தானே. ௬௯௪

விபராமாய்வற்றியண்டம் குதம்வலிக்கும்
  மேனியுமோவெளுப்பு நிறமிக்கக்கண்பச்சை
திபராமாய்க்கிறுகிறுத்து தியக்கமாகும்
  திரேகமெல்லாமிகக்கடுப்பு சொரிச்சலாகும்
அபராமாயரிக்கினீர் பெரிச்சலாகும்
  அடிக்கடிக்கிநீர்கசிந்து மலேச்சலாகும்



நிர்பரமாய்லிங்கத்தில் கூச்சலுண்டாம்
  நீட்சானசிலேத்துமத்தின் கிரிட்சந்தானே. ௬௯௫

கிரிட்சமாயரிக்கரிக்கி வெள்ளைகாணும்
  குத்துமேநீர்தாரை யடியில்தானும்
புருட்சமாய்பிரரவெச்சம் போலேவீழும்
  பிடுங்குமேபடிவயற்றில் புழுக்களூர்ந்து
விருட்சமாய்வெள்ளைதான் கசிச்சடிக்கும்
  விம்பும்போதுடல்வுச்சி மயிரைத்தூக்கும்
குருட்சமாங்குதலிங்கம் வேக்காடுண்டாம்
  குமருமேமேகத்தின் கிரிட்சந்தானே. ௬௯௬

மேகத்தின்கிரிட்சந்தான் பித்தக்கிரீட்சம்
  மிகரெண்டுகுணமாகி விரைந்துபோகும்
திரேகத்தில்யிதுரெண்டுஞ் சாத்தியமாகி
  சியமானமருந்தினால் திரும்பலாகும்
வாகத்தின்வாத மூத்திரக்கிரிட்சம்
  மருவுகின்றசேத்தும மூத்திரக்கிரிட்சம்
பாகத்தினிதுரெண்டும் யசாத்தியமாகும்
  பாடுபட்டுந்திராது பரிந்துபாரே. ௬௯௭

பாரென்றயாறு சாத்திரத்திலுள்ளே
  பவிப்பர்னமுதல்சாத்திரம் வத்தியந்தான்
ஆயூருவேதமது யடங்கலுந்தா
  னழகானயேழுலட்சம் கிரந்தமாகும்
வாரென்றவடமொழியை யெல்லாம்பார்த்து
  வகையெல்லாம்பெருக்கியே வடநூலாக
தேரென்றமுனிபாதம் சிரசில்வைத்து
  செப்பினேன்போகரென்ற முனிவந்தானே. ௬௯௮

முனிவானயிருமலது வஞ்சுமாகும்
  மூரட்டுமந்திரமிடு யிருமல்முழக்கமான
கனிவானமதுயிருமல் கஞசாவினிருமல்
  கனமானசுரயிருமல் சுகித்தெழுந்த
தினிவானரெத்தமா மருமலோடு
  செனிக்கின்றயிருமலது யஞ்சுமாகும்
அனிவானயஞ்சனுட பாண்மைதன்னை
  அதினுடையவுற்பத்தி யறியக்கேளே. ௬௯௯

அறியவேமனதிலொன்று வாக்கிலொன்று
அசட்டானமாய்ப்பேசம் பழும்பனர்க்கும்
குறியவேதானியத்தை தான்குறைத்து
கொடுப்பார்தன்னருகிருந்து குற்றஞ்சொல்லி
தாறியவேதடுத்தோர்க்கும் தண்ணீர்ப்பந்தல்
தடாகங்கள்கூட்டங்கள் தவறுசெய்தல்
மறியவேவழக்கோரஞ் சொன்னபேதம்
வந்துமேயிருமலது மருவுந்தானே. ௭௦௦

மருவுமேமனந்தனில் கிலேசத்தோர்க்கும்
மங்கையர்கள்கல்வியினில் மாழ்கினோர்க்கும்
பருகுமேகஞ்சாவை பருகினோர்க்கும்
பாழானசாராயங் குடிக்கின்றோர்க்கும்
நருகிறேன்களந்தனில் நடுங்கினோர்க்கும்
நடுபாடுபட்டினியே நல்குனோர்க்கும்
இருகூமேபெரியண்டை யிருக்கின்றோர்க்கும்
யிரும்லென்றறியாதியது பெய்க்குந்தானே. ௭௦௧

மருந்திடு.

எய்துமருந்திட்டிரு மலியம்பக்கேளு
ஏகமெங்கும்வற்றியே யெரையுண்டாகும்
அய்துமனமமரோசிகமாம் யழுந்துதேகம்
அடிக்கடிக்கிப்பயமுமாய் யாலோபிக்கும்
வயதுலரட்டிருமலமாய் மயக்கயாகும்
வாய்தானும்பலால்நாறும் வழவழக்கும்
செய்துதிரத்தினில்நின்று மயக்கிவிக்கும்
சிரணமாமருந்திட்டின் செயலிதென்றே. ௭௦௨

செயலானகஞ்சாவை குடிக்கின்றோர்க்குத்
திரட்சியாய்பின்மருந்து தின்றபேர்க்கும்
கயலானலாகிரிகள் யருந்தினோர்க்கும்
கரும்பிச்சைசேர்ந்துமே கருகியீரல்
உயலானவுடம்பதுதான் மிகவேவற்றி
ரோமத்தின்வேர்செக்து யொளிவுகுன்னும்
வயலானயிருமலோடு மனமழுத்தும்
மங்குமேகெற்பகத்தின் யிருமன்தானே. ௭௦௩

மயங்கியேஉடப்பெங்கும் தினவுண்டாகும்
மாற்போடுநெஞ்சுலர்ந்து கண்டம்வற்றும்



அயங்கியேயடிக்கடி இருமலாகும்
அடிமூலநாவிமட்டும் வேக்காடுண்டாம்
வியங்கியேயீரலெல்லாம் வெதும்பலாகும்
விரணமுண்டாய் சிரசோடுபிரட்சியாகும்
சயங்கியேசாராயங் கள்ளுதன்னால்
தாக்குமேமதுவிருமலாமைதானே. ௭௦௪

ஆண்மையாய்ச்சுரயருகி அங்கந்தன்னில்
அனேகநாள்சென்றக்கால் ஆக்கைதானும்
காண்மையாயிறுகியே வுடலும்வற்றி
கறுப்பாக்கிகனயிருல் சுவாசமுண்டாய்
வெண்மையாய்வெளுத்துமே கபஞ்சென்று
மிகநாம்பெல்லாந்தான் மிகத்தளர்ந்து
திண்மையாய்தோலுதிரஞ் சுதுங்கலுண்டாம்
சுரஇருமல்குணமென்றே சொல்லலாமே. ௭௦௫

சொல்லவேயர்க்களத்தில் சண்டைதன்னில்
துடர்ந்துபித்தம்பண்ணுகையில் போர்க்களத்தில்
வெள்ளவேமிகரத்தங் கண்ணில்கண்டு
மிட்சியாய்மதிதன்னி லிருமல்காணும்
சொல்லவேகுலைதன்னில் பந்தம்வைத்து
கொளுத்தினைப்போலவே கொடுந்திகாணும்
எல்லவேயிருமனுக்கு யிரத்தக்காசம்
யெடுக்குமேரெத்தத்தின் யிருமல்தானே. ௭௦௬

இருமலதுயஞ்சுக்குள் சாத்தியந்தான்
எழுதானமருந்திடு யிருமல்தானும்
மருபலிதுமதயிருமல் சுரத்திேனாடும்
மார்க்கமாய்யிதுமூன்று சாத்தியமாகும்
கருமலதுகற்பமா யிருமலோடும்
கடிதானரெத்தத்தின் யிருமல்தானும்
அருமலதுயிதுரெண்டும் சாத்தியமாகும்
ஆயுருவேதத்தி னுண்மைதானே. ௭௦௭

ஆண்மைதான்விப்புருதி யேழுமாகும்
அதினுடையகாமத்தை யறியக்கேளு
கேண்மையாய்கெற்பவுர்ப் புருதியோடும்
குவளைவிப்புருதியாம் பித்தவிப்புருதி

தாண்மையாம்சந்துவப் புருதியாகும்
தரித்தோடும்விப்புருதி சேத்துமப்புருதி
வாண்மையாம்வாதவிப் புருதியோடும்
வகையாகும்யெழுவித வளப்பந்தானே. ௭0௮

வளப்பமெல்லாம்வுப்புரப்பு மிகுதியாலும்
வகைவகையாய்கிழங்குவகை யருந்தலாலும்
தளப்பமெல்லாஞ்சகைத்துன்னி ரெத்தமீறி
தரித்துமாங்கிஷங்கள்துன்னி தாக்கலாலும்
களப்பமெல்லாங்காரசாரங்கள் மிஞ்சில்
கணக்குமிஞ்சிபெண்ணோடே கருதலாலும்
அளப்பமெல்லாமாறினதோ ரன்னந்தன்னை
அருந்தலால்விப்புருதி யணுகுந்தானே. ௭0௯

அணுதுமேயடக்கலத்தை காட்டினோர்க்கும்
ஆகாதயழிபவளக் குரைத்தபேர்க்கும்
நெணுதுமேநெல்தனையே குரைத்தபேர்க்கும்
நீரிலேயம்மணமாய் நிற்கின்றோர்க்கும்
தணுகுமேதனத்தான மூத்தநெண்ணை
தரிக்கியேசம்போகம் சயிக்கின்றோர்க்கும்
பணுகுமேபரமசிவனடியார்தன்னை
பழிக்கின்றோர்விப்புருதி படும்பாடாமே. ௭௧0

பாடாதவயறுதான் பொருமிக்கொண்டு
பக்கங்கள்கிழவயிறு புண்போல்நோகும்
ஓடாகப்புளியிலைபோல் வற்றமேனி
உதிரந்தான்திரண்டுகீழ் வயிற்றில்கட்டும்
கேடாககெற்பம்போ லுருவாய்க்காணும்
கெட்டியாய்மலமிருகி புழுக்கைப்போலாம்
பூடாகச்சிரசுதலை வலியுமாகும்
புணம்போலேநோகும் கெற்பவிப்புருதிதானே. ௭௧௧

தானென்றபிடுப்போடு மூள்ளந்தண்டு
தனித்தயிருப்பிறக்குய்யம் விலாக்கள்நெஞ்சு
கோனென்றுநடுகியே குளிர்வெதுப்புங்
குத்தலாயிருமியே கோழையாகும்
ஊனென்றவதிரவலி தானுண்டாகி
உக்கிரமாய்க்கொடியாய் வுதிரஞ்சிழாம்



கூனென்றுவலித்திடுமே குருகுமங்கம்
குவளைவிப்ருதி கூர்மைதானே. ௭௧௨

கூர்மையாயிரத்தமாம் வாந்தியர்கும்
கொடும்வெளுப்பாயுடம்பெங்கும் தினவுமாகும்
நார்மையாய்நடுக்கல்சித்தம் பிரமையாகும்
நன்னரியகொட்டாவி யருவியுண்டாம்
தூர்மையாய்ச்சுரமோடு தாசமுண்டாம்
சுயங்குதிகண்டித்துக் கட்டியாகும்
வார்மையாய்வயறதுவும் வுளையுமாகும்
வகுத்தபித்தவிப்புருதி வண்மைதானே. ௭௧௩

வண்மையாய்ப்புத்துப்போல் வயற்றுப்பக்கம்
மகத்தானசங்கடமாய் திரண்டெழுந்து
கண்மையாய்க்கதித்துமே கண்டிப்பாகி
தாரமொடுசத்திர கசக்கலாகும்
திண்மையாய்ச்சடமெங்குஞ் செழும்பலாகும்
சிறுத்துமேமாரடைப்புத் தியக்கமாகு
மண்மையாய்திரேகமெங்கும் குத்தலாகும்
மசந்துவிப்புருதியுட சார்புதானே. ௭௧௪

சார்வகையோடியே ரெத்தஞ்சூழ்ந்து
தங்கியேகட்டியாய் சார்ந்தெழும்பும்
தேர்வாகசிடமெங்குந் திருகலாக
தெளுமையாய்சிவந்துமே வெளுப்புமாகும்
ஆர்வாகயங்கங்கள் யெலும்புக்குள்ளே
அழண்டுமேநாங்க ளாகக்காணும்
ஊர்வாகவுடம்பெங்கும் பூர்தலாகும்
உண்மையாம்யோனிவிப் புருதிதானே. ௭௧௫

உண்மையாம்மார்புதனில் தானடக்கும்
ஊறியேவாய்நீறு மிகக்கதிக்கும்
துண்மையாய்வுடம்புதுன்னிச் சோரும்வீங்கும்
சுருக்கானயருவியொடு சுரமுண்டாகும்
வெண்மையாம்வுடம்பெங்கு விதனமாகும்
வெளியானமதந்தன்னில் பச்சையாகும்
பெண்மையாய்வுடல்கருகிப் பேதையெங்கும்
பிரிவானசேத்துமவிப் புருதிதானே. ௭௧௬

சேத்துமமாமசணத்தின் சிக்கிலுன்னி
　திடுக்கமாயிரலிலே மிகப்பொருந்தி
வாத்துமமாம்வாய்கசந்து விக்கலுண்டாம்
　மருவுசித்தப்பிரமையுமாய் வடிவெல்லாமேனும்
வேத்துமாமுடலுக்குப் பிரட்டலாகும்
　மிகயிரத்தக்கொதித்தேழுந்தே யிடுக்கப்போலாம்
நாத்தழுமாம்காலடியும் தடிப்புக்காணும்
　னிர்வாதவிப்புருதி நாடுங்காலே. ௭௧௭

நாடுமேசாத்திரத்தை நவிலக்கேளு
　நலமானகெற்பவிப் புருதியோடு
கூடுமேகுவளைவிப் புருதிதானும்
　குணமானபித்தவுப் புருதியொக்க
மூடுமேயோடுவிப் புருதியாமே
　உகந்துயிதுநாலுந்தான் சாத்தியமாகும்
வாடுமேவாதவிப் புருதிசேத்தும்
　மகாசந்துவிப்புருதிய சாத்தியமாமே. ௭௧௮

ஆமென்றகரப்பாந்தான் யேழுவிதமாகும்
　அடங்காதவாதத்தின் கரப்பானோடு
காமென்றகண்டகமாம் கரப்பானாகும்
　கடுகியதோர்வரட்சியாங் கரப்பானோடு
தேமென்றதிமிர்வாதக் கரப்பான்தானும்
　சிரசினி கரப்பானாகும்
போமென்றபித்தமாங் கரப்பானோடு
　பெரியசேத்துமகரப்பான் பேர்தான்யேழே. ௭௧௯

ஏழானகரப்பான் உற்பத்திகேளு
　ஏத்தமாமாங்கிஷங்கள் பொசிக்கையாலும்
கூழானகம்புதினை வாகுசாமை
　கோசானகிழங்குவகை யருந்தலாலும்
பாழானபெண்மாய்கை தன்னில்சிக்கும்
　பாங்கானவிரகந்தான் முயர்ச்சியாலும்
தாழானபாண்டங்கள் சமைத்துத்தின்னல்
　தாக்குமேகரப்பானின் சாயல்தானே. ௭௨௦

சாயலாய்தனக்குத்தான் மூத்தப்பெண்ணை
　மருவினோர் தாசியாஞ் சாதிதன்னில்



காயலாம்கலந்துண்டோர் கலகஞ்செய்தோர்
　கற்புடையமங்கையரைக் கருதினோர்கள்
வாயலாய்வாய்மாத்தை வெட்டினோர்கள்
　மருத்துவர்கள்வண்ணார் நாவிதர் தன்கூலி
கூயலாம்கொடாதோர்கள் குருநிந்தித்தக்
　கொடும்பாவிகரப்பானில் குதிகொள்வாரே. ௭௨௧

கொள்ளவேவுடம்பெல்லாம் வெதும்பாய்நொந்து
　குடைந்துகைகால் கலசந்துதானும்
விள்ளவேமிகச்சுரந்து வீக்கமாகும்
　வெடித்துமேபுண்ணாகும் விரல்கள்சந்து
முள்ளவேமுடங்கியே நரம்புதானும்
　முழிகள்பக்கம்மிக்கயிடம் மிகவலர்ந்து
வள்ளவேமேனியது வரண்டுகாணும்
　வாதமாங்கரப்பானின் வன்மைதானே. ௭௨௨

வன்மையாய்உளுக்கார்ந்து மெழும்பும்போது
　வருத்தமாய்கால்கைகள் யிடுப்புசந்து
திண்மையாய்திமிர்ந்துமே காடுகட்டும்
　செயலழிந்துவீங்கியே வெடித்துப்புண்ணும்
தண்மையாய்சடமெங்கும் வுலர்தலாகும்
　தண்ணீர்தான்மிகததவித்து தனிச்சூடுண்டாம்
உண்மையாய்மேனியெங்கும் வுளைச்சலுண்டாம்
　உதறமேதிமிர்வாதக் கரப்பானாமே. ௭௨௩

தளிராகச்சிரமெங்கும் மிசக்கைந்து
　தலைகாதுமண்டையெல்லாந் தடித்துநோகும்
னிராகவருத்திவிக்கும் நாற்றடிக்கும்
　நலமானஉடம்புதனில் சொரியுமாகும்
குளிராகக்குளிர்ந்துமே மயிர்கூச்சலாகும்
　கூப்பிட்டால்மிகப்பயக்குங் கூசுங்கண்தான்
களிராகமுள்ளுபோல் கண்டந்தன்னில்
　காகரக்குங்கண்டமாங் கரப்பான்தானே. ௭௨௪

சண்டகமாய்மிகவீங்கும் குத்தலுண்டாம்
　கனமாகவுடம்பெங்கும் மிகவேவூறும்
துண்டகமாய்வுடம்பதைத்து யெரிச்சலுண்டாம்
　சோறுமேபென்னேரம் மயக்கத்தாலே

வண்டகந்தானில்லாமல் வுடம்புவற்றும்
மாறுபாடாய்ப்பித்தில் மருகுமவார்த்தை
பிண்டகமாய்க்கிடந்துருண்டு புலாலேகாறும்
பெரும்வரட்சிகரப்பானின் பேரிதாமே.

போரகவிருந்தெழுந்து நடக்கும்போது
போராமலகாலசந்து திமிர்த்துவீங்கி
வோரகவுடம்பெங்கும வெடிததுப்புண்ணும்
வெதும்பியேசரீரமெங்கும் பொருமலாகும்
தோரகவுடம்பெங்குந் திரஞ்சுபோகும
திமிருதான் துண்டுதுண்டாய் சிதறிக்காணும்
பாராகத்திமிர்வாதக் கிரப்பானென்று
பாரிலுள்ளோர்தனக்கிதைப் பரிந்துகாணே.

காணவேகாதெல்லாந் தினவுண்டாகும்
கனத்தினவாங்கண்டந்தான் கரகரக்கும்
பூணவேகண்ணீரு பூளையுண்டாம்
பேச்சுமந்தமூக்குதனில நீரேபாயும்
தோணவேசிரசுதனில் சொரிச்சலுண்டாம்
தும்பலதுமிகவுண்டாம் துடிக்கும்நெற்றி
ஆணயேயணுகில் யழலுண்டாகும்
அடங்காதகபால கரபபான்தானுமே.

தானுகக்கனத்துமே நடுவுந்திகனத்துமே
தனியானவுடல்கரந்து வெதுப்புண்டாகும்
தானுக்கிகிறுகிறுக்கும் வுடலுஞ்சோரும்
சுரந்துமேவுடம்புபசு மஞ்சளிக்கும்
வேனுகபன்னத்தை யிரங்கொட்டாதும்
மிடுக்காதீபன் மந்திச்சுபோகும்
பேனுசவூறுவதுப் போலேகாணும்
பித்தகரப்பான்குணத்தின் பேதியாமே.

பேதியாய்சரீரமது வெளுறிக்காணும்
பேச்சதுதான்கம்மலாய் தானிருக்கும்
பூதியாம்வார்த்தையது பொரிக்கிச்சொல்லும்
பிரபலந்தான்மிகப்பேச்சு மூச்சுண்டாகும்
எதியாய்ச்சகலரையும் யேவல்கொள்ளும்
ஏனைப்பிருமல்போல்மூச்சு சாதிரைச்சல்



மூதிபாய்மோட்கவரு முறைமையாகும்
முதிர்சேத்துமகரப்பானின் மூர்க்கந்தானே. ௭௨௯

மூர்க்கமாஞ்சாத்தியத்தை யொழியைக்கேளு
மொழிகின்றவாதகரப்பான் தன்னோடு
ஊர்க்கமாம்பித்தகரப் பானுமாகும்
உயர்கின்றவரட்சியாங் கபாலகரப்பான்
தாற்றகமாயிதுகாலு மசாத்தியமாகும்
தமுக்கானதிமிர்வாதக் கரப்பான்கண்ட
தீர்க்கமாஞ்சேத்தும கரப்பான்தன்னோடு
செப்பியதோர்பிதுமூன்றும் சாத்தியமாமே. ௭௩0

ஆமென்றசத்தியதுஞ் சேதென்னில்
அடங்காதயஜீரணசத்தி வரதசத்தி
போமென்றபித்தசத்தி சேத்துமசத்தி
பெரிதானதொந்தசத்தி வஞ்சுவாகும்
ஏமென்றசத்திதான் வுற்பத்தியாகி
எப்படிதான்வருமென்றால் சொல்லக்கேளு
வாமென்றமாறுபாடா தன்னால்மங்கை
மருந்தினாலிருமல் விளைந்தரோசியமாமே. ௭௩௧

அருட்சிப்பாய்சத்தியா சத்திரூபம்
அனுகியேயதிகளத்தில் வாய்வுதானங்
தெருட்சிப்பாய்தின்னுகின்ற பதார்த்தந்தன்னை
செரிக்கவேவொட்டாமல் மேற்கோள்செய்யும்
தருட்சியாய்சத்தியஞ் சில்யசீர்ண
சத்திதன்குணந்தான் தாக்கானநாபிதானத்தில்
மிருட்சியாய்சமானனென்ற வாய்வுமீறி
முதுகிடையைமிகப்பறந்து வுலாவுந்தானே, ௭௩௨

உலாவியேவிபரீத பதார்த்தந்தன்னை
உண்மையால்வுயரத்தான் தள்ளிப்போடும்
அலாவியேசொரியாமல் யஜீரணவாந்தி
யாகியேசத்திசுய மர்ந்துபோகும்
குலாவியேவாதசத்தி வகையேதென்னில்
கூட்டமாமிருதயதா னத்தில்பிராணன்
விலாவியேவ்வருக்கபொசி விபரீதந்தான்
விளைத்துமேவெளுப்போடு கறுப்புமாமே, ௭௩௩

கறுப்புமாய்கடினமாய் வாந்தியாகு
காசமாயிருமலொடு யிளைப்புமாகும்
தொருப்புமாய்சுரயீனங் கம்மலாகும்
சுரசுரப்பாய்மேனியெங்குந் தடிப்புமாமே
பொருப்புமாம்பித்தசத்தி யிக்குணந்தான்
பேரானவுப்பரைத்து வுருகலாகும்
வெறுப்புமாய்வேப்பெண்ணெய் நாற்றம்வாந்தி
மிகநெஞ்சிற்புகைச்சலுமாய் சத்தியாமே.

சத்திதான்மஞ்சள்நிறம் போலிருக்கும்
தண்ணீருப்வாந்தியது வுப்புரைப்பு
சுத்திதான்சூடுண்டாங் கையும்காலும்
துலக்கமாய்மேனியெங்கும் மெரிவுகாணும்
சித்தியாஞ்சிலேத்தும சத்தியின்குணந்தான்
திகழ்கின்றயிரைப்போடு குளிருமுண்டாம்
குத்திதான்கோழையுண்டாங் குளிர்ச்சியாகும்
கொடிதானநாவிநீர் தித்திப்புண்டாமே.

தித்திப்பாந்தொந்த சத்தியிர்க்குணந்தான்
துரிசாகும்மலமூத்திரம் காவேகந்தான
வத்திப்பாஞ்சத்தியது சதையிரத்தம்
மாங்கிஷபோல் நிணம்போலுந்தானிருக்கும்
குத்திப்பாஞ்சரீரமெங்கும் குடைச்சலுண்டாங்
குளுந்துமேநாவருளுஞ் சுரமுமுண்டாம்
எத்திப்பாஞ்சரீரமது யிளைப்புகாணும்
இதுவஞ்சுசத்திகுண மிதைத்திட்டோமே.

இசைந்ததோர்சாத்தியத்தில் மூன்றுமாகும்
ஏகமாஞ்சீர்ணசத்தி வாதசத்தி
பிசைந்ததோர்பித்தசத்தி மூன்றுஞ்சாத்தியம்
பேரானபசாத்தியந்தான் சேத்துமஞ்சத்தி
திசைந்ததோரெண்டுந்தான் யசாத்தியமாகும்
செப்பினேஞ்சத்தியுட குணங்களெல்லாம்
அசைந்ததோர்யசாத்திய சாத்தியமிரண்டும்
அறிந்துமேடவிழ்தங்கள் செய்திடாயே.

செய்திட்டவிக்கலது [illegible]
செப்பிப[illegible]



வைத்திட்டவாதவிக்கல் பித்தவிக்கல்
மருவியதோர்சேத்துமவிக்கல் தொந்தவிக்கல்
கொய்த்திட்டவிக்கலுட குணத்தைக்கேளு
குறிப்பானவாததின் விக்கல்தானும்
அய்த்திட்டவன்னஞ்சூ டருந்தலாலும்
அதிகமாங்குளிர்தன்னில் யடுத்திட்டாலே ௭௧௮

அடுத்திட்டமனஞ்சிட்சி மிகுதியாலும்
அந்திசந்திகணப்புகழ காய்தலாலும்
படுத்திட்டுகைகால்கள் பிடிக்கலாலும்
பதறியேதண்ணீரில் மூழ்கலாலும்
விடுத்திட்டுகடுவோட்டம் வோடினாலும்
விரைந்துமேநாகனேனங் கின்றவாய்வு
கடுக்திட்டுயெரிகரித்து விக்கலுண்டாம்
களராகிமார்கனத்து கதிபாங்காணே. ௭௧௯

கதிப்புத்துக்கண்ரெண்டுமிகத்துடிக்கும்
கனமானமிகுதுவர்ப்பு வாயிலுண்டாம்
மதிப்புத்துவாதவிக்கல் தானுமாகும்
மதித்ததோர்பித்தவிக்கல் மார்க்கங்கேளு
விதிப்புத்துவிக்கலுண்டா மேனியினும்
மிகவுண்டாங்கெட்டாவி வெதும்பலாகும்
நதிப்புத்துநாடிமிகப் படபடக்கும்
நல்லறிவுகுன்றிவிடுங் கோபமாமே. ௭௨0

## சேத்துமவிக்கல்.

கோபமாஞ்சேதுமவிக்கல் குறிப்புக்கேளு
கோழையோடுவிக்கலது தானுமுண்டாம்
சோபமாமுகமெங்கு வெளுத்துக்காணும்
தடிப்புண்டாந்தேகமெங்கும் திரைஞ்சுகாணும்
தோபமாந்தொந்தவிக்கல் குணத்தைக்கேளு
தோளோடுதலைகழுத்து சோரவாங்குந்
ஆபமாந்தொப்புளொடு மிகக்குலுங்கி
அடிநாபிதன்னில்நின்று விளக்கும்பாரே. ௭௨௧

பாருமேசந்தோடு தாள்குலுங்கி
பதறியேஅடுக்காய விக்கும்பாரு

வாருமேவா தவிக்கல் பித்தவிக்கல்
மாளவுந்தான்வொட்டாது மருந்தில்தீரும்
தீருமேசேத்துமவிக்கல் சீவன்தனனை
சிரிதுநாள்தன்னில்தான் சிரணிக்கும்
ஊருமேதொந்தவிக்கல் வுடனேகொல்லும்
உபாகின்றதோதவிக்கல் கொல்லுந்தானே. எசஉ

தானென்றபவுத்திரந்தான் யெட்டுமாகும்
தடிப்பானயாசனமாம் பவுத்திரந்தான
கோனென்றகொடியபவுத்திரந்தான் பவுத்திரம்
குருத்தானமூலத்தின் பவுத்திரந்தான்
மேனென்றமேகமாம் பவுத்திரந்தான்
மிடுக்கானகிரந்தியென்ற பவுத்திரமாகு
ஆமென்றயாசனத்தின் கண்டமாலை
அடுக்கானசரகண்ட மாலைதானே. எசங

மாலைதான்வுர்ப்பவித்த வாறுகேளும்
மகத்தானயாசனத்தைக் குடிகெடுக்கும்
ஆலையாம்பரிவையாங் கறியருந்தி
அழகானமாதினைத்தான் கற்பழித்தும்
பாலையாய்மதித்துடலம் டல்தளுத்த
பாதகரைபரிந்துநீ ரிரசமாக்கி
ஏலையாய்பெரும்புயீய்க் குணர்வாயிந்து
யிருக்கவேசிவனமைத்த படிதான்காணே. எசச

சிவனுடையவருள் தனையேமறந்துநெஞ்சில்
திருடியேவஞ்சித்து யபகரித்து
அவனுடயபொருள்போலே யடக்கம்பண்ணி
அனுதினமும்முடமைப்போல சிந்தித்து
பவனுடையபொல்லாதார் பவுத்திரத்தில்
பாடுபட்டபொருளெல்லாம் பாழாயப்போகும்
விவன்செய்தவிதியென்று தொந்துநொந்து
விழற்கிரைத்தநீர்போல மெலிகுவாரே. எசரு

மெலிந்துமேயுடம்பெங்குந் தினவுண்டாகு
மிருத்தசுரந்தான்கண்டு மாறிப்போகும்
லிந்துயாசனத்தில் குத்தலுண்டாம்
கடுலெங்குமுகர்கடுக்கும் நோக்காடுண்டாம்



வலித்துமேகட்டியாய் தானிருக்கும்
மயக்கமொடுமலந்தன்னில் செந்நீர்பாயும்
குலுந்துமேசீழோடு ரெத்தமுண்டாங்
குணங்கெட்டயாசனப் பவுத்திரமாமென்றே. எசசு

என்றதோர்ரசனத்தில் சடையைப்போல
யிருந்துமேவீங்கியே யடிகனத்து
ப்ன்றதோர்பழுத்துமே கண்ணாக.
பருத்திமினிர்ச்கொட்டைபோல் புண்முகத்தில்
விண்டதோர்மேனியெங்கும் மிகவெளுக்கும்
விரிந்துவிடமிகநாறுங் கொடிநரம்பில்
அண்டதோரம்மூகர்விட்டுக் கன்தான்விட்டு
ஆகர்தமலசலமும் காணுந்தானே. எசஎ

## பவுத்திரம்.

காணுமேகொடிபவுத்திரங்காண் குணந்தான்
கருபககபவுத்திரத்தைக் கண்டுகேளு
வேணுமேவிரைநடுவில் நரம்புபற்ற
மிகுத்தவலப்பக்கமிடந் தன்னிலேதான்
தோணுமேகணடமாய் கதித்துவீங்கி
தடித்துமேபழுத்துடைந்து செந்நீர்வீழும்
நீணுமேநிறமாறி தெரித்துபோகும
நிட்சயமாய்மூத்திரம் விழுகுந்தானே. எசஅ

வீழ்கின்றபவுத்திரத்தை விரும்பிக்கேளு
விருவிருத்துகுதங்குய்யங் கடுப்புகாணும்
தாழ்கின்றநரமபெல்லாம் புடைத்துவிம்மி
தனிக்காணைபோன்றுமே செயல்தான்வீழும்
காழ்கின்றநீர்வேண்டுந் தானெல்லாந்தான்
கட்டியேமிசைவுடைந்து நீருங்காணும்
ஆழ்கின்றயடிகண்டு முளையுங்காணும்
ஆகாதமூலபவுத்ரமு மாமே. எசகூ

பவுத்திரத்தில்மிகநொந்து கடுப்புமுண்டாய்
பாங்காகக்கட்டியே பழுத்துடைந்து
கவுத்திரத்தில்கொடிசுரந்து புண்ணுமாகி
சழுத்தானவாண்குறியில் விரணமுண்டாயது

அத்திரத்தில்மேனிதற் கந்தமுண்டாய்
துளிதுளியாய்நீர் தானுஞ் சுருக்கிவீழும்
மெவுத்திரத்தில்தண்டியில வீக்கங்காணும்
வீழ்கிரந்திபவுத்திரத்தின் மேன்மைதானே. எருo

மேன்மையாமேகத்தின் பவுத்திரந்தான்
முறக்கிவிழும்நீர் தானும் விரையில்கட்டும்
பான்மையாம்பழுத்துடைந்து சீழ்காணும்
பனித்தண்ணீர்போல்வந்து பாஞ்சிருக்கும்
வெண்மையாஞ்சுரமோடு குளிர்தாகிர்கும்
மெய்மறக்கு அசனமிகச் செல்லாதாகும்
காண்மையாங்கைகால் கண்ணெரிவுமாகும்
கனத்தவுடம்பெலாமிளைத்து வலியுமாமே. எருக

## போகர் அகஸ்தியர் சுருக்கஞானம் கூறுகின்றார்.

ஆதியதேமிகநிறைந்த தீட்சைமார்க்கம்
அருள்பெற்றபுலத்தியனே சொல்லக்கேளும்
சோதியந்தத்துள்ளிருக்கும் சுடரைப்போற்றி
சொல்லுகிறேன் அகாரமுடன் உகாரம்நோக்கி
வேதியென்றகமலமதிற் பொருளேயாகும்
வேதாந்தமுடிந்ததுதா னென்பதிரண்டு
சாதியென்றதீட்சையது அறிந்துபாரு
சத்தியந்தானுந்தனக்குத் தவிர்வறுதே. எருஉ
வாறுகேளென்பத்து ரண்டுகூடில்
வாச்சுதடாவுந்தனக்கு மகிழ்ந்துபாரு
கூறுகேள் அப்பினிட ஆணைப்போச்சு
கொடிதானசுருக்கமது கூறப்போகா
நீறுகேள்ஞானமுக மேவிருப்பாரு
நிலைத்துதடா தீட்சையது நோய்ப்பத்தும்
ஆறுகேள்யொவ்வொன்று செபித்தாயானால்
ஆச்சரியமுலகமெல்லா மவனுள்ளாச்சே. எருங

ஆச்சென்றபிண்டமது யண்டமெல்லாம்
ஆச்சரியமுன்மனையை என்னசொல்வேன்
வாச்சென்றயகண்டமதை நோக்கிப்பாரு
வாரிதிபோல்ரவுமதியும் தோன்றுந்தோன்றும்



நீச்சென்றகுருசிட்டைக் குள்ளேபுக்கி
நிலைத்துதடாசமைத்திருப்ப வில்லையாச்சு
ஆச்சென்றவாய்வெல்லா யதில்புக்கி
யடங்கினதுபார்த்துக்கொள் ஊமைதானே. எருச

தானென்றஇம்முறையை அறியலாச்சு
சங்கற்பவிகற்பமெல்லாந் தள்ளுதள்ளு
கோவென்றால்வருமோதான் கூர்ந்துபாரு
கூரென்றபக்கருவைக் கூறலாகா
வானென்றபெரியோரை கண்டுதேறு
வணங்கியேயனுதினமு மகழ்ச்சியாக
பானென்றமுப்பொருளு மீசனுந்தான்
பார்ப்பதிக்குத்தானுரைத்தார் பதறியென்றே. எருரு

## போகர்சட்டமுனிக்கு சூத்திரம் கூறுகின்றார்.

தானென்றமனமேது தியானமேது
சரியைமுதல்ஞானவரை வாதமேது
மானென்றவிழிமடவார் மயக்கமேது
மைந்தாபெண்சுற்றமென்ன வலைதானேது
கானென்றகடலேது கருத்தானேது
கண்கொள்ளாப்பிரகாசங் கருணையேது
ஊனென்றவுடம்பேது வுயிர்தானேது
ஒன்றுமில்லாவெறும்பாழி லொடுக்கந்தானே. எருசு

ஒடுக்கமடாயோங்காரக் கம்புமாச்சு
ஓகோகேயகாரமங்கே பிரிந்தகாட்சி
அடக்கமில்லாதொன்றுமில்லை யாத்தாள்சொன்னாள்
அப்பனேவுங்கக்கா யானுஞ்சொன்னேன்
படபடக்கவொண்ணாது பதத்தில்நின்று
பரபரப்பாநீர்ப்பாலைப் பருவம்பாரு
உடல்கறுத்துஉயிர்போக்கும் வுழியூர்காணும்
உத்தமனேயோகத்தி லுரைத்திடரே. எருஎ

உரைத்திடவேமந்திரத்தைச் சொல்லக்கேளு
உற்பனமாம்யாங்காரமொடு மகாரத்தாட்டு
நிரைத்துடனேவுகாரமது மூன்றுஞ்சொன்னால்
நிக்குமடாசிவயோகஞ் செப்பக்கேளு

முறைகுறைகள்வாராம லுஞ்சியோடு
மூலமுதலண்டவரை முட்டிப்பாரு
அரைகுறைதான தீர்ந்திடவே-உ-அ-இ-என்று
அப்பனேயோங்கார மூலந்தானானே. ௭௫௮

ஊணுநீயெளவெனவுங் கூகெனவும்யீயும்
உத்தமனேரிகிரிதிருச் சுழியுமூட்டு
வேணபடியோகமெய்தும் ஞானமெய்தும்
வித்தையெல்லாம் வுன்வசமேபிரவேசிக்கும்
காணுநீமாலயன்தா னங்கேதேடக்
காண்பார்கள்சற்குருவே யுன்வசமேயென்று
ஆணியதுகூறமெல்லாந் திறந்துசொன்னேம்
அப்பனேசரியைவிட்டுக் கிரியைக்கேளே. ௭௫௯

ஏறவென்றால் கிரியைவெளிதள்ளக்கேளு
இபல்பாகச்சரியையிலே யுறைத்துமேல்போய்
ஆறுதலத்துளக்குருவி மாரணமாறும்
அப்பனேயிடையோடு பிங்கலையும்பாரு
வேறுவினைவாராம டலுடலைபேணு
வேதாந்தக்குருபதத்திலிருந்து நில்லு
தேரிடுவாய்நூற்றுபத்து காலாக்கினி
சிவத்தைசித்திசெய்துதிட்சையை நீதிடத்தில்தள்ளே. ௭௬௦

தள்ளியேநடையிட்டு படுக்கையிட்டு
தரித்திடத்தில்மனதுவைத்துச் சாரவில்நில்லு
மெள்ளியென்னயரசெனவே யேற்றுயுள்ளே
வெருளாதேவாசியைத் தானடக்கிக்கொண்டு
வள்ளிலேயமூர்தமங்கே கயருவிழும்
வசமாகமுன்னேற்றி யிருத்திரேசி
தெள்ளமுதப்பாலுண்டு யாயுசுண்டு
யோசஞ்சித்திக்கு மமுர்தங்கூட்டே. ௭௬௧

கூட்டுநீபரசோடு தேவதாளிகொடிக்கள்ளி
புனல்முருங்கைசதுரகள்ளி மாட்டுநீ
என்ளோடுபிராவெனச் சம்நத்தான
பதினெந்தும்வெவ்வேற் வாங்கித்தீட்டுநீ
வெவ்வேறாய்சுட்டுச்சாம்பல்
திறமவகைக்கும்படி தான்போடு



மூட்டுவேற்பாண்டத்தில் கொட்டிநீயும்
முதிரந்தான்பதினைஞ்சு படிதான்வேரே. ௭௬௨

படியஞ்சுகோமியத்தைக் கூடவாறு
பாங்கானகழுதையொடு குதிரையானை
நெடியஞ்சயண்டோடு நாலுகேளு
நிலவரமாயிப்படியே யஞ்சுபோடு
கொடியஞ்சுபடிதானு நாற்பத்தஞ்சுகூசாமல்
சாம்பலுக்குள் கருத்திவைத்து
தடியஞ்சமூன்றுநாள் தெளிவைவாங்கி
சதர்கமாயடுப்பேற்றி யெறித்திடாயே. ௭௬௩

எரித்திட்டுகுழம்புபோல வருதல்கண்டு
இணைக்கனேடுசாகான சந்திரனுப்பு
விருத்திட்டுக்கல்லுப்புடனே சத்திசாரம்
மேலானவாச்சாரம் யெவச்சாரந்தான்
நரித்திடவேவெண்காரம் சவுக்காரந்தான்
நலமானகெந்தியுப்பு வளையலுப்பு
சரித்திட்டுக்கடலுரையு மன்னன்பேதி
சார்வான துருசோபூநீர்தானே. ௭௬௪

தானனவகைக்கொன்று பலமுமைந்து
சார்வாகப்பொடிபண்ணிக் குழம்பிலிட்டு
பானனபாஷான நிலையைக்கேளு
பரிவானகெந்தியொடு சங்குச்சுண்ணம்
தேனனவகைக்குவொரு பலந்தான்போடு
சிறக்கவேயெருக்கம்பால் படியேவாரு
காரனகுழம்பதிலே நக்கவிட்டு
காலவடுப்பேற்றியே மெழுவாங்கே. ௭௬௫

வாங்கியேபீங்கானில் பதனம்பண்ணை
வளமானநெர்க்குழியில் புதைத்துவைத்து
பாங்கியேபசத்தின் பிறகுவாங்கே
பரிவாகப்புடசால னென்றுவேறு
தேங்கியேகோலமா மருத்தினுற்கு
சிங்கமாங்கொடிய சுரசுவனுற்கு
கோங்கியேகொடுங்காலம் விசவனற்கு
குளிகைக்குப்புடந்தானுஞ் சுருக்காப்பாரே. ௭௬௬

பாரென்றபுடந்தானுஞ் சாத்திரத்துள்ளே
பலபலவாய்மறைத்தார்கள் சித்தரானோர்
கோனென்றதிருமூல ராயிரத்திற்சொன்னார்
குணமாகக்காலாங்கி சொல்லக்கேட்டு
தேனென்றயென்னூற்றில் திறந்துசொன்னேன்
சிறப்பாகநான்செய்யு மார்க்கமாகும்
வானென்றபாகாசம் வீதிநாட்டில்
மயங்காமல்சிறுபிள்ளை யோடும்பாரே. ௭௬௭

## குளிகைசாரணை.

பாரிந்தசூதம்நின்று வுருகும்போது
பதுங்காதேசமபாகஞ் சத்தையூட்டு
பூரிந்ததாம்பரச்சத்து தானும்
பொரிவாகவுருக்கையிலே புடமொன்றுபோடு
வாரிந்தசித்தினி மனுஷராசை
வப்பனேபலபலவாம் வண்ணங்காணும்
தேரிந்தசூதத்தை நிறுத்துப்பார்க்கத்
திறமாகமணியிடையே நிற்குமென்றே. ௭௬௮

என்னவேபுடத்துக்கு யேதுவுப்பு
ஈசனுடபுடந்தானும் தோற்றுப்போகும்
மன்னவேபணிந்தார் சொல்லல்யானும்
வகைவகையாயாய்சோதித்து யனேகங்கண்டேன்
கன்னவேரிபரசங்கள் நூற்றிரண்டு
காரசாரங்கள் முதலிருபத்தைந்து
பன்னவேபாஷாண மறுபத்துநாலு
பாங்கானநவலோக நவரத்தினமூட்டே. ௭௬௯

மூட்டியேயிப்படிதான் சாரணைதான்செய்ய
முடிவாகக்கெவுனது நூற்றுக்கோடும்
மூட்டியேமறுதிரந்தான் விடுவித்தாக்கால்
மூன்றுபத்துசாஸ்திரமாங் காதமோடும்
மூட்டியேநாலுதிறம் விடுவித்தாக்கால்
முனையாகலட்சமாங் காதமோடும்
மூட்டியேவைந்துதிரம் விடுவித்தாக்கால்
முயல்சாகநாலுலட்ச மோடிப்போமே. ௭௭௦



போமெனவேவைந்துதிறம் விடுவித்தாக்கால்
பொருந்தியொருகோடிக்கு வோடும்பாரே
காமெனவேயாரான பரிசைவேதி
கரண்டியேயேழுதரங் கடந்துயேறு
தாமெனவேலெக்கங்கள் சொல்லப்போகா
தாண்டவனூர்லோகத்தில் தெரிக்கவேதை
நாமெனவேகாண்கிலார் சித்தர்வேதை
நன்னியேயுன்மனதில் வேதையாமே, ௭௭௧

வேதையென்றசெப்பிடிலோ வேதையாகும்
விளங்கியேஏமமென்றால் பழுக்கும்வேதை
காதையாங்குளிகைதன்னைக் கரத்தில்வைத்து
கருதியேயுப்பாகில் பொன்னுமாகும்
மாதையாம்பொன்னென்று வுன்நெஞ்சிலுன்னி
மலைகளெல்லாம்பொன்னாகு மக்கள்பாரு
பாதையாம்பகலிரவு வொன்றாய்ப்போகும்
பராபரமாய்சிவன்வந்து பாரிப்பாரே. ௭௭௨

பாருநீயுபசாரங்கள் நூற்றிரண்டு
பாஷாணவர்க்கங்கள் அறுபத்துநாலு
வாருநீலவண்வருகை யிருபத்தைந்து
மகத்தானமூலிவகை சத்துகூட்டு
கோதுநீநவலோகம் நவரத்தினங்கள்
குறிப்பாககுளிகைக்கு குடுகேலோடும்
நீறுவித்தால்சகமெல்லாம் அறியலாச்சு
நிச்சயமாயதிந்தபடி செய்யலாமே. ௭௭௩

ஆமிந்தமார்க்கமாய் சூதத்துக்கு
அணைத்தணைத்துசத்துகளை யீவாயாகில்
போமிந்தகெவுனமிப்போ சித்துப்பபாய்யாய்
போகமட்டும்கண்டவனைத் தொழுத்தச்சாவான்
தாமிந்தவுபசாரங்கள் பொன்னேயாச்சு
சகமெச்சும்ராஜாங்க செகப்பணிந்தால்
தாமிந்தபழுகனுடன் சூதங்கேளு
தனிவேலையாத்தாளும் மதியாள்கேளே. ௭௭௪

கேளுநீபனிரண்டாங் குளிகைதன்னை
கொடியானகருவியொடு போகந்தன்னை

வாளுநீரண்டுக்கு நவலோகம்போது
மற்றமற்றகுளிகைதன்னைத் தவிர்த்தேயேறு
வேளுடத்துநீசர்களை நெட்டிவிட்டு
விருப்பமுடன்சாரணைதான் செய்யாவிட்டால்
தாளுநீகெவுனமது வெழுதோடாறு
தனித்துமேபாரிசத்தில் வேசையெண்ணே. ௭௭௫

எண்ணவேசாரணையைத் திறமாய்ச்செய்யில்
எடுத்தவொரு அண்டமெல்லாம் பதலங்கண்டி
பண்ணவேரிஷிகள்தான் கோடாகோடி
பருதியிலேகணங்களெல்லாம் சயகிப்போகும்
தண்ணவேகுளிகையினால் மேற்கொண்டோடும்
சந்திரக்ரோடையிலே நடுக்கல்காணும்
மண்ணவேகுளிகையினால் குளிரும்போகும்
மாயமாய்சுருபமெல்லாம் வேளியாய்ப்போமே. ௭௭௬

வெளிஆனரூதத்தை கட்டாவிட்டால்
விரைந்தேறும்ஞானமெல்லாம் பொய்யாய்ப்போகும்
ஒளியானயோகமது பாழாய்ப்போகும்
வுற்பனமாங்காயசித்தி ஒன்றுமாகா
துளியானவசுரர்கள் குறியுமில்லை
துறுகையிலேமேதிக்கு யேமமில்லை
நெளியானமனதாலே போகம்பார்த்தால்
நிற்குடாஞானியென்று சொல்வார்பாரே. ௭௭௭

பாரப்பாமூலவன்னி துலங்கினக்கால்
பனிச்சென்றுவாறுதலம் வெளியாப்போகும்
நேரப்பாமேலாறும் வெளியாப்போகும்
நெரிப்பானவட்டசித்தி வெளியாய்க்காணும்
சேரப்பபாராபரியின் செயலுங்காணும்
சேர்ந்தவன்னிநிஷிகரமும் வெளியாய்ப்போகும்
ஆரப்பாநிராகத் தடங்கிநோக்கும்
மாதியந்தம்நாமமது வதிகந்தானே. ௭௭௮

தானென்றசிங்கியது சொல்லக்கேளு
சாதகமாயிதுகளுக்கு முன்னேசொன்னேன்
பானென்றவெண்ணூற்றி லெடுத்தசக்கி
பதமானவுடும்பாமை அழிஞ்சினோடும்



காவென்றசாலைமட்டும் நிலக்குழம்பு
கலந்தஞ்சிஅயங்களஞ்சி கொடுப்புத்தாக்கி
பானெனறபுழுகஞ்சு வாதுஅஞ்சு
பருவமுடன்ஒன்றாகப் பணணிக்கொள்ளே. ௭௭௯

கொள்ளயிலேபரிசுன்னந் தாருசுன்னம்
கொடியானபூரமென்ற சுண்ணமூன்று
விள்ளயிலேவ்வொன்று கழஞ்சிதாக்கி
விரவிபொன்னூமத்திச்சுக் கலந்துஅப்பி
நல்லதோரவியில்வைத்துக் காய்த்திட்டாக்கால்
நலம்பெறவேதயிலாம் விந்துவாங்கி
துள்ளவேறில்லாமல் வழித்துவாங்கி
துடியானபீங்கானில் வைத்துக்கொள்ளே. ௭௮௦

வைத்தபின்புகட்டையிட மருந்துகேளு
வளமானவெண்காரஞ் சாரஞ்செந்தி
கைத்தபின்புவீரமரி தாரம்பூரம்
கருநாபிகஸ்தூரி தொட்டிகூட
பைத்தமன்புவகையொன்று மணந்தாவென்று
பண்பாகஒன்பதையும் கல்வத்திட்டு
தைததபின்புவிரைத்துநன்றாய் வபிலத்திற்சேர்த்து
சாங்கமாய்வைப்புக் வழுஞ்சிங்கியாச்சே. ௭௮௧

ஆச்சப்பர்சூதமது சுத்திக்கொண்டு
அழகாகவல்வத்தில் கிருத்துவிட்டு
பாச்சப்பாகிறுத்துஒரு பொட்டுபோட
பதையாமல்சேருரசம் வெண்ணையாகும்
தேச்சப்பாகிளிபோல கட்டிக்கொண்டு
சிறப்பானகுடவனுட தீயில்வாட்டி
தோச்சப்பாகரண்டியிலே எண்ணெய்க்குத்தி
சுருக்கிடவேவெள்ளிப்போ லாகும்பாரே. ௭௮௨

ஆடுதற்குசூதமென்ற ஆட்டமானல்
ஆகாகாவாதமென்ன சுகமதாச்சு
நாடுவாய்சூதமது வடமாய்க்கோர்த்து
நலமாகசன்மத்தி லிருந்துகொண்டு
ஊடுவாய்சிவசிவா வென்றுமூட்டி
வுகந்துமுன்னேபஞ்சசர்த்தாள் நிர்ப்பார்பாரு

தேடுவார்கேட்டதெல்லாம் ஈவார்ஈசன்
செகசாலவித்தையெல்லாந் தெளிந்துபோமே. ௭௮௩

போமென்றமெழுகுநால் கட்டுஞ்சூதம்
புகழானவெண்ணெயிடை சூதங்கம்நாலு
ஆமென்றசுண்ணாம்புக் குகையில்வைத்து
அப்பனேபுடம்போட தங்கம்நீரும்
நாமென்றநவலோக மாயிரத்துக்கொன்று
நாமறியோமிதனுடைய வண்ணந்தானும்
வேமென்றயருதிபோல் நிறமேயாகும்
வுத்தமனேவெகுசளுகு வோடிப்பாரே. ௭௮௪

ஓடுவதுசவுக்காரச் சுண்ணந்தொட்டி
உப்பினிடவுசிதிதொட்டு சந்துவோடு
ஆடுவதுவரமென்ன சூதத்தாலே
மாச்சரியம்சிகப்பென்ன கெந்தியாலே
போடுவதுதங்கத்தால் சரக்கெல்லாந்தான்
பூப்போலசுண்ணமென்ற வீரத்தாலே
நாடுவதுவிண்ணுன வீரத்தாலே
நலமானவீரமது யடங்கிப்போச்சே. ௭௮௫

## சவுக்காரச்சுண்ணம்.

போகாமல்சவுக்காரச் சுண்ணஞ்சொல்வேன்
பொற்கொடிக்குயீசனன்று புகழ்ந்தவாறு
வேகாமல்மூன்றுப்பு சுக்குவாங்கி
விரைந்துமொருபாண்டத்தி லளந்துபோடு
ஏகாமல்மனிதனுட வழுரிதானு
மிதமாகப்பதினூறுப் படிதான்வார்த்து
சாகாமல்மூன்றுநாள் கலக்கிவைத்து
சார்ந்தபின்புநாலாநாள் தெளிவைவாங்கே. ௭௮௬

வாங்கியசத்தெளிவிலே கல்லுச்சுண்ணம்
வளமாகநீர்க்கயிதைப் படிரெண்டுபோடு
தேங்கியவைமூன்றுநாள் கலக்கிவைத்து
சிறப்பாகநாலாநாள் தெளிவைவாங்கி
ஓங்கியேகல்லுப்புப் படிதான்போட்டு
ஒக்கவேதெளிவிலே கரைத்துப்போட்டு



தாங்கியேநாலாம்நாள்தெளிவைவாங்கி
சாதகமாய்யடிகனத்தைச்சட்டியிலேயூற்றே. ௭௮௭

ஊற்றியேவெடியுப்புச் சீனந்தானும்
ஒய்ந்துநின்றதுருசோடு சாரம்வீரம்
ஆற்றியேவெள்ளையென்ற பாஷாணந்தான்
அப்பனேவகையொன்று பலமேதூக்கி
சாற்றியேகல்வத்தில் பொடித்துமைபோல்
சாற்றுனமுன்தெளிவி லொக்கப்போடு
போற்றியேயீசானம் பூசைபண்ணி
புகழாகயடுப்பேற்றி யெரித்திடாயே. ௭௮௮

எரித்திட்டுதீபம்போல் யடிபற்றாமல்
இதமாகயயத்துடுப்பால்க் கிண்டிகிண்டி
வடித்திட்டுக்குளம்புபோல் வருதல்கண்டு
வரிதானநெல்லெண்ணெய்ச் சேரவார்த்து
துரித்திட்டுமெழுகுபோல் வில்லைசெய்து
சமரசமாயுரலிலே யிடிக்கமட்டும்
மரித்திட்டுமங்கையின் சாறுவாங்கி
வரிசையாய்சேர்ந்தெடுத்து ரவியிற்போடே. ௭௮௯

போட்டிடுவாய்புத்தோட்டுக் குள்ளேதானும்
பொலிவானசுண்ணமெல்லாம் யோடேயுண்டு
காட்டிடுவாய்கலப்பாக யிருக்கும்பாரு
கண்டுமயங்காதே பாக்கதிபோல்சீவி
நீட்டிடுவாய்சீலைதான் கீழேபோட்டு
நெஞ்சுதான் மல்லிகையினிலைபரப்பி
மாட்டிடுவாய்சீலைதான் மேலேவைத்து
மல்லிகையினிலையாலே மூடிப்போடே. ௭௯௦

மூடியேநெல்லைதான் பாண்டத்திட்டு
மூயற்சியாய்தண்ணீரில் பிசரிக்கொண்டு
நீடியேயடுப்பேற்றி யதின்மேல்சால்
நேர்ப்பாகவைத்துமே யெரித்துவாங்கி
வாடியேமேல்சட்டிக் கவுழ்த்துமூடி
மயங்காததாய்கண்ட பதத்தில்வாங்கி
தேடியேயினமெல்லாம் மொன்றாய்ப்போகும்
திறமானரவியிலிட்டு காயப்போடே. ௭௯௧

காய்ந்தபின்புயிலைபரப்பி நெற்பாண்டத்திட்டு
காரியமாய்முன்போல யவித்திறக்கி
காய்ந்தபின்புயிலைபரப்பி யவித்தெடுத்து
சாதகமாய்மூன்றுதர மானபின்பு
ஓய்ந்தபின்புயில்லைபோல் பண்ணிக்கொண்டு
வுற்பணமாய்க் கீழ்மேலுந்தீவைமூட்ட
ஆய்ந்ததொருபற்பம்போல் நீறியல்லோ
அப்பனேசுன்னமென்ற வைப்புத்தானே. ௭௬௨

வைப்பாசீலைக்குள் கிளிபோல்கட்டி
வளமாகச்சட்டியிலே நடுவேவைத்து
மெய்யப்பாமேலாக வட்டமிட்டு
மேலாகவெருவுதான் நாறுபோட்டு
செய்யப்பாசட்டியின்மே லொன்றுப்போட்டு
சிறப்பாகமல்லிகையின் னிலையைவைத்து
கொய்யப்பா தண்ணியிலே போட்டுக்காய்ச்சி
குறிப்பாகத்துவர்சாற்றால் விட்டுநீற்றே. ௭௬௩

நீற்றியபின்னாவியெல்லாம் வெளிபோகாமல்
நேர்ப்பாகச்சட்டியிலே மூடிப்போடு
ஆற்றியபின்மருந்தெடுத்துக் காயப்போடு
அப்பனேமறுசீலைக் குள்ளேவைத்து
சாற்றியபின்முன்போல நீற்றுநீற்று
சாதகமாய்பறவாமல் பதினொருக்கால்
மாற்றியபின்மருந்தெடுத்து அண்டோட்டிலிட்டு
வளமாகமேல்மூடி சீலைசெய்யே. ௭௬௪

செய்திட்டுவெஞ்செருவில் புடத்தைப்போட்டு
சிறப்பாகச்சவுக்காரச் சுன்னமாச்சு
கொய்திட்டசித்தரெல்லாம் வழலைதன்னை
குறித்தபடிசொல்லாமல் மறைத்துப்போட்டார்
உய்திட்டுப்பிள்ளைகள்தான் பார்த்துபார்த்து
உலகத்தோர்கரிகொண்டார் காசில்லாமல்
கைத்திட்டுசித்தரெல்லாந் திடுக்கிட்டேங்க
நாட்டினாரிம்முறையை நளினந்தானே. ௭௬௫



தானென்றநூல்பார்த்து வுலகவாதி
தவிர்த்துமேபுண்ணாகி வருமையுற்று
வாமென்றவுலகத்தோர் பிழைக்கக்கேட்டு
வருள்கொண்டபிசாசுபோல் வாயினத்தி
ஊமென்றசேர்த்துக்கு யிடமெல்லாமல்
வண்டுபாரைபுடுப்பாரைப் பார்த்தேயேங்கி
தானென்றயானுவத்தால் கெட்டோமென்று
தா[illegible]த்திரிந்தலைந்து மாள்வார்பாரே. ௭௬௬

## வழலை.

மாளாதேயிருக்கையிலே வழலைதன்னை
மறைவாமற்சொல்லிவிட்டேன் எண்ணூற்றுள்ளே
கேளானசீஷருக்கு யீயவேண்டாம்
கொடுத்தாலேபெருங்கோடி பாபமெய்தும்
தாளாமல்யென்னூலில் வளருந்தன்மை
சாற்றுகிறேனொருசொல்லுந் தவறில்லாமல்
நாளானவம்பலத்துக் கொப்பாய்ச்சொன்னேன்
நாதாக்கள்பதமறிய சொன்னேன்காணே. ௭௬௭

காணப்பாபுடம்போட்ட வழலைதன்னைக்
கடுங்காரசெயநீரால் தோய்த்துப்போடு
பேணப்பாயெழுநாள் ரவியிற்போட்டு
பேரானசுன்னமென்ற குகையிலூதே
தோணப்பாயெடுத்திடவே பூப்போல்நிற்கும்
தொடுகுறிபோல்சரக்கெல்லாந் தூளாய்க்கொல்லும்
வீணப்பாகெடுக்காதே யென்னூல்பாரு
வேதாந்தவாயியைத்தான் பூசிப்பாயே. ௭௬௮

பூசித்துவழலையைத்தான் சுண்ணம்பண்ணு
புகழாகசரக்கெல்லாஞ் சுண்ணமாகும்
ஆசித்துப்பூரத்தால் தாளகத்தைநீற்று
அதிகமாந்தளுக்கறலை வங்கமூறும்
வாசித்துநூல்களைத்தான் பார்த்தாலல்லோ
வாதமென்றபேர்க்கெல்லாந் தெளிவாய்த்தோன்றும்
வாசித்துவீரமதை நீற்றினுக்கால்
வாசியென்றகொஞ்சத்தில் சொல்லலாமோ. ௭௬௯

போகமுநிவர் சரக்குவைப்பு-௮௱

சொல்லென்றவங்கத்தால் துருசுநீரும்
துருசினால்சிங்கிபண்ணிச் சூதங்கட்டும்
மல்லென்றசூதத்தால் காயசித்தி
மக்களேகெவுனசித்தி யெட்டுமாடும்
வெல்லென்றபஷ்டமா சித்தியாலே
விரும்பியதோர்புவனமெல்லாங் காணலாகும்
கொல்லென்றகுளிகைதன்னை யார்க்குஞ்சொல்லேன்
குவலயத்திலுங்களுக்குச் சொல்லிட்டேனே.

போகமுநிவர் சரக்குவைப்பு-௮௱.

முற்றிற்று.

LB
N24
181946
சென்னை 600 008

உ

கடவுள் துணை.

# பொருள் அகராதி.


| பொருள். | பக்கம். |
|---|---|
| அ | |
| அப்பிரேக்சத்து | ௧௬ |
| அயமுருக்க | ௬௨ |
| அரியகாந்தச்செந்தூரம் | ௬௫ |
| அவபத்தியம் | ௬௬ |
| அண்டகற்பம் | ௭௫ |
| அப்பிரேகசத்து | ௮௨ |
| அயச்செப்பு | ௧௦௩ |
| அயச்செம்பு | ௧௪௬ |
| இ | |
| இந்துப்புவைப்பு | ௫௬ |
| இரசகபாஷாணம் | ௧௦௭ |
| இங்கிதத்தயிலம் | ௧௧௨ |
| உ | |
| உப்புச்சுன்னக்குகை | ௫ |
| உப்புக்கட்டு | ௮ |
| உப்புக்கட்டு | ௧௧ |
| உப்புசெந்தூரம் | ௧௫ |
| உப்புக்கட்டு | ௮௦ |
| ஊ | |
| ஊசிக்காந்தச்சத்து | ௬௪ |
| க | |
| களிங்குமார்க்கம் | ௩௦ |
| கடுங்காரசெயநீர் | ௪ |
| கருசியிலை | ௪௪ |
| கற்பூராதி | ௧௨௫ |
| கா | |
| காப்பு | ௩ |
| காந்தம் | ௨௭ |
| காந்தச்சத்து | ௬௦ |
| கி | |
| கிண்ணிகூடன்வைப்பு | ௬௧ |
| கிளிமூக்குமாங்காய் | ௭௩ |

| பொருள். | பக்கம். |
|---|---|
| கு | |
| குளிகைசாரணை | ௧௮௮ |
| குங்குமபாஷாணம் | ௧௧௦ |
| குடோரவகை | ௬௦ |
| குருபுத்தி | ௪௬ |
| குளிகைவேதை | ௪௨ |
| கெ | |
| கெந்தகச்சத்து | ௨௧ |
| கெந்தியுப்புவைப்பு | ௫௬ |
| கெந்தகச்சத்து | ௮௪ |
| கெந்தகத்தயிலம் | ௧௦௧ |
| கே | |
| கேசாதித்தயிலம் | ௧௦௨ |
| கொ | |
| கொச்சிவீரவைப்பு | ௩௨ |
| கோ | |
| கோழிக்கெந்தி | ௧௨௬ |
| கோசபாஷாணம் | ௧௦௭ |
| ச | |
| சவுக்காரச்சுத்தி | ௪ |
| சரக்குக்கட்டு | ௧௦ |
| சவ்வீரவைப்பு | ௩௧ |
| சதுரக்கள்ளிபற்பம் | ௬௬ |
| சக்கரைவேம்பு | ௭௧ |
| சந்திரத்தயிலம் | ௬௮ |
| சா | |
| சாதிலிங்கவைப்பு | ௧௦௫ |
| சாரக்கட்டு | ௧௦௧ |
| சாரநீறு | ௧௭ |
| சி | |
| சிவப்புசெயநீர் | ௩௪ |
| சித்தர்கள்சாத்திரமுறைமை | ௩௮ |
| சிலைதபாஷாணமெழுகு | ௪௫ |

| பொருள். | பக்கம் |
|---|---|
| சிவப்புக்கற்றாழை | ௭௨ |
| சிவனார்வேம்பு | ௭௫ |
| சூ | |
| சூதசெந்தூரம் | ௪௧ |
| சூதங்களங்கு | ௫௦ |
| சூதக்கட்டு | ௫௧ |
| சூடன்வைப்பு | ௬௧ |
| செ | |
| செந்தூரம் | ௧௨௮ |
| செம்புசுத்தி | ௧௨௪ |
| செப்புத்தொட்டிவைப்பு | ௧௦௬ |
| சே | |
| சேத்துமணிக்கல் | ௧௮௧ |
| சோ | |
| சோரவீரவைப்பு | ௩௯ |
| தா | |
| தாம்பூலம் | ௭௭ |
| தாளகச்செப்பு | ௧௦௩ |
| தார்முகில்சாரம் | ௪௦௭ |
| தாம்பிரசுன்னம் | ௧௪௧ |
| தாம்பிரசுன்னம் | ௧௩௭ |
| தி | |
| திருசுதிராவகம் | ௯௨ |
| திருசுசெந்தூரம் | ௫௯ |
| திருசுவைப்பு | ௫௨ |
| திருசுபற்பம் | ௬௦ |
| ந | |
| நடராசவிக்கிரகம் | ௨௨ |
| நெ | |
| நெல்லிக்காய் | ௭௪ |
| ப | |
| பரங்கிபாஷாணவைப்பு | ௩௭ |
| பரங்கிப்பாஷாணமெழுகு | ௩௮ |
| பவுத்திரம் | ௧௮௩ |
| பவளப்புத்து | ௧௩௨ |
| பசைத்துரிசியில்சூதக்கட்டு | ௫௨ |
| பச்சைக்கற்பூரம் | ௧௨௭ |
| பஞ்சபட்சிபாஷாணம் | ௧௩ |
| பா | |
| பாஷாணமெழுகு | ௪௩ |
| பாலரசம் | ௯௭ |
| பூ | |
| பூப்பொடி | ௬௦ |
| பொ | |
| பொற்சீந்தி | ௭௪ |
| போ | |
| போகர் அகஸ்தியர்குபதேச | ௧௮௪ |
| போகர் சட்டமுனிக்குவுபதேச | ௧௮௫ |
| ம | |
| மருந்தீடு | ௧௭௨ |
| மிளகுபற்பம் | ௬௯ |
| மூ | |
| மூலிகைப்பயிர் | ௭௮ |
| மூலிவகை | ௭௨ |
| ர | |
| ரதிதபாஷாணம் | ௪௪ |
| லி | |
| லிங்கமெழுகு | ௪௨ |
| வ | |
| வங்காளப்பச்சை | ௧௨௨ |
| வழலை | ௧௯௫ |
| வா | |
| வாதஅங்கமறிய | ௧௬ |
| வி | |
| விடத்தோல்வேர் | ௭௩ |
| வீ | |
| வீரக்களங்கு | ௩௬ |
| வீரசெயநீர் | ௬ |
| வெ | |
| வெடியுப்புச்செயநீர் | ௬ |
| வெடியுப்புத்திராவகம் | ௩௧ |
| வெடியுப்புச்செயநீர் | ௧௩௩ |
| வே | |
| வேம்பு | ௭௧ |


பொருள் அகராதி முற்றிற்று.


# புத்தக விளம்பரம்.

## சோதிடபுத்தகங்கள்.

| | | | |
|---|---|---|---|
| சாதகசிந்தாமணி திக்குகடிதம் ஆப்பயிண்டு | 1 | 8 | 0 |
| ஷை திக்குகடிதம் கலிகாபயிண்டு | 2 | 0 | 0 |
| ஷை கிளேசுகடிதம் கலிகாபயிண்டு | 2 | 8 | 0 |
| சோதிடகிரகசிந்தாமணி என்னும் பெரிய வருஷாதிநூல் | | | |
| திக்குகடிதம் ஆப்பயிண்டு | 0 | 12 | 0 |
| ஷை திக்குகடிதம் கலிகாபயிண்டு | 1 | 0 | 0 |
| விருடி பஞ்சபட்சிசாஸ்திரம் மூலமும்உரையும் | 1 | 4 | 0 |
| கமலமாமுனி ரேகைசாஸ்திரம் மூலமும்உரையும் | 1 | 0 | 0 |
| போகர் பஞ்சபட்சிசாஸ்திரம் மூலமும்உரையும் | 0 | 14 | 0 |
| அகஸ்தியர் பஞ்சபட்சிசாஸ்திரம் மூலமும்உரையும் | 0 | 12 | 0 |
| சாதகாலங்காரம் மூலம் | 0 | 12 | 0 |
| சில்பிசாஸ்திர களஞ்சியம் திக்குகடிதம் கலிகாபயிண்டு | 2 | 0 | 0 |

## வைத்திய புத்தகங்கள் சுத்தப்பதிப்பு.

| | | | |
|---|---|---|---|
| உரோமரிஷிநாயனார் வைத்தியம்-500 | 0 | 10 | 0 |
| போகமுனிவர் வைத்தியம்-700 | 0 | 10 | 0 |
| போகமுனிவர் ஜெனனசாகரம் | 0 | 12 | 0 |
| அகஸ்தியர் வயித்தியகாவியம்-1500 | 1 | 0 | 0 |
| அகஸ்தியர் அமுதகலைக்கியானம்-௧௨௱ | 1 | 4 | 0 |
| அகஸ்தியர் செந்தூரம்-௩௱ | 0 | 10 | 0 |
| அகஸ்தியர் பூரணசூத்திரம்-௨௧௬ | 0 | 8 | 0 |
| அகஸ்தியர் வயித்தியரத்தினசுருக்கம் உரை-௩௬௦ | 0 | 12 | 0 |
| சுப்பிரமணியர் ஞானம்-௨௱ | 0 | 8 | 0 |
| புலஸ்தியர் வாதசூஸ்திரம்-௩௱ | 0 | 12 | 0 |
| இராமதேவர் சிவயோகம்-௨௱ | 0 | 8 | 0 |
| சட்டைமுனி ஞானம்-௨௱ | 0 | 8 | 0 |
| பிரமமுனி கருக்கடை-௩௱ | 0 | 12 | 0 |
| தனவந்திரி குருநூல்-௨௱ | 0 | 12 | 0 |
| புலிப்பாணி வைத்தியம் உரை-௫௱ | 1 | 0 | 0 |
| சுப்பிரமணியர் ஞானம்-௫௱ | 1 | 0 | 0 |

181446

A. தீனதயாளு முதலியார்.

இரண்டாவது சந்து, பெருமாள்கோவில் தோட்டம்,
சௌகார்பேட்டை போஸ்டு, மதராஸ்.